# குபேரவன காவல்

'காலச்சக்கரம்' நரசிம்மா



வானதி பதிப்பகம்

# குபேரவனக் காவல்

காலச்சக்கரம் நரசிம்மா

மின்னூலாக்கம் : செல்லா

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை–17.

முதற் பதிப்பு : ஜூன், 2012
உரிமை ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

**விலை : ரூ. 175.00**

| | | |
|---|---|---|
| ❒ | Title | **KUBERAVANAKKAVAL** |
| ❒ | Author | Kaalachakram Narasimma |
| ❒ | Language | Tamil |
| ❒ | Subject | Novel |
| ❒ | Edition | First Edition, June 2012 |
| ❒ | Pages | 432 |
| ❒ | Published By | **VANATHI PATHIPPAKAM**<br>23, Deenadayalu Street,<br>T.Nagar, Chennai-600 017<br>Ph:24342810 / 24310769<br>e-mail: vanathipathippakam@gmail.com<br>website: www.vanathi.in |
| ❒ | Price | ₹ 175.00 |

Laser Typeset by: **S.S. Graphics,** Cell 8825554095

Printed at: **Ganapathi** *Process,* Chennai-5.

# முன்னுரை

'காலச்சக்கரம், ரங்கராட்டினம், சங்கதாரா' மூன்றுமே பெரும் தாக்கத்தை எங்களுள் ஏற்படுத்தி விட்டன! தயவு செய்து, வருடத்திற்கு ஒரு நாவலை எழுதாமல், நிறைய எழுதுங்களேன்,' என்று நாவல்களை படித்துவிட்டு, என் ரசிகர்கள் என்று கூறிக் கொள்ளும் பலரும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர்.

அவர்களை என் ரசிகர்கள் என்று நான் கூறிக்கொள்ள விரும்பவில்லை. என் ரசிகர்கள் என்று கூறினால், நான் ஏதோ பெரிய சாதனையை செய்துவிட்டது போல ஆகிவிடும்.

''தமிழில் பேசுவதும், எழுதுவதுமே ஒரு பெரிய சாதனையாகி விட்டது, இந்த காலத்தில்! ஆங்கில பத்திரிகையில் பணிபுரிந்துக் கொண்டு தமிழில் எப்படி எழுதுகிறீர்கள்?'' என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள்.

சங்கதாரா! இந்த நாவலைப் படித்து விட்டு எனக்கு வரும் தொலைபேசி மற்றும் கைபேசி கால்கள்; ஈமெயில்கள் ஆகியவற்றிக்கு தினந்தோறும் பதிலளித்தபடிதான் இருக்கிறேன்.

''என்ன இப்படி செய்து விட்டீர்கள்! நான் எவ்வளவு பெரிய இடத்தில் அவரை வைத்திருக்கிறேன் தெரியுமா.' என்று பலர் விசனப்பட்டார்கள்.

ஒரு லைப்ரரியன் என்னுடன் சண்டையே போட்டார்! எதற்கு இப்படி எழுதினீர்கள் என்று.

*நான் எல்லோருக்கும் சொல்லிக் கொள்வது இதுதான்! ஆங்கிலத்தில்* 'Familiarity Breeds Contempt' *என்பார்கள். அதன்படி நாம் உயர்வாக நினைத்திருக்கும் பலரது உண்மை சொரூபம் தெரிய வரும்போது, ஜீரணிப்பது கஷ்டம்தான். அதற்காக உண்மைகளை ஆராயாமல் இருக்க முடியுமா?*

*என்னால் மறக்க முடியாத சம்பவம், சரித்திர மாமேதை சாண்டில்யனின் மகனும், வைணவா கல்லூரியின் பேராசிரியருமான திரு. சடகோபன் அவர்களிடமிருந்து வந்த தொலைபேசி கால்தான். எனது சங்கதாராவை போற்றி தள்ளினார். பல கேள்விகளுக்கு நீங்கள் சரியான விடை தந்திருக்கிறீர்கள்' என்று சரித்திரம் அறிந்த அவர் பாராட்டியபோது நெகிழ்ந்து போனேன்.*

*தன் தந்தையின் வழியில் நீங்கள் ஒரு சிறந்த சரித்திர நாவலை படைத்திருக்கிறீர்கள் என்று அவர் சொன்னதோடு நில்லாமல், என் பெற்றோர்களிடமும் தொலைபேசி மூலம் என் நாவலை பாராட்டினார். நான் பெற்ற பெரும் பேறு!*

*சங்கதாராவை பொன்னியின் செல்வன் ரசிகர்கள் தினமும் விவாதித்து வருகிறார்கள், என்பதே எனக்கு பெரிய பெருமை! ஆயிரம் நாவல்களை எழுதி, லைப்ரரி அலமாரி களை நிரப்புவதை விட, நான்கு நாவல்கள் எழுதி அவை எப்போதும் புழக்கத்தில் இருப்பதையே விரும்புகிறேன். என் நாவலை பெரிதும் விரும்பி கேட்கிறார்கள் என்று பல லைப்ரரியன்கள் குறிப்பாக, அரசு லைப்ரரிகளில் கூறுகிறார்கள்.*

*இது போதாதா எனக்கு?*

*சங்கதாரா கொடுத்த மனநிறைவில் அடுத்த நாவலை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். இது ஒரு புதுவகையான கதை. பெயர் குபேரவன காவல்.*

*சரித்திரம் அல்ல; ஆனால் சரித்திரம் பேசும்! காதல் கதையல்ல, ஆனால் காதலைப் பற்றி பேசும். மாயமந்திர கதையல்ல, ஆனால் மர்மமான நிகழ்வுகளைப் பற்றி பேசும்! குடும்பக் கதை அல்ல. ஆனால் குடும்பப் பெருமைகளைப் பற்றி பேசும்.*

*மொத்தத்தில் உங்களுக்கு இது ஒரு புது அனுபவத்தை தரப்போகிறது. ஆனால் முன்பே கூறிவிடுகிறேன்! இதில் ஒரு பெண் மிக மிக பயங்கரமாக சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். இதனால் பெண்கள் கோபித்துக் கொள்ள கூடாது!*

*இந்த நாவலின் மூலக்கருவே ஆண் - பெண் உறவுதான். ஆண் பலமானவனா இல்லை பெண் பலமானவளா?*

*இந்தக் கதையைப் பொறுத்தவரை, பெண் என்பவள் எந்த ஒரு எல்லையையும் கடக்க துணிவாள், ஆண் எல்லையை கடக்க தயங்குவான் என்று நிரூபித்திருக்கிறேன்.*

*வெள்ளம் புரண்டு ஓடும் நதிகளுக்குத்தான் கரையை பலப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது! வாய்க் கால்களுக்கு அல்ல!*

*ஆணுக்கு கட்டுப்பாடுகள் இல்லாத காரணம், அவன் வாய்க்கால் போன்றவன். ஒரு ஆற்றை சார்ந்து இருப்பதே வாய்க்கால்கள் ஆகும்! ஆண்களும் பெண்களைச் சார்ந்தே உள்ளனர்.*

*ஆனால் பெண், மகாநதியைப் போன்றவள்! அதனால் தான் தாலி, மெட்டி என்று அவளது கரைகள் பலப்படுத்தப்பட்டன.*

*சாது மிரண்டால் மட்டுமல்ல, ஒரு மாது மிரண்டாலும் காடு கொள்ளாதுதான். ஆண் பெண்ணிடம் சுகத்தை அனுபவித்து விட்டு சென்று விடுகிறான். பிரசவம் உள்பட எல்லா வேதனைகளும் பெண்களுக்குத்தான், என்று கூறுவார்கள்.*

ஆனால் உண்மையில், ஆண் தன் வீர்யத்தை பெண்ணிடம் சேர்த்துவிட்டு பலவீனமாகி விடுகிறான்! அவனது வீரம், ஆக்ருதி பௌருஷம் எல்லாவற்றையும் தன்னுள் வாங்கிக் கொண்டு விஸ்வரூபம் எடுக்கிறாள் பெண்.

விஸ்வரூபம் எடுக்கும் பெண்கள் முன்னால், ஆண்கள் சிறுத்து போய் விடுகிறார்கள். இதை ஏற்க மறுப்பவர்கள், நிச்சயம் இந்த நாவலைப் படிக்க வேண்டும்.

இந்த நாவலைப் படித்த என் நலவிரும்பி ஒருவர், என்னிடம் சொன்னை வார்த்தை இது:

'பெண்களுக்கு கோபம் வரபோகிறது' என்றார். மற்றவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்று தெரிய வில்லை! ஆனால் இதைப் படித்தவர்கள் நிச்சயம். இதை மீண்டும் மீண்டும் படிப்பார்கள் என்று நம்புகிறேன்.

எனது நாலாவது நாவலான குபேரவன காவலை எழுதுவதற்குள் பல வேலைகள், தடங்கல்கள். இதையெல்லாம் கடந்து இந்நாவலை உங்கள் பார்வைக்கு வைக்கிறேன்.

வானதி பதிப்பகம் புதிய கட்டடத்தில் இயங்குகிறது என்று கேள்விப்பட்டு உடனே சென்று பார்த்தேன். வெளியே வரவே மனமில்லை! பிறந்த வீட்டிற்கு வந்திருக்கும் பெண்ணின் மனநிலையை அங்கே நான் பெற்றேன்.

என்னை ஊக்குவித்துக்கொண்டிருக்கும் வானதி பதிப்பகம் உரிமையாளர் திரு.திருநாவுக்கரசு, அவர் மகன் திரு.இராமநாதன், வானதி பதிப்பகம் பணியாளர்கள் மற்றும் இந்தப் புத்தகம் வெளிவர உதவிய அனைவருக்கும் என் நன்றி.

என் குடும்பத்தாருக்கு குறிப்பாக என் மனைவிக்கும் நன்றி. மற்றும் என்னை ஆதரிக்கும் வாசகர்களாகிய உங்களுக்கு மிக நன்றி!

9841761552 **காலச்சக்கரம் நரசிம்மா**
nacu_ne@yahoo.co.in

# கண்ணன் செய்த எச்சரிக்கை

*ராஜசூய யாகம் செய்ய முடிவு செய்த பாண்டவர்கள், கண்ணபிரானின் தலைமையில், யாகத்துக்கு அழைக்கப் பட வேண்டியவர்களின் பட்டியலைத் தயாரித்தனர். செல்வத்துக்கு அதிபதியான குபேரனை நேரில் சென்று அழைக்கும் பொறுப்பு, பீமனிடம் தரப்பட்டது. பீமனும் குபேரனை அழைக்க கிளம்பினான்.*

*அப்போது கண்ண பரமாத்மா அவனை தடுத்தார். ''சற்று பொறு, பீமா! குபேரனைச் சந்தித்து அழைப்பிதழை தருவது ஒன்றும் அவ்வளவு எளிதான காரியமல்ல'' என்றார் கண்ணன்.*

*''ஏன்?'' பாண்டவர்கள் வியப்படைந்தனர்.*

*''குபேரவனத்தை காவல் காக்கின்றது, புருஷா மிருகம்! மனித முகமும் சிங்க உடலும் கொண்ட புருஷாமிருகம் மிகவும் சக்தி வாய்ந்தது. தன்னிடம் சிக்குபவர்களை அடித்துக்கொன்று புசித்துவிடும்! அதனிடம் சிக்கினால் ஆபத்து!'' பீமனை கண்ணன் எச்சரித்தார்.*

*''இதென்ன பிரமாதம்! என் வீரத்தின் முன்னே புருஷனாவது, மிருகமாவது?'' பீமன் கர்வத்துடன் கூறினான்!*

கண்ணன் கலகலவென சிரித்தார். ''அப்பனே! உன் வீரம் அதன் முன் எடுபடாது! நீ உனது கதாயுதத்தை தூக்குவதற்குள், அது உன்னை தின்று ஜீரணித்து விடும்! மின்னல் வேகத்தில் பாயக்கூடியது, அந்த புருஷா மிருகம்'' என்றார்.

''அப்படியானால் குபேரனை எப்படி அழைப்பது? அவன் வந்தால்தானே யாகம் சோபிதமாக இருக்கும்...'' யுதிஷ்டிரர் கவலைப்பட்டார்.

சற்று யோசித்த கண்ணபிரான், பீமனை தனிமையில் அழைத்தார்.

''பீமா! அந்த புருஷாமிருகம் பரமசிவனிடம் அளவில்லாத பக்தியைக் கொண்டது. சிவலிங்கத்தைக் கண்டாலே குளித்துவிட்டு பூஜை செய்யும் வழக்கத்தைக் கொண்டது. அதன் பிறகே, அது ஆகாரத்தை உண்ணும்! அது உன்னைக் கண்டதுமே விரட்டிக் கொண்டு வரும்! உன் சாமர்த்தியத்தைக் கொண்டு எப்படியாவது குபேரனை யாகத்துக்கு அழைத்துவிடு! அது உன்னை விரட்டிப் பிடிப்பதற்குள், அங்கே இருந்து ஓடத்துவங்கு! அது உன்னை விடாமல் துரத்தும்....

''நான் உனக்கு 12 கற்களைத் தருகிறேன்! அந்த புருஷாமிருகம் உன்னை பிடிக்கும் போதெல்லாம் ஒவ்வொரு கல்லாக அதன் முன்னே போடு! ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் ஓடுவதை மட்டும் நிறுத்தி விடாதே! நீ ஓட... ஓட அது விரட்டும்! உன்னை புருஷாமிருகம் பிடிக்கும்போதெல்லாம் ஒரு கல்லை அதன் முன்னே போடு....'' என்றார் கண்ணன்.

பீமன் தலையசைத்தான். கண்ணன் தொடர்ந்தார்! ''பீமா! எப்படியாவது கடைசி பன்னிரெண்டாவது கல்லை வீசிவிட்டு, இந்திரபிரஸ்த எல்லைக்குள் நுழைந்துவிடு! நீ எல்லையினுள் வந்து சேர்ந்துவிட்டால், புருஷாமிருகத்தால் உன்னை பிடிக்க முடியாது! ஆனால், அதற்குள் உன்னால் இந்திரபிரஸ்த எல்லையினுள் நுழைய முடியவில்லை என்றால், உன் உயிர் உனது இல்லை! ஜாக்கிரதை'' என்று எச்சரித்தவர், பீமனிடம் பன்னிரண்டு கற்களைத் தந்தார்.

கண்ணன் கூறியது போல், குபேரவனத்தினுள் பீமன் காலை வைத்ததுமே, புருஷாமிருகம் கர்ஜித்துக்கொண்டு அவனை நோக்கி பாய்ந்து வந்தது.

அதனை நோக்கி கை கூப்பிய பீமன், ''புருஷா மிருகமே! எனது தமையனார் நடத்தும் ராஜசூய யாகத்துக்கு குபேரனை அழைக்க வந்துள்ளேன்! என் அண்ணன் எனக்கிட்ட கட்டளையை நிறைவேற்று வதற்கு எனக்கு அனுமதி தா! குபேரனை நான் அழைத்து விட்டு வரும்போது, நீ என்னை உண்ணலாம்!'' என்று வேண்டினான்.

''ஒரு நல்ல விஷயத்துக்காக நீ வந்திருப்பதால், நான் உன்னை உள்ளே செல்ல அனுமதிக்கிறேன். உள்ளே நுழைபவர்களை விழுங்குவது என் வேலை! உன்னை மட்டும் திரும்பி வரும்போது உண்கிறேன்...'' என்று கூறி பீமனுக்கு வழிவிட்ட புருஷாமிருகம், அவனது வருகைக்காக காத்திருந்தது.

உள்ளே சென்று பீமன், குபேரனை யாகத்துக்கு வரும்படி வேண்டினான். அவனும் அவசியம்

யாகத்துக்கு வருவதாக வாக்களித்தான். அவன் மாளிகையை விட்டு புறப்பட்ட பீமன், தன்னை விழுங்குவதற்கு தயாராக நிற்கும் புருஷாமிருகத்தைப் பார்த்தான். அவ்வளவுதான்

ஒரே பாய்ச்சலாக மாளிகையை விட்டு வெளியேறி, தனது சக்தியை எல்லாம் திரட்டிக் கொண்டு ஓடத்துவங்கினான்.

விடுமா காத்திருக்கும் புருஷாமிருகம்! அதுவும் ஒரே பாய்ச்சலாக தாவி, ஓடிக்கொண்டிருந்த பீமனை எளிதாகப் பிடித்துவிட்டது!

அது தன்னைப் பிடித்த மறுகணம், கண்ணபிரான் கூறியபடி, தன் கையில் இருந்த முதல் கல்லை புருஷா மிருகத்தின் தலைக்கு முன்பாக போட்டான், பீமன்.

அந்தக்கல் உடனே சிவலிங்கமாக மாறிவிட்டது. சிவலிங்கத்தைக் கண்டு பரவசப்பட்ட புருஷாமிருகம், பீமனை விட்டு விட்டு, பூஜை செய்ய எண்ணி, நீராடச் சென்றது.

அந்த இடைப்பட்ட காலத்தை பயன்படுத்திக் கொள்ள நினைத்த பீமன், தனது ஓட்டத்தின் வேகத்தை அதிகரித்தான்.

ஆனால் விரைவாக நீராடி சிவபூஜையை செய்துவிட்ட புருஷாமிருகம், மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து மீண்டும் பீமனைப் பிடித்துக் கொண்டது.

பீமன் மீண்டும் அடுத்த கல்லை எறிந்தான். அதுவும் சிவலிங்கமாக மாறியது. மீண்டும் நீராடி பூஜை செய்வதற்காக, புருஷாமிருகம் பீமனை விட்டுவிட்டது.

பீமன் தொடர்ந்து தலைதெறிக்க ஓடினான். பூஜையை முடித்துவிட்ட புருஷாமிருகம், மீண்டும் அவனை பிடித்துக்கொள்ள, அடுத்த கல்லை அதன் முன்னே போட்டான். அதுவும் சிவலிங்கமாக மாறியது.

இவ்வாறு புருஷாமிருகம் துரத்தி வந்து பிடிக்கும் போதெல்லாம், ஒரு கல்லைத் தூக்கிப் போட்டான்.* பீமன். அந்தக் கல் சிவலிங்கமாக மாறியதும் புருஷா மிருகம் பக்தி பரவசத்துடன் பீமனை விட்டுவிட்டு நீராடி பூஜை செய்யச்சென்று விடும். அந்த காலத்தை பயன்படுத்தி, பீமன் தனக்கும் புருஷாமிருகத்திற்கு உள்ள இடைவெளியை அதிகரிப்பான். இவ்வாறு பதினொறு கற்களை சிவலிங்கமாக மாற்றி, புருஷா மிருகத்திட மிருந்து தப்பித்தான். மீண்டும் அது அவனை வந்து பிடிக்க, தனது கையில் இருந்த கடைசி கல்லையும் பீமன் அதன் முன்பாக போட்டான். புருஷாமிருகமும் அவனை விட்டுவிட்டு பூஜை செய்ய சென்றது.

பீமன் கண்ணபிரான் கூறிய வார்த்தைகளை நினைவு கூர்ந்தான். கடைசிக் கல்லை தூக்கி எறிந்ததும், எப்படி யாவது இந்திரபிரஸ்த எல்லைக்குள் நுழைந்துவிட வேண்டும் என்று எண்ணியவன், தனது வேகத்தை

---

* என் தலை முன்பாக கல்லைத் தூக்கி போட்டுவிட்டு தப்பி சென்று விட்டான் என்று இதை குறித்தே கூறுவார்கள். நாளடைவில், இறந்தவர்கள் உடல் எதிரே அமர்ந்து ஒப்பாரி வைக்கும் மூதாட்டியர் 'என் தலையில் கல்லைத் தூக்கி போட்டுவிட்டு போய் விட்டானே' என்று அழுவர். தப்பி ஓடிவிட்டானே என்பதை குறிக்கும் வழக்கு இறந்தவர்களைக் குறிக்கும் வழக்காக மாறிவிட்டது தற்போது!

இன்னும் அதிகரித்தான். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினான்.

அதோ

இந்திரபிரஸ்த எல்லை வந்துவிட்டது! பாய்ந்து ஓடினான் பீமன்! அவன் எல்லையை தாண்டி உள்ளே நுழைவதற்கும், புருஷாமிருகம் அவன் காலை கௌவிப் பிடிப்பதற்கும் சரியாக இருந்தது! பீமனின் இடதுக்கால் மட்டும் புருஷாமிருகத்தின் பிடியில் இருக்க, அவனுடைய உடலும், வலதுக்காலும் இந்திரபிரஸ்த எல்லையினுள் இருந்தன.

புருஷாமிருகம் அவனை விழுங்க முயல, பீமன் தான் எல்லைக்குள் நுழைந்துவிட்டதால், தன்னை அதனால் விழுங்க முடியாது என்று வாதிட்டான். இருவருக்கு மிடையே தர்க்கம் நிகழ்ந்தது.

அங்கே வந்த யுதிஷ்டிரர், இருவரின் நியாயத்தையும் கேட்டறிந்தார்.

பீமனின் உடல் இந்திரபிரஸ்த எல்லைக்குள் வந்து விட்டாலும், அவனது ஒரு கால் எல்லை சேரவில்லை என்பதாலும், அந்த காலை புருஷாமிருகம் பிடித்து விட்டதாலும், பீமன் தன் இடதுகாலை வெட்டி புருஷா மிருகத்திற்கு உணவாக தந்துவிடவேண்டும்' என்று தருமர் தீர்ப்பளித்தார்.

அவரது நேர்மையான தீர்ப்பைக்கேட்டு மகிழ்ந்த புருஷாமிருகம், பீமனை மன்னித்து விட்டது.

ராஜசூய யாகத்துக்கு காவலாக இருந்த புருஷா மிருகம், யாகம் முடிந்ததும் கண்ணபிரானிடம் சென்றது.

''கண்ணா! குபேரவனத்தில் இருந்த நான் பீமனை விரட்டிக் கொண்டே பூலோகம் வந்து விட்டேன்! இனி நான் என்ன செய்வது?'' என்று புருஷாமிருகம் கேட்டது.

அதைத் தடவிக் கொடுத்த கண்ணன், ''புருஷா மிருகமே! சிவபக்தனான நீ, இனி' சிவலாயங்களின் வாயிலை காவல் புரிவாயாக'' என்று கூறினார்.

அன்று முதல் பூலோகத்திலேயே தங்கிவிட்ட புருஷா மிருகம், சிவாலயங்களின் நுழைவாயிலை காவல் தாக்கத் தொடங்கியது. தீய உணர்வுகளுடன் கோவிலுக்கு வருபவர்களை தண்டித்து விடுமாம், புருஷாமிருகம்! சிதம்பரம் கோவிலில் இன்றும் புருஷாமிருக சிற்பங்களைக் காணலாம்!

புருஷாமிருகம் பூலோகம் சென்று விட, குபேரவனத்தை காக்கும் பொறுப்பை ம்ருகரஞ்சிகா என்கிற யட்சிணி ஏற்றாள். புருஷாமிருகம் தனது ஆற்றலை நிரந்தரமாக ம்ருகரஞ்சிகாவிடம் கொடுத்து விட்டது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | கண்ணன் செய்த எச்சரிக்கை | 7 |
| 1. | சிதம்பர ரகசியம் | 17 |
| 2. | சகட வாக்கியம் | 29 |
| 3. | யட்சி பார்வை | 53 |
| 4. | குறி வைத்த வல்லூறு | 57 |
| 5. | சண்டி குதிரை | 72 |
| 6. | கோடு அழிந்தது | 74 |
| 7. | தூண்டில் மீன் | 85 |
| 8. | உன்னை அறிந்தால் | 96 |
| 9. | ஏழாம் வீடு | 114 |
| 10. | அலற வைத்த ஆல்பம் | 115 |
| 11. | சுயரூபம் | 131 |
| 12. | ஓட்டம் தொடங்கியது | 132 |
| 13. | புருஷா மிருகமா... காமதேனுவா! | 141 |
| 14. | குரூர காதலி...! | 143 |
| 15. | பழைய நினைவுகள் | 149 |

| | | |
|---|---|---|
| 16. | கெடுவை மீறினால் கேடு! | 150 |
| 17. | கல்லை கல்லோடு... நெல்லை நெல்லோடு... | 156 |
| 18. | பட்டாம்பி பட்டயம் | 161 |
| 19. | யாத்திரையில் கலவரம் | 175 |
| 20. | அதிர வைத்த ஆதிரா | 184 |
| 21. | கருஞ்சாந்து பொட்டு | 197 |
| 22. | ஆரா அமுதம் | 201 |
| 23. | யக்ஞ - புருஷன் | 203 |
| 24. | நடுஇரவில் ஒரு விருந்து | 207 |
| 25. | விடைகேட்டான்; விடை பெற்றாள் | 212 |
| 26. | நிலவறையில் நிம்மதி | 214 |
| 27. | கல்விளக்கு | 223 |
| 28. | தீபகர்ப்பம் | 234 |
| 29. | பாதை தெரிந்தது | 242 |
| 30. | அமுதம் யாருக்கு? | 259 |
| 31. | அம்மா அழகானவள் ஆனால்... | 263 |
| 32. | உத்தமிபுத்திரன் | 275 |
| 33. | குளிர வைத்த குளிகை | 288 |
| 34. | ஒரு கணவன், ஒரு துணைவன் | 294 |
| 35. | ரகசியம் பரம ரகசியம் | 305 |

| | | |
|---|---|---|
| 36. | பிராயச்சித்தம் | 321 |
| 37. | ஊட்டி ரோஸ் | 326 |
| 38. | மர வீட்டின் உள்ளே | 342 |
| 39. | இரத்த தானம் | 348 |
| 40. | தப்பிபிழைத்தாள் | 376 |
| 41. | தனிமையிலே இனிமை | 378 |
| 42. | ஆதரவு கிடைத்தது | 386 |
| 43. | ஜீவ சமாதி | 388 |
| 44. | இன்னா செய்தாளை | 392 |
| 45. | அக்னி பரீட்சை | 399 |
| 46. | கடவுள் அமைத்து வைத்த மேடை | 404 |
| 47. | மலைச்சரிவில் ஒரு விபத்து | 410 |
| 48. | வாழ்வா... சாவா? | 413 |
| 49. | யாருக்கு வெற்றி? | 417 |
| 50. | மீண்டும் வசந்தம் | 421 |

# 1. சிதம்பர ரகசியம்

## 1957 - சிதம்பரம்

“ஏண்டி... பத்மாசினி! இதுதான் உன் நாத்தனார் பிள்ளையா?” நாசியின் மீது வழிந்திருந்த மூக்கு கண்ணாடியை கண்களுக்கு நேராக நிறுத்தியபடி, அந்தப் பாட்டி ஆராவமுதனை நோட்டம் விட்டாள். அவளது பார்வையை தாக்கு பிடிக்கமுடியாமல், அவன் தலை குனிந்தான். அவனது சங்கடத்தை மனதினுள் ரசித்த அவனுடைய மாமி, பத்மாசினி, தன் தலையை ஆட்டினாள்.

“ஆமாம்... வஞ்சுளா மாமி! என் நாத்தனார் ஜ்யோத்ஸனா’வோட ஒரே பிள்ளை...”

தனது மாமியின் குரல் பரிகாசத்துடன் ஒலித்ததாகப் பட்டது அமுதனுக்கு! தன் தாய்மாமா வரதன் அருகே எங்கேயாவது தென்படுகின்றாரா, என்று சுற்றிப் பார்த்தான். பூணூல் பையன் அருகே நின்று, அவனுக்கு வசூல் ஆகும் ‘ஆசீர்வாத’ பணத்தை எண்ணிக் கொண்டிருந்தார். இப்போதைக்கு, இவன் உதவிக்கு வரும் நிலையில் அவர் இல்லை!

கேள்வி கேட்ட வஞ்சுளா பாட்டியின் இதழோரம் மிளிர்ந்த பரிகாசம், இப்போது அவள் கண்களுக்கும்

பரவியது. கேவலமான ஏதோ ஜந்துவைப் பார்ப்பது போல அவனைப் பார்த்தாள்.

‘‘துரையாட்டம்தான் இருக்கான்!’’ அந்தப் பாட்டி கூற, அமுதனின் பின்னால் திடீரென்று ஒரு கெக்கலிப்பு சத்தம் கேட்க, திரும்பிப் பார்த்தான்.

புண்டரீகம் பாட்டிதான் நின்றிருந்தாள். இவனுடைய மாமா வரதனின் மாமியார். பத்மாசினி மாமியின் அம்மா! பெயரில் ‘ரீகம்’ உண்டே தவிர, பேச்சில் எள்ளளவும் (நாக) ரீகம் கிடையாது. ஆனால் ‘நாகம் என நஞ்சைக் கக்குவாள்.

‘‘டீ வஞ்சுளா! விதை ஒண்ணு போட்டா சுரை ஒண்ணா முளைக்கும்! துரைப்பயலுக்கு பொறந்தா துரையாட்டம் தானேடி இருப்பான்...’’

தன் பேரன் சந்தானம் கன்னங்கரேல் என்று இருக்கும் ஆதங்கத்தில், அமுதன் மனதை தன் வார்த்தைகளால் நோகடித்தாள்.

அமுதன் என்ன சிறுவனா... அவர்களது ஏச்சுகளையும் பேச்சுக்களையும் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கு?

பள்ளி வாழ்க்கையை முடித்து கல்லூரியில் காலடி எடுத்து வைத்து விட்டான்! தனது தாய், தந்தையைப் பற்றி எந்தவித தீர்மானத்திற்கும் அவன் வந்துவிடாதபடி, உறவினர்களும், அக்கம்பக்கத்து மனிதர்களும், நாளொரு கதையும், வேளைக்கொரு ‘விமர்சனமும் செய்து அவனைச் சித்திரவதைக்கு உள்ளாக்கி வருகின்றனர். வம்பு பிடித்த திருவல்லிக்கேணியில்

தான் இது வாடிக்கை என்றால், மாமாவின் மைத்துனன் பிள்ளை' பூணூலுக்காக சிதம்பரம் வந்திருக்க, இங்கேயும் இவனை கேவலப்படுத்துகிறார்களே-

அமுதன் வேதனையுடன் தலை குனிந்து நிற்க, அந்த காட்சியை கவனித்துக் கொண்டிருந்தன, ஒரு ஜோடி கண்கள். அந்த கண்களில் கோபம் திரண்டிருந்தது.

நல்ல வேளை

மேடையில் வாத்தியார் கூப்பிட, இவனை சித்திர வதை செய்துக் கொண்டிருந்த பெண்களின் கவனம் மேடைபக்கமாக சென்றது. அந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு, கல்யாண சத்திரத்தை விட்டு வெளியே நடந்தான், ஆராவமுதன் என்கிற அமுதன்!

சென்ற ஆண்டுதான் இவனுக்கும் தன் பிள்ளை சந்தானத்துக்கும் சேர்த்து பூணூல் போட்டிருந்தார், வரதன் மாமா!

'துடைப்பக்கட்டைக்கு, பட்டுக் குஞ்சலம் கேட்கிற தாக்கும்,' என்கிற, மங்கல வாழ்த்துக்கள் இவனுக்கு பலரால் வழங்கப்பட்டன.

சிறுவயது முதலே இந்தமாதிரி வசவுகளைத் தாங்கிக் கொள்ள பக்குவப்பட்டு விட்டான், அமுதன். இவனுடைய நொந்துப் போன இதயத்துக்கு அரு மருந்தாக இருப்பது, வரதன் மாமாவின் அபரிமித பாசம்தான். இவனை நன்றாக படிக்க வைத்து வருகிறார். இன்னும் சொல்லப் போனால், திடீரென்று காணாமல் போன அம்மாவின் நகைகளை இவனுக்காக பத்திரமாக

வைத்து இருக்கிறார்! மாமி அதை கபளீகரம் செய்ய முயன்றும், இதுவரை அவளால் அவற்றை நெருங்க முடியாதபடி ஒளித்து வைத்திருக்கிறார். இவர்கள் திருவல்லிக்கேணியில் வசிக்கும் வீட்டில், இவனுடைய அம்மா ஜ்யோத்ஸனாவுக்கும் பாகம் உண்டு! அதனால்தான் இவன் மாமி இரகசியமாக இவனை நையாண்டி செய்தாலும், மாமாவின் எதிரே அன்பைப் பொழிவதுப்போல பாவனை செய்கிறாள்.

அமுதனின் கோபம் எல்லாம் தன் தாய் தந்தை மீது திரும்பியது. இவனை இப்படி நிரந்தரமாக விட்டுச் செல்ல எப்படி மனம் வந்தது? அப்பாதான் மர்மமான முறையில் காணாமல் போனார் என்றால், அம்மாவும் இவனை மாமாவிடம் ஒப்படைத்துவிட்டு காணாமல் போய்விட்டாளே! எங்கே போனாள்?

கல்யாண சத்திரத்தை விட்டு தெருவில் இறங்கிய அமுதன், சிதம்பரம் கோவிலை நோக்கி நடந்தான்! அவனைக் கண்ட பிச்சைக்காரர்கள் சிலர் பாய்ந்து வந்து வழிமறித்தனர்.

''துரை... துரை...! பிச்சைப்போடு... துரை...''

அமுதனுக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை! இப்போதுதான் வஞ்சுளா பாட்டி இவன் துரை போல இருப்பதாக கிண்டலடித்தாள். இந்த பிச்சைக்காரர்களின் கண்களுக்கும் இவன் துரையாக தெரிகிறானே!

எல்லாவற்றிற்கும் காரணம், இவனுடைய பால் போன்ற நிறம்! தனது பிறப்பிற்கே ஒரு சந்தேக

சாயையை அந்த நிறம் கொடுத்துவிட்டதை எண்ணி துக்கத்தில் ஆழ்ந்த அமுதன், அந்த பிச்சைக்காரர்களை இலட்சியம் செய்யாமல், தன் வழியே சென்றான். இங்கே பரவாயில்லை! திருவல்லிக்கேணியில் இவன் தெருவில் நடந்து சென்றால், திண்ணைகளில் உட்கார்ந் திருக்கும் பாட்டிகளும், மாமிகளும் கிசுகிசுவென இவனைப் பார்த்து தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள்.

திருவல்லிக்கேணியில் தான் ஒரு கேலிக்குரியவன் என்பதை அமுதன் உணர்ந்திருந்தான்.

ஒரு நாள் பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்றபோது, எதிர்பட்ட கிழம் ஒன்று இவனை ஏளனத்துடன் பார்த்து, ''என்னடா அமுதா! கோவிலுக்கு போறியா? ஞாயித்துக் கிழமை சர்ச்சுக்கும் போவியா,'' என்று கேட்டுவிட்டு, தனக்குத்தானே சிரித்தபடி நடையைக் கட்டியது.

தனது பிறப்பில் ஏதோ மர்மம் இருக்கிறது. என்பதை மட்டும் வெகு விரைவிலேயே அவன் புரிந்து கொண்டான். இவனது அபரிமித அழகும், நிறமும், தேஜஸும் எல்லோருடைய சந்தேகத்துக்கும் ஆதாரமாக இருப்பதாக, இவன் மாமி பத்மாசினி தன் கணவனிடம் கூறியதை இவனே கேட்டிருக்கிறான்.

''நம்மளவாளுக்கு ஏதுன்னா இந்த நிறமும், உயரமும், அழகும்! உங்க மாப்பிள்ளை கூட இவ்வளவு நிறம் இல்லையே! ஜ்யோத்ஸனாவும் தாழம்பு நிறம்தான்... அதனால்தான் ஊரார் சந்தேகப்படறா...!'' மாமி இழுத்தாள்.

''மாமா ஆவேசப்பட்டார்!'' வாயை மூடுடி! வெள்ளையா இருந்தா வெள்ளைக்காராளுக்கு பொறந்த வனாயிடுவானா? உன் பிள்ளை சந்தானம் கன்னங் கரேல்னு இருக்கான்! அவன் என்ன ஆப்ரிக்கா நீக்ரோவுக்கு பொறந்தானா?'' மாமாவின் கேள்விக்கு பதில் கூற முடியாமல் ஜகா வாங்கினாள், பத்மாசினி மாமி!

இவன் வெள்ளையாக இருப்பது தவறா? திருவல்லிக் கேணி அக்கிரகாரத்தில் பெரும்பாலானோர் வெள்ளை யாகத்தானே இருக்கிறார்கள். இவனது வெண்மை மட்டும் ஏன் எல்லோருடைய கண்களையும் உறுத்துகிறது?

யோசித்தபடி கோவிலை அடைந்தான் அமுதன். கோவிலின் வாசலில், தீட்சிதர் ஒருவர் சில வடநாட்டு யாத்ரீகர்களுக்கு கோவிலின் தல புராணத்தை விவரித்துக் கொண்டிருந்தார்.

''இதுதான் புருஷாமிருகம்! குபேரன் தோட்டத்தை காவல் காத்து வந்தது! பீமனைத் துரத்திக் கொண்டு பூலோகம் வந்தது! இப்போது இந்த சிதம்பரம் கோவிலைக் காத்து வர்றது...'' தீட்சிதர் அவர்களிடம் சொன்னார்.

இதைக் கேட்ட அமுதன் உறைந்துபோய் நின்றான்.

'புருஷாமிருகம்!'-

அவனது சிந்தையில், அந்த தீட்சிதரின் உச்சரிப்பு, ஒரு ஒலி அலையை எழுப்பியது.

தொடர்ந்து அமுதனின் காதில், அவன் அம்மாவின் குரல் கேட்க ஆரம்பித்தது. அவனைச் சுற்றி நிலவிய ஒலிகள் அடங்கி, அவன் அம்மாவின் குரல் மட்டுமே அவனது செவிகளை நிரப்பியது.

*''அம்மா! எங்க ஸ்கூலுல எல்லோருக்கும் அப்பா இருக்கா! எனக்கு மட்டும் ஏம்மா அப்பா இல்லை...?''*

முதல் வகுப்பு படித்துக்கொண்டிருந்த அமுதன், தன் தாய் ஜ்யோத்ஸனாவிடம் கேட்ட கேள்வி இது.

அவளது முகத்தில் கொப்பளித்த உணர்ச்சிகள் அப்போது அவனுக்கு புரியவில்லை! அந்த முகத்தில் நிலவியது சோகமா, கோபமா, துக்கமா என்று இப்போது நினைவு கூற அவனால் இயலவில்லை. ஆனால், அவளது குரல் மட்டும் இப்போது அவன் காதில் தெளிவாக கேட்டது.

*''அமுதா, உங்கப்பாவை புருஷாமிருகம் தூக்கிக் கொண்டு போயிடுத்து... எனக்கு அவ்வளவுதான் தெரியும்...''*

அதன்பிறகு, அவன் அம்மாவிடம் தன் அப்பாவை பற்றி கேட்கவில்லை! அவன் அவ்வாறு கேட்க முடியாதபடி, இவன் மூன்றாம் வகுப்பில் படிக்கும் போது ஜ்யோத்ஸ்னா, திடீரென்று, காணாமல் போனாள். இது நாள்வரை அவளது இருப்பிடம் யாருக்குமே தெரியவில்லை. இப்போது அமுதனுக்கு பதினேழு வயது நடந்துக்கொண்டிருக்கிறது. இன்னும் மாமா அலுக்க சலிக்க, இவன் அம்மாவை தேடிக் கொண்டு தான் இருக்கிறார்.

''தொலையட்டும் விடுங்கோ! இருந்த போது, ஊரார் வாயில் விழுந்து புறப்பட்டா! கண் மறைவா அவள் எங்கேயோ இருக்கட்டும்! நாமாவது நிம்மதியா இருக்கலாம்,'' என்று மாமி மாமாவின் அம்மாவை' தேடும் படலத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள்.

இருப்பினும், யாராவது அவ்வப்போது வந்து, 'ஜ்யோத்ஸனாவை கும்பகோணத்துல பார்த்தேன்' திருப்புல்லாணில பார்த்தேன்' என்று கூறி, அவளுக்கு 'அஞ்சு கொடுத்தேன். பத்து கொடுத்தேன்' என்று கூறி மாமாவிடம் பணம் வாங்கி போவார்கள்.

அதற்கும் மாமி விரைவிலேயே தடைவிதிக்க, அந்த குடும்பமும், திருவல்லிக்கேணியும், இவனது அம்மாவை மறக்கத் தொடங்கியது.

ஆனால், கோவில் உற்சவங்களிலும், கல்யாணங் களிலும், ஜ்யோத்ஸனாவைப் பற்றி பேச்சு எழுவதற்கு அமுதனின் அழகே காரணமாகி விட, இம்மாதிரி வைபவங்களுக்கு போவதை தவிர்த்தான். மாமாவின் மைத்துனன் மகன் பூணூல் என்பதால் அதை தவிர்க்க முடியாமல் சிதம்பரம் வந்திருந்தான்.

அமுதனின் அழகை வர்ணிக்க வேண்டாம்! அதை அவன் விரும்பவில்லை. அவன் தன் அழகை வெறுத்தான். பால் போன்ற தன் நிறத்தை வெறுத்தான். அதனால், அவன் அழகை வர்ணித்து, அவன் மனதை நோகடிக்க வேண்டாம்.

ஆனால் ஒன்று மட்டும் கூறலாம்! அவனை ஒரு முறை பார்த்தவர்கள், மீண்டும் மீண்டும் அவனைப்

பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அல்லிக்கேணியில் வாழும் ஒப்பவரில்லா மாதர்களின் கனவுக்கண்ணனாக மாறும் அத்தனை தகுதிகளையும் பெற ஆரம்பித்திருந் தான். கம்பீரம் அவன் தேகத்தை ஆக்ரமிக்க தொடங்கி யிருந்தது. அவன் 'பிறப்பை'க் குறித்த மர்மங்கள் மட்டும் நீங்கி விட்டால், அவனுக்கு பெண்கொடுக்க இப்போதே பலரும் தயார்.

தீட்சிதரிடம் கதை கேட்ட யாத்ரீகர்கள் விலகிச் செல்ல, அமுதன் அவரை நெருங்கினான். யாத்ரீகர் கொடுத்த தட்சிணையை எண்ணிக்கொண்டிருந்த தீட்சிதர், தன் முன் நிழலாட, பார்வையை உயர்த்தினார்.

''மாமா! அவாகிட்டே சொல்லிண்டு இருந்தேளே! இதுதான் புருஷாமிருகமா?'' அந்த சிற்பத்தை சுட்டிக் காட்டினான்

''பாக்கெட்ல எவ்வளோ வச்சிருக்கே அம்பி,'' தீட்சிதர் எதிர்கேள்வி கேட்டார்.

''பைசா இல்லை மாமா!'' அமுதன் சொல்லவும், இவனோடு என்ன பேச்சு என்கிற ரீதியில், தீட்சிதர் நடையைக் கட்டினார்.

''இதுவா புருஷாமிருகம்'' தன்னை மறந்து உரத்தக் குரலில் அமுதன் கேட்க, அவன் தோள்களின் மீது இருகைகள் படர்ந்தன.

''ஆமாம் தம்பி! இதுதான் புருஷாமிருகம்...!''

''எங்கம்மா சொன்ன... புருஷாமிருகம் இதுவா?'' நம்ப முடியாமல் தனக்கு தானே கேட்டுக்கொண்டவன்,

திடீரென்று தன் கேள்விக்கு யாரோ பதிலளித்தது உறைக்க, சடாரென்று திரும்பிப்பார்த்தான்.

இவனை அன்புடன் பார்த்தபடி, பொக்கை வாயில் ஒன்றிரண்டு பற்களை வெளிக்காட்டியபடி, உயரமான முதியவர் ஒருவர் நின்றிருந்தார்.

''ஆமாம் அமுதா! உங்கப்பாவை தூக்கிண்டு போன புருஷாமிருகம் இதுதான்! உங்கம்மா ஜ்யோத்ஸனா உன்கிட்ட சொன்னது இதை பத்தித்தான்...''

அமுதன் திகைத்தான்.

''என் பெயர் உங்களுக்கு எப்படி தெரியும்? என் அம்மாவைப் பத்தி தெரிஞ்சுண்டு இருக்கீங்கோ! நீங்க யாரு?''

''எனக்கு உன் அம்மா, உன் அப்பா, உன்னோட பாட்டி, உன்னோட கொள்ளுதாத்தா கொள்ளுபாட்டி எல்லோரையும் தெரியும்! நான் உன்னோட கொள்ளுத் தாத்தாவோட சினேகிதன், அமுதா! என் பெயர் நம்பாடுவான்!''

அமுதன் பரவச நிலைக்கு தள்ளப்பட்டான்! தன்னை தன் பெற்றோரிடம் சேர்ப்பிப்பதற்காகவே நம்பாடுவான் அங்கே வந்திருப்பதாக தோன்றியது.

''தாத்தா! என் அப்பா அம்மா எங்கே?''

''தேடிக் கண்டுபிடி அமுதா! உன்னாலதான் அவங்களுக்கு விமோசனம் கிடைக்கணும்'' நம்பாடுவான் கூறினார்.

அமுதன் நிமிர்ந்து புருஷாமிருக சிலையை வெறித்தான்.

''தாத்தா! இந்தக் காலத்துல கூட புருஷா மிருகம் மாதிரி பிராணிகள்லாம் இருக்கா...?'' நம்ப முடியாமல் கேட்டான்.

''இருக்கு அமுதா''

''தாத்தா! என் அப்பா மர்மமா செத்துப்போயிட்டதா எல்லோரும் சொல்றாளே! புருஷாமிருகம்தான் என் அப்பாவை கொன்னுடுத்தா?''

விரக்தியுடன் கேட்ட அமுதனை, பரிவுடன் பார்த்தார், நம்பாடுவான்.

''இல்லை அமுதா! எனக்கு அப்படி தோணலை! அந்த மிருகம் உங்கப்பாவை கொலை செஞ்சிருக்காது! உங்கப்பாவை எங்கேயோ சிறை வச்சிருக்கு!...''

''அந்த புருஷாமிருகம், எங்கே இருக்கு தாத்தா? அந்த மிருகத்துகிட்டே போராடி, என் அப்பாவை மீட்டு அம்மா கையில சேர்க்கணும்...''

நம்பாடுவான் உணர்ச்சியுடன் அமுதன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''நீ செய்வேடா அமுதா! முதலுல உன் அம்மாவை கண்டுபிடி...''

''தாத்தா! என் அப்பா அம்மாவை பத்தி சொல்லுங்களேன்! என் அம்மாவை எல்லோரும் கேவலமா பேசறாளே...''

துக்கத்தினால் அமுதனின் தொண்டை அடைக்க, அவனை ஆசுவாசப்படுத்தினார், நம்பாடுவான்.

"அமுதா! நானும் அந்த பூணூல் கலியாணத்துக்குதான் வந்தேன்! உன் மாமியும், அவ அம்மாவும் உன்னை வார்த்தைகளால் நோகடிக்கறதைப் பார்த்தேன்! விசாரிச்சதுல, நீதான் ஜ்யோத்ஸ்னாவோட பிள்ளைன்னு தெரிஞ்சுகிட்டேன்! உன்னோட பேசறதுக்காகவே உன் பின்னாடியே வந்தேன்!"

"தாத்தா! என் கதையை தயவுசெய்து சொல்லுங்கோ! என் மாமாவை கேட்டா ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறார்!..." அமுதன் வேதனையுடன் சொன்னான்.

"சொல்றேன் அமுதா! சிதம்பர ரகசியத்தை விட பெரிய இரகசியம்பா உன் குடும்ப இரகசியம்! வா!... கோயில் உள்ளே... உட்கார்ந்து பேசலாம்!..."

நம்பாடுவான் அமுதனை அணைத்தபடி கோவிலுக்குள் சென்றார்.

தான் கூறப்போகும் பயங்கரங்களைத் தாங்கி கொள்ளும் தைரியத்தை அமுதனுக்கு அளிக்கும்படி, தில்லை நடராஜனிடம் வேண்டியவாறு நடந்தார், நம்பாடுவான்.

# 2. சகட வாக்கியம்

## 1919 - சிதம்பரம்

**ஸ்ரீ**வத்ஸாங்கம் ஊஞ்சலில் உட்கார்ந்திருக்க, அருகே தட்டு நிறைய லட்டுகள் குவிக்கப்பட்டிருந்தன. பண்ணையாட்கள் வரிசையாக வந்து கைநீட்ட, ஒவ்வொருவர் கையிலும் தலா ஒரு லட்டு விழுந்தது.

''டேய் மாடசாமி! எனக்கு பேரன் பொறந்திருக்கான்! வர்ற... ஆடிமாசம், நம்ம சேம்பாத்தம்மனுக்கு கூழ் வார்க்கணும்... நேரங் கிடைக்கச்சே வந்து துட்டு வாங்கிக்கோ...!''

அவன் கையில் லட்டை தந்தபடி, ஸ்ரீவத்ஸாங்கம் சொன்னார்.

''டேய் மட்டையா! எனக்கு பேரன் பொறந்திருக்கான்! உன் கிராமத்துல இருக்கிற சின்னமஸ்தா கோவிலுக்கு கல் வெளக்கு வாங்கி தரேன்! எடுத்துண்டு போ...''

''அடடே... பூங்காவனமா! உன் புருஷன் எப்படி இருக்கான்? இந்தா லட்டு வாங்கிக்கோ! எனக்கு பேரன் பொறந்திருக்கான்!... நேரங் கிடைக்கச்சே குழந்தைய வந்து பாரு! நீதான் மருத்துவச்சியாச்சே! வெள்ளைக்கார டாக்டர் கண்ணுல படாத விஷயமெல்லாம், உன் கண்ணுல படுமே!''

பொங்கி பாயும் உற்சாகத்துடன் லட்டுகளை வினியோகித்துக் கொண்டிருந்தார், ஸ்ரீவத்ஸாங்கம். அவருடைய ஒரே மகள் வனஜாவுக்கு அன்று அதிகாலை ஆண் குழந்தை பிறந்திருந்தது. அந்த மகிழ்ச்சியை லட்டுகளாக மற்றவர்களிடம் பகிர்ந்துக் கொண்டிருந்தார். அவர் மனைவி வகுளாபரணம் அவ்வப்போது வனஜா படுத்திருந்த அறையில் இருந்து எட்டிப் பார்த்தபடி, தன் கணவனது குதூகலத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்.

உள்ளே சமையலறையில் நெய் மணங் கமழ, சர்க்கரைப் பொங்கலை தயார் செய்துக் கொண்டிருந்தான், சமையல்காரன். கண்ணன் பிறந்துவிட்டதால் அன்றைய பெருமாள் ஆராதனத்தை சிறப்பாக செய்ய நினைத்திருந்தார், ஸ்ரீவத்ஸாங்கம்.

உற்சாகம் பிரவாகமாக ஓடிக்கொண்டிருந்தது, அந்த வீட்டில். தங்களது முதலாளி ஆனந்தத்தின் உச்ச கட்டத்தில் இருப்பதைக் கண்ட பண்ணையாட்களும் மகிழ்ச்சியுடன் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருக்க, அப்போது உள்ளே நுழைந்தார், நம்பாடுவான்.

"அடடே! வாருமய்யா... சகடவாக்கி!* கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி... நீரே

---

* சாத்திரங்களையும், ஜோதிடத்தையும் கலந்து எதிர்காலத்தை விவரித்து கூறுபவர் 'சகட வாக்கியர்' எனப்படுவார். இவர் ஜாதகத்தையோ, கைரேகையையோ படிப்பதில்லை. மனித உடலில் உள்ள நாடிச் சக்கரங்களின் ஓட்டத்தை கொண்டு எதிர்காலத்தை துல்லியமாக கூறுவார்.

*வந்துட்டீரே! உம்மை கூப்பிடதான் ஆள் அனுப்ப லாம்'னு இருந்தேன்... எனக்கு பேரன் பொறந்திருக் காங்கணம்! அவன் பொறந்த நேரத்தை வகுளம் குறிச்சு வச்சிருக்கா! நீர் அவன் ஜாதகத்தை கணிச்சு... அவன் எதிர்காலத்தை கூறணும்...'' ஸ்ரீவத்ஸாங்கம் எழுந்து நம்பாடுவானை வரவேற்றார்.*

*''சாமி! ரொம்ப சந்தோஷம்! நான்தான் ரெண்டு வருஷம் முன்னாடியே சொன்னேனே. பாப்பாவுக்கு கலியாணம் ஆன அடுத்த வருஷமே கையில குழந்தை வந்துடும்னு''*

*''சொன்னீர்! என்ன பிரயோசனம்? கல்யாணம் முடிஞ்ச கையோட தட்டு நிறைய சுவர்ண புஷ்பம் கொடுத்தேன்! வாங்கிக்க மாட்டேன்னுட்டீர்! உலகத்தையே உம்ம காலுல கட்டிப்போடற அளவுக்கு வித்தை இருந்தும், தம்புடி சம்பாதிக்க மாட்டேங்கறீர்...''*

*உண்மையான அக்கறையுடன் ஸ்ரீவத்ஸாங்கம் சொல்ல, நம்பாடுவான் சிரித்தார்.*

*''சாமி! பகவான் கனிமங்கள் ரூபத்துல பூமியடியில தூங்கறான்! புஷ்பங்களா அதிகாலையில கண் விழிக்கிறான்! விலங்குகள் ரூபத்துல நடமாடறான்!*

---

**சகஸ்ர தளம் (தலை உச்சி) விசுத்தி (தொண்டை குழி), அநாகதம் (மார்பு) மணிபூரகம் (வயிறு) சுவாதிட்டானம் (தொப்புளுக்கு கீழ்) மற்றும் மூலாதாரம் (மர்ம உறுப்பு) ஆகியவற்றின் சக்கர ஓட்டத்தைக் கொண்டு எதிர்காலத்தை கூறுவார்கள்! நம்பாடுவான் அப்படிப்பட்ட ஒரு சகடவாக்கியர்!**

ஏதோ நம்மை போல மனுஷங்க ரூபத்துல சிந்தனை செய்யறான். எல்லாத்தையும் அவன் செய்ய, தட்சிணைய நான் வாங்கிக்கறது எந்த வகையில் நியாயம்?''

''எல்லாத்துக்கும் பதில் வச்சிருக்கீர்..! லட்டையாவது எடுத்துப்பீரா... இல்லை பகவான் பூந்தி ரூபத்துல சிரிக்கிறான்னு ஏதாவது கதை சொல்வீரா?''

நம்பாடுவான் சிரித்தபடி லட்டை எடுத்துக் கொண்டார்.

''சுகப்பிரசவம் தானே சாமி?''

''சுகமோ சுகம்! கார்த்தால நான் சந்தியாவந்தனம் ஆரம்பிக்கச்சே நோவு எடுத்தது! நான் 108 காயத்ரி ஜபிச்சுட்டு வர்றதுக்குள்ளே என் பேரன் பொறந்தாச்சு''

நம்பாடுவான் கைகூப்பினார். ''எல்லாம் அந்த நடராஜனோட க்ருபை!''

ஸ்ரீவத்ஸாங்கம் செல்லமாக நம்பாடுவானை மிரட்டினார்.

''ஓய் சகடவாக்கி! கோவிந்தராஜர் கோவிச்சுக்கப் போறார்! அவரோட க்ருபையும் இதுல இருக்குங் கணும்!''

நம்பாடுவான் தன் கையில் இருந்த லட்டை பிட்டு வாயில் போட்டுக்கொண்டார். இது ஒன்றுதான் நண்பர்கள் இருவரிடையே உள்ள ஒரே பேதம்! இருவருமே 1870ல் பிறந்திருந்தவர்கள் தான். இருவரும் வளர வளர, அவர்களிடையே நட்பு பலப்பட்டுக் கொண்டே வந்தது. கூடவே நம்பாடுவானின் நடராஜர்

பக்தியும், ஸ்ரீவத்ஸாங்கத்தின் கோவிந்தராஜர் பக்தியும் வளர்ந்தன. சைவ வைணவ பேதம், தங்களிடையே நிலவிய 47 வருட நட்பை குலைக்காத வண்ணம் இருவருமே எச்சரிக்கையுடன் நடந்துக் கொண்டனர்.

நம்பாடுவான் கோவிலுக்குள் நுழையக் கூடாது என்று தடைவிதித்த தீட்சிதர்களுக்கு எதிராக, ஆங்கிலேயரிடம் தனக்கு உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்த தடையை தகர்த்தெறிந்தார், ஸ்ரீவத்ஸாங்கம்.

நம்பாடுவானும் தனது சகட வித்தையைக் கொண்டு ஸ்ரீவத்ஸாங்கம் குடும்பத்திற்கு எந்த பிரச்னைகளும் ஏற்படாமல் பார்த்துக்கொண்டார்.

இப்போது கூட நம்பாடுவானுக்கு ஆனி திருமஞ்சனத் திற்காக திரவியங்களை திரட்ட வேண்டிய பணி இருக்கின்றது. ஆனால், வனஜாவிற்கு பிள்ளை பிறந்த சேதியைக் கேள்விப்பட்டு உடனே ஓடி வந்திருக்கிறார்.

''வகுளா!... நம்பாடுவான் வந்திருக்கார்... பாரு!...'' விசிறி காம்பினால் முதுகை சொறிந்தபடி, ஸ்ரீவத் ஸாங்கம் அழைக்க, சேலைத்தலைப்பை இடக்கையால் இழுத்துப் போர்த்தியபடி, வலது கையில் தான் கொண்டு வந்திருந்த பாலை அவர் முன் வைத்தாள்.

''நினைச்சுண்டே இருந்தேன்! வனஜா மேல உங்களுக்கு உயிராச்சே! இன்னும் காணுமேன்னு...''

லோட்டாவைக் கையில் எடுத்து பாலைப் பருகியவர், தனது மேல்துண்டினால் வாயைத் துடைத்தபடி, வகுளாபரணத்தைப் பார்த்தார்.

''அம்மா! குழந்தை எப்படி இருக்கா?''

''தூங்கறா...!''

''தூங்கட்டும் பாவம்! சாமி! குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப் போறீங்க?''

''எங்க ஊர் திருநாங்குர் வண்புருடோத்தமம்! எங்க பெருமாள் பெயரான புருஷோத்தமன்னு பையனை கூப்பிடலாம்னு இருக்கோம்'' போதாத குறைக்கு மாப்பிள்ளை அவா ஊர் பெருமாளான வேங்கட கிருஷ்ணன்னு வக்கப் போறாராம்! ஆனா... கூப்பிடப் போறது புருஷோத்தமன்தான்,'' ஸ்ரீவத்ஸாங்கம் குரல் திட்டவட்டமாக ஒலித்தது.

''ஆஹா! புருஷோத்தமன்! அழகான பெயர்!'' சிலாகித்துக் கொண்டார், நம்பாடுவான்.

''டீ வகுளம்! போய் குழந்தைய கொண்டு வா! சகட வாக்கி என்ன சொல்றார்னு பார்ப்போம்.''

''கொஞ்சம் இருங்கோ! வேலைக்காரி குழந்தைய குளிப்பாட்டிண்டு இருக்கா!... அப்புறமா கொண்டு வரேன்...'' வகுளம் காலி டம்ளரை கையில் எடுத்துக் கொண்டு உள்ளே போக யத்தனித்தாள்.

''மாமி! கொஞ்சம் இருங்கோ! முதல் தடவையா குழந்தைய பார்க்க போறேன்! எதையும் சாங்க்யத்தோட செய்யணும். தரையை மெழுகி கோலம்போட்டு, நுனி இலையில அரிசியை சேர்த்து, அது மேல பட்டுத் துணியை பரப்பி, அது மேல குழந்தைய கொண்டு வந்து விடுங்கோ! ஒரு குத்து விளக்கையும் ஏத்தி வையுங்க!...'' நம்பாடுவான் கூறினார்.

வருளாபரணம் பரபரப்புடன் சகட வாக்கி கூறியபடி செய்தாள்.

நம்பாடுவான் ஜாக்கிரதையாக ஸ்ரீவத்ஸாங்கத்தின் முகத்தைப் பார்த்து பேசினார்.

''சாமி! நான் சகடவாக்கி! உள்ளதை அப்படியே சொல்லிடுவேன்! நான் என்ன சொன்னாலும் நீர் விகல்பமா எடுத்துக்க கூடாது! நம்ம நட்பு இப்படியே நிலைச்சு இருக்கணும்...''

ஸ்ரீவத்ஸாங்கம் அவரை கேலியுடன் பார்த்தார் ''ஒய் சகடவாக்கி! நீர் வழக்கமா பாடற பிலாக்கணம்தானே இது! எனக்கு தெரியும்! 'என் பேரன் பிறந்த நேரம், எனக்கு மரணம் சம்பவிக்கலாம்னு நீர் சொன்னாக் கூட நான் கோபப்படமாட்டேன்! நம்ம சினேகம் உடையாது, போதுமா!...''

சுள்ளென்று கோபம் வந்தது நம்பாடுவானுக்கு. ''வாயை கழுவுங்க சாமி! மரணத்தை பற்றி பேசறதுக்கு நாம யாரு! மரணம் சாவுனு நம்ம வாய் உச்சரிச்சாலே, அது நம் வீட்டைத் தாக்கும்! உமக்கு ஆயுள் பலம் இருந்ததுனா, அடுத்தப்படியா வேற யாரையாவது தாக்கும்! இன்னொரு தடவை, அப்படி பேசாதீங்க!'' உண்மையான வருத்தத்துடன் கூறினார், நம்பாடுவான்.

''நல்லா சொல்லுங்கோ! குழந்தை பொறந்திருக்கிற நேரம் இப்படியா பேசுவா?'' பச்சை பட்டுத்துணியில் குழந்தையை ஏந்தியபடி வந்த வகுளம், வாழை யிலையில் பரத்தியிருந்த அரிசியின் மீது குழந்தையைக் கிடத்தினாள்.

கிருஷ்ண விக்ரகமாக இருந்தது குழந்தை. தலை நிறைய புசுபுசுவென்று முடியும், செக்கச்செவேல் என்று நிறமும், கொள்ளை அழகாக இருந்தது. நாசூக்காக தன் நடுவிரலில் தீற்றியிருந்த மையை அதன் கன்னத்தில் பொட்டாக வைத்தாள் வகுளம்.

நாற்காலியிலிருந்து எழுந்த நம்பாடுவான் குழந்தைக்கு அருகே கிழக்கு முகமாக உட்கார்ந்தார். கைகளை கூப்பி கண்ணை மூடியவர், தனது குரு பாடலை முதலில் பாடினார்.

**"திகடச் சக்கரச் செம்முக மைந்துளான்**
**சகடசக்கர தாமரை நாயகன்**
**அகடசக்கர விண்மணி யாவுறை**
**விகடச் சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்."**

என்று பாடியவர், கண்களைத் திறந்து குழந்தையின் உச்சி முதல் பாதம் வரை தனது பார்வையை ஓட விட்டார். பிறகு குழந்தையின் பாதங்களின் அடிப் பகுதியை தடவி ஆராய்ந்தார்.

அவர் கூறப்போவதைக் கேட்க ஆவலுடன் காத்திருந்தனர், அதன் பாட்டனும், பாட்டியும்.

நம்பாடுவான் குழந்தையின் உச்சந்தலை, தொண்டைக்குழி, மார்பு, வயிறு, அடிவயிறு, மர்மஸ்தானம் ஆகியவற்றில் கை வைத்து நாடி சக்கர ஓட்டத்தை உணர்ந்தார். மீண்டும் கண்களை மூடியபடி, வெகு நேரம் அந்த சக்கர ஓட்டங்களை படித்தார்.

அடுத்த கணம்

கணீரென்ற குரலில் குழந்தையைப் பற்றி பாட்டுப் படித்தார், நம்பாடுவான்!

**''பாடிச்சேரியை குலையறுக்க**
**ஆடிவந்ததோர் வன்சகடம்**
**அடித்தாமரையால் மாலன் உதைக்க**
**மடிந்து வீழ்ந்தது பேய்ச்சகடம்**
**கூடத்து சேயை குடிகெடுக்க**
**பூடகமாய் பாயுது மதனசகடம்**
**நாடகமாய் நாடி துடிக்குதுகாண்**
**கேடகத்தில் விளைவிக்க வருகுதே''**

ஸ்ரீவத்ஸாங்கமும், வகுளமும் திடுக்கிட்டு பார்வைகளை பரிமாற்றம் செய்து கொண்டனர். வகுளம்தான் நம்பாடுவானை இடைமறித்தாள்.

''மாமா! நீங்க சொல்றது புரியலை!''

''ஆயர்பாடியில குழந்தையா இருந்த கண்ணனை கொல்ல வந்த வண்டிச் சக்கரத்தை எட்டி உதைத்து, சகடாசூரனை அவன் கொன்னான் இல்லையா, அது போல சித்திரகூடத்து (சிதம்பரம்) குழந்தையான உங்க பேரனை நோக்கி ஒரு சகடம் உருண்டு வருது! உங்க அகத்துல கேடு விளைவிக்க போறதுனு சக்கர தளம் சொல்றதும்மா!...''

வகுளம் செய்த இடையூறை ரசிக்காமல், சற்றுக் காட்டமாகவே கூறினார், நம்பாடுவான்!

வகுளம் அதிர்ச்சியடைந்தாள்.

''வேணாம்ணா! எதையாவது ஏடாகூடமா சொல்லிடப் போறார்! வனஜா காதுல விழுந்துடப் போறது!

இத்தோட நிறுத்துங்கோ...'' வகுளம் கணவனிடம் கெஞ்சினாள்.

ஸ்ரீவத்ஸாங்கம் யோசனையுடன் சகடவாக்கியைப் பார்த்தார்.

அவரது பார்வையை எதிர்நோக்கிய நம்பாடுவான், மெல்லிய குரலில் சொன்னார்.

''என்ன சாமி செய்யட்டும்! தொடர்ந்து பாட்டு படிக்கவா... வேணாமா?''

முதல் தடவையாக, தங்களது சினேகம் தான் பாட்டு படிப்பதால் உடைந்துவிடுமோ என்று சகடவாக்கியே பயந்தது போல தோன்றியது, அவர் கேட்ட விதம்.

''சகடவாக்கி! எதுவா இருந்தாலும் பாட்டை படிச்சுடும்! நம்ம சினேகம் போயிடுமோன்னு பயப் படாதீர்! உம்ம வாக்கு தூய்மையானது, சத்தியமானதுனு எனக்கு தெரியும்! விவரம் என்னன்னு தெரிஞ்சுண்டா பரிகாரம் ஏதாவது செய்யலாமே...

சொல்லிவிட்டாரே தவிர, நம்பாடுவான் கூறப் போவதை எதிர்கொள்ளும் திராணி அவருக்கும் இல்லை. சற்று முன் லட்டு உருண்டைகளாக பீறிட்டுக் கொண்டிருந்த அவரது உற்சாகம் மறைந்து, தற்போது இரும்பு உருளைகளாக அவரது இதயத்தை கவலை அழுத்தியது.

தயக்கத்துடன் அந்த தம்பதியை மாறி மாறி பார்த்த நம்பாடுவான், கண்களை மூடிக்கொண்டார். குழந்தையின் மீது கையை வைத்து மீண்டும் பாட்டுப் படித்தார்.

**கருடனேறும் புருடப்பிள்ளைக்கு**
**நெருடலாய் துடிக்குது சகடநாடி**
**வருடங்கள் ஓடினதும் தலைமகனை**
**புருடாமிருகம் பாய்ந்து விரட்டிடுமே.**

ஸ்ரீவத்ஸாங்கத்தின் முகம் இருளடைந்தது. ''சகடவாக்கி! கொஞ்சம் விளக்கி சொல்லும்!''

''நீர் திருமாலை கும்பிடும் இனம். உம்ம வம்சத்துல பிறந்த இந்தக் குழந்தையின் நாடியை படிக்கறச்சே நெருடலா சில விஷயங்களை உணர முடியுது, சாமி! இன்னும் பல வருஷங்கள் போனப்புறம், பையனை புருஷாமிருகம் துரத்தும்னு நாடி சொல்லுது!'' நம்பாடுவானின் குரலில் நடுக்கம் தோன்றியது.

''புருஷாமிருகமா?'' ஸ்ரீவத்ஸாங்கம் திகைத்தார்!

''சிதம்பரம் கோயில் வாசலை காவல் காக்கறதே... அதுவா?'' திகிலுடன் கேட்டாள், வகுளம்.

''ஆமாம்'' என்கிற பாவனையில் தலையை ஆட்டினார், நம்பாடுவான்.

''இந்த காலத்துல ஏது, புருஷா மிருகம்? யாளி, ஹம்சம், புருஷாமிருகம் மாதிரி புராணகாலத்து மிருகங்களும் பட்சிகளும் இப்ப எங்கே இருக்கு?'' சந்தேகத்துடன் கேட்டார், ஸ்ரீவத்ஸாங்கம்.

''இருக்கு சாமி!'' ஒரே வரியில் பதிலளித்தார், நம்பாடுவான்.

''இருக்கா?'' உறைந்து போனார் ஸ்ரீவத்ஸாங்கம் ''அது, ஏன் என் பேரனை குறிவைக்கணும்.''

இத்தோட நிறுத்துங்கோ...'' வகுளம் கணவனிடம் கெஞ்சினாள்.

ஸ்ரீவத்ஸாங்கம் யோசனையுடன் சகடவாக்கியைப் பார்த்தார்.

அவரது பார்வையை எதிர்நோக்கிய நம்பாடுவான், மெல்லிய குரலில் சொன்னார்.

''என்ன சாமி செய்யட்டும்! தொடர்ந்து பாட்டு படிக்கவா... வேணாமா?''

முதல் தடவையாக, தங்களது சிநேகம் தான் பாட்டு படிப்பதால் உடைந்துவிடுமோ என்று சகடவாக்கியே பயந்தது போல தோன்றியது, அவர் கேட்ட விதம்.

''சகடவாக்கி! எதுவா இருந்தாலும் பாட்டை படிச்சுடும்! நம்ம சிநேகம் போயிடுமோன்னு பயப் படாதீர்! உம்ம வாக்கு தூய்மையானது, சத்தியமானதுனு எனக்கு தெரியும்! விவரம் என்னன்னு தெரிஞ்சுண்டா பரிகாரம் ஏதாவது செய்யலாமே...''

சொல்லிவிட்டாரே தவிர, நம்பாடுவான் கூறப் போவதை எதிர்கொள்ளும் திராணி அவருக்கும் இல்லை. சற்று முன் லட்டு உருண்டைகளாக பீறிட்டுக் கொண்டிருந்த அவரது உற்சாகம் வடிந்து, தற்போது இரும்பு உருளைகளாக அவரது இதயத்தை கவலை அழுத்தியது.

தயக்கத்துடன் அந்த தம்பதியை மாறி மாறி பார்த்த நம்பாடுவான், கண்களை மூடிக்கொண்டார். குழந்தையின் மீது கைவைத்து மீண்டும் பாட்டுப் படித்தார்.

**கருடனேறும் புருடப்பிள்ளைக்கு**
**நெருடலாய் துடிக்குது சகடநாடி**
**வருடங்கள் ஓடினதும் தலைமகனை**
**புருடாமிருகம் பாய்ந்து விரட்டிடுமே.**

ஸ்ரீவத்ஸாங்கத்தின் முகம் இருளடைந்தது. ''சகடவாக்கி! கொஞ்சம் விளக்கி சொல்லும்!''

''நீர் திருமாலை கும்பிடும் இனம். உம்ம வம்சத்துல பிறந்த இந்தக் குழந்தையின் நாடியை படிக்கறச்சே நெருடலா சில விஷயங்களை உணர முடியுது, சாமி! இன்னும் பல வருஷங்கள் போனப்புறம், பையனை புருஷாமிருகம் துரத்தும்னு நாடி சொல்லுது!'' நம்பாடுவானின் குரலில் நடுக்கம் தோன்றியது.

''புருஷாமிருகமா?'' ஸ்ரீவத்ஸாங்கம் திகைத்தார்!

''சிதம்பரம் கோயில் வாசலை காவல் காக்கறதே... அதுவா?'' திகிலுடன் கேட்டாள், வகுளம்.

''ஆமாம்'' என்கிற பாவனையில் தலையை ஆட்டினார், நம்பாடுவான்.

''இந்த காலத்துல ஏது, புருஷா மிருகம்? யாளி, ஹம்சம், புருஷாமிருகம் மாதிரி புராணகாலத்து மிருகங்களும் பட்சிகளும் இப்ப எங்கே இருக்கு?'' சந்தேகத்துடன் கேட்டார், ஸ்ரீவத்ஸாங்கம்.

''இருக்கு சாமி!'' ஒரே வரியில் பதிலளித்தார், நம்பாடுவான்.

''இருக்கா?'' உறைந்து போனார் ஸ்ரீவத்ஸாங்கம் ''அது, ஏன் என் பேரனை குறிவைக்கணும்.''

''சாமி! நீர் விஷயம் தெரிந்தவர்! நான் உமக்கு சொல்ல தேவையில்லை. இது ஜென்மாந்திரங்களால் ஏற்பட்ட பாதிப்பு! இந்த ஆத்மாவுக்கு இன்ன. கர்மானு விதிச்சிருக்கு. அந்த கர்மாவோட உங்க பேரனா இந்த ஜன்மாவுல ஜனிச்சிருக்கு, ஒரு ஆத்மா! நீங்க உங்க பேரன்னு உறவை ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே, அவனோட கர்மா அவனை தன் வசம் பலமா இழுத்துவச்சுட்டு இருக்கு...''

நம்பாடுவானை சோகத்துடன் பார்த்தாள், வகுளம். ''அது சரி மாமா! அந்த கர்மா உள்ளவன் ஏன் எங்க பேரனா பொறக்கணும்! கார்த்தால தொடங்கி ராத்திரி தூங்கப்போற வரைக்கும் பகவான் கைங்கர்யத்தைதானே செஞ்சுண்டு இருக்கோம்! எங்களுக்கு ஏன் இந்த தலையெழுத்து...'' அவளது கண்களில் நீர் திரண்டது.

''ஒரு வேளை, மகேஸ்வரனிடம் எங்க பெரியவா அபச்சாரப்பட்டதாலே எங்க பேரனை புருஷாமிருகம் துரத்தறதோ?...'' சந்தேகத்துடன் புலம்பினார், ஸ்ரீவத்ஸாங்கம்.

சிதம்பரத்தின் வைணவ சைவ சண்டைகள் பிரசித்தி பெற்றவை. இந்த கலகங்களின்போது, ஸ்ரீவத் ஸாங்கத்தின் மூதாதையர்கள் சிவனை கண்டபடி ஏசியுள்ளனர். அந்த சாபம்தான் இந்தக் குழந்தையை வாட்டப்போகிறதோ என்று நினைத்தார், ஸ்ரீவத்ஸாங்கம்.

நம்பாடுவார் மறுத்தார். ''சாமி! நீங்க சொல்றது சஞ்சித கர்மா! ஒருத்தரை திட்டறது, அடிக்கறது, கோள்

சொல்றது மாதிரி செயலுக்கெல்லாம் அந்தந்த ஜென்மாவிலேயே பலன் கிடைச்சிடும்! அதுக்கெல்லாம் மறுபிறவில தண்டனைங்கிற விதி கிடையாது...

''உங்க பேரனைப் பொறுத்தவரை பிராரப்தம் (பழைய பிறப்பின் கர்மாக்கள்), சஞ்சிதம் (நிகழ்கால கர்மாக்கள்), ஆகாமி (வரப்போகும் பிறவி கர்மாக்கள்) எதுவுமே இல்ல...''

''அப்ப ஏன், புருஷா...மிருகம் அப்படி... இப்படினு சொல்லி கலங்க வக்கறீர்?...''

நம்பாடுவான் தயங்கினார். ''நான் சொல்லப் போறதைக் கேட்டு நீங்க பயப்படாம இருந்தா தொடர்ந்து பேசறேன்...''

இன்னும் என்ன சொல்லப் போகிறாரோ என்கிற பயத்தில், நின்றுக் கொண்டிருந்த வகுளத்தின் கால்கள் துவள, அருகிலிருந்த தூணை பிடித்துக்கொண்டு அப்படியே சரிந்து உட்கார்ந்தாள்.

''எதுவா இருந்தாலும் சொல்லிடும்!'' ஈனஸ்வரத்தில் கூறினார், ஸ்ரீவத்ஸாங்கம்.

''உங்க பேரனை ஒரு யட்சிணி துரத்தறா. கடந்த பதினொரு ஜன்மமா அவனை துரத்திண்டு வர்றா! இது பன்னிரெண்டாவது ஜென்மம்! அதாவது கடைசி ஜென்மம்...

''சகடவாக்கி! முன்னுக்கு பின் முரணா சொல்றீரே! புருஷா மிருகம் விரட்டப்போறதுனு சொல்றீர்! யட்சிணி விரட்டறான்னு சொல்றீர். என்னதான் சொல்ல வர்றீர்?''

கடுப்புடன் கேட்டார் ஸ்ரீவத்ஸாங்கம்.

''அவசரப்படாதீங்க சாமி! அதைதான் நான் சொல்ல வர்றேன். உமக்கு புருஷாமிருகம் ★கதை தெரியு மில்லையா? பீமனை 12 முறை துரத்தி பிடிச்சு அவனை விழுங்க பார்த்தது. கண்ண பரமாத்மா தலையிட்டு பீமனை காப்பாத்தினார்.

''குபேரவனத்தை காவல் காக்கும் புருஷாமிருகம்! தினமும் குளிச்சுட்டு சிவ பூஜை செய்யுமாம். பூஜை செய்யப் போகறச்சே தன்கிட்டே இருக்கிற சக்தியை யட்சிணி பெண் ஒருத்திகிட்டே கொடுத்துட்டு போகும்! அந்த யட்சிணி பெயர் ம்ருகரஞ்சிகா! புருஷாமிருகம் பூஜையை முடிச்சுட்டு வரும் வரைக்கும் குபேரபுரியை அவ காவல் காப்பா... அந்த ம்ருகரஞ்சிகா தான் உங்க பேரனை துரத்திண்டு வர்றா...

''அவ எதுக்காக என் பேரனை துரத்தறா?'' வகுளம் பதைபதைத்தாள்.

''மாமி! இன்னைக்கு கார்த்தாலேர்ந்துதான் இந்த குழந்தை உங்க பேரன்! கடந்த பதினொரு ஜன்மமா இவன் ம்ருகரஞ்சிகாவோட எதிரி. அதனாலதான் புருஷா மிருகம் பீமனை துரத்தினதுமாதிரி, அந்த யட்சிணி இந்த ஆத்மாவை துரத்தறா...

''இவனோட மூலாதார சக்கரத்தை படிக்கும்போது இவனோட மூலக்கதை துல்லியமா தெரியுது! இவனோட மூலாதாரத்தை நோக்கிதான் அந்த யட்சிணியும் வந்துட்டு இருக்கா...''

---

★ முதல் அத்தியாயத்தில் கதை தரப்பட்டுள்ளது.

''எனக்கு என்ன சொல்றது'னு தெரியலை! என் பேரன் என்ன தப்பு பண்ணினானு அந்த யட்சிணி அவனை விரட்டறா?'' வகுளம் கேட்டாள்.

''பீமன் பண்ணின அதே தப்பைதான் செஞ்சிருக்கான் மாமி! உங்க பேரன் ஒரு கந்தர்வன்! யாரும் காவலுக்கு இருக்க மாட்டாங்கிற தைரியத்துல குபேர வனத்துக்குள்ளே நுழைஞ்சிருக்கான். அவனை யட்சிணி ம்ருகரஞ்சிகா பார்த்துட்டா! அவ உடம்புல புருஷா மிருகம் சக்தி இருக்கிறதால, அதே பாய்ச்சலோட அந்த கந்தர்வனை விரட்டிகிட்டு வர்றா!

''பன்னிரெண்டு கற்களை சிவலிங்கமா மாத்தி பீமனை கிருஷ்ணர் காப்பாத்தின மாதிரி, இது வரைக்கும்'' 12 பிறவிகளை கொடுத்து தெய்வாதீனம் தான் அந்த கந்தர்வனை காப்பாத்திட்டு வர்றது...''

''அப்படின்னா, இந்த பிறவிலயும் அந்த தெய்வாதீனம் என் பேரனை காப்பாத்தும் இல்லையா?'' நம்பிக்கையுடன் கேட்டார், ஸ்ரீவத்ஸாங்கம்.

''சாமி! நீங்க ஒண்ணு கவனிக்கணும். கிருஷ்ணர் பன்னிரெண்டு கற்களை பீமனிடம் கொடுத்து அவன் தன்னை காப்பாத்திக்கிற யுக்தியை மட்டும்தான் சொல்லிக்கொடுத்தார். இந்திரபிரஸ்த எல்லையை தாண்டி உள்ளே வந்துட்டா உயிர் தப்பலாம்! எல்லையை தாண்டலேன்னா உனக்கு மரணம்னு எச்சரிக்கை மட்டும்தான் செய்தார். தன்னை காப்பாத்திக்க பெருமுயற்சி பீமன் செஞ்சாலும், அவனை முழுக்க காப்பாத்தினது, அவனோட அண்ணனோட நேர்மையான தீர்ப்பு.

"அதே போலத்தான் சாமி! உங்க பையனை ம்ருக ரஞ்சிகா துரத்தறா! தெய்வாதீனம் அவனை பதினொரு தடவை காப்பாத்தியாச்சு! இந்த முறையும் நல்ல குலத்துல பிறவி கொடுத்து தெய்வாதீனம் அவனை காப்பாத்தியிருக்கு.

"துரத்தற ம்ருகத்துக்கிட்டே இருந்து ஓடறதும், அதன் கிட்டே சிக்கிகொள்ளறதும், உங்க பேரனோட சாமர்த்தியத்துலதான் இருக்கு. தெய்வாதீனம் வழியதான் காட்டியிருக்கு! இந்த குழந்தை தப்புவானா தப்ப மாட்டானாங்கிறது தெய்வாதீனத்துக்கே தெரியலை! இப்போதைக்கு, அந்த ம்ருகரஞ்சிகா கிட்டே இவன் சிக்குவான்னு தான் சொல்ல தோணுது."

"நம்பும்படியாவே இல்லையே! நாமெல்லாம் பகவான் கீழே இருப்பவா... நம்பிக்கையின்மையை தெரிவித்து, தன் இதயத்தை கப்பியிருந்த பயத்தை போக்க முற்பட்டாள், வகுளம்.

"பீமனும் பகவான் கீழேதான் மாமி இருந்தான்..." நம்பாடுவான் கூறினார்.

"அந்த யட்சிணியை அடக்க முடியாதா?" ஸ்ரீவத்ஸங்கம் கேட்டார்.

"சாமி! பெண்களை எடுத்துக்கிட்டா அவங்களை பத்மினி, சித்ரிணி, ஷங்கிணி ஹஸ்தினின்னு நாலு வகையா பிரிக்கலாம். பத்மினி வகைப் பெண்கள்தான் உயர்ந்த ரக பெண்கள்! அந்த உயர்ந்தரக பெண் களிலயும், குறையில்லாத பெண்ணை சுத்தஸத்வினினு சொல்லுவாங்க.

"அதே மாதிரி இந்த நாலு வகைப் பெண்களுல நீச்ச ரகமான பெண்கள் ஹஸ்தினி வகைய சேர்ந்தவங்க! இந்த நீச்ச ரகத்துலயும் மிக ஆபத்தான பெண்களை யட்சிணினு சொல்லுவோம்! அந்த யட்சிணிலயும் மிக மோசமானவ இந்த ம்ருகரஞ்சிகா! பதினாறு வகை யட்சிணில இவளை மதனபயங்கரினு கூப்பிடுவாங்க...

"சம்போகத்துல ஈடுபட்டு எதிரியை வீழ்த்தி அவன் கதைய முடிப்பா! அப்படிப்பட்ட ம்ருகரஞ்சிகா கிட்டேதான் புருஷாமிருகம் தனது சக்தியை கொடுத்து வக்கிற வழக்கம்! அந்த ம்ருகரஞ்சிகாவை மீறி குபேரவனத்துல நுழைஞ்ச கந்தர்வன்தான் இப்ப உம்ம பேரனா பொறந்திருக்கான். அப்படிப்பட்ட அந்த யட்சிணிய அடக்க முடியுமானு கேட்கறீங்க சாமி!... நான் முழு பாட்டையும் பாடி காட்டிடறேன்! அந்த யட்சிணியை அடக்க முடியுமா, முடியாதானு நீங்களே தீர்மானிச்சுக்கங்க..."

நம்பாடுவான் பாட்டைப் படிக்க, தம்பதிகள் வேதனையுடன் அவர் பாட்டை கவனித்தனர்.

- ❑ கருங்கல்லாய் நிலைபெற்று நில்லுங்கால், பெரு நீராய் கரைந்திடப் பாய்ந்தாள் (கந்தர்வன் கல்லாய் பிறவியெடுக்க, அவனை கரைக்க முயன்ற வெள்ள நீராக தோன்றினாள் ம்ருகரஞ்சிகா)
- ❑ பசும்புல்லாய் பரவியபோது உசிர் வெட்டுங் கிளியாய் மேய்ந்தாள் (பசும்புல்லாய் கந்தர்வன் பிறவியெடுக்க, புல்லை மேய வந்த வெட்டு கிளியாய் யட்சிணி உருவெடுத்தாள்.)

- நாறுமலராய் நானிலத்தில் பூத்ததும், கருவண்டாய் உயிர்தேனை குடிக்கவந்தாள் (கந்தர்வன் பூவாய் பூத்து நின்றபோது, தேன் உண்ணும் வண்டாய் வந்தாள்.)

- ஆலாய் நீண்டு ஓங்கியபோது, வேலாய் அண்டி பிளந்திட வந்தாள் (ஆலமரமாய் கந்தர்வன் வளர்ந்த போது, வேப்பமரமாய் அதனுடன் வளர்ந்து ஆலமரத்தைப் பிளக்கப்பார்த்தாள்)

- செஞ்சிலந்தியாய் வலைதான் நூற்பினும், கொஞ்சுமிணையாய் புசித்திட வந்தாள். (ஆண் சிலந்தியாய் கந்தர்வன் பிறவியெடுக்க அவனை, புணர்ந்து பிறகு புசித்திட முயன்ற பெண் சிலந்தியாய் உருவெடுத்தாள், ம்ருகரஞ்சிகா.)

- கொடுந்தேளாய் அடவியில் பதுங்க. கடும்விடத்தை கண்டதும் தந்தாள் (கந்தர்வன் கொடுந்தேளாய் பிறவி எடுக்க, பெண்தேளாக தோன்றி அவனை தன் கொடுக்கால் கொட்டி, கொல்ல முயன்றாள்.)

- நன்நாகமாய் தவக்கல் தேட, பொன்மலைப் பாம்பாய் குலையறுக்க நின்றாள். (நல்ல பாம்பாய் கந்தர்வன் பிறக்க, மலைப்பாம்பாய் அவனை நசுக்கி கொலை செய்ய முயன்றனள், ம்ருகரஞ்சிகா.)

- தலைமகளின் மாடப்புறாவாக ஏக, வன்பருந்தாக வந்து உயிர் குடிக்க பார்த்தாள். (அரண்மனை மாடப்புறாவாக கந்தர்வன் பிறந்த போது, அவனை தின்ன முயன்ற பருந்தாக வந்தனள் ம்ருகரஞ்சிகா.)

- ஆவினமாய் பால் தன்னைப் பொழிய, ஆவி நீக்க வேங்கையாய் பாய்ந்தனள் (கந்தர்வன் பசுவாய் ஜென்மம் எடுக்க அதை புசிக்க வந்த வேங்கையாய் வந்தாள் ம்ருகரஞ்சிகா)
- சோக மிலேச்சனாய் பிறவி எடுக்க, துரோக குருதியாய் கொலை செய்ய துணிந்தாள். (மிலேச்ச தேசத்து அரசனாய் கந்தர்வன் தோன்ற. அவனை சிறையில் தள்ளி, பதவியை பிடுங்கிய அவனது சகோதரியாய் பிறந்தாள் ம்ருகரஞ்சிகா)
- குலநாரியாய் இல்லறத்தை நாட, கால நாதனாய் கொல்லறத்தை காட்டினாள். (குல பெண்ணாக கந்தர்வன் தோன்ற, அவனை கொல்ல வந்த கணவனாக பிறவியெடுத்தாள் ம்ருகரஞ்சிகா)

பாடுவதை நிறுத்திய நம்பாடுவான், தம்பதிகளை கூர்ந்து பார்த்தார்.

''பீமன் எல்லைக்கு கிட்டே வந்தது போல், அந்த கந்தர்வனும் தனது கடைசி பிறவிக்கு வந்துட்டான்! இனி ம்ருகரஞ்சிகாவிடம் சிக்குவானா அல்லது தப்பிக்கப் போகிறானாங்கிறதை காலம்தான் சாமி பதில் சொல்லணும்.

நம்பாடுவார் பாட்டு படிப்பதை முடித்தார்.

சற்று நேரம் அசாதாரண அமைதி அங்கே நிலவியது.

பிறகு ஸ்ரீவத்ஸாங்கம் மெல்லிய குரலில் கேட்டார்.

''சகடவாக்கி! இதுலேர்ந்து என் பேரன் மீளவே முடியாதா?...''

''சாமி! அந்த யட்சிணி ம்ருகரஞ்சிகா ஆபத்தானவனு நான் படிச்சிருக்கேன். அவகிட்டே சிக்கினா மீளவே முடியாது!...''

வகுளம் கண்ணீர்விட்டாள்!

''யோசிச்சு சொல்லுங்கோ! அவளை என் பேரன் கிட்டே நெருங்க விடாம இருக்க ஏதாவது உபாயம் இருக்கணுமே!''

''எனக்கு தெரிஞ்சா சொல்லமாட்டேனா!'' நம்பாடுவான் வருத்தத்துடன் சொன்னார்.

''அந்த யட்சிணி எப்படி வருவா? அவ அடையாளங்களையாவது சொல்லுங்கோ. எங்களால முடிஞ்ச அளவுக்கு, அவ எங்க பேரனை நெருங்க முடியாதபடி செய்யறோம்!''

நம்பாடுவான் கண்களை மூடி குழந்தையை ஸ்பரிசித்தார்.

மீண்டும் நாடிதளத்தை படிக்கத் தொடங்கினார்.

**''ஆறிரண்டாம் பிறவியிது**
**அந்தணனே நீயறிவாய்**
**மடையனுக்கு கண்ணுரைத்தார்போல்**
**காலமிவனுக்கு நன்மதி கூறிடுமே**
**நாடுபவள் குபேரவன யட்சிணி**
**புருடாமிருகமாய் மகன்தனை பீடிப்பாள்**
**மதனரஞ்சிகையின் ரதிகேளிக்கை**
**தகனசடங்காய் முடிந்திடுமே...**

ஸ்ரீவத்ஸாங்கத்தின் உடல் வேர்வையில் நனைய, இதயத்தின் மூலையில் பயம் நெருஞ்சி முள்ளாய் குத்தி வலிக்கத் தொடங்கியது.

**குலைதன்னை நடுங்கசெய்து**
**குலபேதம் நிகழ்த்திடுவாள்**
**அனலோம்பும் பாலகனின்**
**ஏழாமிடத்து மால்கெடுத்து**
**ஜதகியவள் நிற்கின்றாள்**
**பாதகியவளிடம் எட்டநில்!**

''சகடவாக்கி! இந்த இடத்துல கொஞ்சம் விவரிச்சு சொல்லும்...'' ஸ்ரீவத்ஸாங்கம் கேட்டார்.

''சாமி! இந்த குழந்தைக்கு 12வது ஜன்மா இது. பீமனுக்கு கண்ணபிரான் புருஷாமிருகத்து கிட்டே இருந்து தப்பிக்க உபாயம் சொன்ன மாதிரி, உங்க பேரனுக்கும் காலம் எச்சரிக்கை செய்யுது.

''அந்த மதனரஞ்சிகையோட சகவாசம் மரணத்துல முடிஞ்சுடும். இந்த பையனை அடக்கி, அவன் குடும்பத்துகிட்டேருந்து பிரிச்சுடுவா! பையனுக்கு இன்னும் ஜாதகம் கணிக்கலை! கணிக்கச்சே பாருங்க! இவனுடைய குடும்ப ஸ்தானத்துல புதனை நீச்சமாக்கி, அதுல இந்த யட்சிணி ராகுவா குடியிருக்கா. எப்படி யாவது இந்த பையன்கிட்டே அந்த யட்சிணி நெருங்காம பாத்துக்கணும்னு நாடித்தளம் சொல்லுது சாமி!'' நம்பாடுவார் தன் பாடலை விளக்கினார்.

''பாக்கறதுக்கு அவ எப்படி இருப்பா?'' வகுளம் கேட்டாள்.

நம்பாடுவான் பாடுவதை தொடர்ந்தார்.

**"மிருகமாய் நாடி பேயாய் பாடுவாள்!**
**நேத்திரமே கடுவனை ஒக்கும்**
**இதழ் கீழகத்தே மருவொன்று பூக்கும்**
**இடைதன்னில் சூனக வளையம் நில்லா**
**முலையிலே நீச்சக் கல் மிளிரும்**
**நீலத்தை பாய்ச்சி நஞ்சுதன்னை கக்கும்.**

**அடிமலர் சிறுத்து, இதழ் இரண்டும் நிலந்தன்னில் பாவா**
**அன்னமாய் நடந்து கன்னம் வைப்பாள்**
**சன்னமாய் மொழிந்து பின்னம் புரிவாள்**
**மோக தாகத்தால் குரோதம் கொள்வாள்**
**காமம் தலைக்கேறி துரோகம் புரிவாள்**
**மீளுவது கடினம், இளையோன் வாழ்வு**
**குலமறுத்தால் குவலயத்தில் இடமில்லை**
**மூலாமுதம் கிட்டினால் மார்க்கம் உண்டு.**

"மாமா! இது அந்த யட்சிணியோட அங்க அடையாளங்கள்னு புரியறது! அவ மனுஷ ரூபத்துல வருவாளா... இல்லை...?" வகுளா சந்தேகத்தை எழுப்பினாள்.

"உங்க பேரன் மனுஷ ரூபத்துல பொறந்திருக்கறதால, அவளும் மனுஷ ரூபத்துலதான் வருவா. அவ அங்க அடையாளங்கள் தெளிவா சொல்லப்பட்டிருக்கு மாமி... சொல்றேன் கேளுங்கோ..."

"செத்த இருங்கோ! பேப்பரில எழுதிக்கறேன்." வகுளம் அவசரமாக எழுந்து சென்று ஒரு பென்சில், பேப்பருடன் மீண்டும் பிரசன்னமானாள்.

''சொல்லுங்கோ... எழுதிக்கறேன்...''

நம்பாடுவான் தன் பாடலை விளக்கினார்.

''ம்ருகரஞ்சிகா, இவன் இளைஞனா இருக்கச்சே அவன் கண்ணுல படுவா. அவ பெயரே ஏதாவது மிருகத்தை குறிக்கிறாப்பல இருக்கும். அவளுக்கு பூனைக் கண்கள் இருக்கும். அவளோட கீழ் உதட்டுல மச்சம் ஒண்ணு இருக்கும். அவளோட இடுப்புல, வழக்கமா எல்லா பொண்ணுகளுக்கும் இருக்கிற சதை மடிப்புகள் இருக்காது. அவ மார்புல ஒரு நீலக்கல் பதிச்ச டாலர் தொங்கிகிட்டு இருக்கும். ரொம்ப ஆபத்தான கல் அது! அவளோட பாதங்கள் ரெண்டும் சின்னதா இருக்கும்! அவளோட கடைசி ரெண்டு கால் விரலுங்க தரையிலே பதியாது!

''அன்னம் போல அவளுக்கு நடை இருக்கும். இவனை வந்து மயக்குவா! இனிமையா பேசி இவனை தன் வலையில விழ வைப்பா! இவனை காப்பாத்த யாராவது முயற்சி பண்ணினா, இவனை கொலை பண்ணவும் தயங்கமாட்டா...

''இவனை காப்பாத்தறதுக்கு ஒரே வழி, அந்த யட்சிணி கண்ணுல படறதுக்கு முன்னாடியே இவனுக்கு கல்யாணம் பண்ணிடறது நல்லது! இவனுக்கு ஒரு வேளை, பிள்ளை குழந்தை பொறந்துட்டா, இவன் தப்பிக்கறதுக்கு வாய்ப்பு இருக்கு... குறிப்பா... இவனுக்கு மூல நட்சத்திரத்துல பிள்ளை பொறந்தா ஒரு வேளை இவன் அந்த யட்சிணி கிட்டேருந்து தப்பிக்கலாம்...''

நம்பாடுவான் விளக்கி சொல்ல, ஸ்ரீவத்ஸாங்கமும் வகுளமும் மௌனமாக உட்கார்ந்திருந்தனர்.

பின் ரகசிய குரலில் வகுளத்திடம் பேசினார், ஸ்ரீவத்ஸாங்கம்.

''வகுளா! சகடவாக்கி சொன்னது எதுவும் இப்போதைக்கு வனஜா கிட்டே சொல்ல வேணாம்... நேரம் பார்த்து நானே சொல்றேன்...''

வகுளம் தலையசைத்தாள்! நம்பாடுவான் நீண்ட பெருமூச்சுடன் எழுந்து கொள்ள, அவரை வேதனையுடன் பார்த்தார், ஸ்ரீவத்ஸாங்கம்.

''சகடவாக்கி! பீமனுக்கு கண்ணனோட துணை இருந்த மாதிரி, என் பேரனுக்கு நீர்தான் துணை! அந்த யட்சிணிக் கிட்டேருந்து இவனை காப்பாத்தற சக்தி உமக்கு இருக்குனு எனக்குத் தெரியும்! என் காலத்துக்கு அப்புறம் கூட நீர்தான் என் குடும்பத்தை ரட்சிக்கணும்''

புலம்பிய ஸ்ரீவத்ஸாங்கத்தை ஆறுதல் பார்வை பார்த்தார், நம்பாடுவான்.

தான் படித்த சகடவாக்கியம், ஸ்ரீவத்ஸாங்கத்தை எவ்வளவு தூரம் பாதித்திருக்கின்றது என்பதை அன்றிரவே நம்பாடுவான் அறிந்துகொண்டார். ஸ்ரீவத்ஸாங்கம் மாரடைப்பால் இறந்து போனதாக அவருக்கு சேதி வந்துவிட்டது.

# 3. யட்சி பார்வை

## 1957 - சிதம்பரம்

“அப்புறம் என்னாச்சு, தாத்தா?” அமுதன் நம்பாடுவானைக் கேட்டான்.

“உன் கொள்ளு தாத்தா ஸ்ரீவத்ஸாங்கம் செத்து போன உடனேயே, பாட்டி வகுளாவும் மரண படுக்கையில விழுந்துட்டா! உங்க அப்பாவை காப்பாத்தணும்ங்கிற ஆதங்கத்துல, தன் உயிரை கையில இழுத்து புடிச்சிட்டு இருந்தா! எவ்வளவு காலம்தான் அப்படி செய்ய முடியும்... வேற வழியில்லாம, திருவல்லிக்கேணில புருஷனோட குடித்தனம் பண்ணிட்டு இருந்த தன் பொண்ணு வனஜாவை வரவழைச்சு, புருஷோத்தமன் வாழ்க்கைல இருக்கிற ஆபத்தைப் பத்தி சொல்லிட்டா! அவ கொஞ்சங்கூட அதை நம்பலை!

“அப்பறம் வகுளாம்மா என்னை கூப்பிட்டு அனுப்பினாங்க! நான் எல்லாத்தையும் வனஜா கிட்ட சொன்னேன். பாவம்..! அவ ரொம்பவே கலங்கி போயிட்டா.

“என் பேரன் புருஷோத்தமனை எப்படியாவது காப்பாத்துங்கனு கதறிகிட்டேதான் வகுளம்பாட்டி உயிரை விட்டா”

அமுதன் தான் பார்த்திராத அந்த வகுளம் பாட்டியை நினைத்து உருகினான்.

''பாட்டி காலமானதும், வனஜா உடனே சென்னைக்கு கிளம்பிட்டா. நான் கூட சொன்னேன்! சிதம்பரத்துல கடல் மாதிரி வீட்டை வச்சுட்டு, ஏன் திருவல்லிக்கேணி ஒண்டு குடித்தனத்துல கஷ்டப்படணும்னு! வனஜா கேட்கலை. உங்க தாத்தா வீட்டையும் வித்துட்டா! புருஷாமிருகம் இருக்கிற சிதம்பரத்துல, தான் இருக்க மாட்டேன்னு பிடிவாதமா கிளம்பிட்டா! நானும் தடுக்கலை. ஆனா... நேரங் கிடைக்கச்சே எனக்கு கடுதாசி போடுவா! நானும் கோவில் வசூலுக்கு போகறச்சே எல்லாம் சென்னையில அவளை போய் பாப்பேன்...''

''தாத்தா...! கதை இப்பதான் சூடு பிடிக்கிறது... சொல்லுங்கோ!'' அமுதன் அவரை நோக்கி திரும்பி உட்கார்ந்தான்.

''உன் அப்பா, புருஷோத்தமனுக்கு அழகும், அறிவும் நிறைய இருந்தது! ரொம்ப சூட்டிகை! நல்லா படிச்சான்! படம் வரையறதுன்னா அவனுக்கு ரொம்ப இஷ்டம்! எனக்கு ஒரு தடவை தான் வரைஞ்ச நடராஜர் ஓவியத்தை பரிசா தந்தான்! நான் அசந்துப் போயிட்டேன்! தத்ரூபமா அப்படியே கோவிலுல இருக்கிற நடராஜரை போலவே வரைஞ்சிருந்தான்...

''உங்கப்பா அழகா இருப்பான்னு சொன்னேன் இல்லே! அப்படி குறைச்சு சொல்லிட முடியாது! மன்மதனை போல இருப்பான்! பொண்ணுங்க மத்தியில அவன் ரொம்பவே பிரபலம்.

''அதனாலேயே வனஜா ரொம்ப கவலைப்பட ஆரம்பிச்சா! படிக்கிற பையனை பொண்ணுங்க மடக்கிடாம இருக்கணுமேனு வேண்டாத தெய்வம் இல்லை! அவ்வளவு பயம் அந்த யட்சிணிகிட்டே!

''போதாகுறைக்கு வனஜா வீட்டுலேயே வயலின் கிளாஸ் நடத்திட்டு வந்தா! வயலின் கத்துக்க நிறைய பொண்ணுங்க உங்க வீட்டுக்கு வருவாங்க!

''திடீர்னு வனஜா புருஷன் திருமலை டி.பி. நோய் தாக்கி படுக்கையில் விழுந்தான். அவன் வைத்திய செலவுக்காக, தன் கையில இருந்த எல்லா பணத்தையும் செலவழிச்சும், அவனை காப்பாத்த முடியலை! வனஜா இடிஞ்சு போயிட்டா! எப்படியோ வயலின் கிளாஸ் நடத்தி, பிள்ளையை இந்து ஹைஸ்கூல சேர்த்து படிக்க வச்சா!''

''நானும் அங்கேதான் படிச்சேன், தாத்தா!'' அமுதன் சொன்னான்.

நம்பாடுவானின் முகத்தில வேதனை ரேகைகள் படர்ந்தன. ஒரு முறை இருமிவிட்டு, மீண்டும் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

''புருஷோத்தமன் பள்ளி படிப்பு முடியற வரைக்கும் அவன் வாழ்க்கையில எந்த பிரச்னையும் ஏற்படலை! மேலே படிக்கிறதுக்காக பிரெசிடன்சி காலேஜ்ல சேர்ந்தான். அப்போதான்...''

நம்பாடுவான் மேலே பேச முடியாமல் திணறினார். அவரது முகம் விகாரமாக மாறியது.

"சொல்லுங்க தாத்தா!" அமுதன் அவரிடம் ஏற்பட்ட மாற்றத்தை கண்டு பரபரப்புடன் சொன்னான்.

சற்று நேரம் அமைதி காத்த நம்பாடுவான் ஈனஸ்வரத்தில் முனகினார்.

"எந்த யட்சிணி கண்ணுல தன் பிள்ளை படக் கூடாது'னு கோயில் கோயிலா வனஜா ஏறி இறங்கினாளோ, அந்த ம்ருகரஞ்சிகா கண்ணுல புருஷோத்தமன் பட்டுட்டான்!"

அமுதன் அதிர்ந்து போனான்.

# 4. குறி வைத்த வல்லூறு

## 1939 – திருவல்லிக்கேணி

**"எஸ்சரிக்க ரா... ரா... ரா...**
**ஹே... ராமச்சந்திரா..."**

வயலினில் தியாகராஜ கீர்த்தனை ஒன்றை யதுகுல காம்போதியில் தேன்மாரியாக பொழிந்துக் கொண்டிருந்தாள், வனஜா. பக்கத்து அறையில் தலைவாரிக் கொண்டிருந்தான், புருஷோத்தமன்.

பிரெசிடென்சி காலேஜில் பி.யு.சி. முடித்து அங்கேயே பி.ஏ. பொருளாதாரம் படிக்கும் தன் பிள்ளை, வகுப்புகள் முடிந்து வீட்டுக்கு வந்துவிட, அவனுக்கு டிபன் காபி தந்து உபசரிக்க முடியாமல், கிளாஸ் நடத்திக்கொண்டிருக்கும் தன் தலைவிதியை எண்ணி நொந்துக் கொண்டாள், வனஜா.

தானே காபி டிபனை எடுத்து சாப்பிட்டு, பார்த்தசாரதி கோவில், பீச் என்று சுற்றிவிட்டு இரவு ஏழு மணியளவில் வீட்டுக்கு வருவான் பாவம்!

வனஜாவுக்கு வருத்தமாக இருக்கும். வீடு நிறைய பெண் சிஷ்யைகள் வயலின் கற்றுக்கொள்ள வந்திருக்கும்போது, வளர்ந்துவிட்ட ஒரு ஆண்மகனுக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். அதனாலேயே, அவன்

அவ்வாறு வெளியே போவதை அவள் தடை செய்யவில்லை!

வழக்கமாக பிள்ளையை வைத்திருக்கிற எந்த ஒரு தாயும், தான் அன்றாடம் சந்திக்கும் இளம் பெண்களை, இவள் தனக்கு மருமகளாக வருவதற்கு தகுதியானவள் தானா என்கிற கண்ணோட்டத்தில்தான் பார்ப்பாள்! ஆனால் வனஜா மட்டும் விதிவிலக்கு.

ம்ருகரஞ்சிகா என்கிற யட்சிணி மானிட உருவில்தான் தன் மகனை குறிவைப்பாள் என்று நம்பாடுவான் கூறியிருந்ததால், தன் சிஷ்யைகளில் எவளாவது அந்த யட்சிணியாக இருக்கக் கூடுமோ என்கிற சந்தேகத் துடனே கிளாஸ் நடத்துவாள்! கூடிய வரையில் பூனை கண்கள் உள்ளவளையோ அல்லது நம்பாடுவான் கூறிய அங்க அடையாளங்கள் உள்ள பெண்களையோ, வனஜா சிஷ்யைகளாக ஏற்க மறுத்தாள்.

ஒரு முறை, இவளுக்கு நெருங்கிய சினேகிதியின் மகள், நீலக்கல் பென்டன்ட் இணைக்கப்பட்ட செயினை அணித்திருந்ததால், அவளை கிளாஸிலிருந்தே நிறுத்தி விட்டாள்!

சிந்தனையில் ஆழ்ந்தபடி கீர்த்தனையை வாசித்துக் கொண்டிருந்த வனஜா துணுக்குற்றாள்.

'அட... என்ன...! இந்த பாமினி, எதற்காக பக்கத்து அறையை வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாள்?'

வனஜா சடாரென்று திரும்பிப் பார்த்தாள். வெள்ளை வெளேரேன வேட்டி கட்டி அரை கை பனியனை

மட்டும் அணிந்து, கண்ணாடியின் முன்னால் தலை சீவிக் கொண்டிருந்தான் புருஷோத்தமன்! அவனது வலுவான புடைத்துக் கொண்டிருந்த புஜங்கள் கதாயுதங்களாய் பனியனை விட்டு திமிறி, வெளியே காட்சிதந்தன. கம்பீரமான அவனது தேகத்தைதான் பாமினி வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது.

''கனகமய... மகுட...'' என்கிற அடுத்த சரணத்தை தொடங்கியிருந்த வனஜா, வாசிப்பதை சட்டென்று நிறுத்தினாள்.

''பாமினி! எழுந்திரு!''

அந்தப்பெண் திடுக்கிட்டு எழுந்தாள். வனஜா அவளை கடுமையாக பார்த்தாள்.

''நாளைலேர்ந்து நீ இங்கே வர வேணாம்!... வேற எங்கேயாவது... வயலின் கத்துக்கோ...''

அந்த பெண் வெலவெலத்துப் போனாள். ''மாமி எனக்கு வேற யாரும் தெரியாது.''

''நான் சுபத்ரா மாமி கிட்டே சொல்றேன்! நீ அவாகிட்டே போய் கத்துக்கோ. அவா எனக்கே குரு மாதிரி! என்னை விட நல்லா சொல்லித்தருவா!... கிளம்பு!''

பாமினி வேறுவழியில்லாமல் வெளியேற.

''மாமி! அவாத்துலயும் பிள்ளைகள் இருக்கா.'' கீச்சென்று ஒரு பெண் ஜோக்கடிக்க, சிஷ்யைகள் சிரிப்பு வீடு முழுவதும் எதிரொலித்தது.

சட்டென்று

புருஷோத்தமன் சட்டையை மாட்டிக்கொண்டு கூடத்துக்கு வர, சிரித்துக்கொண்டிருந்த சிஷ்யைகள் அத்தனைபேரும் வெட்கத்துடன் 'கப்சிப்' ஆனார்கள். புருஷோத்தமன் அவர்களை ஏறெடுத்துக்கூட பார்க்க வில்லை.

''அம்மா! நான் பீச்சுக்கு போயிட்டு வரேன்!''

''எதுக்குடா! இன்னைக்கு சீக்கிரம் கிளாஸை முடிச்சுடுவேன்! ஆத்துலயே இரேன்!'' வனஜா அன்பு ததும்ப கூறினாள்.

''இல்லம்மா! இன்னைக்கு பீச்'சுல இராஜாஜி மீட்டிங். கவர்னர் ஜான் எர்ஸ்கைன்'னை எதிர்த்து போராட்டம் செய்ய போறாராம்...''

''ஜாக்கிரதை புருஷோத்தமா! அடிதடி ஏதாவது நடக்கப்போறது,'' வனஜா கவலைப்பட்டாள்.

''நான் பத்திரமா போயிட்டு வந்துடறேன்'' புருஷோத்தமன் வெளியேற, அடுத்த அரைமணி நேரம், கிளாஸ் நடத்துவதில் மூழ்கினாள் வனஜா.

கிளாஸ் முடிந்ததும், சமையலறைக்கு சென்று பெருமாள் மண்டபத்தின் முன் விளக்கை ஏற்ற நினைத்து, கையில் எண்ணெய் தூக்கை எடுத்த சமயம்.

வாசலில் யாரோ குரல் கொடுப்பதாக, பக்கத்து போர்ஷன் மாமி வந்து சொல்ல, தூக்கைக் அப்படியே வைத்துவிட்டு வாசலுக்கு விரைந்தாள்.

பக்கத்தாத்து பவநாராயண ராவ் தான் நின்றிருந்தார்.

''வனஜா மாமி! உங்க புருஷோத்தமன் பீச் ரோட்டை கிராஸ் பண்ணச்சே, கார் மோதிடுத்தாம்'' ராவ் முடிக்கக் கூட இல்லை.

''ஐயோ... புருஷோத்தமா!'' பதறியபடி அப்படியே தெருவில் இறங்கி ஓட முற்பட்டாள்.

''எங்கே போறேள்?'' ராவ் கேட்டார்.

''பீச்சுக்கு''

''புருஷோத்தமன் பீச்சுல இல்லை! டாக்டர் நம்மாழ்வார் டிஸ்பெஞ்சரில இருக்கான்! பெரிசா அடி ஒண்ணும் படலை. ஃப்ரெண்டோட சைக்கிள்ல டபுள்ஸ் போயிருக்கான். கார் வந்து இடிக்க, இவன் கால், சைக்கிள் சக்கரத்துல சிக்கிண்டதால சைக்கிளோட விழுந்துட்டான். பாதத்துல தோல் வழண்டு இரத்தம் கொட்டினதால, டாக்டர் ஆத்துக்கு அழைச்சிண்டு போயிருக்கா... ஆபத்து ஒண்ணுமில்லை!''

பெரிதாக அடிபடவில்லை என்கிற தகவல் நிம்மதியைத் தர, மீண்டும் அடுக்களையை நோக்கி நடந்தாள். பெருமாள் மண்டபத்தின் முன் விளக்கேற்றி குனிந்து வணங்கினாள்.

பிறகு

அவசரமாக தன் போர்ஷன் கதவைப் பூட்டிக் கொண்டு, ஐஸ் ஹவுசில் இருந்த டாக்டர் நம்மாழ்வார் டிஸ்பென்சரியை நோக்கி நடந்தாள்.

அவள் உள்ளே நுழைவதற்கும், டாக்டர் நம்மாழ்வார் புருஷோத்தமனுக்கு சிகிச்சை அளித்து, ‘டிரெஸ்ஸிங்’கை முடிப்பதற்கும் சரியாக இருந்தது.

“ஏம்பா புருஷோத்தமா! மீட்டிங் போனே... சரி! அங்கே வெள்ளைக்கார போலீஸ் கிட்டே அடி வாங்கி இரத்தம் கொட்ட வந்திருந்தேனா... சுதந்திர போராட்ட தியாகி’னு பட்டமாவது கிடைச்சிருக்கும்! இப்படி சைக்கிளை ஓட்டத் தெரியாம... ஓட்டி அடி பட்டுண்டா... சரித்திரத்துல இடம்பெற முடியுமா” கிண்டலடித்தபடி அவனுக்கு மருந்து எழுதி கொடுத்தார்.

‘புருஷோத்தமா’

தாயின் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தான், புருஷோத்தமன்.

“நீ ஏம்மா... இங்கே... வந்தே?” பதற்றத்துடன் வந்திருந்த தாயை செல்லமாக கோபித்தான்.

“விஷயம் கேள்விபட்டு ஓடி வர்றேன்! இதோ இருக்கிற பீச்சுக்கு உன்னை யார் சைக்கிள்’ல போக சொன்னா?”

டாக்டர் வனஜாவுக்கு ஆறுதல் கூறினார்.

“கவலைப்படாதேம்மா! பெரிசா அடி படலை! இன்னைக்கு ராத்திரி அவன் இங்கேயே இருக்கட்டும். ஜுரம் எதுவும் வராம இருக்கானு பார்த்துண்டு நாளைக்கு கார்த்தால ஆத்துக்கு அனுப்பிடறேன்”

கையை துடைத்தபடி டாக்டர் வெளியேற, கட்டிலில் சாய்ந்திருந்த மகனின் தலைமுடியை ஆதங்கத்துடன் கோதினாள்.

''ஜாக்கிரதைடா கண்ணா! உனக்கு ஒண்ணும் ஆகக்கூடாது'னு நான் நித்யம் அந்த பகவான் கிட்ட மன்னாடிண்டு இருக்கிறது உனக்கு தெரியுமா?'' கண்களில் கண்ணீர் பெருக புலம்பினாள் வனஜா.

''என்னம்மா! ஒரு சைக்கிள் விபத்துக்கு போய் புலம்பறியே... எத்தனையோ அம்மாக்கள் போர்களத்துக்கே பிள்ளையை அனுப்பறாளே...''

''நீ சைக்கிள் விபத்தா பாக்கறே! நான் கார் விபத்தா பாக்கறேண்டா! அந்த கார்காரன் உதவிக்கு வந்தானா இல்லை... இடிச்சுட்டு அப்படியே ஓடிப் போயிட்டானா?''

''கார்காரன் இல்லேம்மா... கார்காரி!''

சிரித்துக்கொண்டே புருஷோத்தமன் கூற, முதுகு தண்டு சில்லிட்டது, வனஜாவுக்கு.

''கார்காரியா?''

''ஆமாம்! சின்னப்பொண்ணு பாவம்! இப்பதான் கார் ஓட்டக்கத்துண்டு இருக்கானு நினைக்கிறேன். சிவப்பு கலர் ஜாகுவார் காரை கொண்டு வந்து நேரா எங்க சைக்கிள் மேல மோதிட்டா...''

''பொம்மனாட்டிக்கு ஏன் காரோட்டற வேலை?'' வனஜா சொல்லி முடிக்கக்கூட இல்லை.

''ஐ யாம் சாரி!''

மிக இனிமையான குரல் ஒன்று ஒலிக்க, அம்மாவும் பிள்ளையும் வியப்புடன் திரும்பிப் பார்த்தனர். ஒயிலாக

ஒரு பெண் நின்றிருந்தாள். பாவாடை தாவணி அணிந் திருந்தாலும், அதில் ஒரு கவர்ச்சி இருந்தது. தலை முடியை அழகாக 'போனி டெய்லாக அலங்கரித் திருந்தாள். அறை வாயிலில் இருந்து இவர்களை நோக்கி நடந்து வந்தபோது, அன்னபறவை போல மிதந்து வந்தாள்.

வனஜாவுக்கு அடிவயிறு கலங்கியது. இவளாக இருக்கக்கூடுமோ... அந்த யட்சிணி!

நெருங்கி வந்து நின்று அந்த பெண், தனது கூலிங் கிளாஸை அலட்சியமாக கழற்றி, இவர்களை புன் சிரிப்புடன் நோக்கினாள்.

வனஜாவுக்கு உடலெங்கும் வியர்த்தது. அந்தப் பெண்ணின் கண்கள் வெள்ளைக்காரியைப் போன்று பூனைக்கண்களாக காட்சியளித்தன.

'நேத்திரமே கடுவனை ஒக்கும்' நம்பாடுவான் குரல் அவள் காதில் ஒலித்தது. பதற்றத்துடன் தன் பார்வையை இறக்கினாள். அந்த பெண்ணின் உதட்டைப் பார்த்தாள்.

கீழுதட்டில் அந்த பெண்ணுக்கு சிறியதான மச்சம் ஒன்று காணப்பட்டது. அவளது அழகுக்கு மேலும் அழகூட்டியது அந்த மச்சம்.

வனஜா மேலும் தன் பார்வையை இறக்கினாள். நீண்ட தங்கசங்கிலியில், ஒரு நீலகல் பென்டென்ட் இணைக்கப்பட்டிருக்க, அந்த பென்டென்ட் அவளது மார்பில் ஊசலாடிக்கொண்டிருந்தது.

பின்னங்கழுத்தில் அச்சம் குறுகுறுப்பை ஏற்படுத்த, திகிலடைந்த தன் கண்களை அந்தப்பெண்ணின் இடைப்பக்கமாக திருப்பினாள்.

தாவணியை மீறி அவளது வெளுப்பான இடை பிரதேசம் பச்சை பாவாடைக்கும் அதே நிறசோளிக்கும் இடையே, பளீரென்று தென்பட்டது. பசுமையான காட்டின் இடையே ஓடும் அகன்ற பளிங்கு நதியைப் போன்ற அந்த பகுதியைக் கண்டால், எந்த ஒரு ஆண்மகனும் சொக்கிப் போய் விடுவான். ஆனால் தன் குட்டியை கவர வரும் வல்லூறை கண்ட முயலைப் போல, வனஜா நடுங்கியபடிதான் அந்தப் பெண்ணின் இடைப்பகுதியைப் பார்த்தாள். சதை மடிப்புகள் இன்றி காணப்பட்டது அவள் இடை.

நம்பாடுவான் சொன்ன யட்சிணி இவள்தானோ! வனஜாவினால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

''ரொம்ப சாரி! ஸ்பெஷல் கிளாஸ் முடிஞ்சு ஆத்துக்கு போற அவசரம்! அப்பா ஆத்துல ஒரு பார்ட்டி ஏற்பாடு பண்ணியிருந்தார். லேட்டா போனா கோவிச்சுப்பாரேனு காரை வேகமாக ஓட்டினேன். அதுதான் கன்ட்ரோல் இல்லாம உங்க மேல இடிச்சுட்டேன்! ஐ-ஆம்... எக்ஸ்ட்ரீம்லி சாரி'' அந்த பெண் குழைந்து பேச, புருஷோத்தமன் உருகிப் போனான்.

அந்த பெண்ணின் பேச்சில் பாலக்காட்டு தமிழ் அதிகமாக காணப்பட்டதை கவனித்தாள், வனஜா.

புருஷோத்தமன் புன்னகைத்தான்.

"அதனால பரவாயில்லை! நீங்க என்ன வேணுமினா இடிச்சீங்க?"

'இந்த பிள்ளை ஏன் அவகிட்டே இளிச்சு பேசறான்? காரை கொண்டு வந்து மோதியவகிட்டே பொங்கி எழ வேணாமோ? எல்லா ஆம்பிளைய போல இவனும் பொம்மனாட்டி பின்னாடி அலையற ரகம்தானா? நாம... அவனை அப்படி வளர்க்கலையே'

'இந்தப்பெண் யட்சிணியோ... பட்சணியோ! இவளை இப்பவே கத்தரிச்சு அனுப்பறது நல்லது! நம்ம பையனுக்கு எதாவது அபிப்பிராயம் விழறதுக்குள்ளே, இவளை இங்கேருந்து அப்புறப்படுத்தியாகணும், வனஜா நினைத்தாள்.

"சரிம்மா! டாக்டர் என் பையனை ஓய்வெடுக்க சொல்லியிருக்கார்! நீ மன்னிப்பெல்லாம் கேட்க வேணாம்! பொழுதோட உங்காத்துக்கு போய் சேரு! உன்னைப் பெத்தவா கவலைப் படபோறா!..." வனஜா அவளை அப்புறப்படுத்த முயன்றாள்.

"அப்பாவுக்கு ஃபோன் பண்ணிட்டேன்! கவர் மெண்ட் ப்ளீடர் வாகீசன்தான் எங்கப்பா!" புன்னகை யுடன் சொன்னாள் அந்தப் பெண்.

புருஷோத்தமன் மலைத்தான். அவ்வளவு பெரிய மனிதரின் பெண்ணா இந்த திருவல்லிக்கேணி டொக்கு சந்துக்குள் வந்து மன்னிப்பு கேட்கிறாள்.

"உட்காருங்கோ! எதிரே இருந்த நாற்காலியை சுட்டிக்காட்ட, அந்தப்பெண் ஒயிலாக அதில் அமர்ந்தாள்.

வனஜா புருஷோத்தமனை சுட்டெரிப்பவளைப் போல பார்த்தாள்.

''என் பெயர் புருஷோத்தமன்.''

வனஜாவுக்கு அடிவயிறு எரிந்தது! இவன் பெயரை எதற்கு சொல்லி தொலைக்கிறான்? ஏமாந்தால் ஜாதகத்தையே தந்துவிடப் போகிறானே!

''என் பெயர் ம்ருகநயனானி!''

இடி தலை மீது விழுந்ததுபோல உணர்ந்தாள், வனஜா.

அந்த யட்சிணியின் பெயர் ஏதாவது ஒரு மிருகத்தை குறிக்கும் வகையில் அமைந்திருக்கும். நம்பாடுவான் விடுத்த எச்சரிக்கை மீண்டும் காதில் ஒலித்தது.

''ம்ருகநயனானியா!... இந்த பெயரை எங்கேயே பார்த்திருக்கேனே!''

''பிரசிடென்சி காலெஜ் படிக்கிறீங்கனா என் பெயர் உங்களுக்கு தெரிஞ்சிருக்கும். பேச்சு போட்டியில முதல் பரிசு வாங்கியிருக்கேன். நோட்டீஸ் போர்ட்ல என் பெயர் இருக்கு...''

புன்சிரிப்புடன் கூறினாள், ம்ருகநயனானி. எரிச்சலுடன் அவளைப் பார்த்தாள் வனஜா.

''ஏம்மா! உன் பெயர் விசித்திரமா இருக்கே! நம்மளவாளுல இப்படி பெயர் வப்பாளோ?''

ம்ருகநயனானி சிரித்தாள்.

''ம்ருகநயனானி'னா மானைப்போல கண்களை உடையவள்னு அர்த்தம்! என்னோட தாத்தா தேடி...

தேடி... இந்தப் பெயரை செலக்ட் பண்ணினார்! ஆத்துல எல்லாரும் என்னை ம்ருகா'னு தான் கூப்பிடுவா!''

'உன் கண் மானைப்போல ஒண்ணும் இல்லை! கடுவன் பூனை போலத்தானே இருக்கு' நாவின் நுனி வரை வந்துவிட்ட வார்த்தைகளை சிரமப்பட்டு உள்ளே தள்ளினாள், வனஜா.

திடீரென்று

தான் உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து ம்ருகா தன் வாட்சைப் பார்த்தபடி துள்ளி எழுந்தாள். ''இட்ஸ் கெட்டிங் லேட்! இந்தாங்கோ... இதுல என் ஃபோன் நெம்பர் இருக்கு! ஏதாவது ஹெல்ப் வேணுமினா தயங்காம கூப்பிடுங்கோ!''

போன்நம்பர் எழுதியிருந்த காகிதத்தை புருஷோத்த மனிடம் நீட்ட, அவன் அதை பெற்றுக்கொண்டான்.

''அப்ப நான் கிளம்பறேன்! வரேன் ஆன்ட்டி!'' வனஜாவைப் பார்த்துக் கைகூப்பினாள்.

'போய்த் தொலை!' மனதிற்குள் கூறியபடி, அவளை நோக்கி போலியாக சிரித்தாள்.

ம்ருகா கிளம்பி போக, அவள் பூசியிருந்த ஃபாரின் பெர்ஃப்யூமின் நறுமணம், அந்த டிஸ்பென்சரியின் டெட்டால் நெடியை மீறி உணர முடிந்தது.

''ரொம்ப நல்லப் பொண்ணா இருக்கா, இல்லே!'' எரியும் தீயில் நெய்யை வார்த்தான் புருஷோத்தமன்.

''சும்மா இருடா!'' எரிந்து விழுந்தாள், வனஜா.

புருஷோத்தமன் வியப்புடன் அவளை பார்த்தான். அம்மாவுக்கு கோபம் வருகிற மாதிரி தான் என்ன சொல்லிவிட்டோம்?

''புருஷோத்தமா! இனிமே நீ அந்த பொண்ணு முகத்துலயே விழிக்கக் கூடாது! அது கஷ்டம்னா... நீ ஏதாவது புருஷாள் படிக்கிற காலேஜ்ல சேர்ந்துடு! அந்தப் பொண்ணு சங்காப்தமே வேணாம்!''

திகைப்புடன் அம்மாவைப் பார்த்தான் புருஷோத்தமன். ''ஏம்மா! காலேஜையே மாத்துற அளவுக்கு, அந்தப் பொண்ணு என்ன தப்பு பண்ணினா?''

வனஜா மிடறு விழுங்கியபடி அவனை கலக்கத்துடன் பார்த்தாள். எப்படி இவனுக்கு புரிய வைப்பது...?''

''அவ... உன் உயிரை... எடுக்கறதுக்காக வந்திருக்கிற யட்சிணிடா?''

வனஜா இப்படிக் கூறியதும், விழுந்து விழுந்து சிரித்தான் புருஷோத்தமன்.

''அம்மா! உனக்கு என்ன ஆச்சு?''

''எனக்கு ஒண்ணும் ஆகலை! உனக்கு ஒண்ணு ஆகக்கூடாதுங்கற பதைபதைப்புல தான் இப்படி பேசறேன்! நீ கார்த்தால வரைக்கும் இங்கே இருக்க வேணாம்! நீ இப்பவே ஆத்துக்கு கிளம்பு!''

மீண்டும் ஏதாவது காரணத்தை வைத்துக் கொண்டு ம்ருகநயனானி அந்த டிஸ்பென்சரிக்கு வருவதற்குள், வீட்டுக்கு கிளம்ப துடிதுடித்தாள், வனஜா!

''அம்மா!... வந்து...!''

''நீ அம்மாவுக்கு எதாவது செய்யணும்னு நினைச்சா, நான் சொல்றதை கேளு. நீ கேட்க மாட்டேன்னா... இதோ... இருக்கு... சமுத்திரம்! போய் விழுந்துடறேன்...''

''அவ்வளவு தூரம் நடந்தா கால் வலிக்கும்? இங்கேயே கோவில் குளம் இருக்கே...!'' சிரித்தபடி அம்மாவின் கோபத்தை குறைக்க முயன்றான்.

''எனக்கு தெரியாதா? கோவில் குளத்தை எதுக்கு பாழாக்கணும்! அடுத்த வாரம், பெருமாளுக்கு தெப்பம் நடக்கப்போறது!...''

எரிச்சலுடன் கூறிய வனஜா, பிடிவாதமாக புருஷோத்தமனை அழைத்துக் கொண்டு உடனே வீட்டிற்கு கிளம்பி விட்டாள்.

டிஸ்பென்சரி அலுவலரிடம், எந்தக் காரணம் கொண்டும் தன் வீட்டு முகவரியை யாருக்கும் கொடுக்க வேண்டாம் என்று ரகசியமாக கட்டளையிட, வனஜா மறக்கவில்லை.

வீட்டிற்கு வந்ததுமே, சட்டென்று நினைவுக்கு வந்தவளாக, புருஷோத்தமனைக் கேட்டாள்

''அந்தப் பொண்ணு கொடுத்த டெலிபோன் நம்பர் எங்கே?''

''ஆஸ்பத்திரி மேஜைமேல வச்சுட்டேனே! எடுத்துக்க மறந்துட்டேன்...'' புருஷோத்தமன் கூற, நிம்மதி யடைந்தாள், வனஜா!

''தொலைஞ்சது சனியன்!'' முணுமுணுத்தபடி சமையலறையை நோக்கி நடந்தாள்.

சற்று நின்று திரும்பிபார்த்திருந்தால், தான் வேட்டியில் மடித்து வைத்திருந்த அந்த துண்டு காகிதம் பத்திரமாக இருக்கிறதா என்று புருஷோத்தமன் தடவிப்பார்த்துக் கொண்டிருப்பதை கண்டிருப்பாள்.

நம்பாடுவான் கூறியது பொய்த்ததில்லையே என்கிற கவலை அவளது இதயத்தில் விஸ்வரூபம் எடுக்க, சமையல் செய்ய தோன்றவில்லை. அன்றிரவு வெறும் மோர்சாதம் சாப்பிட்டால் போதும்போல தோன்றியது. புருஷோத்தமனுக்கு ஆவக்காய் ஊறுகாய் இருந்து விட்டால் போதும்... சாப்பாடே வேண்டாம்!

ஊறுகாய் ஜாடியிலிருந்து ஆவக்காயை எடுத்து சிறிய கிண்ணம் ஒன்றில் நிரப்பத் தொடங்கினாள்.

ஜாடியை மீண்டும் வெள்ளைத் துணியால் கட்டியவள், அதை மீண்டும் அலமாரியில் எடுத்து வைக்கும் போதுதான் ஊறுகாய் சுள்ளென்று உறைப்பது போல, அவளது சிந்தையிலும் ஒரு விஷயம் சுள்ளென்று உறைத்தது.

இவள் பிள்ளை புருஷோத்தமனின் பெயரில் முதல் பாதியும், அந்தப் பெண் ம்ருகநயனானி பெயரில் முதல் பாதியையும் இணைத்தால் வரும் பெயர் புருஷாமிருகம்.

அதிர்ச்சியில் கைகள் மரத்துப்போக, ஊறுகாய் ஜாடியை கை நழுவ விட்டாள்.

புருஷோத்தமனுக்கு உயிரான ஆவக்காய் ஊறுகாய் வைத்திருந்த ஜாடி சுக்கலாய் நொறுங்கி கிடந்தது.

# 5. சண்டி குதிரை

## 1957 - சிதம்பரம்

அமுதன் நம்பாடுவான் கூறுவதை மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தான். இதையே ஒரு கதையாக அவர் கூறியிருந்தால், அவன் ரசித்துக் கேட்டுக் கொண்டிருப்பானோ என்னவோ

ஆனால், அது தன் பெற்றோரின் சோக சரித்திரம் என்பதை உணர்ந்தபோது, துக்கம் அலை அலையாய் எழும்பி அவன் நெஞ்சை அடைத்தது.

''தாத்தா! அந்தப் பெண்ணுதான் யட்சிணின்னு தெரிஞ்சுண்ட அப்புறம், பாட்டி என்ன செஞ்சா.''

''உடனே என்கிட்டே ரகசியமா தொடர்பு கொண்டா! என்னை சென்னைக்கு கிளம்பி வரச் சொல்லி கடுதாசி போட்டா! நானும் கிளம்பிப் போனேன்.

''தன் வீட்டு மொட்டை மாடியிலேயே எனக்காக அறையை எடுத்து என்னை தங்க வச்சா! உங்கப்பா புருஷோத்தமனை அந்த பொண்ணு கிட்டேந்து காப்பாத்தற வரைக்கும் நான் சிதம்பரம் பக்கமே தலை வச்சு படுக்ககூடாது'னு அன்புக்கட்டளை போட்டுட்டா...!

''அப்புறம் என்னாச்சு, தாத்தா?''

''குதிரைய ஆத்துக்கு கொண்டு போகத்தான் முடியும், தண்ணிய குடிக்க வக்க முடியுமா?'' நம்பாடுவான் அலுப்புடன் சொன்னார்.

''என்ன சொல்றீங்க, தாத்தா?''

''உங்க பாட்டி சொன்னதைதான் சொல்றேன்! நானும் உன் பாட்டியும் புருஷோத்தமனை எப்படி அந்த பெண்ணை சந்திக்க முடியாம தடுக்கறதுனு இரவு, பகலா யோசிச்சோம்! ஆனா அவனோ, எப்படி அந்தப் பொண்ணை திருப்பி சந்திக்கலாம்னு யோசனை செஞ்சுண்டு இருந்திருக்கான்! இது எங்களுக்கு தெரியலை... கேளு... நடந்ததை..!'' நம்பாடுவான் தொடர்ந்தார்.

# 6. கோடு அழிந்தது

## 1939 - சென்னை

டாக்டர் கால்கட்டை பிரித்த மறுநாள் காலேஜ் போக ஆரம்பித்துவிட்டான், புருஷோத்தமன். வழக்கம்போல், தேரடி தெருவில் இருக்கும் நண்பன் நாகராஜன் வீட்டுக்கு சென்று, அவனுடன் சைக்கிளில் டபுள்ஸ் செல்ல நினைத்தான்.

தெரு முனைக்கு சென்றபோது, அம்மா பின்னாடியே 'புருஷோத்தமா' என்று அழைத்தபடி, அரக்க பரக்க ஓடி வருவதை கண்டு திகைத்து நின்றான்.

''சொல்ல மறுந்துட்டேன், புருஷோத்தமா! அந்த மிருகம் காலேஜ்ல எங்கேயாவது கண்ணுல பட்டா, திரும்பி பார்க்காம போயிடு!''

ஒப்புக்கு தலையசைத்த புருஷோத்தமன், தன் தாய் திரும்பி போவதை பார்த்தபடி நின்றான். இவனுக்காக தன்னையே வாட்டிக்கொள்ளும் அம்மாவை நினைத்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது.

ஆனால்-

யாரோ நாட்டுபுற ஜோசியன், யட்சிணி மிருகம்னு கட்டிவிட்ட கதையை நம்பி, இவனுக்கு ஏதோ ஆபத்து வந்து விட்டதுபோல துடிப்பது, பைத்தியகாரத்தனமாக இருந்தது.

''என்னடா! ரொம்ப நேரமா காத்துண்டு இருக்கியா?'' நாகராஜன்தான் வந்து விட்டான்! ஆனால் நடந்து வந்திருந்தான்! சைக்கிளை காணோம்!

''சைக்கிள் எங்கேடா?''

''செயின் அறுந்து போச்சு! வேற வழியில்லை, நடந்து தான் போகணும், உன்னால நடக்க முடியுமா? இப்ப தானே காலுல காயம் ஆறிண்டு வர்றது! வேணுமினா ஆத்துக்கு போயிடு'' நாகராஜன் கரிசனத்துடன் சொன்னான்.

''இல்லேடா! இன்னைக்கு ஸ்டாடஸ்டிக்ஸ் பரீட்சை! நான் போயே ஆகணும்!''

''அப்ப ஜட்கா வண்டி ஏதாவது பிடிக்கட்டா!''

''வேணாம்! இப்படியே சுங்குவார் தெரு வழியே நடந்து போயிடலாம்.''

இருவரும் மாநிலக் கல்லூரியை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

''புருஷோத்தமா! ஜப்பான்காரங்க நம்ம மேல படை எடுப்பாங்க போல இருக்கேடா!'' கவலையுடன் வினவினான், நாகராஜன்.

''ஆமா!... ஆனா... இந்த விஷயத்துல நம்ம ராஜாஜியோட முடிவை என்னால் ஒத்துக்க முடியலை! ஜப்பானுக்கு எதிரா பிரிட்டிஷ்காரங்களை ஆதரிக்கக் கூடாதுனு சொல்றாரு! என்ன இருந்தாலும் பிரிட்டிஷ் காரங்க நம்மளை ஆட்சி செய்யறவா! அவாளுக்கு எதிரா

நாம எப்படி படை எடுத்துண்டு வர்ற ஜப்பான்காரனை சப்போர்ட் பண்ண முடியும்? எனக்கென்னவோ பிரிட்டிஷ்காராளை விட்டுக் கொடுக்க கூடாதுனு தோணுது...''

''லூசு மாதிரி பேசாதே! நம்மாத்துல ஒரு திருடன் புகுந்துட்டான்! அவனை பிடிக்க போலீஸ்காரா வந்தா என்ன இருந்தாலும் அவன் நம்மாத்துக்கு திருட வந்தவன், அவனை விட்டுக்கொடுக்ககூடாதுனு சொல்லுவே போல இருக்கே! ஜப்பான்காரனும் வெள்ளைக்காராளும் முட்டி மோதிக்கட்டும்! எவன் செத்தா நமக்கு என்ன?'' நாகராஜன் சிரித்தான்.

''அப்படிச் சொல்லாதே! ஜப்பான்காரன் சென்னையில குண்டு போட்டா, கோட்டையில இருக்கிற பாய்டு மட்டும் செத்து போகமாட்டான். நம்ம தெரு பாஷ்யமும், மிர்சாகிப்பேட்டை பஷீரும் சேர்ந்து சாவான்!''

''அட... ஆமா... இது எனக்கு தோணலையே'' ஆமோதித்தான் நாகராஜன்.

இருவரும் பேசியபடி சுங்குவார் தெருவிலிருந்து பீச் ரோட்டில் திரும்பினார்கள்.

அதே நேரம்

அந்த சிவப்பு நிற ஜாகுவார் கார் அவர்களை உரசுவது போல வந்து நின்றது.

"டேய் புருஷோத்தமா! நம்ம மேல மோதின அதே காருடா..." குழப்பத்துடன் நாகராஜன் கூற, புருஷோத்தமன் வியப்புடன் நின்றான்.

காரின் கான்வாஸ் மேற்கூரை தானாக பின்வாங்கி மடிந்துக் கொள்ள, உள்ளே ஒய்யாரமாக டிரைவிங் சீட்டில் உட்கார்ந்திருந்தாள், ம்ருகநயனானி.

வெள்ளைக்கார பெண்மணியைப் போல லாங் ஃப்ராக் அணிந்திருந்தாள். அந்த ஃப்ராக்கின் நிறத்திலேயே கையில் க்ளவுசும் அணிந்திருந்தாள். மறக்காமல் அந்த நீலநிற பென்டன்ட்டையும் மாட்டிக் கொண்டிருந்தாள்.

தலைமுடி, பிய்த்துக் கொண்டு வீசும் கடற்கரை காற்றில் அலையலையாக புரள, நாசூக்காக தனது கைவிரல்களால் முடியை கோதிவிட்டாள்.

அப்சரஸ் போன்ற அவளிடம் வெள்ளைக்காரிகள் பிச்சை வாங்க வேண்டும். அவளை அந்த சூழ்நிலையில் பார்ப்பவர்கள், அவள் சென்னையை சேர்ந்தவள் என்று சத்தியமாக நம்ப மாட்டார்கள். லண்டனிலிருந்து வந்துள்ள ஒரு ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவள் என்றே நினைக்கக்கூடும்.

புருஷோத்தமன் அவளை மலைப்புடன் பார்க்க, அவள் பளீரென அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"ஹலோ! வாங்களேன்! நான் உங்களை டிராப் செய்யறேன்..."

"உங்களுக்கு எதுக்கு சிரமம்?"

''சிரமம்! யூ மின் ட்ரபிள்... ஓ! யூ ஆர் யூசிங் சேஸ்ட் டமிள் வொர்ட்ஸ்!... எனக்கு நீங்க அப்படி, பேசறது பிடிச்சிருக்கு... மிஸ்டர்...! வெட்கப்படாதீங்க! நம்ம இந்தியாவை கெடுக்கறதே... இந்த சங்கோஜம் தான்... முதலுல அந்த சங்கோஜத்தை ஒழிச்சாதான் நம்ம நாடு உருப்படும்... கமான்... ஹாப் இன்...!''

முன்பக்க கதவைத் திறந்துவிட, புருஷோத்தமன் தயக்கத்துடன் நாகராஜனை பார்த்தான்.

''உனக்குத்தான் கால் நடக்க முடியாம விந்தி விந்தி நடக்கறியே! அவா தான் லிப்ட் தர்றேனு சொல்றாளே... வா போகலாம்...''

நாகராஜன் புருஷோத்தமனை முன்னால் உட்கார உதவி புரிந்தான். பிறகு தான் ஏறிக்கொள்வதற்காக பின்கதவைத் திறக்க முற்பட்டான். கதவு உட்புறமாக 'லாக்' செய்யப்பட்டிருப்பதை அறிந்த அவன், ம்ருகா, அந்த 'லாக்'கை ரிலீஸ் செய்து, தனக்காக கதவை திறக்கக்கூடும் என்று எதிர்பார்த்து காத்திருக்க

திடீரென்று

விர்ரென்று கார் கிளம்பிச் சென்றது. திக்பிரமையுடன் அந்த சிவப்பு நிற ஜாகுவார் கார் பறந்துச் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தான், நாகராஜன்.

''ஐயையோ! என் ஃப்ரெண்ட் நாகு ஏறிக்கறதுக் குள்ளே காரைக் கிளப்பிட்டீங்களே! அவனும் என்னோடு காலேஜுக்குதான் வர்றான்...'' புருஷோத்தமன் பதறினான்.

''உங்க காலுல மட்டும்தானே அடிபட்டிருக்கு! உங்க ஃப்ரெண்ட் காலுல இல்லையே! அவரு நடந்து வரட்டும்!''

''அது எப்படி! கூட வந்த ஃப்ரெண்டை இப்படி நட்டாத்துல விட்டா, அவன் என்னைப் பத்தி என்ன நினைப்பான்''

''நட்டாத்துல... மீன்ஸ்?'' புருவத்தை சுருக்கினாள், ம்ருகா...

புருஷோத்தமன் திகைத்தான். இந்த மாதிரி கேள்வி எல்லாம் கேட்கிறாளே! தமிழ் தெரியாதா?

''நட்டாத்துல மீன்ஸ் மிட் ஸ்ட்ரீம்...''

''ஓ...!'' என்றவள் சட்டென்று அவனைத் திரும்பி கேள்வியுடன் பார்த்தாள்.

''உங்கம்மாவுக்கு என் மேல கோபம்னு நினைக்கிறேன்! அன்னைக்கு ஹாஸ்பிடல்ல என்னை 'கெட் அவுட்'னு சொல்லாத குறையா அடிச்சு விரட்டினாங்களே!''

''சை... சை! அப்படியெல்லாம் இல்லை! ஒரே பையனுக்கு அடிபட்டுடுத்தே'ங்கிற ஆதங்கத்துல அப்படி பேசிட்டா! அவ மனசுல ஒண்ணும் இல்லை...'' சமாளித்தான் புருஷோத்தமன்.

''ஆனா... என் மனசுல ஏதோ ஒண்ணு இருக்கு...!'' பட்டென்று கூறினாள் ம்ருகா

என்ன அர்த்தத்தில் அப்படி கூறினாள் என்பது புரியாமல் அவன் அவளை திரும்பிப் பார்க்க,

சடாரென்று காரை கல்லூரி பக்கமாக செலுத்தாமல், இடது பக்கமாக ஒடித்து பைகிராப்ட்ஸ் சாலையில் திரும்பினாள். அங்கே இருந்த ஒரு ஆலமரத்தடியில் தன் காரை நிறுத்தினாள்.

''புருஷ்! நான் உங்களை அப்படிதான் கூப்பிட போறேன்!'' ம்ருகா அவனைப் பார்த்து ஒரு மாதிரியாக சிரிக்க, அவன் கலவரத்துடன் அவளை நோக்கினான்.

''எதுக்காக காரை இங்கே வந்து நிறுத்தியிருக்கீங்க?''

''நான் உங்களோட பேசணும். அதுக்காகத்தான். நான் உங்களை 'புருஷ்னு கூப்பிடறதுல உங்களுக்கு அப்ஜெக்ஷன் இல்லையே!'' மீண்டும் அதே பளீரென்று புன்னகை!

''உங்களுக்கு அப்படி கூப்பிடறது பிடிச்சிருந்தா கூப்பிட்டுக்கோங்கோ! ஆனா... நீங்க புருஷ்னு கூப்பிடச்சே... எனக்கு ஏதோ பிரஷ்'னு கூப்பிடற மாதிரி இருக்கு...?''

களுக்கென்று சிரித்தாள், ம்ருகா! முதல் தடவையாக, அம்மாதிரி ஒரு சிரிப்பைக் கேட்டதால், புருஷோத்தமன் உண்மையிலேயே சொக்கிப்போய் விட்டான்.

ஒரு முறை, அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''நீங்க காலேஜுக்கு வேஷ்டியிலயா வருவீங்க...'' ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''இல்லை! பேண்ட் தான் போடுவேன்! ஆனா காலுல அடிபட்டதால், வேஷ்டி கட்டிக்கோனு எங்க அம்மா சொன்னா...''

''ஓ... மம்மிஸ் பேபியா'' கிண்டலுடன் அவள் சிரிக்க, அவனுக்கு வெட்கமாக இருந்தது!

''ஆமா! இதென்ன நெத்தியில ரேடியோ பேண்ட் இன்டிகேடர் மாதிரி...?''

''இது ஸ்ரீசூர்ணம்! நான் அய்யங்கார்! அதனால இதை இட்டுண்டு இருக்கேன்.

''இதை எதுக்கு அப்ளை பண்றீங்க?''

''நம்ம நெத்தியிலதான் நம்மோட திங்கிங் டிஷ்யூ இருக்கு! நம்ம தாட்ஸை மத்தவங்க இன்ஃப்ளூயன்ஸ் செய்யக்கூடாதுங்கறதுக்காக இதை அப்ளை பண்றோம்! எல்லாத்துக்கும் சயின்டிஃபிக் காரணம் இருக்கு... புருஷோத்தமன் ரோஷத்துடன் சொன்னவன், அவளை உறுத்துப் பார்த்தான்.

''நீங்க பிராமின்தானே! உங்களுக்கு இது தெரிஞ்சுருக்கணுமே!''

''அஃப்கோர்ஸ் எஸ்!'' ம்ருகா சிரித்தாள். ''நான் பால்காட் ஐயர்! பட்... புருஷ்! எனக்கு இந்த மாதிரி நம்பிக்கைலாம் கிடையாது! என் அப்பா என்னை அப்படி வளர்க்கலை...''

''கோவிலுக்கு போவீங்களா?''

''நோ... நோ! நான் இயற்கையை வணங்கறேன். இதோ இந்த 'பே ஆஃப் பெங்கால்', இந்த பீச், இந்த மரங்கள், வானம், அதுல தெரியற வானவில்... இதையெல்லாம் வொர்ஷிப் பண்றேன்! அப்புறம்...

என்னையே நான் வொர்ஷிப் பண்ணறேன்! அவ்வளவுதான்! கோவில் எல்லாம் 'மேன் மேட்' தானே! 'மேன்மேட்' பொருளை நான் வணங்கறதில்லை!'' ம்ருகா அலட்சியமாக சொன்னாள்.

புருஷ் சிரித்தான்.

''வாட் மேக்ஸ் யூ லாஃப்?''

''அப்ப உங்களையே நீங்க வொர்ஷிப் பண்ணக் கூடாது நீங்களும் மேன்மேட்தானே?'' கிண்டலடித்தான் புருஷ். அவனை உறுத்துப்பார்த்த ம்ருகா காரைக் கிளப்பினாள்.

''ஈவ்னிங் காலேஜ் மெயின்கேட் கிட்டே நில்லுங்க! உங்களை உங்காத்துல டிராப் பண்றேன்... ம்ருகா சொன்னாள்.

''ஐயையோ வேணாம்! திருவல்லிகேணி சந்து'ல எல்லாம் உங்க கார் வர்ற வேணாம்!''

அவனுடைய பதற்றத்தை ரசித்தாள் ம்ருகா! 'ஏன்?'

''உலகத்துல இருக்கிற எல்லா ஏரியாவுலயும் 'வம்பு' பிடிச்ச ஏரியா எது'னு தராசு தட்டுல வச்சுப் பார்த்தா, ட்ரிப்ளிகேன் தான் தாழ்ந்து நிற்கும்! அவ்வளவு வெயிட்டான ஏரியா!''

ம்ருகாவின் முகம் திடீரென்று சீரியஸ் ஆனது. ''ஏன் பயப்படறீங்க புருஷ்! யார் வம்பு பேசினா என்ன! எனக்கு உங்களைப் பிடிச்சு போச்சுனா எந்த சக்தியாலும் நம்மை பிரிக்க முடியாது! அதே மாதிரி, எனக்கு உங்களை பிடிக்காம போச்சுனா, எந்த சக்தியாலும் நமக்குள்ள ஒட்டுதல் ஏற்படுத்த முடியாது!

புருஷோத்தமன் காலேஜ் மெயின்கேட் அருகே இறங்க, அவன் தன்னுடன் வந்ததையே மறந்துவிட்டவள் போல காரைக்கிளப்பிக் கொண்டு சென்றாள் ம்ருகா.

'ம்ருகாவைப் பார்த்தால் முகத்தைத் திருப்பிக் கொண்டு போ' என்று அம்மா விடுத்த எச்சரிக்கை ஞாபகத்திற்கு வர, அவளும் தானும் நிகழ்த்திய உரையாடலில் தப்பிதமாக ஏதாவது தோன்றுகிறதா என்று யோசித்துப் பார்த்தான்.

''இல்லையே... சாதாரணமாகத்தானே பேசினாள்! அவள் கடைசியாக ஊர் வம்புக்கு தான் பயப்படமாட்டேன் என்பது போலதானே சொன்னாள்! தப்பாக ஒன்றும் பேசவில்லையே!

அம்மா... ஏன் போயும் போயும் இந்தப் பெண்ணை நினைத்து பயப்படுகிறாள்?

யோசித்தபடி நாகராஜன் வருகைக்காக காத்திருந்தான். அவனும் ஒரு வழியாக வந்து சேர்ந்தான்.

''மன்னிச்சுக்கோடா! அந்தப் பொண்ணு பேசிண்டு இருக்கச்சேயே காரை கிளப்பிண்டு போயிட்டாடா!... என்னையும் இறக்கிவிட்டுடுனு சொன்னேன்! காதுலயே போட்டுக்கலை...''

''அதனால என்னடா பரவாயில்லை!'' என்றவன், அவன் நெற்றியைக் குழப்பத்துடன் நோக்கினான்.

''உன் ஸ்ரீசூர்ணம் எங்கேடா! காருல ஏறச்சே பட்டையா இட்டுண்டு இருந்தியே...''

கலுக்கென்றது புருஷோத்தமனுக்கு! ம்ருகா கூட அதைப்பத்தி கேட்டாளே... ஒரு வேளை வேர்வையில் அழிஞ்சுடுத்தா...?

நாகராஜன் தன் வகுப்பை நோக்கி நடக்க, குழப்பத்துடன் வகுப்புக்கு போகத் தோன்றாமல் அங்கிருந்த குல்மொஹர் மரத்தின் கீழே நின்றுவிட்டான், புருஷோத்தமன், இன்றும் சிறிது நேரத்தில் ஸ்டாடஸ்டிக்ஸ் பரீட்சை எழுத வேண்டுமே என்கிற நினைப்புக்கூட இல்லை. தன் கையைப் பார்த்தான். ஸ்ரீசூர்ணத்தை அழித்ததற்கு அடையாளமாக அவன் விரல்கள் செம்மையாக காட்சி தந்தன.

# பாட்டிச் சொன்ன வரிசை

## 1957 - சிதம்பரம்

"ஐயோ... தாத்தா! காலேஜ் முடிஞ்சு சாயங்காலம் அந்த மிருகம் கூட போயிட்டாரா... அப்பா?'' அமுதன் கலவரத்துடன் கேட்க, சிரித்தார் நம்பாடுவான்.

''அமுதா! உன் பாட்டி என்கிட்டே சொன்னதை நான் உனக்கு கதையா சொல்லிட்டு இருக்கேன். அவ சொன்ன வரிசையிலதானே நானும் உன்கிட்டே சொல்ல முடியும்... அவசரப்பட்டா எப்படி?...

''சரி... சொல்லுங்கோ! அப்புறம் என்னாச்சு?'' நம்பாடுவான் தொடர்ந்து பேச துவங்கினார்.

# 7. தூண்டில் மீன்

## 1939 - சென்னை

தன் வகுப்புகள் முடிவதற்கு ஒரு மணி நேரம் முன்பாகவே வீட்டுக்கு கிளம்பி விட்டான், புருஷோத்தமன். ம்ருகாவுடன் காரில் பயணிப்பதை தவிர்க்கவே அப்படி செய்தான்.

மெதுவாக நாகராஜன் படிக்கும் தத்துவ துறைப் பகுதியை நோக்கி நடந்தான். நாகராஜனின் வகுப்பை நெருங்க, அவனை கண்டு திகைப்புடன் எழுந்து வந்தான் நாகராஜன்.

''என்னடா! இங்கே வந்திருக்கே?''

''கால் வலிக்கறது! ஆத்துக்கு போலாமா?''

''எனக்கு இன்னும் ஒரு கிளாஸ் இருக்குடா'' என்றவன், அமுதனின் வாடிய முகத்தைப் பார்த்ததும், ''சரி... வா...'' என்றபடி தன் புத்தகங்களை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

''பீச்ரோட் வழியா போக வேண்டாம்டா! நாம பைக்கிராப்ட்ஸ் ரோடா போய், ஈஸ்வரதாஸ் லாலா தெரு வழியா போயிடலாம்...''

புருஷோத்தமன் கூற, நாகராஜன் சட்டென்று அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

எதுவும் பேசாமல் இவரும் பைக்கிராப்ட்ஸ் சாலையில் திரும்ப, திடீரென நாகராஜன் கேட்டான்.

*‘‘என்னடா! அந்தப் பொண்ணு மேல உனக்கு ஏதாவது அபிப்பிராயம் இருக்கா என்ன?’’*

*‘‘சை... சை! நீதான் பாக்கறியே! அவ எவ்வளவு பெரிய இடத்து பொண்ணு! நுனிநாக்குல வெள்ளைக் காரி மாதிரி இங்கலீஷ்ல பொளந்துக் கட்டறா! நான் பேசறதோ வடிகட்டின ட்ரிப்ளிகேன் இங்கலீஷ்! ட்யூக் கம்பெனியோட ஜாகுவார் காருல அவ பவனி வர்றா! என்கிட்டே சைக்கிள் கூட இல்லாம, உன்னோட ‘டபுள்ஸ்’ வர்றவன் நான்! என் மனசுல அவளைப்பத்தி எப்படி அபிப்பிராயம் வரும்?’’*

*‘‘இல்லைடா! நீ இப்படி அவசரம் அவசரமா காலேஜை விட்டு கிளம்பறதும், பீச் ரோடு வழியா நேரா போறதை விட்டுட்டு, டொக்கு சந்துல நுழைஞ்சு போறதையும் பார்த்தா, எங்கே அவ மேல அபிப்பிராயம் வந்துடுமோ’’ன்னு பயப்படறா மாதிரி தெரியுதே!’’*

*‘‘டேய் நாகு! நீயாக எதையாவது கற்பனை பண்ணி தொலைக்காதே! சத்தியமா அப்படி ஒரு எண்ணமே எனக்கு இல்லை! எதையாவது இட்டுக்கட்டி, ட்ரிப்ளிகேன்ல வதந்தியை கிளப்பிடாதே! அம்மா காதுல ஏதாவது விழுந்து தொலைக்கப்போறது...’’*

அதற்கு மேல் நாகராஜ் ஒன்றும் பேசவில்லை. இருவரும் மௌனமாக நடந்தனர். தேரடி தெருவில் இருக்கும் தன் வீட்டிற்குள் நாகு நுழைய, தொடர்ந்து நடந்த புருஷோத்தமன், குளக்கரையைக் கடந்தான்.

தன் வீடு இருக்கும் அனுமந்தராயன் தெருவில் நுழைந்தவன், உறைந்து போய் நின்றான். தெருவை அடைத்துக் கொண்டு அவன் வீட்டு வாசலில் அந்த ஜாகுவார் கார் நின்றிருந்தது. பரபரப்புடன் வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டு வாசலில் ஹவுஸ் ஓனர் ரகோத்தமராவ் காத்திருந்தார். அவர் கண்களில் ஆயிரம் கேள்விகள்.

''புருஷோத்தமா! உன்னைத்தேடி ஒரு பொண்ணு வந்திருக்காப்பா! இந்த சமயம் பார்த்து உங்கம்மா இல்லை! சுபத்ரா மாமி ஆத்துக்கு போயிருக்கா!... என்ன பண்ணறதுனு தெரியாம எங்க போர்ஷன்ல உட்கார வச்சிருக்கேன்...''

''நல்லவேளை! அம்மா இல்லை!'' மனதினுள் நினைத்தபடி, ரகோத்தம ராவ் போர்ஷனுக்குள் எட்டிப் பார்த்தான்.

அங்கிருந்த ஊஞ்சலில் ஒய்யாரமாக உட்கார்ந்து, வேகமாக அதை வீசி ஆட்டிக் கொண்டிருந்தாள், ம்ருகா! ரகோத்தமராவின் மனைவி கங்காபாய், சமையலறை வாயிலில் இருந்து பதற்றத்துடன் அலறிக் கொண்டிருந்தாள்.

''நோடம்மா! ஊஞ்சலை பேகனே ஆட்டாதே! பீரோ கண்ணாடியில இடிச்சு உடைஞ்சு போயிடும்... என்னந்தரே... இல்லி பாரே...'' என்று கன்னடமும், தமிழும் கலந்து கூப்பாடு போட, சமயத்தில் புருஷோத்தமன் உள்ளே நுழைந்தான்.

''நோடு புருஷோத்தமா! நிம்ப சினேகதி...'' என்று கங்காபாய் அவனை கோபத்தோடு முறைத்தாள்.

''ம்ருகா! வாங்க... எங்க போர்ஷனுக்கு போகலாம்...'' இதுவரை பெண்களிடம் அதிகம் பேசியிறாத புருஷோத்தமன், அவளை எப்படி கையாளுவது என்பது புரியாமல் தடுமாறினான்.

ம்ருகா தனது ஊஞ்சலாட்டத்தை நிறுத்தாமல் அவனை அலட்சியமாகப் பார்த்தாள்.

''உங்களை காலேஜ் வாசலுலதானே நிற்கச் சொன்னேன்! ஏன் சொல்லாம வந்தீங்க...?''

புருஷோத்தமனுக்கு எரிச்சலாக வந்தது. இவளுக்கு எதற்காக இவன் பதில் சொல்ல வேண்டும்! இதுவரை இரண்டு முறைதானே இவளை சந்தித்திருக்கிறான்! அதற்குள்ளாக பெண்டாட்டி போல இவள் என்ன கேள்வி கேட்பது?

''ஹலோ! சீன் க்ரியேட் பண்ணாம முதலுல, இங்கேயிருந்து என் போர்ஷனுக்கு வாங்க! திஸ் இஸ் மை ஹவுஸ் ஓனர்ஸ் போர்ஷன்'' கண்டிப்புடன் சொன்னான் புருஷோத்தமன்.

ம்ருகா பதில் பேசாமல் தொடர்ந்து ஊஞ்சலாடிக் கொண்டே

**''ஹவ் டூ யூ லைக் டு கோ அப்**
**இன் எ ஸ்விங்**
**அப் இன் தி ஏர்**
**ஸோ... ப்ளூ... ப்ளூ''**

என்று ஆங்கில கவிதை ஒன்றை பாடியபடி தொடர்ந்து ஆடிக் கொண்டிருக்க, கங்காபாயின் பொறுமை எல்லையை மீறிக்கொண்டிருக்க, அம்மா வந்தால் இன்னும் ரசாபாசமாகிவிடப் போகிறதே என்கிற பதற்றத்தில் புருஷோத்தமன் அவளை கெஞ்சலுடன் பார்த்தான்.

''ப்ளீஸ்... வாங்க... ம்ருகா!...'' புருஷோத்தமன் தன் போர்ஷனை நோக்கி நடக்க, ம்ருகாவும் சிரித்தபடி ஆட்டத்தை நிறுத்திக்கொண்டு, அவனைப்பின் தொடர்ந்தாள்.

வீட்டின் கடைசியில் கிணற்றின் அருகாமையில் இருந்தது, அவன் போர்ஷன். பூட்டியிருந்த கதவைத் திறந்து, அவளுக்காக ஒரு மோடாவை இழுத்துப்போட, அவள் அதில் உட்காராமல் தன் கைகளைக் கட்டிக்கண்டு அவனை வெறித்தாள். புருஷோத்தமன் அமைதியாக பேசினான்.

''இதோ பாருங்கோ! நீங்க என்ன நினைச்சுண்டு இப்படியெல்லாம் பண்றீங்கனு எனக்கு புரியலை...! என் மேல உங்க காரை மோதினீங்கோ! அக்கறையோட வந்து மன்னிப்பு கேட்டு விசாரிச்சிங்கோ. அவ்வளவு தானே நமக்குள்ளே! இப்படி எங்காத்துக்குள்ளே வந்து உட்கார்ந்து எதுக்கு அழிச்சாட்டியம் பண்றேள்! கிளம்பி உங்காத்துக்கு போங்கோ!...''

கலகலவென்று சிரித்தாள் ம்ருகா! ''அழிச்சாட்டியம்! யெஸ்! ஐ குட் கெஸ் தி மீனிங்... பிடிவாதம் தானே... ஐ லைக் தட்!...''

அமுதனுக்கு எரிச்சலாக வந்தது!

''போதும் ம்ருகா! கிளம்புங்கோ! ஏன் இப்படி அனாவசியமா வம்பு பண்றீங்கோ...?''

ம்ருகா அவனை நெருங்கி வந்து அவன் கண்களுக்குள் உறுத்துப்பார்த்தாள். ''உங்களுக்கு இன்னுமா புரியலை, புருஷ்?''

சன்னமான குரலில் அவள் கிசுகிசுக்க, குழப்பத்துடன் தலையசைத்தான்.

''புரியலை!''

''பிகாஸ்... ஐ சின்சியர்லி லவ் யூ!'' ம்ருகா தன் உதடுகளில் ஆள் காட்டி விரலை வைத்து அந்த விரலை அவன் உதடுகளில் வைத்தாள்.

பதைப்பதைத்தபடி இரண்டு அடி பின்னால் விலகினான், அமுதன்.

''என்ன சொன்னேள்?'' தன் செவிகளை நம்ப முடியாமல் கேட்டான் புருஷோத்தமன்.

''நான் உங்களை காதலிக்கிறேன்! முதல் தடவை பார்த்ததுமே நீங்கதான் எனக்குனு முடிவு கட்டிட்டேன்! இது ஏதோ ஜென்மாந்தர உறவா இருக்கும்னு நினைக்கிறேன்...'' ம்ருகா உணர்ச்சியுடன் கூற, புருஷோத்தமன் முகம் பேயறைந்தது போல ஆனது.

''பேத்தறீங்கோ ம்ருகா! கோயில் வழிபாடுகளுலேயே நம்பிக்கை இல்லாத நீங்க, ஜென்மாந்தர கதையெல்லாம் எப்படி சொல்றேள்?...''

''இல்லை புருஷ்! ஐ மீன் இட்! நான் உங்களை லவ் பண்ணியே தீருவேன்!'' தன்னை மறந்து உரத்த குரலில் ம்ருகா கூற, அக்கம்பக்கத்து போர்ஷன்களில் இருந்து, மாமிகள் எட்டிப் பார்த்தனர்.

''ப்ளீஸ்! எங்களோட அமைதியான சூழ்நிலையை கெடுக்காதேள்! இங்கே இருந்து போயிடுங்கோ!''

''எனக்கு பதில் சொல்லு புருஷ்! டூ யு லவ் மீ?...''

ம்ருகா விடாப்பிடியாக கேட்டாள்.

''நான் தண்ணி குடிக்கறச்சேயே என் உதட்டுல டம்ளர் பட்டுடப் போறதேனு பக்கத்துலயே நின்னு காவல் காப்பா... என் அம்மா! என்கிட்ட போய் காதல் பத்தியெல்லாம் பேசறேள்! இதையெல்லாம் தீர்மானிக்க வேண்டியது என் அம்மா!...''

''உங்கம்மா கிட்டே நான் பேசறேன்!'' ம்ருகா பிடிவாதமாக கூற, அவனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''இதுதான் எல்லை, ம்ருகா! பேசாம எழுந்துப் போங்கோ! எனக்கு ஆத்திரத்தை வரவழைக் காதீங்கோ!...'' அவனையும் அறியாமல், தன் கை விரலை வெளியே நோக்கி நீட்டினான், புருஷோத்தமன்.

அதற்குமேல் கட்டுப்படுத்த முடியாதவள் போல, கலகலவென்று சிரிக்கத் தொடங்கினாள், ம்ருகா.

''என்ன புருஷ்! என்னோட காதல் வசனங்களை கேட்டு பயந்துட்டீங்களா? ஐ வாஸ் ஜஸ்ட் புல்லிங் யுவர்

லெக்! நான் இங்கே வந்தது. உங்களை என் பர்த்டேக்கு இன்வைட் பண்றதுக்காக! சும்மா... உங்களை கொஞ்ச நேரம் கலாட்டா செஞ்சேன்! இதுக்கு போய் இப்படி மிரண்டு போயிட்டீங்களே! ஜஸ்ட் லேர்ன் டு எஞ்சாய் ஸச் ஃபன்!''

ஒன்றுமே நடவாதது போல சிரித்தபடி அவனிடம் இன்விடேஷனை நீட்ட, புருஷோத்தமனை வெட்கம் பிடுங்கி தின்றது.

அத்தனையும் விளையாட்டா! அட கடவுளே! இது தெரியாமல் பொங்கி எழுந்து விட்டேனே! எல்லாம் அம்மாவால் வந்த வினை; யட்சிணி, இட்சிணி கதையெல்லாம் சொல்லி, ம்ருகாவை கண்டாலே பயப்பட வைத்து விட்டாள்.

தயக்கத்துடன் அவள் நீட்டிய அழைப்பிதழைப் பெற்றுக் கொண்டான்.

''சாரி ம்ருகா! காதல்'னு சொன்னதும் பயந்துட்டேன்! உங்க லெவல் என்ன? என் லெவல் என்ன! குழந்தைத்தனமா நடந்துண்டுட்டேன்! நிச்சயமா உங்க பிறந்த நாளுக்கு வர்றேன்!...''

''அது போதும்!'' சிரித்தபடி வெளியேறினாள் ம்ருகா.

வெகுநேரம் பிரமை பிடித்தவன் போல உட்கார்ந்திருந்தான், புருஷோத்தமன். வனஜா வரும்போதே பரபரப்புடன் வந்தாள். வீட்டுக்காரி கங்காபாய் விஷயத்தை சொல்லியிருக்க கூடும்.

''என்னடா... அவ வந்தாளா? சித்த நேரம் சுபத்ரா மாமியாத்துக்கு போயிட்டு வர்றதுக்குள்ளே இப்படி

நடக்கணுமா! இன்னைக்குனு பார்த்து ஏன் நான் போனேனோ?... ஏண்டா... இப்படி பிரமை பிடிச்சுண்டாப்பல உட்கார்ந்திருக்கியே. உன்னை அவ... என்ன பண்ணினா?'' புலம்பியபடி அவன் பக்கத்தில் அமர்ந்தாள்!

''எனக்கு ஒண்ணும் ஆகலைம்மா! கால்வலி'னு உட்கார்ந்திருக்கேன்...!''

''கால் வலியா! அதை ஏன் முதலுலயே சொல்லலை?... அது கிடக்கட்டும்! அவ உன்கிட்டே என்ன சொன்னா?''

அம்மாவிடம் சொல்லலாமா, வேண்டாமா! யோசித்தான். பிறகு பிறந்த நாள் அழைப்பை மறைத்து விட எண்ணினான். நிச்சயம் போக விடமாட்டாள்.

''கால் குணமாயிடுத்தானு கேட்க வந்தாள்...''

''வராதேனு சொல்லியும் தேடிண்டு வர்றாள்னா, அவள் எந்த மாதிரி பொண்ணு! முதல்ல நீ என்னோட கிளம்பி வா!...''

வனஜா எழுந்துக்கொள்ள, வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''எங்கேம்மா?''

''கோவிலுக்கு! போய் நரசிம்மர் சன்னதியில உனக்கு சங்கு தீர்த்தம் தெளிச்சு ஒரு அர்ச்சனை பண்ணினாதான் எனக்கு மனசு ஆறும்!''

மறுபேச்சு பேசாமல், அம்மாவுடன் கிளம்பினான், புருஷோத்தமன்.

அர்ச்சனை கூடையை பட்டரிடம் நீட்டினாள், வனஜா. அர்ச்சனையை செய்த பட்டர், தேங்காயை உடைப் பதற்காக மூலைக்கு சென்றார். தேங்காய் ஒரே தட்டில் பிளந்தது! உள்ளே காய் அழுகியிருந்தது.

மாமி! தேங்காய் அழுகல்! வேற கொண்டாங்கோ' என்று சொல்வதற்கு முற்பட்ட பட்டர், கண்களில் தாரை தாரையாக நீருடன் வனஜா அழுதுக்கொண்டிருப்பதை பார்த்தார்! பக்கத்தில் புருஷோத்தமனும் குழப்பத்துடன் நின்றிருப்பதை பார்த்தார்.

அப்போதுதான் அவர்கள் இருவரையும் அவருக்கு அடையாளம் தெரிந்தது. அந்த பெண்மணி கோவிலில் வேலை பார்க்கும் ராமனுக்கு ஏதோ உறவு ஆயிற்றே!

'என்ன கஷ்டமோ, பாவம்! நாம் வேறு தேங்காய் அழுகல் என்று கூறி எதற்கு அவர்களை மேலும் விசனப்படுத்தவேண்டும்! தன்னிடம் இருந்த தேங்காய் ஒன்றை உடைத்து ஆரத்தி எடுத்தவர், அவர்கள் முகத்தில் சங்கு ஜலத்தை தெளித்தார்.

மனம் சற்று லேசாக, வனஜா புருஷோத்தமனை அழைத்துக்கொண்டு சன்னிதியை விட்டு நீங்கினாள்.

## 1957 - சிதம்பரம்

''ஏன் தாத்தா நிறுத்திட்டீங்கோ?''

''நிறுத்தலை அமுதா! உங்கப்பா அந்த யட்சிணி யோட பொறந்த நாள் விழாவுக்கு போறதுக்காக, உன் வனஜா பாட்டிக்கு தெரியாம இரகசியமா ஏற்பாடு

பண்ணிட்டு இருந்தான்! அன்னைக்கு தான் நான் திருவல்லிக்கேணி போய் சேர்ந்தேன்.''

''நீங்க என் அப்பாவை பார்த்தீங்களா?''

''பார்த்தேனாவது! அவன் வாழ்க்கையில நடக்க இருக்கிற பயங்கரங்களை எடுத்து சொன்னேன். உன் பாட்டி வனஜாதான் எனக்கு இரகசியமா கடுதாசி, போட்டு என்னை சென்னைக்கு வரச் சொன்னா! என்ன நடந்தது தெரியுமா?''

நம்பாடுவான் தொடர, படபடக்கும் இதயத்துடன் அவர் கூறுவதை உன்னிப்பாக கேட்டான், அமுதன்.

# 8. உன்னை அறிந்தால்

## 1939 - சென்னை

**ச**ந்தியாவந்தனத்தை முடித்துவிட்டு, கொடியில் ஊசலாடிக்கொண்டிருந்த தனது கருப்பு பேண்டையும் வெளிர் நீல சட்டையையும் இஸ்திரிகாரனிடம் தருவதற்காக கிளம்பினான், புருஷோத்தமன்.

ம்ருகா பிறந்த நாள் விழாவுக்கு அவன் போக இருப்பது அம்மாவுக்கு இன்னும் தெரியாது! சமயசஞ்சீவியாக இன்று, நாகராஜன் அக்கா வசந்தாவுக்கு நிச்சயதார்த்தம்! உதவிக்கு நாகு இவனை வந்து அழைத்தபோது, அம்மா கூட இருந்ததால், அவன் நிச்சயதார்த்தத்துக்கு போகப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

''நிச்சயத்தார்த்தத்துக்கு வேஷ்டி உடுத்திண்டு போயேன்! எதுக்கு பேண்டை இஸ்திரிக்கு கொடுக்கறே...'' அம்மா கவனித்துவிட்டாள்.

''இல்லைம்மா! ஓடியாடி வேலை செய்யணும்! சைக்கிள்ல கடைகண்ணிக்கு போகணும்! பேண்ட்தான் வசதி!'' புருஷோத்தமன் சமாளித்துவிட்டான்.

'ஜாக்கிரதை' ஒரே வார்த்தையில் கூறிவிட்டு சமையலறையினுள் முடங்கிக் கொண்டாள், வனஜா.

துணிகளை எடுத்துக்கொண்டு, வாசலை நோக்கி அவன் நடக்க, சரியாக உள்ளே நுழைந்தார், சகடவாக்கி நம்பாடுவான்.

புருஷோத்தமனை பார்த்த மாத்திரத்தில் அவன் மனதிலிருப்பதை யூகித்து விட்டார்.

**"துகிலழுத்த ஏகும் உத்தமனே!**
**திகில் வாழ்வுதனை நாடாதே!"**

என்று சிரித்தபடி அவன் தோளில் கைவைத்து தடுத்தார். நம்பாடுவானை கேள்வியுடன் பார்த்தான்.

"நீங்க யாரு?"

"நான்தான் நம்பாடுவான்! உன் அம்மா என்னைப் பத்தி சொல்லியிருப்பாளே!"

"சொல்லியிருக்கா! உள்ளே போங்கோ!" நான் போய் இஸ்திரிகாரனிடம் துணியை கொடுத்துட்டு வந்துடறேன்..."

மீண்டும் நடக்க எத்தனித்தவனை, அவர் குரல் தடுத்து நிறுத்தியது.

**இட்சிணியிடம் சிக்குவதற்கா**
**இஸ்திரியை நாடுகின்றாய்?**
**இட்டவடியை மாற்றி**
**இல்நோக்கி திரும்பிப்போ!**

கவிதைநயத்துடன் பேசியவாறு நம்பாடுவான் உள்ளே நடக்க, வேறு வழியின்றி அவர் பின்னே நடந்தான், புருஷோத்தமன்.

"வனஜாம்மா!"

ஒரே சமயத்தில் பாத்திரத்திலும், வயிற்றிலும், புளி கரைந்துக் கொண்டிருக்க, ஈரக்கையை புடவைத் தலைப்பில் துடைத்தபடி சமையலறையை விட்டு வனஜா வெளிவந்தாள்.

நம்பாடுவானைப் பார்த்ததும், முகத்தில் நிம்மதி பரவியது.

"வாங்கோ... மாமா! உங்களைப் பார்த்தப்புறம்தான் போன உயிர் திரும்பி வர்றது..." குரல் நெகிழ, அவர் கையிலிருந்த குடையையும், துணிப்பையையும் வாங்கிக் கொண்டாள்.

"உன் கடுதாசியை பார்த்ததுமே கிளம்பிட்டேம்மா!... எப்படி இருக்கே?"

"இருக்கேன் மாமா! புருஷோத்தமனுக்கு ஒரு நல்லது செஞ்சுட்டேன்னா அம்மா, அப்பா கிட்டே போய் சேர்ந்துடுவேன்..."

"அப்படி சொல்லாதே! அப்புறம் நீ தங்கள் கிட்டே வந்துடப்போறியேங்கிற கவலையில் உன் புள்ளைக்கு நல்லகாரியம் நடந்து விடாம செஞ்சுடுவா... பித்ருக்கள்..."

"ஐயையோ... மன்னிச்சுக்கோங்கோ! நான் சொன்னது தப்பு!"

அவர்களுடைய பேச்சு புருஷோத்தமனுக்கு வேடிக்கையாக இருந்தது. அம்மாவுக்கு தெரியாமல் எப்படியாவது ம்ருகா பிறந்த நாள் விழாவுக்கு போக

எண்ணியிருந்தான். இப்போது அம்மாவோடு, இந்த கிழவரையும் சமாளிக்க வேண்டும் போல இருக்கிறதே!

''மாமா! நீங்க குளிச்சுட்டு சாப்பிட வாங்கோ! அப்புறமா பேசலாம்!''

''நான் ராவைக்கே சிதம்பரம் போகலாம்னு இருக்கேன்! வேலை எல்லாம் போட்டது போட்டபடி வந்திருக்கேன்! உன் கடுதாசியைப் பார்த்ததும் மனசு கேட்கலை!''

நம்பாடுவான் தன் பார்வையால் புருஷோத்தமனை அளந்தபடி பேசினார்.

''மூச்! வீட்டுக்கார ராவ்ஜி கிட்டே பேசிட்டேன்! மொட்டை மாடியில காலியா ஒரு ரூம் இருக்கு! தட்டு முட்டு சாமான்தான் போட்டு வச்சிருக்கார்! அதை க்ளீன் பண்ணி தரேன்னு சொல்லிவிட்டார்! வாடகை எதுவும் வேண்டாம்னுட்டார்! நீங்க அதுலயே தங்கிக்கலாம்...

திகைப்புடன் அம்மாவைப் பார்த்தான், புருஷோத்தமன். அம்மா பெரிதாக ஏதோ திட்டம் போட்டிருக்கிறாள் போல இருக்கிறதே! இந்த கிழவர் எதற்கு இங்கே தங்க வேண்டும்!

''டேய் புருஷோத்தமா! எங்கேயும் போயிடாதே! மாமா உன்கிட்டே பேசணும்...'' வனஜா உத்தரவிட்டாள்.

நம்பாடுவான் குளிக்கப்போக, புருஷோத்தமன் எரிச்சலுடன், தன் பேண்ட்டையும் சட்டையையும் மீண்டும் கொடியில் போட்டான்.

நம்பாடுவான் குளித்து பூஜை செய்துவிட்டு, சாப்பிடும்வரை, வனஜா எதுவும் பேசவில்லை! அவரும் புருஷோத்தமனும் சாப்பிட்ட பிறகு, கூடத்தில் பாய் ஒன்றை விரித்தாள். நம்பாடுவான் அதில் அமர, அவர் எதிரே புருஷோத்தமனை உட்காரச் சொன்னாள்.

''நீ சாப்பிடலையாம்மா'' பரிவுடன் நம்பாடுவான் கேட்டார்.

''எனக்கு எப்படி சாதம் இறங்கும்! இந்த பையனை ஆபத்து நெருங்கிண்டே வர்றது. எனக்கு நிம்மதி போய் இரண்டு வாரமாயிடுத்து...'' வனஜா கண்கலங்கினாள்.

''கவலைப்படாதேம்மா! பகவான் இருக்கார்!'' என்றார். தன் முன் உட்கார்ந்திருந்த புருஷோத்தமனை உறுத்துப் பார்த்தார்.

''ஆக... நீ யட்சிணி ம்ருகரஞ்சிகா கண்ணுல பட்டுட்டே!''

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் பேந்த பேந்த விழித்தான் அவன்.

அவன் தலையிலும், தொண்டைக் குழியிலும் மார்பிலும் தன் விரல்களை வைத்து நாடி பார்த்தார் நம்பாடுவான்.

அவர் முகம் பயங்கரமாக மாறியது! ''நல்லா தெரியுது! ஆபத்தான காலம்தான்! ரொம்ப எச்சரிக்கையோட நீ நடந்துக்கணும்!''

புருஷோத்தமனுக்கு அவர் பேசியது தமாஷாக இருந்தது! விசித்திரமாக அவரைப் பார்த்தான்.

"நீ சத்புருஷன்தான்! அதுல சந்தேகமே இல்லை! உன் தேக சக்கரம் சொல்றது. இந்த ஜன்மாவுல நீ கடந்தேறிட்டா நீ பிறவி அறுக்கலாம்! இனி அடுத்த பிறவியே கிடையாது! நீ வந்த இடத்துக்கே போயிடலாம்! இது உன்னோட 12 வது பிறவி! கடைசி பிறவி! உன்னோட எல்லை தூரத்துல தெரியுது! ஆனா அந்த எல்லையை நீ அடையறதுக்குள்ளே உன்னை எப்படியாவது பிடிச்சுடணும்னு ம்ருகரஞ்சிகா துரத்தறா! அவள் கையில நீ சிக்கவே கூடாது"

"நீங்க சொல்றது... எனக்கு ஒண்ணுமே புரியலே தாத்தா!"

"உனக்கு புருஷாமிருகம் கதை தெரியாதா?" வியப்புடன் கேட்டார் நம்பாடுவான்.

"தெரியாது" உதட்டை பிதுக்கினான் புருஷ்!

"என்னம்மா நீ சொல்லலியா?" நம்பாடுவான் கேட்டார்.

"அந்தப் பெயரே அவன் காதுல, ஒலிக்க வேணாம்னுதான் சொல்லலை" குற்ற உணர்வுடன் வனஜா கூறினாள்.

"அதுதான் நாம பண்ணுற தப்பு! சின்ன வயசுலயே சொல்லி வளர்த்து இருந்தா, மனசுல வைராக்கியம் வரும்! இப்ப விஷயத்தை சொன்னா, அவனுக்கு அது வேடிக்கையா தோணும்..." என்றபடி புருஷோத்தமனை மீண்டும் நோக்கினார். இவனை எப்படி கையாள்வது என்பது போல தன்னைப் பார்க்கும் நம்பாடுவான் மீது

இருந்த எரிச்சல் கோபமாக மாறியது. என்ன சொல்ல நினைக்கிறார், இவர்.

''புருஷோத்தமா! நீ பொறந்த அன்னைக்கு உன்னை பார்க்க வந்தேன். உன் உடம்புல இருக்கிற ஆறு சக்கர நாடி தளங்களை படிச்சேன். அப்ப சில பயங்கரமான விஷயங்களை தெரிஞ்சுக்கிட்டேன். உன் நாடி யோட்டத்தின் படி, இது உனக்கு 12 வது பிறவி!

நம்பாடுவான் கூற, பட்டென்று கேட்டுவிட்டான், புருஷோத்தமன்.

''மனுஷாளுக்கு ஏழு பிறவிதானே, தாத்தா!'' அவரை மடக்கி விட்டதாக அவன் எண்ணினான்.

நம்பாடுவான் சிரித்தார்.

''பிறவிகள் ஏழுதான்! ஏழைக் கொண்டு எழுனுதான் இந்த நிலவுலகத்துல வீழ்ந்திருக்கிற ஆத்மாக்கள் கரையேற, பகவான் ஏழு பிறவிகளை தந்திருக்கான்.

''கல்லாய், புல்லாய், மரமாய், புழுவாய், புள்ளாய், விலங்காய், நரனாய் ஏழு பிறவிகள் பொதுவா உண்டு. அந்த ஒவ்வொரு பிறவிக்கும் ஒரு அறிவை அதிகமாக தருவான். மனிதனுக்கு ஆறு அறிவு! அவன் ஏழாம் அறிவை பெற்றவுடன் முக்தி அடைஞ்சுடறான்! இது பொது விதி!...

புருஷோத்தமன் அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

''ஆனா... புருஷோத்தமா! இந்த விதி பிறவிங்கிற சக்கரத்துல சுத்தி சுத்தி வர ஆத்மாக்களுக்குதான்! நீ இந்த

சுழற்சில சிக்கி இருக்கிற ஆத்மா இல்லை! நீ மேல இருந்து நேரா கீழே வந்தவன்...

"புரியலை தாத்தா!"

"அதுக்குத்தான் புருஷாமிருகம் கதை தெரியுமான்னு கேட்டேன். அந்த கதைக்கும் உனக்கும் பெரிய தொடர்பு இருக்கு! சொல்றேன் கேளு!"

புருஷா மிருகம் பீமனை துரத்தியதையும் கிருஷ்ணர் அவனுக்கு 12 கற்களை தந்து, அவற்றை சிவலிங்கமாக மாற்றி பீமனை காத்த கதையையும் நம்பாடுவான் சொன்னார்.

"இதுக்கும் என் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்?" புருஷோத்தமன் குழம்பினான்.

"சம்பந்தம் இருக்கு! புருஷாமிருகம் வழக்கமா சிவ பூஜை செய்யப் போறச்சே, ம்ருக ரஞ்சிகா'ங்கிற யட்சிணி கிட்டே, தன் சக்தியை எல்லாம் கொடுத்துட்டு போகும்! அந்த யட்சிணி அதே சக்தியோட, குபேரவனத்தை காவல் காத்து வந்தாள். பூஜையை முடிச்சுட்டு வந்து புருஷாமிருகம் தன்னோட சக்தியை திரும்பி வாங்கிக்கும்.

"குபேரன் தோட்டத்துக்கு அழகுல ஒரு கந்தர்வன் மயங்கி போயிட்டான். தன் கந்தர்வ காதலிக்கு ஒரு சுவர்ண புஷ்பம் பறிச்சுட்டு போய் கொடுக்கணும்னு ஆசைப்பட்ட அந்த கந்தர்வன், பூவை களவாட நினைச்சு, குபேரன் தோட்டத்துக்குள்ளே நுழைஞ் சுட்டான். அவனுக்கு தெரியாது, ம்ருக ரஞ்சிகாங்கிற

யட்சிணி தோட்டத்தை காவல் காக்குறது. அவனைப் பார்த்துட்ட ம்ருகரஞ்சிகா, அவனை விரட்டிவிட்டு வந்தா!

"பூலோகத்துக்கு போயிட்டதால புருஷா மிருகம் தனது ஆற்றலை ம்ருக ரஞ்சிகா கிட்டே கொடுத்துட்டது தெரியாம அவளோட கோபத்தை சம்பாதிச்சுட்டான், அந்த கந்தர்வன்...

"தன்னை துரத்திட்டு வந்த யட்சிணி கிட்டே இருந்து தன்னை காப்பாத்தும்படி அம்பிகைய வேண்டினான், அந்த கந்தர்வன். கண்ணபிரான் பீமனுக்கு 12 கற்களை கொடுத்து உதவின மாதிரி, அம்பிகையும் கந்தர்வனுக்கு 12 பிறவிகளை கொடுத்து, எப்படியாவது தப்பிச்சுக்கோ'னு உதவிக்கரம் நீட்டினா! பன்னிரெண்டு பிறவி முடியறதுக்குள்ளே எப்படியாவது அவகிட்டேருந்து தப்பிச்சா, நீ பழையபடி கந்தர்வனா, கந்தர்வ லோகத்தை அடையலாம்'னு அவனுக்கு சொன்னாள் அம்பிகை!

"அந்த ம்ருகரஞ்சிகா அவனைப் பிடிக்கறதுக்குள்ளே, அவன் எல்லையை கடக்கணும். அவன் அந்த யட்சிணி கிட்டே சிக்கக் கூடாது, அப்படி சிக்கிட்டா அவனது அழிவு உறுதி!

புருஷோத்தமனும், வனஜாவும் திறந்தவாய் மூடாமல் அவர் கூறும் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

"அதனாலதான் சொல்றேன், புருஷோத்தமா! நீ அவ கையில அகப்பட கூடாது..." நம்பாடுவான் கூறினார்.

திகைப்புடன் தன் தாயைத்திரும்பி பார்த்தவன், "நானா...?" என்று மீண்டும் அவரை ஏறிட்டான்!

"ஆமா... நீதான்! நான் சொன்ன கந்தர்வன் நீதான்...!"

அதிர்ந்து போனான், புருஷோத்தமன்.

"நீதான்... குபேரவனத்துல நுழைஞ்ச கந்தர்வன்! அதனாலதான் உன்னை அழிச்சுடணும்கிற வெறியோட விரட்டிட்டு வர்றா... அந்த ம்ருகரஞ்சிகா...

"நடந்து போன, 11 பிறவியில நீ தெய்வாதீனத்தால தப்பிச்சுட்டு வந்துட்டே. அம்பிகை அருளால, இந்த பிறவியிலயும் நல்ல குலத்துல பிறந்திருக்கே! ஆனா. கடைசி பிறவியிலயும் அவள் கண்ணுல பட்டுட்டே! உங்கம்மா சொல்றதை வச்சு பார்த்தா, உன் காலேஜ்ல படிக்கிற அந்தப் பொண்ணுதான் யட்சிணி ம்ருகரஞ்சிகாவா இருக்கணும்!"

"எப்படி சொல்றீங்கோ" ஈனஸ்வரத்தில் ஒலித்தது, அவன் குரல்.

**"ஆறிரண்டாம் பிறவி இது**
**அந்தணனே நீயறிவாய்**
**மடையனுக்கு கண்ணனுரைத்தது போல்**
**காலம் உனக்கு நன்மதி பகற்கின்றது**
**நாடுபவள் குபேரவனத்து யட்சிணி**
**புருடாமிருகமாய் உன்தன்னை தொடருவாள்**
**மதன பயங்கரியின் கேளிக்கை**
**தகனசடங்காய் முடிந்திடுமே**
**குலைதன்னை நடுங்கச் செய்து**
**குலபேதமாய் நின்றிடுவாள்**

**அனலோம்பும் பாலகனை**
**கனல்பார்வை பார்த்திடுவாள்**
**ஏழாமிடத்து மால் கெடுத்து**
**ஜதகியவள் நிற்கின்றாள்**
**பாதகியவளிடம் எட்ட நில்**
**மிருகமாய் நாடி பேயாய் பாடுவாள்**
**நேத்திரமே கடுவனை ஒக்கும்**
**இதழ் கீழகத்தே மருவொன்று பூக்கும்**
**இடையிலே சூனக வளையம் நில்லா**
**மூலையிலே நீச்சக் கல் மிளிரும்**
**அடிமலர் சிறுத்து, இதழ்ரெண்டும்**
**நிலந்தன்னில் பாவா!**
**அன்னமாய் நடந்து கன்னம் வைப்பாள்**
**சன்னமாய் பொழிந்து பின்னம் செய்வாள்**
**சிக்காதே... பாலகா... ஓடு! ஓடு!**

பாடுவதை நிறுத்திய நம்பாடுவான், புருஷோத்தமன் கண்களை நேராக பார்த்தார்.

"அந்த பொண்ணுக்கு பூனை கண்கள். கீழ் உதட்டுல ஒரு மச்சம் இருக்கும். இடுப்புல மடிப்புகள் இருக்காது! பாதங்கள் சின்னதா இருக்கும்! கடைசி இரண்டு விரலுங்க நிலத்துல பதியாது! மார்புல நீலக் கல் போட்டிருப்பாள்! அன்னம் போல நடப்பா... ரொம்ப ஆபத்தானவ...

புருஷ் பிரமித்துப்போனான்! ஏறக்குறைய இவர் கூறிய அடையாளங்கள் ம்ருகாவை ஒத்துப் போகிறது! ஆனாலும் தாத்தா கூறுவதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை...!

புருஷோத்தமனின் கவனம் முழுவதுமாக தன்னிடம் இருக்கும் திருப்தியில் நம்பாடுவான் தொடர்ந்து பேசினார்.

*புருஷோத்தமா! கடந்த பிறவிகளா அவள் உன்னைத் துரத்தறா!*

- ❑ *நீ கல்லாய் வந்தப்ப, நதி நீரா உன்னை கரைக்க வந்தாள்.*
- ❑ *நீ புல்லாய் பிறந்தப்ப, வெட்டுக்கிளியா உன்னை மேயப் பார்த்தாள்.*
- ❑ *நீ பூவா வந்தப்ப, அவள் தேன் குடிக்கும் வண்டா வந்தாள்.*
- ❑ *நீ ஆலமரமா நின்னப்ப, அவ வேப்ப மரமா உன்னை பிளந்து வந்தாள்.*
- ❑ *நீ சிலந்தியா வந்தப்ப, அவ பெண் சிலந்தியா உன்னை புணர்ந்து உன்னை தின்ன வந்தாள்.*
- ❑ *நீ பசுவாய் பிறந்த போது, வேங்கையா வந்து உன்னை கொல்ல பார்த்தாள்.*
- ❑ *நீ தேளாய் வந்தப்ப, அவள் கருந்தேளாய் வந்து உன் உயிர் குடிக்கப் பார்த்தாள்.*
- ❑ *நீ நல்ல பாம்பா படமெடுத்தப்ப மலைப்பாம்பா வந்து உன் கதைமுடிக்க வந்தாள்.*
- ❑ *அரண்மனை மாடப்புறாவா வந்த உன்னை பருந்தா விரட்டினாள்.*

- மிலேச்ச நாட்டை நீ மன்னனா ஆண்ட போது, உன் சகோதரியா வந்து உன்னை சிறையில தள்ளி கொல்லப் பார்த்தாள்.
- குலப் பெண்ணா பிறந்த உன்னை அழிக்க நினைச்ச கணவனாய் வந்தாள்.

இந்த பதினொரு பிறவியிலயும் நீ எப்படியோ தப்பிச் சுட்டே, புருஷோத்தமா! இந்த கடைசி பிறவியிலயும் நீ தப்பிச்சுட்டா அவளால இனிமே ஒண்ணும் செய்ய முடியாது! அவளுக்கும் தெரியும்! இதுதான் கடைசி வாய்ப்பு'னு. உக்கிரத்தோட உன்னை நோக்கி வந்துட்டு இருக்கா! எப்படியாவது தப்பிச்சுடு...''

புருஷோத்தமன் முகத்தை கூர்ந்து கவனித்தார். நம்பாடுவான்! அவனுக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை. திரும்பி வனஜாவைப் பார்த்தான்.

''என்னம்மா இது! நாம இருபதாம் நூற்றாண்டுல இருக்கோம். இதையெல்லாம் கேட்டா வெள்ளைக் காராளை விடு. நம்மளவாளே சிரிக்கமாட்டாளா?... இதெல்லாம் நம்பும்படியாவே இல்லை!''

நம்பாடுவான் சிரித்தார்.

''புருஷோத்தமா! நீ முதலுல உன் அளவை புரிஞ்சுக்கணும்! உன்னோட அளவு என்ன?''

''அளவா... அப்படின்னா?'' விழித்தான்.

''நீ இந்த பிரபஞ்சத்துல வகிக்கிற அங்கம்?''

''சத்தியமா ஒண்ணுமே புரியலை, தாத்தா...'' புருஷோத்தமன் கிண்டலாக சிரித்தான்.

*''அகிலாண்ட கோடி பிரும்மாண்டம் இந்த பிரபஞ்சம்! அதுல நம்ம நட்சத்திர மண்டலம் ஒரு துளிதான்! அந்த நட்சத்திர மண்டலத்துல ஒரு துகள் இந்த பூமி! இந்த பூமியில் ஒரு பகுதி ஆசியா கண்டம். அதுல ஒரு பகுதி நம்ம பாரத பூமி! அதுல கீழே ஒரு மாகாணம் நம்ம சென்னை. அந்த மாகாணத்துல ஒரு சின்ன கிராமம் இந்த திருவல்லிக்கேணி! இந்த தெரு பெயர் என்னம்மா... வனஜா?''* நம்பாடுவான் கேட்க வனஜா பதில் சொன்னாள்.

*''அனுமந்தராயன் கோவில் தெரு!''*

நம்பாடுவான் தொடர்ந்தார்.

*''அந்த தெருவுல ஒரு வீடு இது! இந்த வீடும் முழுமையா உனக்கு இல்லை! இதுல மொத்தம் எத்தனை குடித்தனம்?''*

*''12 குடித்தனம் மாமா!''* வனஜா கூற, நம்பாடுவான் சிரித்தார்.

*''பார்த்தியா! இதுவும் 12! அந்த 12 குடித்தனங்கள்ல உன்னோட போர்ஷன் கடைசியா கொல்லை புறத்துல இருக்கு! 12 பிறவியில கடைசி பிறவி மாதிரி இதுவும் கடைசி! உன்னோட போர்ஷன்ல கூட நீ இப்ப கூடத்துல உட்கார்ந்திருக்கே! மத்த போர்ஷன்களை நடக்கறதை விடு! இப்ப உன் போர்ஷன்ல இருக்கிற உங்க சமையல் அறையிலேயே ஒரு கரப்பான் பூச்சியை பல்லி ஒண்ணு பிடிச்சிருக்கு! அந்த கரப்பான் பரிதாபமா தன்னோட இறக்கையை படபடக்கிற ஒலி எனக்கு துல்லியமா கேட்குது. உனக்கு கேட்காது! காரணம் மாயை!*

அந்த கரப்பான், பல்லிக்கிட்ட இரையாகிறதுக்கு காரணம் அதோட பூர்வஜென்ம கணக்கு... ''கத்தியால ஆப்ரேஷன் செய்யறச்சே, நமக்கு டாக்டர் மயக்கம் தர்றதுபோல நம்ம கர்மாக்களை அனுபவிக்கச்சே மாயையை உண்டாக்குறான் பகவான். அந்த மாயை தான் கடவுளே இல்லைனு சொல்லுற வரைக்கும், நம்மளை மயக்குது. இந்தப் பிரபஞ்சத்துல நம்ம அளவு இவ்வளவுதான்னு தெரிஞ்சுட்டா, நாம பக்குவமா நடந்துக்கலாம் ''பீமனுக்கு தன் அளவு தெரிஞ்சதால தான், இந்திர பிரஸ்தத்துக்கும் தனக்கு இடைப்பட்ட தூரத்தை அளவிட்டு... அதற்கேத்த மாதிரி தன் வேகத்தை அதிகரிச்சு புருஷா மிருகத்து கிட்டே இருந்து தப்பிச்சான்...''

''என்னதான் வேகமா ஓடினாலும் மான் ஏன் புலி கிட்டே சிக்கறது, உயிரை காப்பாத்திட்டா போதும்னு பயந்து ஓடற அந்தமான், புலியோட வேகத்தை தன் வேகத்தால ஜெயிக்க முடியும்னு ஒரு நிமிஷம் நினைச்சுப் பார்த்தா நிச்சயமா அதனால தப்பிக்க முடியும்! உன்னோட இலக்கு, உன்னை துரத்துற வனோட வேகம், உன்னோட வேகம், மூன்றையும் தெரிஞ்சுண்டு உன் வேகத்தை அதிகரிச்சு துரத்தறவன் வேகத்தை குறைச்சா எளிதா உன் இலக்கை அடையலாம்.

''நீயும் உன் இலக்கோட தூரத்தை தெரிஞ்சுக்கோ! அந்த தூரத்துக்கு தேவையான அளவு உன் வேகத்தை அதிகரிச்சுக்க!''... நம்பாடுவார் சிறிது இடைவெளி விட்டார்.

மௌனமாக அவர் முகத்தையே பார்த்தான், புருஷ். இலக்கு என்று நம்பாடுவான் எதைக் குறிப்பிடுகிறார்?

"எனக்கு புலப்பட்ட வரைக்கும், உன் இலக்கு எது'னு கேட்டா அது ஆண்டவனுக்குதான் வெளிச்சம்! உன்னோட நாடி சொல்லுது உனக்கு 82 வயசு'னு! ஆனா அப்படி சொல்லுற நாடிதான் நீ ம்ருகரஞ்சிகா கையில சிக்குவேனு சொல்லுது! அதன்படி பார்த்தா... உன் ஆயுள் எப்போது வேணுமினாலும் முடியலாம்..." நம்பாடு வான் விட்டத்தை பார்த்து வெறிக்க, 'ஐயோ' என்று வாய்விட்டு புலம்பினாள் வனஜா.

நம்பாடுவான் யோசனையுடன் புருஷோத்தமனை வெறித்தார்.

"பரவாயில்லை! உன் இலக்கு தெரியலைனாலும் பரவாயில்லை! உன் வேகத்தை அதிகமாக்கு!"

"எப்படி... மாமா?" வனஜா கண்ணீருடன் கேட்டாள்.

"உடனடியாக புருஷோத்தமனுக்கு கல்யாணம், பண்ணி வெச்சுடு! அவன் உடனடியா 'யோனி யாகம்' பண்ணி ஒரு பிள்ளைய பெத்துக்கணும்..."

புருஷோத்தமன் திடுக்கிட்டான்.

"என்ன தாத்தா சொல்றீங்கோ! நான் இன்னும் என் படிப்பையே முடிக்கலை! உத்யோகமும் பார்க்கலை! நான் எப்படி கல்யாணம் பண்ணிக்கிறது?"

நம்பாடுவான் பொறுமை இழந்தார் "நீ இந்த லௌகீக உலகத்தோட விஷயங்களை பார்க்காதே! உலகத்தோட

வேகத்துக்கும், பிரபஞ்சத்தோட வேகத்துக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இந்த உலகத்தோட வேகத்துக்கு நீ ஓடினா, அந்த யட்சிணி உன்னை சுலபமா பிடிச்சுடுவா! நீ பிரபஞ்சத்தோட வேகத்துல ஓட கத்துக்கோ! ஒரு வேளை, நீ தப்பிக்கலாம்...'' நம்பாடுவான் சொன்னதும் கண்களை துடைத்துக்கொண்டு ஆக்ரோஷத்துடன் நிமிர்ந்தாள், வனஜா!

''அவன் தப்பிக்கணும்! அதுக்கு அவன் என்ன செய்யணும்னு உடனே சொல்லுங்கோ!''

''அவன் கலியாணம் பண்ணிக்கணும். ஒரு பையனை பெத்துக்கணும். அதுவும் அந்த குழந்தை மூல நட்சத்திரம்ல பிறந்தா, புருஷோத்தமன் தப்பிக்க வாய்ப்பு இருக்கு...''

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது.

திடீரென்று

நம்பாடுவான் புருஷோத்தமனின் கைகளை பற்றிக் கொண்டார்.

''புருஷோத்தமா! எனக்கு என்ன சொல்றதுனே தெரியலை! அவள் உன்னை நெருங்கிட்டே இருக்காள்! ஏற்கெனவே, நீ ஓட ஆரம்பிச்சு இருக்கணும்! நீ இன்னும் ஓடவே ஆரம்பிக்கலை! திரும்பி பார்க்காம ஓடு! ஓடிகிட்டே இரு! நிற்க நாழி இல்லை உனக்கு! உன் வாழ்க்கை முழுக்க நீ ஓடிகிட்டே இரு! அவளோட கண்ணுல இனிமே படாதே! அவகிட்டே சிக்காம ஓடு. அவ இருக்கிற பக்கம் தலைவச்சு படுக்காதே! அவ

கண்ணுல பட்டாக்கூட, தனிமையில அவகிட்டே சிக்காதே.''

நம்பாடுவான் ஆயிரம் எச்சரிக்கைகள் செய்ய, புருஷோத்தமன் குழப்பத்துடன் எழுந்துவிட்டான்.

இந்த கிழவன் பயமுறுத்துகிறாரா இல்லை என் நன்மைக்கு சொல்கிறாரா?

எந்தவித முடிவுக்கும் வரமுடியாமல் தவித்தான்.

''நீங்க சொல்றதை என்னால முடிஞ்ச வரைக்கும் கடைப்பிடிக்கிறேன்...''

அம்மாவின் திருப்திக்காக சொல்லி விட்டு வாசலை நோக்கி நடந்தான்.

''எங்கே போறே?'' வனஜா கேட்க, நாகராஜன் ஆத்துக்கு என்றபடி அவளது பதிலுக்கு காத்திராமல் வெளியேறினான்.

# 9. ஏழாம் வீடு

## 1957 - சிதம்பரம்

"**தா**த்தா! என் அப்பா அந்த ம்ருகா பிறந்த நாளைக்கு போனாரா?'' அமுதன் சுரத்தின்றி கேட்டான்.

''போனான் அமுதா! அவன் அம்மாவுக்கும், எனக்கும், தெரியாம...! அவ்வளவு எச்சரிக்கை செஞ்சும், அவன் நண்பன் வீட்டுல இருந்து, இரகசியமா கிளம்பி அந்த யட்சிணி வீட்டுக்கு போனான். அவன் அப்படி போவான்னு எனக்கு தெரியும்!

''காரணம், அவனுடைய சக்கர ஓட்டங்கள், அவன் ஒவ்வொரு வினாடியும் அவளை நோக்கி ஓடிட்டு இருக்கான்னு எனக்கு புரிய வச்சது. அவன் அம்மா வனஜாகிட்டே, அவன் ஜாகத்தை வாங்கி பார்த்தேன்.

''அவனோடு ஏழாம் வீட்டுல, புதன் ராகுவோட பிடியில சிக்கி, தன் சக்தியெல்லாம் இழந்து காணப் பட்டான். அப்பவே எனக்கு தெரிஞ்சுப் போச்சு! அந்த ம்ருகரஞ்சிகா கிட்டே அவன் சிக்கப் போறதை தடுக்க முடியாது'னு...''

அமுதன் ஒன்றும் கூறாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

# 10. அலற வைத்த ஆல்பம்

## 1939 - சென்னை

**ஞா**யிற்றுக்கிழமை

இன்று மாலை, அடையாறில் உள்ள ம்ருகா வீட்டில் அவளுடைய பிறந்த நாள் விழா. போவதா, வேண்டாமா என்கிற குழப்பத்தை கடந்து, போய் பார்க்கலாமே என்கிற முடிவுக்கு வந்து, 'அவளுக்கு என்ன பரிசளிக்கலாம்' என்கிற யோசனையில் வெகு நேரம் நாகராஜன் வீட்டு மொட்டைமாடியில் அமர்ந்திருந்தான். கடைசியில், தான் நாகராஜனுக்கு பரிசாக கொடுத்திருந்த நடராஜர் சித்திரம் ஒன்றையே திருப்பி பெற்று, அதை ம்ருகாவுக்கு பரிசாக கொடுத்துவிட தீர்மானித்தான்.

நாகுவிடம் சொல்லி, அவனது பேண்ட் மற்றும் ஷர்ட்டையே கடன் வாங்கி தயாராக வைத்துக் கொண்டான்.

''டேய் நாகு! எங்கம்மா ஒரு வேளை உன் அக்கா நிச்சயதார்த்தத்துக்கு வந்தாலும் வரலாம்! அப்படி வந்தா. 'நான் கடைக்கு போயிருக்கிறதா சொல்லிடு! ஆறு மணிக்கு பர்த்டே பார்ட்டி! போன வேகத்துல திரும்பி வந்துடறேன்...'' புருஷோத்தமன் சொல்ல, நாகு அவனை எச்சரித்தான்.

*''பார்த்துடா! அந்த பொண்ணை பார்க்கக் கூடாது'னு ஜோசியர் சொன்னதா கார்த்தால சொல்லிட்டு, சாயந்தரமே அவளை பார்க்க போறியே!''*

*''நாகு! நான் இப்பக்கூட அந்த கிழவன் சொல்றதை நம்பலை! என் ஆத்துக்கு அவளோட பிறந்த நாளுக்கு அழைக்க வந்தாள். அம்மா அவ ஆபத்தானவனு சொன்னதால, அந்த கண்ணோட்டத்துலேய அவளைப் பார்த்தேன்! ஆனா... ஒரு சராசரி பொண்ணா அவளை நினைச்சு பாரேன். அவள் கார் நம்ம மேல மோதிட்ட தால வந்து குசலம் விசாரிச்சுட்டு, உதவி வேணுமானு கேட்டா! நடக்க முடியாம தவிச்ச எனக்கு லிஃப்ட் கொடுத்தா...! அஃப்கோர்ஸ்... உன் கிட்டே விசித்திரமா நடந்துண்டா! அதை வச்சு அவளை பொல்லாதவனு முடிவு கட்டிட முடியுமா! காலேஜ்ல என் அட்ரஸை வாங்கிண்டு ஆத்துக்கே வந்தா!*

*''பிறந்த நாளைக்கு அழைக்க வந்தவ, கொஞ்ச நேரம் என்னோட விளையாடினா. பெரிய வீட்டு பெண்கள்னா கொஞ்சம் ப்ரீயா பழகுவா... அவ்வளவுதானே நடந்திருக்கு!*

*''இதுவரைக்கும் அவளை மூணு தடவை சந்திச்சு இருக்கேன்... இதுக்கு போய் அவ யட்சிணினு முடிவு கட்டினா, நான் காலேஜ்ல படிக்கிறதுக்கே அர்த்தம் இல்லாம போயிடும்! வீடு ஏறி வந்து பர்த்டேக்கு அவ்வளவு பெரிய கவர்மெண்ட் ப்ளீடர் பொண்ணே அழைச்சிருக்கா! போய் ஹலோ சொல்லிட்டு வர்றதுல என்ன தப்பு? அவள் நல்லவளோ இல்லை கெட்டவளா,*

நான் தொடர்பு வச்சுண்டாதானே சங்கடம்! இன்னைக்கு சாயங்காலத்தோட நான் அவளை கழட்டி விட்டுடப் போறேன்...?''

நாகு அவனை சிரிப்புடன் பார்த்தான்.

''நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்டேன். நீ இவ்வளவு சமாதானங்கள் சொல்லறே! சமாதானங்களை உனக்கு நீயே சொல்லிண்டா மாதிரிதான் எனக்கு படறது! உனக்கே போறதா வேணாமானு குழப்பம்னு நினைக்கிறேன்! பேசாம போகமா இருந்திடு! நிச்சயதார்த்த வேலைகளை பாருடா!...''

'இலக்கு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதை பார்த்து உன் வேகத்தை அதிகரிச்சுட்டு ஓடு' நம்பாடுவான் கூறியது காதில் ஒலிக்க, அங்கே போனால் ஒரு வேளை இலக்கு என்ன என்பது தெரியுமோ என்னவோ, என்று உள்மனதில் ஒரு குரல் ஒலிக்க, அமைதியாக நாகுவையே வெறித்துக்கொண்டிருந்தான்.

கீழே மேளம் ஒலிக்கத் தொடங்க, நிச்சயதார்த்தம் ஆரம்பித்துவிட்டது என்பதை புரிந்துக்கொண்டு நண்பர்கள் கீழே சென்றனர்.

சிறிது நேரம், இப்படியும் அப்படியும் ஓடியாடி விட்டு, நடராஜர் ஓவியத்தை அழகாக பேக் செய்துக் கொண்டு, அடையாறுக்கு கிளம்பினான், புருஷோத்தமன்.

அடையாறு ஆற்றை ஒட்டியிருந்த மரங்களடர்ந்த சாலையில் இருந்தது 'சர்' வாகீசன் பங்களா! இவன்

பங்களாவினுள் நுழையவும், கன்றுக்குட்டியை போன்ற இரு நாய்கள் குரைத்தபடி இவனை நோக்கி வர, புருஷ்ஷுக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

சத்தம்கேட்டு விஸ்தாரமான அந்த பால்கனிக்கு வந்தாள், ம்ருகா.

"ஹலோ... புருஷ்!

கேட்டின் இந்தப்பக்கத்திலிருந்து கூவினான், புருஷோத்தமன்.

"ம்ருகா! நாய் இருக்கு!"

ம்ருகா முகம் சிறுத்தது. 'நாய்'னு சொல்லாதீங்க! எனக்கு பிடிக்காது! கால் தெம், ஆன்டனி, க்ளியோ பாட்ரா"

சரிதான்! நாயை நாய்' என்று சொன்னதிற்கே இவளுக்கு கோபம் வருகிறது! இவளையே அவன் அம்மா மிருகம் என்கிறாளே! அதற்கு என்ன சொல்லுவாளோ!

மனதிற்குள் நினைத்தபடி புருஷோத்தமன் காத்திருக்க, வேலைக்காரன் ஒருவன் வந்து நாய்களை அப்பால் அழைத்துப்போக, தயங்கியபடி உள்ளே நுழைந்தான், புருஷோத்தமன்.

மாடியிலிருந்து நிதானமாக இறங்கி வந்தாள், ம்ருகா. எந்தவித பரபரப்பும் இல்லாமல் காணப்பட்ட அவளை வியப்புடன் பார்த்தான் புருஷ்!

"என்ன... ம்ருகா! பார்ட்டி நடக்கபோற சுவடே காணோமே! நீங்களும் டிரஸ் பண்ணிக்கலை!

யாரையுமே காணோமே!'' சந்தேகத்துடன் சுற்றிப் பார்த்தான்.

''பார்ட்டி ஏழு மணிக்குதான்! சும்மா பேசிண்டு இருக்கலாமேன்னு தான் உங்களை அஞ்சு மணிக்கே வர சொன்னேன்.

''பார்ட்டிக்கு அலங்காரங்கள் செய்யலியே?''

''அரை மணி நேரத்துல வேலைக்காரங்க ரெடி பண்ணிடுவாங்க! நீங்க வாங்க என் ரூமுக்கு போகலாம்...!''

''உங்க ரூமுக்கா...? வேண்டாமே! இப்படியே கூடத்துல உட்கார்ந்திருக்கேனே!''

''கூடமா... யூ மின் ஹால்...!'' கலகலவென்று சிரித்தவள், அவனை பார்த்து தலையை சாய்த்தபடி கண்களைச் சுழற்றினாள்.

''ரிடிகுலஸ்! என் ரூமுக்கு வந்தாதான் என்னைப் பத்தி முழுசா தெரிஞ்சுப்பீங்க! இங்கே உட்கார்ந்திருந்தா உங்களால ஒண்ணும் தெரிஞ்சுக்க முடியாது... ஃபாலோ மீ'' என்று கட்டளையாக ஒலித்த குரலில் கூறிவிட்டு, மாடியேற தொடங்கினாள்.

அந்த மாடிப் படிகளின் இடையே இருந்த லேண்டிங் அளவுதான் இவன் வீட்டு ஹால் இருக்கும்! அந்த மாடிப்படிகளின் அடியில் இருந்த பகுதி இவன் போர்ஷனை விட பெரிதாக இருந்தது. இதென்னடா இம்சை!

நான் வந்தது தவறோ' என்கிற எண்ணம். அவன் ஒவ்வொரு மாடிப்படியாக ஏற ஏற, அதிகரித்துக் கொண்டே போனது.

மாடியில் இருந்த ஒரு அறையில் அவள் அப்பா வாகீசன் ஏதோ ஃபைலை பார்த்துக் கொண்டு இருக்க, அவர் மனைவி சாரதா காபியை ஆற்றிக் கொண்டிருந் தாள். அப்போதுதான் வீட்டிற்கு வந்திருக்க வேண்டும்!

"டாடி! மீட் மை ஃப்ரெண்ட் புருஷ்!

ம்ருகா அறிமுகப்படுத்தினாள்.

வாகீசனும், சாரதாவும் தன்னை ஏற இறங்க பார்ப்பதை கண்டு கிறுகிறுத்துப் போனான், புருஷோத்தமன்.

சம்பிரதாயத்துக்கு ஒரு ஹலோ சொல்லிவிட்டு, வாகீசன் மீண்டும் ஃபைலில் முழ்க, சாரதா மட்டும் புருஷோத்தமனை கண்களால் அளவெடுத்தாள்.

"கம் புருஷ்!" அவனை தன் அறைக்கு வழி நடத்திச் சென்றாள், ம்ருகா.

அவளுடைய அறை மிகவும் விசாலமாக இருந்தது. அறையைப் பார்க்கும்போது ஏதோ இலண்டன் சீமாட்டியின் படுக்கையறையைப் போல மேற்கத்திய பாணியில் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. அவள் படுக்கையின் மேலே சாட்டின் துணியால் விதானம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்திய கலாசாரத்தை பிரதிபலிக்க கூடிய பொருட்கள் எதுவுமே இல்லையே என்று அவன் நினைத்த அடுத்த

கணமே, அந்த முடிவை மாற்றிக் கொள்ளும்படி நேர்ந்தது.

படுக்கையறையின் மூலைகளில் ரதி மன்மதனின் ச்ருங்கார லீலைகள் சிலைகளாக வைக்கப்பட்டிருந்தன.

மர அலமாரிகளில் நிறைய புத்தகங்கள் வரிசையில் அடுக்கப்பட்டிருந்தன. மேஜை மீது சில புத்தகங்களும் ஆல்பங்களும் இறைந்து கிடந்தன.

''புருஷ்! என்னோட பொழுதுபோக்கே ஃபோட்டோ கிராபிதான்! ரொம்ப அரிய புகைப்படங்களை சேகரிக்கறதுனா எனக்கு ரொம்ப பிடிக்கும்! ஆல்பம் கலெக்ட் பண்றேன்...'' ஆமா... உங்க கையில என்ன...?''

புருஷ் கொண்டு வந்திருந்த அந்த பார்சலை பிடுங்கி அதனைப் பிரித்தாள்.

'வாவ்' என்று வாயை குவித்து செயற்கையாக தனது ஆச்சரியத்தை வெளியிட்டாள்.

''ஐ... ஸீ! நீங்க பெயிண்ட் செய்வீங்களா? கிழே புருஷ்'னு போட்டிருக்கீங்களே...''

ஆச்சரியத்துடன் பார்த்தவள், மீண்டும் தலையை சாய்த்தபடி அவனை கிறக்கத்துடன் பார்த்தாள்.

''இந்த ஓவியத்தை வேற யாருக்கோ பரிசா கொடுத்துட்டு, எனக்கு தர்றணும்கறதுக்காக திருப்பி வாங்கிட்டு வந்திருக்கீங்க போல இருக்கே''

அரண்டு போனான், புருஷோத்தமன்! நாகுவிடம் கொடுத்திருந்ததை திருப்பி வாங்கி, பரிசாக கொடுத்த சமாச்சாரம் எப்படி இவளுக்கு தெரிந்தது?

விஷமத்தனமான புன்னகையுடன் ஓவியத்தை பெட்டின் மீது வைத்தாள்.

''ஓவியத்துல சந்தனப்பொட்டு வச்சிருக்கு! நீங்க அய்யங்கார்! நடராஜை கும்பிடமாட்டீங்க! சந்தன பொட்டெல்லாம் வக்க மாட்டீங்க! ஸோ நான் கெஸ் பண்ணினேன். அவ்வளவுதான்!...''

உண்மையிலேயே மலைத்துப்போய் விட்டான், புருஷோத்தமன்! நுணுக்கமான விஷயங்கள் கூட அவள் பார்வையில் இருந்து தப்ப முடியாது போல இருக்கிறதே!

''புருஷ் நேரங் கிடைக்கச்சே... என்னையும் நீங்க வரையணும்! புருஷாவின் மிருகம்னு அந்த ஓவியத்துக்கு கேப்ஷன் கொடுக்கலாம்...''

உரத்த குரலில் ம்ருகா சிரிக்க, புருஷோத்தமனுக்கு வியர்த்தது.

''ஓ... ஸாரி! நான் எதைப் பத்தி பேசிண்டு இருந்தேன்? எஸ்... ஃபோட்டோகிராபி பத்தி! எனக்கு ஃபோட்டோ எடுக்கிறது ஹாபி. அப்பாவோட வோர்ல்ட் டூர் போகறச்சே, ஃபோட்டோ எடுக்கறதும், அரிய புகைப்படங்களை சேகரிக்கறதுமா இருப்பேன்! அப்படி நான் கலெக்ட் பண்ணின 'தி பெஸ்ட்'

புகைப்படங்களை ஆல்பம் பண்ணி வச்சிருக்கேன்... பாக்கறீங்களா?...''

அவன் பதிலுக்கு காத்திராமல் மேஜை மீது இருந்த பெரிய ஆல்பம் ஒன்றை கொண்டு வந்தாள். ஆர்வத்துடன் அதை வாங்குவது போல பாவனை செய்தான் புருஷ்! பார்ட்டி தொடங்குகிற வரையில் அவளை சமாளித்தாக வேண்டுமே!

புருஷ் எதிர்பாராத வண்ணம் அவள் அவனுக்கு மிக அருகாமையில் அமர்ந்துக் கொள்ள, தலையை குனிந்துக் கொண்ட அவன் கண்களில் அவள் பாதங்கள் பட்டன. சிறியதாக இருந்த அந்தப்பாதங்கள் தரையில் பதிந்திருக்கின்றனவா என்று உற்றுப் பார்த்தான். இரு கால்களிலும் கடைசி இரு விரல்கள் கம்பளத்தில் பதிந்து இருக்கவில்லை.

கண்கள் பூனைக் கண்களாகத்தான் தெரிந்தன. ஜாடையாக அவள் இடைப்பகுதியை நோக்கினான். மடிப்புகள் ஏதும் இன்றி, வெண்மையான அவளது இடை, சோளிக்கும், சேலைக்கும் நடுவே பாலம் அமைத்திருந்தது.

பொருத்தமாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் இவள் உண்மையிலேயே யட்சிணி ம்ருகரஞ்சிகாதானா?

பின்னங்கழுத்தில் மயிர் கூச்சம் எடுக்க, சற்று நகர்ந்து உட்கார்ந்து கொண்டான் புருஷ்.

திடீரென எழுந்து நின்றாள் ம்ருகா.

''புருஷ்! நீங்க ஆல்பத்தை பார்த்துண்டு இருங்க! நான் போய் குளிச்சுட்டு டிரஸ் பண்ணிட்டு வந்துடறேன்... என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் வர்ற ஆரம்பிச்சுடுவா...''

சிரித்தபடி ம்ருகா கீழே போக, தனிமையில் விடப்பட்ட புருஷுக்கு அப்பாடி என்றிருந்தது.

ஆல்பத்தை பிரித்தான். அதன் முதல் பக்கத்தில் ஒரு சிறு குறிப்பு காணப்பட்டது.

'எனக்கு மிகவும் பிடித்த புகைப் படங்கள்' என்று தன் கையால் எழுதி, அதன் கீழே ம்ருகநயனானி என்று தன் கையெழுத்தைப் போட்டிருந்தாள்.

புருஷ் வேண்டாவிருப்புடன் அந்த பக்கத்தை திருப்பி முதல் ஃபோட்டோவை பார்த்தான்.

ஒரு நதிபாய்ந்து கொண்டிருக்க, அதன் கரையில் ஒரு கற்பாறை! அந்த நதிநீர் அரித்ததால், அந்தப் பாறையில் துவாரங்கள் ஏற்பட்டிருந்தன.

அந்தப் படத்தை சற்று நேரம் பார்த்த புருஷ், அதன் கீழே இருந்த குறிப்பை படித்தான்.

''பெண் நதிநீர் போன்றவள். அவளது வேகம் கற்பாறை போன்ற கடினமான எந்த ஆண் மகனையும் தவிடுபொடியாக்கி கரைத்துவிடும் என்கிற பொருள் தரும் இந்த புகைபடம் நான் எடுத்த சிறந்த படங்களில் ஒன்று'' என்று இருந்தது.

அந்த பக்கத்தை திருப்புவதற்காக எத்தனித்த புருஷின் கை நின்று போனது. அவனது சிந்தையில் ஏதோ பொறி தட்டியது.

**"கருங்கல்லாய் நிலைபெற்று நில்லுங்கால்**
**பெருநீராய் கரைத்திடப் பாய்ந்தாள்."**

நம்பாடுவான் காலையில் படித்தபாட்டு காதில் ஒலிக்க, குப்பென்று வியர்த்தது அவனுக்கு! சட்டென்று அந்த படத்தை பார்ப்பதை தவிர்க்க எண்ணி, அந்த பக்கத்தை திருப்பினான்.

அடுத்த புகைப்படத்தை பார்த்தவன் உறைந்து போனான்.

நீண்ட பெரும் புல்வெளியில் வெட்டுக்கிளி ஒன்று மேய்வதை க்ளோசப்பில் எடுத்திருந்தாள், ம்ருகா

கைகள் நடுங்க, அந்த படத்தின் கீழே காணப்பட்ட குறிப்பை படித்தான்.

'புல்லில் அதிகம் சக்தி உள்ளது. அதை மேய்ந்து உண்ணும் குதிரைகளின் சக்தியை 'ஹார்ஸ் பவர்' என்கிறோம். இந்த சக்தியின் மூலகாரணமான இந்த புல்வெளி கண்ணுக்கு ரம்மியமாக உள்ளது. இந்த புல்லை மேயும் வெட்டுக்கிளி ஒரு குதிரையாக மாறினாலும் ஆச்சரியமில்லை!'' என்று எழுதப் பட்டிருந்தது.

நாக்கு உலர்ந்து போக, புருஷ் அடுத்த பக்கத்திற்கு தாவினான்.

ஒரு அழகிய ரோஜாப்பூவில் வண்டு ஒன்று அமர்ந்து தேன் குடிப்பதை படம் பிடித்திருந்தாள், ம்ருகா.

உடனே குறிப்பை கவனித்தான் 'பெண்ணை பூவுக்கும் ஆணை வண்டுக்கும் ஒப்பிடுகின்றனர்

மடையர்கள். உண்மையில், பெண்களின் கண்களை கருவண்டாக கூறுபவர்கள்தான் புத்திசாலிகள். வண்டு பூவை துளைத்து தேனை அருந்துவது போல, பெண்களின் கூரிய கண்கள் ஆண்களின் பலமான மார்பை துளைத்து அவர்களது இதயமலர் தேனை ருசித்து அவர்களை தங்கள் வசம் இழக்க செய்கின்றன?' என்றிருந்தது.

புருஷோத்தமன் தலை முதல் பாதம் வரை நடுக்க அலை ஒன்று பாய்ந்தது! என்ன இது! நம்பாடுவான் இவனிடம் பாட்டாக தெரிவித்திருந்த அத்தனை காட்சிகளும், ம்ருகாவின் ஆல்பத்தில் புகைப்படங்களாக இருக்கின்றதே!

கலக்கத்துடன் அடுத்த பக்கத்தைப் பார்த்தான்.

ஒரு ஆலமரத்தினை பிளந்து வளர்ந்திருந்த ஒரு வேப்ப மரத்தின் புகைப்படம் காணப்பட்டது.

அவசரமாக குறிப்பை படித்தான்.

''ஆலமரம் ஆண்மையின் சின்னம். வேப்பமரம் பெண் மரம்! ஆலைப் பிளந்திட்ட இம்மரம் பெண் சக்தியின் ஒரு எடுத்துக்காட்டு! ஆண்மை வீழக்கூடியது என்பதை உணர்த்தும் இந்தப்படம் எனக்கு மிகவும் பிடித்தது.''

என்று எழுதியிருந்தாள், ம்ருகா.

நம்பாடுவான் கூறியிருந்தது அத்தனையும் நிதர்சன மான உண்மை என்பதை உணர்ந்தான், புருஷ்! எழுந்து ஓடி விடவேண்டும் என்கிற எண்ணத்தை அடக்கியபடி, அடுத்த புகைப்படத்தைப் பார்த்தான்.

இரண்டு சிலந்திகள் புணர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் புகைப்படம்! ஆண் சிலந்தி புணர்வில் தன்னை மறந்திருக்க, பெண் சிலந்தி அதன் தலையை கடித்துவிட பார்க்க, திடீரென்று தன் நிலையுணர்ந்த ஆண் சிலந்தி அதனிடமிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள போராடும் புகைப்படம்.

குறிப்பை கவனித்தான், புருஷ்! 'பெண்ணிடம் சுகத்தை தேடும் ஆண் அவளுக்காக உயிரையும் தர சித்தமாக இருக்க வேண்டும்! இதை உணராமல் தன்னைக் காத்துக் கொள்ள போராடும் இந்த ஆண் சிலந்தியை வெறுக்கிறேன்! இந்த புகைப்படத்தை நானே எடுத்தேன்! முடிவில், ஆண் சிலந்தி தப்பி ஓடிவிட ஆயாசத்துடன் கிடந்த பெண் சிலந்தியை காண அருவருப்பாக இருந்ததால், என் செருப்பால் அதை அடித்துக் கொன்றேன்! இந்த படம் எனக்கு பிடிக்காது! இருந்தாலும் இதை பார்க்கும் போதெல்லாம் என்னுள் வேகம் பிறப்பதால், இதனை ஆல்பத்தில் வைத்திருக்கிறேன்.'

அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக, தொடர்ந்து, சண்டை யிடும் தேள்கள், நல்ல பாம்பை நசுக்கும் மலைப்பாம்பு படம், புறாவை விரட்டும் பருந்தின் படம் பசுமாட்டின் மீது பாயும் புலியின் படம்'' என்று நம்பாடுவான் குறிப்பிட்ட அதே வரிசையில் காட்சிகள் காணப்பட்டன.

ம்ருகா அவனை விரட்டும் யட்சிணி தான் என்பதை உறுதிபட தெரிவித்தது. அந்த ஆல்பம்.

*அடுத்த படத்திற்கு தாவினான், புருஷ்.*

*ஒரு இங்கிலாந்து இளவரசியின் புகைப்படமும், அவள் அருகே ஒரு அழகிய இளவரசனின் படமும் இருக்க, குறிப்பை கவனித்தான் புருஷ்!*

*இவள் தான் ஹென்ரிட்டா என்கிற ப்ளான்ட்ஜெனட் வம்சத்து இளவரசி. ஸ்டீபன் என்கிற பக்கத்தில் இருக்கும் தன் சிற்றப்பன் மகனையே காதலித்தாள். ஆண் வாரிசில்லாமல், ஹென்ரிட்டாவின் தந்தை இறந்துவிட, ஸ்டீபன் சிம்மாசனத்தை அபகரித்துக் கொண்டான்! அவள் போராடி ஆட்சியைப் பிடித்து ஸ்டீபனை சிறையில் தள்ளி, அவனை சித்ரவதை செய்தாள். ஸ்டீபன் மிக அழகாக இருக்கிறான்! அவன் சித்திரவதைபடுவதை பார்க்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறது.*

*என்று ம்ருகா எழுதியிருந்தாள். நம்பாடுவானின் குரல் புருஷோத்தமனின் செவிகளில் ஒலிக்க, கலவரத்துடன் எழுந்து நின்றான். ஆல்பம் அவன் கையிலிருந்து நழுவி, கம்பளத்தில் விழுந்தது.*

**சோக மிலேச்சனாய் பிறவி ஏக துரோக குருதியாய் வண்சிறை ஏற்றினாள்.**

*ம்ருகாவிடம் சிக்குவது ஆபத்து! நான் இங்கே வந்தது முட்டாள்தனம். உடனே இங்கேயிருந்து ஓடிவிட வேண்டும்.*

*அறையைச் சுற்றி நோட்டம்விட்டான் புருஷ்! தற்செயலாக மேஜை மீது வைத்திருந்த அந்த நீலக் கல்*

கோர்த்த தங்கச் சங்கிலி, அவன் பார்வையில் பட்டது. அவனுக்கு இருந்த கடைசி சிறு சந்தேகத்தையும் போக்கி, நம்பாடுவான் குறிப்பிட்ட ம்ருகரஞ்சிகா என்கிற யட்சிணி, ம்ருகநயனானி என்னும் பெண்ணாக வந்திருக்கிறாள், என்பதை ஊர்ஜிதப் படுத்தியது, அந்த நீலக்கல் பதித்த பென்டன்ட்.

அப்போதுதான் ம்ருகாவின் அறையை ஒட்டியிருந்த பால்கனியின் முடிவில் இறங்கி செல்லும் படிகள் தென்பட்டன. அவை நேராக கீழே கார் ஷெட்டுக்கு அருகே சென்று முடிந்தது. வீட்டிற்குள் நுழையாமல், ம்ருகா நேராக தன் அறைக்கு செல்வதற்கு வசதியாக அந்த படிக்கட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன போலும்.

அந்தப்படிகளின் வழியே இறங்கி, கார்ஷெட்டின் கூரை மீது எளிதாக ஏறி மதில் சுவரை கடந்து சாலையில் இறங்கி விடலாம் என்பதும் அவனுக்கு புரிந்தது!

'ஓடு', என்று உள்ளுணர்வு கூற, அந்த பால்கனி படிகளில் பாய்ந்து இறங்கியவன், கார் ஷெட்டின் மீது குதித்து, காம்பவுண்ட் சுவரைத் தாண்டி தெருவில் குதித்தான்.

அப்படி அவன் தாண்டிச் செல்வதை கண்டுவிட்ட க்ளியோபாட்ரா நாய், சோம்பலுடன் ஒருமுறை குரைத்துவிட்டு திரும்பி நின்றது.

புருஷ் இன்னும் தனது அறையில் ஆல்பம் பார்த்துக் கொண்டு இருப்பான் என்கிற நினைவுடன், ம்ருகா ஆனந்தமாக குளித்துக் கொண்டிருந்தாள்.

புருஷோத்தமன் அந்த சாலையில் தலைதெறிக்க ஓடினான்.

ம்ருகரஞ்சிகாவின் வேகத்தை அறிந்து கொண்டு விட்டேன்! நம்பாடுவான் கூறியது போல் இனிமேல் வேகமாக ஓடிக் கொண்டே இருக்க வேண்டும் என்கிற எண்ணம் உந்தித் தள்ள, மின்னல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தான்.

# 11. சுயரூபம்

## 1957 - சிதம்பரம்

*"அப்பாடி! ஒரு வழியா அந்த ம்ருகாவோட சுயரூபத்தை தெரிஞ்சுண்டுட்டாரா... அப்பா! அப்புறம் என்னாச்சு... தாத்தா?'' அமுதனின் ஆவல் அதிகரித்தது.*

*உங்கப்பா ஓடி வந்து என் காலுல விழுந்தான்...'' என்றார் நம்பாடுவான்.*

# 12. ஓட்டம் தொடங்கியது

## 1939 - சென்னை

**வே**ர்த்து விறுவிறுத்து உள்ளே வந்த புருஷோத்த மனைக் கண்டு கலவரப்பட்டுப் போனாள், வனஜா. நேராக நம்பாடுவானின் காலில் தடாலென விழுந்தான்.

''என்னப்பா ஆச்சு?'' பரிவுடன் கேட்டார் நம்பாடு வான்.

''தாத்தா! நீங்க சொன்னது சரி! அந்த பொண்ணு ம்ருகரஞ்சிகாதான்! நீங்க பாட்டா விவரிச்ச அத்தனை காட்சிகளும் அவளோட ஆல்பத்துல புகைப்படங்களா இருந்தன. அது மட்டுமில்லை! நீலக்கல் பதிச்ச டாலர் ஒண்ணும் வச்சிருக்கா! அவ கால்விரல்கள் தரையில் பதியல! இடுப்பில மடிப்புகள் இல்லை! சந்தேகமே யில்லை! அவள் அந்த யட்சிணிதான் தாத்தா!''

அவன் படபடப்புடன் பேசினான்.

''இப்பவாவது புரிஞ்சுகிட்டியே! இனிமே உனக்கு நல்லதுதான் நடக்கும்!''

''அம்மா!''

''என்னடா கண்ணா!'' மகன் அப்போதே மீண்டு விட்டதைப் போன்ற நிம்மதி அவள் இதயத்தை கவ்வ, பாசத்துடன் கேட்டாள் வனஜா.

''தாத்தா... சொன்னபடி நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்மா...''

வனஜாவின் முகம் சந்தோஷத்தில் பூத்தது. ''என் வயத்துல பாலை வார்த்தேடா! இப்பவே நான் பொண்ணு தேட ஆரம்பிக்கிறேன்...''

''முதலுல அதை செய்ம்மா! வர்ற முகூர்த்தத்துலேயே புருஷோத்தமனுக்கு கல்யாணத்தை முடிச்சுடு'' தன் பங்குக்கு சகடவாக்கியும் அவள் சந்தோஷத்தில் பங்கு கொண்டார்.

''அம்மா! நீ வெளியில கூட பொண்ணை தேட வேண்டாம்! நான் அத்தை பொண்ணு ஜ்யோத்ஸனாவையே கல்யாணம் பண்ணிக்கிறேன்.

புருஷ் தயக்கத்துடன் சொல்ல, வனஜா தன் செவிகளையே நம்ப முடியாமல், அவனைப் பார்த்தாள்.

ஜ்யோத்ஸ்னா நல்ல அழகிதான். ஆனால் படிப்பு கிடையாது. ஆறாம் வகுப்போடு படிப்புக்கு 'டாட்டா' சொல்லி விட்டாள். அவள் தந்தை ராமன் ஐயங்காரிடம் தேள்கடி வைத்தியம், பாம்பு கடி வைத்தியம், மந்திரம் ஜெபித்து விஷத்தை முறிப்பது, மஞ்சள் காமலை நோய்க்கு மந்திரிப்பது போன்ற விஷயங்களை கற்றிருந்தாள்.

மந்திரிக்கும் நேரம் போக, அருகில் இருக்கும் பார்த்த சாரதி கோயிலே கதி என்று கிடப்பாள். அர்ச்சகர்களிடம் வம்படித்துக்கொண்டு, பெருமாளுக்கு இன்ன அலங்காரம் சாற்றுங்கள் என்று ஐடியா கூறுவாள்!

பெருமாளுக்கு மாலை தொடுத்து தருவாள்! மொத்தத்தில் கோவில்தான் அவள் உலகம்.

மஞ்சள் பூசி, பூ வைத்து ஜ்யோத்ஸனா நடந்து வரும் போது, தாயாரே தன் சன்னிதியை விட்டு எழுந்து வந்து விட்டாளோ என்று தோன்றும்! வக்கிர எண்ணங்களை தோற்றுவிக்காத தெய்வீக அழகு ஜ்யோத் ஸனாவுடையது.

வனஜா அவளை அடிக்கடி கோவிலில்தான் பார்ப்பது வழக்கம். இவள் கோவிலுக்கு செல்லும் போதெல்லாம், ஜ்யோத்ஸனாதான் தன் வீட்டுக்கு வந்த விருந்தாளியைப் போல வனஜாவை வரவேற்பாள்.

இந்த ஜ்யோத்ஸனாவைதான் கல்யாணம் பண்ணிக்க தான் தயார் என்று கூறியிருந்தான், புருஷ்.

வனஜா தயங்கினாள்! என்னதான் அழகாக இருந்தாலும், இவளுடைய நாத்தனார் பெண்ணாக இருந்தாலும், படிப்பு இல்லையே! காலேஜில் பொருளாதாரம் படித்துவிட்டு பெரிய வேலையில் சேரப்போகின்ற புருஷுக்கு போய் ஜ்யோத்ஸனாவையா பார்ப்பது? வனஜா யோசிப்பதைக் கண்டு வியந்தார், நம்பாடுவான்.

''வனஜா! அவன்தான் தெள்ளத் தெளிவா சொல்லி விட்டானே! அத்தை பெண்ணை பண்ணிக்கிறேன்னு. முறை இருக்குனா பண்ணிட வேண்டியதுதானே...''

''மாமா! அந்தப் பொண்ணு ஒரு உதவாக்கரை! சதா சர்வ காலமும் கோவிலே கதினு கிடக்கிறா! படிப்பு கிடையாது! சுட்டுப்போட்டாலும் இங்கலீஷ் வர்றாது.

பாடவும் தெரியாது! அவளுக்கு தெரிஞ்சது எல்லாம் பாம்புகடி தேள்கடிக்கு மந்திரிக்கறதுதான்! குடும்பத்துக்கு அடக்கமா இருப்பா! ஆனா... பொது காரியங்கள் தெரியாது...'' மொத்தத்துல.... என்றவளை இடைமறித்தார் நம்பாடுவான்.

''நல்லாயிருக்கு போ! நம்ம புருஷோத்தமனுக்கு அப்படிப்பட்ட பொண்ணுதான் தேவை! கோவிலே கதினு இருக்கிற பொண்ணுக்குதான் பகவான் கடாட்சம் அதிகமாக இருக்கும்? இவளை மாதிரி விஷ ஜந்துக்கள் கடிக்கு மந்திரிக்கிற பொண்ணாலதான் ம்ருகா மாதிரி விஷ ஜந்துக்களை சமாளிக்க முடியும்! இது பகவான் நியமித்த உறவு! முதல் காரியமா உன் நாத்தனார் கிட்டே பேசி, இந்த கல்யாணத்தை முடி...''

நம்பாடுவான் கூற, அன்றிரவே தன் நாத்தனார் வீட்டுக்கு கிளம்பி விட்டாள், வனஜா.

''வாங்கோ மன்னி!'' வாய் நிறைய வரவேற்றாள், இவள் கணவன் திருமலையின் தங்கை சுந்தரவல்லி.

''இங்கே பாருங்கோ... யார் வந்திருக்கா...'' என்று சுந்தரவல்லி குரல் கொடுக்க, கையில் திவ்ய பிரபந்த புத்தகத்துடனும், மூக்கில் வழிந்திருந்த கண்ணாடியுமாக அங்கே பிரசன்னமானார், ராமன் ஐயங்கார்.

''எப்படிம்மா இருக்கே வனஜா! பிள்ளையாண்டான் சௌக்கியமா?'' ஈசிசேரில் சாய்ந்தபடி நாலாயிர திவ்யபிரபந்த புத்தகத்தை தன் மடியின்மீது பரத்திக் கொண்டார், ராமன்.

''அவன் சௌக்கியமா இருக்கணும்னுதான் உங்களை தேடிண்டு வந்திருக்கேன்...'' பீடிகையுடன் விவகாரத்தில் இறங்கினாள், வனஜா.

''என்ன விஷயம் சொல்லுங்கோ, மன்னி...!''

மிடறு விழுங்கிய வனஜா, பிறகு மடமடவென்று விஷயத்தை சொன்னாள்.

''சுந்தரி! புருஷோத்தமனுக்கு இன்னும் இரண்டு மாசத்துல படிப்பு முடிஞ்சுடும். அவன் ஃப்ரெண்டு நாகராஜனோட அப்பா மூலமா, சென்னகேசவ முதலியார் கம்பெனில அஸிஸ்டெண்ட் மானேஜர் உத்தியோகம் காத்துண்டு இருக்கு. படிப்பு முடிஞ்சு கையோட வேலையில சேர சொல்லிட்டா. மாசம் 150 ரூபா தர்றா! அப்புறம் 200ஆ ஆக்கிடுவா. அதனால...''

சுந்தரியும், ராமன் ஐயங்காரும் அவளை வியப்புடன் பார்த்தனர்.

''புருஷோத்தமனுக்கு கல்யாணம் பண்ணிடலாம்னு பார்க்கறேன். உங்களுக்கு சம்மதம்னா ஜ்யோத்ஸனாவை எங்காத்து மாட்டுப்பொண்ணா ஆக்கிடலாம்னு ஒரு எண்ணம்...''

சுந்தரவல்லி பிரமிப்புடன் வனஜாவைப் பார்த்தாள். அவளுக்கு உள்ளூர இந்த ஆசை வெகுநாட்களாகவே இருந்தது! ஆனால் கல்லூரியில் படிக்கும் புருஷோத்தமன் கர்நாடகமான தனது பெண்ணை எங்கே திரும்பிப் பார்க்கப் போகிறான் என்கிற எண்ணத்தில் தனது ஆசையை மனதிற்குள்ளேயே பூட்டி வைத் திருந்தாள். இப்போது வனஜாவே வந்து விஷயத்தை பிரஸ்தாபித்ததும், பரமானந்தத்தில் மூழ்கிப் போனாள்.

''கரும்பு தின்ன கூலியா, மன்னி' உணர்ச்சியுடன் சொன்னவளை 'சும்மா இரு' என்று பார்வையாலேயே அடக்கினார், ராமன் ஐயங்கார்.

‘‘வனஜா! உன் பிள்ளையோட அபிப்பிராயத்தை கேட்டியோ’’ சந்தேகத்துடன் இழுத்தார்.

‘‘அவன் ஆசைப்பட்டுதான் அண்ணா, நான் வந்திருக்கேன்…’’

வனஜா கூறிய பதில், அடுக்களையில் இருந்த ஜ்யோத்ஸனாவின் காதில் அமுதமாக பொழிந்தது. பல முறை கோவிலுக்கு போகும்போதும், கடைக்கு போகும் போதும், இவளும் புருஷோத்தமனும் தெருவிலேயே சந்தித்தது உண்டு.

இவளும் தலையை குனிந்துக் கொண்டு போய் விடுவாள். அவனும் கண்டுகொள்ள மாட்டான். அத்தை பெண், மாமா பிள்ளை உறவு என்பதால், பேசினாலே ஊரார் ஜோடி சேர்த்து விடுவார்களோ என்கிற பயம் இருவருக்குமே இருந்தது.

ஜ்யோத்ஸனாவுக்கு புருஷ் மீது கொள்ளை ஆசை! ஆனால் அவன் எங்கே தன்னை சீந்த போகிறான் என்கிற மனப்பான்மையில், அவனை நெருங்கவே பயந்தாள்.

புருஷோத்தமனுக்கும் அவள் மீது எந்தவித அபிப்பிராயமும் இல்லை! நண்பர்களுடன் ஒரு நாள் அரட்டை அடித்துக்கொண்டிருந்த போது, தெருவில் சென்று கொண்டிருந்த பெண்களை பற்றி கமெண்ட் அடித்துக் கொண்டு இருந்த இவனுடைய நண்பர்கள், அந்தபக்கமாக ஜ்யோத்ஸனா வந்தபோது, மௌனம் சாதித்தனர்.

இவனது அத்தைப் பெண் என்பதை தெரியாத நண்பன் ஒருவன் ஜ்யோத்ஸனாவை பார்த்ததும் புகழ்ந்து தள்ளிவிட்டான்.

“பொண்ணுனா இவ பொண்ணு! அவ அழகை பாக்கறச்சே கையை எடுத்து கும்பிட தோணுது!... எவ்வளவு அடக்கமாக தலை குனிஞ்சுட்டு போறா பாரு!” என்று சர்டிபிகேட் கொடுக்க, ஜ்யோத்ஸனாவை நினைத்து பெருமைப்பட்டான், புருஷ்!

ஆனால்... அவளை கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்கிற எண்ணம் எப்பவுமே வந்ததில்லை! ம்ருகா கொடுத்த அதிர்ச்சியில், ஜ்யோத்ஸ்னா மாதிரி பெண் அவன் கண்களுக்கு உயர்ந்தவளாக தெரியவே, தன் தாயிடம் அவளை கலியாணம் செய்து கொள்ள சம்மதத்தை தெரிவித்திருந்தான்.

ஒரு முறை, புருஷ் கோவிலுக்கு வந்தபோது இருவரும் தாயார் சன்னதியில் சந்தித்துக் கொண்டனர்.

தன்னுடைய மாமா பையன் என்று புருஷோத்தமனை அவள் அர்ச்சகருக்கு அறிமுகப்படுத்த, அவர் அவனுக்கு விசேஷ மரியாதைகளை செய்து அனுப்பினார். அப்போது கூட இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

இன்று அவன் தன்னை கல்யாணம் செய்துக் கொள்ள ஆசைப்படுவதாக வனஜா மாமி கூறியதும், ஸ்தம்பித்துப் போய் விட்டாள். ஜ்யோத்ஸனாவுக்கு ஆச்சரியம்தான்! அவன் கல்லூரியில் உடன் படிக்கும் பல பெண்கள் இருக்கிறார்களே... அவர்களில் ஒருத்தி கூடவா அவனை வசீகரிக்கவில்லை?

தன்னிடம் அப்படி என்ன கண்டுவிட்டான், புருஷோத்தமன்! அழகைத் தவிர தன்னிடம் வேறு ஒரு

தகுதியும் இல்லையே! ஒரு வேளை, அழகு மட்டும் போதும் என்று நினைத்துவிட்டாரோ?

ஜ்யோத்ஸனாவுக்கு துள்ளிக்குதித்து ஓடியாட வேண்டும் போல இருந்தது. அங்கிருந்த பார்த்தசாரதி பெருமாள் படத்தை கண்கலங்க நோக்கினாள்.

''உன் கோயிலை சுத்தி சுத்தி வந்ததுக்கா எனக்கு இந்த சந்தோஷத்தை தர்றே...'' உணர்ச்சியுடன் படத்தை நமஸ்கரித்தாள். தொடர்ந்து கூடத்தில் நடைபெறும் உரையாடலை கவனித்தாள்.

அவள் அப்பா ராமன் ஐயங்கார் வனஜாவிடம் கூறிக்கொண்டிருந்தார்.

''வனஜா! சீர்னு என்னால பிரமாதமா எதுவும் பண்ணிட முடியாது! நான் கோவில் பரிச்சாரகன்! மாப்பிள்ளைக்கு பொருளா செய்ய முடியலேனாலும், தேகப்பாடு நிறைய செய்வேன்! என் பிள்ளை வரதன் இருக்கான்! என் காலத்துக்கப்புறமும் அவன் நீடிச்சு செய்வான்....''

வனஜா நெகிழ்ந்து போனாள் ''நீங்க சொல்லவே, வேண்டாம், அண்ணா! புருஷோத்தமனோட அப்பா சொல்லிண்டே இருப்பார்! உறவு விட்டுப் போகாம, ஜ்யோத்ஸனாவைதான் பண்ணிக்கணும்னு! அவரோட விருப்பம் பூர்த்தி ஆகணும்! நீங்க நாள் பாருங்கோ! தனியா நிச்சயதார்த்தம் வேணாம்! முகூர்த்தத்துக்கு நாள் பார்த்துடுங்கோ!''

ராமன் ஐயங்காரின் மகன் வரதன், சமயம் பார்த்து உள்ளே நுழைய, விவரத்தை அறிந்ததும், ஓடிப் போய் ஜ்யோத்ஸனாவின் முதுகில் மகிழ்ச்சியுடன் தட்டினான்.

''போய் மாமியார் காலுல விழுடி!...''

லோட்டாவில் பாலை எடுத்துக் கொண்டு போய் பணிவுடன் வனஜா முன்பு வைத்தவள், அவளை நமஸ்கரித்தாள்.

''சீக்கிரமே கல்யாணம் நடக்கட்டும்!''

ராமன் ஐயங்கார் பஞ்சாங்கத்தை எடுத்து அப்படியும் இப்படியுமாக புரட்டியவர், கீழ்க்கண்ணால் வனஜாவைப் பார்த்தார்.

''வனஜா! என் பொண்ணு நட்சத்திரப்படி இந்த மாசம் சுக்ல சதுர்த்தி திதி நல்லா இருக்கு. அதாவது மே மூணாந்தேதி கல்யாணத்தை வச்சுக்கலாமா?''

''பேஷா செய்யுங்கோ! அதுக்குள்ளே அவனோட பரிட்சையும் முடிஞ்சுடும்... அது சரி! ஜ்யோத்ஸனா, நட்சத்திரம் என்ன...? மறந்துட்டேன்''

வனஜா கேட்டாள்.

''மிருகசீர்ஷம்!'' வாயெல்லாம் பல்லாக சுந்தரவல்லி சொன்னாள்.

'மிருக'ம் என்கிற உச்சரிப்பு ஒரு அதிர்வை ஏற்படுத்த, வனஜா குடித்துக் கொண்டிருந்த பால் புரையேறியது.

# 13. புருஷா மிருகமா... காமதேனுவா!

### 1939 - சென்னை

வனஜா குழப்பத்துடன் வீட்டிற்கு வந்தாள்.

''வனஜா! கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டியா! முகத்துல ஏன் சுரத்தே இல்லாம இருக்கு...?'' நம்பாடுவான் கண்டுபிடித்து விட்டார்.

''கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டேன். பொண்ணோட நட்சத்திரம் மிருகசீரிடம்னு சொன்னா! அதனால கொஞ்சம் சஞ்சலமா இருக்கு...''

''மிருகசீரிடத்துக்கு என்ன குறை''

''பெயருல மிருகம் இருக்கே!''

வனஜா சொல்ல, நம்பாடுவான் சிரித்தார் ''அட பைத்தியக்கார பெண்ணே! இதை நினைச்சா கவலைப் படறே! மிருகசீரிடம் நல்ல நட்சத்திரம்! புருஷா மிருகமும் மிருகம்தான்! காமதேனுவும் மிருகம் தான். அவ காமதேனு ரகமாயிருப்பா! தைரியமா கல்யாணத்தை நடத்து!''

வனஜா அதன் பிறகே சமாதானம் அடைந்தாள்.

''வனஜாம்மா! ஊர்ல எல்லாத்தையும் போட்டது போட்டபடி வந்திருக்கேன்! புருஷோத்தமனுக்குதான்

கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டியே! இனிமே கவலை இல்லை! நான் கொஞ்சம் ஊர் வரைக்கும் போயிட்டு வரேன்!'' நம்பாடுவான் சொன்னார்.

''சரி போயிட்டு வாங்கோ! ஆனா கல்யாணத்துக்கு ரெண்டு நாள் முன்னாடியே வந்துடுங்கோ! மே மாசம் மூணாம் தேதி கல்யாணம்'' கண்டிப்புடன் கூறினாள் வனஜா...''

''கட்டாயம் வந்துடறேன்மா...'' வனஜாவிடமும், புருஷோத்தமனிடமும் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினார் நம்பாடுவான்.

ஊரை நோக்கி பயணித்த நம்பாடுவானின் சிந்தையில் ஏதோ உறுத்திக் கொண்டிருந்தது. வனஜா கல்யாண தேதியை குறிப்பிட்டதில் இருந்துதான் அந்த உறுத்துல் தொடங்கியிருந்தது.

மே... மூன்று. அன்று வேறு ஏதோ ஒன்று நடக்கப் போவதாக அவர் சிந்தையில் மணியடித்தது... யோசித்துப் பார்த்தும் சட்டென்று ஞாபகத்துக்கு வரவில்லை.

சிதம்பரம் சென்று சேர்ந்ததுமே, பளிச்சென்று சிந்தையில் மின்னல் அடித்தது.

புருஷோத்தமன் ஜ்யோத்ஸனா கல்யாண தேதியான மே மூன்றாம் தேதி சிதம்பரத்தில் புருஷா ம்ருக வாகனத்தில் ஈஸ்வரனுக்கு வீதியுலா நடக்க இருந்தது. அதனால் அவரால் அந்த கல்யாணத்துக்கு போக முடியாது.

# 14. குரூர காதலி...!

## 1939 - சென்னை

குளித்துவிட்டு தன்னை பிரமாதமாக அலங்கரித்துக் கொண்டு, தன் அறையை நோக்கி சென்றாள் ம்ருகா. வேலைக்காரர்கள் ஹாலை அழகாக ஜோடித்து கொண்டிருந்தனர். இவளுடைய தோழிகள் அப்பாவின் நண்பர்கள், அம்மாவின் தோழிகள், உறவினர்கள் என்று இன்னும் கொஞ்ச நேரத்தில் ஹால் நிரம்பி வழியும். ஆனால் அவளைப் பொறுத்தவரை அன்றைய வி.ஐ.பி. புருஷ்தான்.

முதன் முதலாக தான் அவனை சந்தித்த சூழ்நிலையை நினைத்துக் கொண்டாள். தன் ஜாகுவார் கார், சைக்கிளில் சென்ற இருவர் மீது மோதிவிட, அலட்சியமாகத்தான் காரை விட்டு இறங்கினாள். சைக்கிளில் சென்றவர்களை திட்டி தீர்க்க வேண்டும் என்று நினைத்து, கோபத்துடன் கீழே விழுந்து கிடந்தவர்களை பார்த்தவள், அசந்து போய் நின்று விட்டாள்.

ம்ருகா எத்தனையோ பார்ட்டிகளுக்கு போயிருக் கிறாள்! ஏன்? பான்க்வெட் ஹாலில் நடக்கும் பால் விருந்துகளிலும் கலந்துக் கொண்டிருக்கிறாள்.

இவளுடைய அப்பா கவர்மெண்ட் ப்ளிடர் வாகீசனுக்கு, பிரிட்டிஷ் அரசாங்கம் 'சர்' பட்டம்

கொடுத்து கௌரவித்தது. அவரைப் பாராட்டி நடந்த விழாவிற்கு, சென்னை மாகாண கவர்னர் ஜான் எர்ஸ்கைன் வந்திருந்தார். ம்ருகாவை கண்டதும் எழுந்து வந்து அவரே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''மே ஐ டான்ஸ் வித் யூ டியர்'' என்று கேட்க, ம்ருகா அவருடன் நடனமாட, அதன் பிறகு, 'நான்' 'நீ' என்று வெள்ளைக்கார இளைஞர்கள் இவளுடன் நடனமாட வேண்டி க்யூவில் நின்றனர். விதேசி சுதேசி என்று எத்தனையோ கட்டழகு வாலிபர்கள் இவள் அழகில் மயங்கி, 'ஐ லவ் யூ' என்று சொல்லியிருக்கின்றனர். ஆனால் ஒருவன் கூட தனக்கு சரிசமமில்லை என்று அவர்களை நிராகரித்து விட்டிருந்தாள்.

ஆனால் வேட்டி கட்டி நெற்றியில் ஸ்ரீசூர்ண கோடுடன் தெருவில் விழுந்து கிடக்கும், அந்த இளைஞனை பார்த்ததுமே அவள் மனது படபடக்க தொடங்கியது.

ஒரு ஆணுக்கு போய் இவ்வளவு அழகா? நிறம், முகவெட்டு, உடற்கட்டு எல்லாமே கனகச்சிதம்! சுருள் சுருளான அந்த இளைஞனின் முடிக்கற்றை பீச் காற்றில் அலைப்பாய்ந்தது.

ம்ருகாவின் கோபம் வடிய, ஆர்வத்துடன் அந்த இளைஞனை நோக்கினாள். அவன் பாதம் சைக்கிள் சக்கரத்தில் சிக்கியதால் காயம் பட்டு, இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. அடிபட்ட தன் பாதத்தை அந்த இளைஞன் பார்த்துக் கொண்டிருந்தானே தவிர, இவளை ஏறிட்டு பார்க்கவில்லை! உடன் இருந்த இளைஞன்தான் இவளைத் திட்டிக் கொண்டிருந்தான்! அவனது பேச்சை

அலட்சியம் செய்த ம்ருகா, அடிபட்டு கிடந்த அந்த மற்றொரு வாலிபனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனைப் பார்த்ததுமே திருவல்லிக்கேணியைச் சேர்ந்த ஒரு மத்திய வர்க்கத்து வாலிபன் என்பதைப் புரிந்துக் கொண்டாள். ஆடம்பரமும், நாகரீகமும் பாதிக்காத ஒரு வைதீக குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதையும் கண்டு கொண்டாள்.

அவனைக் கண்டதுமே அவளுள் ஒரு ஈர்ப்பு! அவன் தனக்காகவே பிறந்தவன் என்கிற எண்ணம் ஏற்பட்டு, அவனை கையோடு அழைத்துப் போய் விட வேண்டும் என்கிற ஆவல் கிளம்பியது.

ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது? கட்டு மஸ்தான அவனது மார்பைப் பார்த்ததுமே, ஏனோ தன் கூரிய நகங்களை பார்க்க தோன்றியது. இவனுடன் காதல் லீலை புரியும்போது, நம் நகங்களால் அவன் மார்புகளில் கீறி காயப்படுத்தினால் எப்படி இருக்கும்! அவனை காயப்படுத்தி விட்டோம் என்கிற குற்ற உணர்வு இல்லாமல், அவன் காலில் பெருகிக் கொண்டிருந்த இரத்தத்தை பார்த்ததும், தன்னுள் ஒரு குரூர திருப்தி உண்டாவதை கண்டு திகைத்தாள், ம்ருகா.

என் மனதில் ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது!... ஒரு வேளை, இந்த குரூர எண்ணங்கள்தான் பின்னாளில் காதல் உண்டாவதற்கு அறிகுறியா?

இல்லை! காதல் என்றால்... இப்படியெல்லாம் தோன்றாதே! எத்தனை புத்தகங்களில் படித்திருக்கிறாள்.

காதல் உண்டாகும் பெண்கள் காதலரின் பரந்த மார்பில் ஒடுங்கதானே நினைப்பார்கள்! ஆனால் எனக்கு இந்த இளைஞனை கட்டிப்போட்டு அடிமைப்படுத்தி அவனை குரூரத்துடன் கையாள வேண்டும் என்றுதானே தோன்றுகிறது.

'இது ஒரு வகை இன்ஃபச்சுவேஷனா? இல்லை... தன்னை போன்ற பெரும் பணக்காரர்களுக்கு, மத்திய வர்க்க மக்களை கண்டால் ஏற்படும் எரிச்சல்தான் அவன் மீது உண்டாகியிருக்கிறதா? தன் மன ஓட்டத்தின் அர்த்தம் புரியாமல், ஒப்புக்கு ஒரு வார்த்தை 'சாரி' என்று அந்த இளைஞனிடம் சொன்னாள்.

'பரவாயில்லை!' என்று ஒரே வார்த்தையை பதிலாக தந்தான் அவன். அதன் பிறகு அவனை பற்றிய எண்ணங்களை உதற முடியாமல், அவன் சிகிச்சை பெற்ற ஆஸ்பிட்டலுக்கு தேடிப் போய், அவனைப் பற்றி விவரங்களை அறிந்துகொண்டாள்.

ஏனோ... அவனுடைய அம்மாவுக்கு இவளை பிடிக்கவில்லை! பார்வையர்லேயே இவளை சுட்டெரித்தாள்.

அவன் வீட்டிற்கே தேடிச் சென்று காதல் வசனம் பேசியபோது, அவன் இவளை உதாசீனம் செய்தான். அதனால் அவன் மீது இன்னும் பிடிப்பு அதிகமானது. பிறந்த நாளுக்கு அழைத்த போது கூட, அவன் எங்கே வரப்போகிறான் என்றே நினைத்தாள். ஆனால்... கஃரெக்டாக வந்து நின்று விட்டான்.

இன்றே புருஷ் மீது பிடியை இறுக்கி கொண்டு விட வேண்டும்! அவளை அப்பா அம்மாவுக்கு அறிமுகப் படுத்த வேண்டும்!

'ஹி இஸ் கோயிங் டு பீ மை லைஃப் பார்ட்னர்!' என்று பர்த்டே பார்ட்டியில் அறிவிக்க வேண்டும்.

ஏராளமான கனவுகளுடன், ஒரு தரம் மாடிப்படி லேண்டிங்கில் பதித்திருந்த கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக்கொண்டாள்.

சந்தன நிறத்தில் சைனா சில்க் கவுன், டைமண்ட் நெக்லேஸ், வைரம் பதிக்கப்பட்ட சுவிட்சர்லாந்து கைக் கடிகாரம் என மின்னிக்கொண்டிருந்தாள். புருஷோத்த மன் என்னும் அப்பிராணியை வீழ்த்த இந்த அலங்காரமே அதிகப்படியாக தோன்ற, திருப்தியுடன் மிச்சமிருந்த மாடிப்படிகளில் ஏறினாள்.

மேல் படியை அடைந்தவள் ஒரு கணம், ஹாலில் மையத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஷாண்ட்லர்ஸ் விளக்கைப் பார்த்தாள்.

பலூன்களையும், ரிப்பன்களையும் கட்டி ஷாண்ட்லர்ஸை வேலைக்காரர்கள் அலங்கரிக்க, திருப்தியுடன் அதை ரசித்துப் பார்த்தாள், ம்ருகா.

''சாரி, புருஷ்! உங்களை ரொம்ப நேரம் வெயிட் பண்ண வச்சுட்டேன்,'' என்று குழைவாக பேசியபடி உள்ளே நுழைந்தாள்.

உள்ளே மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது. மேஜை மீது இருந்த ஒரு பத்திரிகையின் பக்கங்கள் ஃபேன்

காற்றில் படபடத்துக் கொண்டிருந்தன. புருஷ் அறையில் இருக்கவில்லை.

''ஒரு வேளை... பாத்ரூமுக்கு போயிருப்பானோ...'' நெற்றியில் குழப்ப ரேகைகள் உண்டாக, மாடிப்படி வளைவில் நின்று எட்டிப்பார்த்து, கீழேயிருந்த வேலைக்காரர்களை கேட்டாள்.

''ரூம்ல இருந்த என் ஃப்ரெண்டு இந்தப் பக்கமா இறங்கி போனாரா?''

''இல்லை மேடம்! நாங்க இங்கேதானே இருக்கோம்...'' அவர்களில் ஒருவன் குரல் கொடுக்க, குழப்பம் எரிச்சலாக மாற, மீண்டும் அறைக்குள் நுழைந்தாள்.

தற்செயலாக அவள் பார்வை, கீழே கவிழ்ந்துகிடந்த ஆல்பம் மீது படர்ந்தது. ஆல்பம் பார்த்துக் கொண்டிருந்தவன் திடீரென எங்கே மாயமாகி போனான்?

தனது எண்ணங்களை முழுமையாக ஆக்ரமித்துக் கொண்டு, தன்னை அலைக்கழிக்கும் புருஷோத்தமன் மீது கடுங்கோபம் கொண்டாள் ம்ருகா.

# 15. பழைய நினைவுகள்

## 1957 - சிதம்பரம்

**"தா**த்தா! முக்கியமான இடத்துல நிறுத்தி சஸ்பென்ஸ் கொடுக்கறீங்கோ! ம்ருகா கிட்டே இருந்து தப்பிச்ச அப்பா எப்படி திருப்பி அவகிட்டே மாட்டினார்," அமுதன் கேட்க, வேதனையுடன் அவனைப் பார்த்தார் சகடவாக்கி.

"அவன் தப்பிச்சுட்டானு தான் நான் நினைச்சேன்! நிம்மதியா சிதம்பரத்துக்கும் கிளம்பி போனேன்! ஆனா... என்னன்னவோ நடந்துப் போச்சு..."

மீண்டும் பழைய நினைவுகளில் ஆழ்ந்தார், நம்பாடுவான்.

# 16. கெடுவை மீறினால் கேடு!

## 1939 - சென்னை

"**ஸ்**டாப் தி ப்ளடி பார்ட்டி! ஐ ஆம் நாட் இன் எ செலிப்ரேடிவ் மூட்!"

மாடி வளைவில் நின்று கூப்பாடு போட்ட ம்ருகாவின் அலறல் அந்த பங்களாவையே அதிர வைத்தது. ஓடியாடிக்கொண்டிருந்த வேலைக்காரர்கள் வெல வெலத்துப் போய் நிற்க, அவள் அப்பா வாகீசனும் அம்மா சாரதாவும் பதைபதைத்து போய் ஓடி வந்தார்கள்.

"என்னம்மா ஆச்சு?"

ஆதங்கத்துடன் கேட்ட வாகீசனைப் பார்த்து பொங்கினாள், ம்ருகா.

"கேன்சல் தி பார்ட்டி, டாடி! எனக்கு மனசு சரியில்லை...!"

"என்ன ஆச்சு, ம்ருகா! என்ன நடந்து போச்சு'னு பார்ட்டியை கேன்சல் பண்ண சொல்றே...?" என்ற சாரதாவை அடக்கினார் வாகீசன்.

ம்ருகாவை செல்லமாக அணைத்தபடி, அருகில் இருந்த ஸ்டடி ரூமுக்குள் அழைத்துச் செல்ல, சாரதா அவர்களை பின்தொடர்ந்தாள்.

கதவை மூடிய வாகீசன், ம்ருகாவை அங்கிருந்த சோபாவில் அமர வைத்தார்.

''நௌ டெல் மீ சைல்ட்! என்னாச்சு ம்ருகா?''

அவரை ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்தவள், பின்னால் நின்ற சாரதாவை அலட்சியப்படுத்தினாள்.

''அப்பா! நான் ஒருத்தனை லவ் பண்றேன்!''

''என்னடி சொல்றே'' என்று அலறிய சாரதாவை அடக்கினார், வாகீசன்.

மீண்டும் ம்ருகாவை கனிவுடன் பார்த்தார். ''யாரை லவ் பண்ணுறே?''

''இப்ப உங்களுக்கு அறிமுகப்படுத்தினேனே புருஷ்...! ஐ... மீன்... புருஷோத்தமன்! அவனைத்தான் லவ் பண்ணறேன்...''

''வாட்... கமான் ம்ருகா! விளையாடாதே...'' சிரித்தார் வாகீசன்.

''இல்லை டாடி! ஐ யாம் டாம் சீரியஸ். நான் கல்யாணம் பண்ணின்டா அவனைதான் பண்ணிப்பேன்! இல்லேனா.... எனக்கு கல்யாணமே வேணாம்...''

''அவனை பாக்கறச்சேயே ஒரு பத்தாம்பசலியா தெரியறான், ம்ருகா! நம்ம சொஸைட்டிக்கு சரிப்பட்டு வர மாட்டான்.'' மறுத்துப் பார்த்தார் வாகீசன்.

''சொஸைட்டியை விடுங்கோ! அவன் அய்யங்கார்! நாம ஐயர்! இந்த சம்பந்தம் எப்படி ஒத்து வரும்?'' தன் பங்குக்கு சாரதா எதிர்ப்பை காட்டினாள்.

ம்ருகா சாரதாவை கோபத்துடன் பார்த்தாள்.

''இதெல்லாம் எனக்கு ஒரு விஷயமே இல்லை! எனக்கு அவன் வேணும்! என்னோட வருங்கால கணவன் யாருனு உங்களுக்கு அடையாளம் காண்பிச்சுட்டேன்! இனிமே எங்க கல்யாணத்தை நடத்த வேண்டியது, உங்க கடமை...''

ம்ருகாவின் குரல் உறுதியுடன் ஒலிக்க, இனி அவள் முடிவை மாற்றுவது கடினம், என்பதைப் புரிந்து கொண்டார், வாகீசன்.

''என்ன ம்ருகா இது! பீ சென்சிபிள்! உன் அத்தை பிள்ளை யக்ஞமூர்த்தி உன்னைத்தான் கல்யாணம் பண்ணிப்பேனு ஒத்தை காலுல நிக்கறான். அவா குடும்பத்தை பத்தி உனக்கு தெரியுமா! வெள்ளைக் காராளுக்கே கடன் கொடுத்த பரம்பரை! திப்பு சுல்தானுக்கும், பிரிட்டிஷ்கும் யுத்தம் நடந்தப்ப, அவங்க மூதாதையர்கள் பிரிட்டிஷ்காரர்களுக்கு பண்ட்ஸ் கொடுத்து உதவியிருக்கா! தண்டையார்பேட்டைல கடல்போல பங்களா, மைசூரில எஸ்டேட், ஊட்டியில எஸ்டேட், பாலகாட்டுல பெட்ரோல் பங்க், பட்டாம்பில ஊரையே வளைச்சுப் போட்டு நிலம்னு அவ்வளவு திரண்ட சொத்துக்கும் அவன் ஒருத்தன்தான் வாரிசு! நான் அவனைதான் மாப்பிள்ளையா ஏத்துக்க போறேன்...''

''நான்சென்ஸ்! நீங்க கிங் ஜார்ஜ்ஜையே மாப்பிள்ளையா கொண்டு வந்தாலும், ஐ டோண்ட் கேர்! புருஷ்தான் என்னோட கணவன்...''

''சரி! நீ அவனை லவ் பண்றதுக்கும் இப்ப பார்ட்டியை கேன்சல் செய்யறதுக்கும் என்ன சம்பந்தம்? கெஸ்ட் எல்லாம் வர ஆரம்பிச்சுட்டா! இப்ப பார்ட்டியை நடத்துவோம்! முடிஞ்சப்புறமா நாம இது பத்தி பேசலாம்!'' அப்போதைக்கு நிலைமையை சமாளிக்க எண்ணினாள் சாரதா.

''முடியாது! இன்னைக்கு நடக்க போறது என்னோட பர்த்டே பார்ட்டி இல்லை! என்னோட எங்கேஜ் மெண்ட்! அதுக்குதான் அவனை நான் வரச் சொல்லியிருந்தேன்! கேக் கட் பண்ணின உடனே, உங்க வாயால எங்க எங்கேஜ்மண்ட் பத்தி பார்ட்டில அறிவிக்கணும்னு நினைச்சேன் ஆனா... அவனைக் காணோம்!'' ஆத்திரத்துடன் வார்த்தைகளை உமிழ்ந்தாள் ம்ருகா.

''காணோமா!''

அப்பாடி என்றிருந்தது வாகீசனுக்கும் சாரதாவுக்கும். இவர்களது பங்களாவையும் ஸ்டேடஸையும் பார்த்து பயந்துபோய் ஓடியிருப்பான்! தொலைந்தது சனியன்!' மனதினுள் நினைத்தாள் சாரதா.

'எதுக்கு ஓடிப்போயிட்டான்?' வாகீசன் கேட்க, 'தெரியலை' என்று வெறுப்புடன் சொன்னாள், ம்ருகா!

''குட் ரிடன்ஸ் ம்ருகா! அவனால நம்ம சொஸைட்டிய சந்திக்க முடியாதும்மா! நீ ஒரு ராஜகுமாரி! உனக்காக பெரிய பெரிய அரண்மனை கதவுகள்ளாம் திறந்திருக்கு! போயும் போயும் அந்த மிடில் கிளாஸ் பையன்னை

போய் ஆசைப்படறியே... அவன் வீடு எங்கே இருக்கு?'' வாகீசன் கேட்டார்.

''ட்ரிப்ளிகேன்ல ஒரு சந்துல இருக்கிற ஒரு வீட்டுல சின்ன போர்ஷனில் ரெண்ட்டுக்கு இருக்கான்'' ம்ருகா கூறினாள்.

''வெல்! நம்ம ஆன்டனி க்ளியோபாட்ராவுக்கே பெரிய ரூம் கொடுத்திருக்கோம்! அதை விட சின்ன போர்ஷனில் இருக்கிற அந்த பையனோட உன்னால எப்படி காலம் தள்ள முடியும்! நாம் டிரஸ் போட்டுக்கறதுக்கு கூட 'கோட்' வச்சிருக்கோம்! ட்ரிப்ளிகேன்ல டவலை கட்டிண்டு கூட தெருவுல நடப்பா! நீ கூப்பிட்ட உடனே ஆண்டனியும் க்ளியோ பாட்ராவும் ஓடி வரும்! ட்ரிப்ளிகேன்ல இருட்டு ரூம்ல பெருச்சாளிதான் ஓடி வரும்! நோ... பேபி! திஸ் இஸ் நாட் த லைஃப் ஃபார் யூ! நான் உன்னை பக்கிங்ஹாம் பேலஸ்க்கே அழைச்சுண்டு போயிருக்கேன். உன்னை எப்படி என்னால ட்ரிப்ளிகேனுக்கு அனுப்ப முடியும்?''

நயமாக பேசி அவள் மனதை மாற்ற முயன்றார், வாகீசன்.

''உங்க ஸ்டேடஸை கொண்டு போய் குப்பையில போடுங்க! எனக்கு புருஷோத்தமன் தான் வேணும்!'' ம்ருகா அடம் பிடித்தாள்.

''சாரி ம்ருகா!'' முதல் தடவையாக பொறுமை இழந்தார், வாகீசன். ''நான் என் கடின உழைப்பால, க்ரௌன் கிட்டே 'சர்'பட்டம் வாங்கியிருக்கேன்! உனக்கு

தெரியும்! பிரிட்டிஷ்காரங்க என்னை எவ்வளவு மதிக்கிறாங்கனு! உன்னோட கல்யாணத்தை பெரிய லெவலுல பண்ணி அவங்களை அசத்த வைக்கணும்னு நினைக்கிறேன்! ஸோ... புருஷோத்தமனை என்னால மாப்பிள்ளையா நினைச்சு பார்க்க கூட முடியாது..''

ம்ருகா அவரை குரோதத்துடன் பார்த்தபடி எழுந்தாள்.

''ஐ வார்ன் யூ டாடி! நீங்க புருஷ்ஷை மாப்பிள்ளையா ஏத்துண்டுதான் ஆகணும்! அப்படி அவனை ஏத்துக்க மாட்டீங்கன்னா, உங்க பொண்ணை நீங்க இழக்க நேரிடும். என்னைப் பத்தி உங்களுக்கு தெரியும். அப்புறம் உங்க இஷ்டம்!''

சொல்லிவிட்டு கதவை திறந்துக்கொண்டு வெளி யேறியவள், படாரென்று தன் பின்னால் அதை அறைந்து சாத்தினாள்.

வாகீசன் அரண்டு போய் நின்றிருந்தார்.

# 17. கல்லை கல்லோடு... நெல்லை நெல்லோடு...

## 1939 - சென்னை

**வா**கீசனின் நீண்ட ப்ளைமவுத் கார் அந்த குறுகலான சந்தில் நுழையாது என்று டிரைவர் திட்டவட்டமாக கூறிவிட, வேறு வழியின்றி, காரை பார்த்தசாரதி கோவில் குளத்தருகே நிறுத்தும்படி பணித்தார்.

காரை விட்டு இறங்கியவர், முகத்தை கர்சிப்பால் துடைத்தபடி, அந்த சந்தினுள் நுழைந்து நடந்தார்.

சிரமப்பட்டுத்தான் புருஷோத்தமன் குடியிருந்த வீட்டை கண்டுபிடித்தார். தெருவில் நின்றபடி அந்த வீட்டினுள் எட்டிப்பார்த்தார்.

''இங்கே புருஷோத்தமன்னு...''

''ஆமாம்! இந்த வீடுதான்! புழக்கடையில கடைசி போர்ஷன்! கிணத்துக்கு பின்னாடி...! நீங்க யாரு...? பொண்ணை வயலின் கிளாஸ் சேர்க்க வந்திருக் கேளா...?'' என்று வீட்டுக்காரர், ரகோத்தமராவ் கேட்க, அவருக்கு பதில் கூறாமல் நடந்தார் வாகீசன்.

பைத்தியகார பெண்! இந்த டஞ்சனில் இருப்ப வனைப் போய் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்

என்கிறாளே! ம்ருகாவினால் ஒரு வேளை இங்கே வாழ முடியுமா?

"மேடம்-

"யாரு?" சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த வனஜா, தன் போர்ஷன் வாசலில் கோட் சூட்டுடன் மரியாதைபட்ட மனிதர் ஒருவர் நிற்பதைக் கண்டு வியப்புடன் வெளியே வந்தாள்.

"மேடம்! நான் ம்ருகாவோட அப்பா!" என்று அவர் கூறிய அடுத்த கணம், அவர் வந்திருப்பதன் நோக்கத்தைப் புரிந்துக் கொண்டாள் வனஜா.

"வாங்கோ!" என்று அவரை உள்ளே அனுமதித்தவள், மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் விழித்தாள்.

வனஜாவை பார்த்ததுமே, வாகீசன் தான் ஏன்தான் அங்கே வந்தோமோ என்று தன்னையே நொந்துக் கொண்டார். இவர் வீட்டு சமையல்காரி கோமதி கூட இவளை விட நேர்த்தியாக உடை அணிந்திருப்பாள். கிழிந்த நூல் புடவையில், தலையெல்லாம் கலைந்து முகத்தில் முடி புரள, ஏழ்மையின் மொத்த உருவாய் நின்றாள். ஒரு சிறிய அறை, சமையலறை தடுப்புடன் கூடிய ஒரு சின்ன ஹால் என்று இவரது கார் ஷெட்டை விட சிறியதாக இருந்த போர்ஷனை அருவருப்புடன் பார்த்தார். பகல் நேரத்திலேயே இருள் அந்த போர்ஷனில் தாண்டவமாடியது.

வனஜா அவர் எண்ண ஓட்டத்தை புரிந்துக் கொண்டவளைப் போல பேசினாள்.

''மாமா! நீங்க எதுக்கு வந்திருக்கீங்கோ'னு எனக்கு தெரியாது! ஆனா இன்னைக்கு அஷ்டமிங்கறதால நல்ல காரியமா பேச வந்திருக்க மாட்டீங்கோ! உங்க பொண்ணு ம்ருகாவை நானும் பாத்திருக்கேன். அவ விவரம் தெரியாத சின்னப் பொண்ணு! அவளோட ஆசைகளை நிறைவேத்தணும்ங்கிற ஒரே காரணத்துக்காக நீங்க இங்கே வந்திருந்தீங்கோனா உங்க எண்ணத்தை மாத்திக்கணும்.

''என் பையன் புருஷோத்தமன், உங்க பொண்ணுக்கு ஏத்தவன் கிடையாது. உங்க சம்மந்தியா என்னை உங்க மனுஷா முன்னாடி நிறுத்தினீங்கோன்னா, இவ்வளவு நாளா நீங்க சேர்த்து வச்சிருந்த உங்க செல்வாக்கும், மதிப்பும் ஒரு ஷணத்துல இழந்துடுவீங்கோ!

''எங்க போர்ஷன் உங்க கார் ஷெட்டை விட சின்னதுனு நினைக்கிறேன்! சின்னப் பொண்ணுக்கு ஆசைகள் அதிகம்! கடைத்தெருவுல பார்க்கிற எதைப் பார்த்தாலும் வாங்க தோணும்! அந்த மாதிரிதான் ம்ருகாவுக்கும் தோணியிருக்கு! தயவு செய்து அவளோட மனசை மாத்த பாருங்கோ!

''என் பையனால உங்க பொண்ணை வாழ வைக்க முடியாது! நீங்க கப்பலுல கடல் கடந்து, வெளிநாட்டுக்கு போறவர்! இதோ இந்த கிணத்தங்கரையை கூட நான் அதிகமாக தாண்டி போனதில்லை! என் பையனை தயவு செய்து விட்டுடுங்கோ...'' கையெடுத்து கும்பிட்டாள் வனஜா!

அவளது தோற்றத்தினால் அருவருப்பு அடைந்திருந்த வாகீசன், அவளது தெளிவானப் பேச்சைக் கேட்டு அயர்ந்து போய் நின்றுவிட்டார்.

ம்ருகாவின் அப்பா என்றதும் கூழைக்கும்பிடு போட்டு, மரியாதை செய்து, 'இது வேண்டும் அது வேண்டும்' என்று கேட்டு ஒரு பெரிய லிஸ்டையே நீட்டுவாள் என்று தான் எதிர்பார்த்து வந்திருந்தார். ஆனால் இந்தக் கல்யாணத்தில் தனக்கு விருப்பம் இல்லை என்கிறாளே.

''என்னோட பொண்ணு உங்க பையனைதான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொல்றாளே! நான் என்ன பண்ணறது?'' வாகீசன் சொன்னார்.

''மாமா! கண் எப்பவுமே பார்த்ததை எல்லாம் ஆசைப்படும். அதனால் தான் பொண்டுகளை தலை குனிந்து நிலத்தை பார்த்து நடக்க சொல்றா! ஒரு பத்து நாளைக்கு உங்க பொண்ணை பெரிய பெரிய பணக்காரா ஆத்துக்கெல்லாம் அழைச்சுண்டு போங்கோ! எங்க புருஷோத்தமனை விட இலட்சணமான பையன்களை அவளுக்கு காட்டுங்கோ! தன்னால இவனை மறந்துடுவா! உங்க தகுதிக்கு ஏத்த வரனை பாருங்கோ! ம்ருகாவை சந்தோஷமா வாழ வையுங்கோ... கல்லை கல்லோடவும், நெல்லை நெல்லோடவும் போடுங்கோ!

''அவ பிடிவாதம் பிடிச்சாக் கூட, ஒரு தகப்பனாரா அவளுக்கு நீங்க நல்லதை தான் பண்ணனும்! இதுவே நம்ம கடைசி சந்திப்பா இருக்கட்டும்!''

வாகீசன் விக்கித்துப் போய் நின்றார் 'சர்' பட்டம் பெற்ற கவர்மெண்ட் ப்ளீடரான தன்னிடம், மிக அழகாக் தன் பக்க நியாயத்தை உரைத்து, அவர் மதிப்பில் உயர்ந்து நின்றாள் வனஜா!

'மேடம்! நீங்க சொல்றது அத்தனையும் வாஸ்தவம் தான்! நிச்சயம் ம்ருகா மனசை மாத்தறேன்! நீங்களும் உங்க பையனை...

''என் பையன் அந்த மாதிரி ஆசைகளை வளர்த்துக் கலை! அவனுக்கு நான் என் நாத்தனார் பொண்ணை பேசி முடிச்சாச்சு! வர்ற மே மாசம் மூணாம் தேதி புருஷோத்தமனுக்கு கல்யாணம்! இந்த விஷயம் ம்ருகாவுக்கு தெரிய வேண்டாம்!'' என்றவள் தயக்கத்துடன் அவரைப் பார்த்தாள்.

''காபி கொடுத்தா சாப்பிடுவேளா?'' வனஜா ஒன்றுமே நடவாதது மாதிரி பேச்சை திசை திருப்பினாள்.

''இல்லேம்மா! நான் அவசரமா போகணும்! நான் கிளம்பறேன்! இனிமே ம்ருகா இந்த பக்கம் வராம நான் பார்த்துக்கறேன்! ரொம்ப தாங்க்ஸ்''

வனஜாவை நோக்கி கை கூப்பியவர், மனப்பாரம் நீங்கியவராய் தன் காரை நோக்கி யோசனையுடன் நடந்தார்.

புருஷோத்தமனுக்கு கல்யாணம் நிச்சயமாகி இருப்பதை எக்காரணம் கொண்டும், ம்ருகாவுக்கு தெரியப்படுத்த கூடாது என்று தன்னையே எச்சரித்துக் கொண்டார், வாகீசன்.

வனஜா கூறியதுபோல கல்லை கல்லோடும், நெல்லை நெல்லோடும் போட வேண்டும்! என்று வாகீசன் தீர்மானித்தார்.

உடனடியாக பாலக்காட்டில் இருக்கும் தன் அக்கா மகன் யக்ஞமூர்த்திக்கும் அவனுடைய வளர்ப்பு தாய் ஆதிரா அந்தர்ஜனத்துக்கும் கடிதம் எழுதி, அவர்களை வரவழைக்க முடிவு செய்தார் வாகீசன்.

# 18. பட்டாம்பி பட்டயம்

## 1939 - பட்டாம்பி

பட்டாம்பி, கேரளா

பட்டாம்பியின் ஒரு பகுதியான யாக்கரா கிராமத்தின் நுழைவாயிலில் அந்த மாட்டுவண்டி நிற்க, அதிலிருந்து இறங்கினாள், ஆதிரா அந்தர்ஜனம்.

ஐம்பது வயதை எட்டிப் பிடித்திருக்கும் ஆதிரா பார்ப்பதற்கே விசித்திரமாக காட்சி அளித்தாள். கூந்தலை அள்ளி கொண்டையாக போட்டிருந்தாள். நெற்றியில் கருஞ்சாந்தினால் திலகம் காணப்பட்டது. கண்களில் தீட்டியிருந்த மை அவளுடைய காதுகள் வரை நீண்டிருந்தது. கழுத்தில் ஏராளமான மணிமாலைகளை அணிந்திருந்தாள். கருப்பு நிற புடவையை உடுத்தி யிருந்தால், அவளது வெண்மை நிறம் இன்னும் அதிகம் பளீரிட்டது.

மாட்டு வண்டிகாரனிடம் பணத்தை தந்தவள், மெதுவாக யாக்கரா ஜமீன் மாளிகையின் இடிபாடுகளை நோக்கி நடந்தாள்.

பதினாறாம் நூற்றாண்டில் இவ்வழியாக ஆதிரா அந்தர்ஜனம் நடந்து சென்றிருந்தால், இருபுறமும் கிராமத்துமக்கள் நின்று 'யாக்கரா ஜமீன்தாரினி ஆதிரா

அந்தர்ஜனம் வாழ்க என்று வாழ்த்தொலி வழங்கியிருப்பார்களோ என்னவோ!

ஆனால் இப்போது யாக்கரா ஜமீன் தான் இல்லையே! அந்த ஜமீன் இருந்த இடத்தில் புல் முளைத்து போனது. அடையாளத்திற்கு யாக்கரா கிராமம் மட்டும் இருக்கிறது.

அந்த கிராமத்திலும் நான்கைந்து கள் காய்ச்சும் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. யாக்கரா கிராமத்தின் எல்லையில் ஓடும் யாக்கை புழா கரையோரம் தான் பிரசித்தி பெற்ற யாக்கரா ஜமீன் மாளிகை ஒரு காலத்தில் இருந்தது.

யாக்கரா ஜமீன் என்றாலே அந்த காலத்தில் வாய் பிளப்பார்கள். யாக்கரை ஜமீனின் திரண்ட சொத்துளைப் பற்றி சிலாகித்து பேசாதவர்கள் கிடையாது. அந்த ஜமீனின் குலக்காவு (குடும்ப கோவில்) புழாதர முகுந்தன் அம்பலம் எட்டுதிக்கும் புகழ்பெற்றது. இந்த கோவிலைச் சுற்றி யாக்கை புழா ஓடியதால், இந்த அம்பலத்திற்கு புழாதர முகுந்தன் என்று பெயரிடப்பட்டது.

எல்லையில்லா ஐஸ்வர்யத்துக்கு பெயர் போனது யாக்கரா ஜமீனும் அதனைச் சேர்ந்த புழாதரன் அம்பலமும். வைர வைடூரிய நவரத்தின ஹாரங்கள், சுவர்ண கட்டிகள் இதைத்தவிர தங்கள் ஜமீன் மாளிகையில் இடமில்லை என்று அம்பல நிலவரையில் ஜமீன்தாரர்கள் பத்திரபடுத்தி வைத்த பொக்கிஷங்கள் என்று அளவிட முடியாத செல்வம் இந்த ஜமீனுக்கு உண்டு.

திருவோணம் அன்று புழாதர முகுந்தனுக்கு சுவர்ண நாணயங்களால் அபிஷேகம் செய்து அந்த நாணயங்களை பிரசாதமாக ஏழை மக்களுக்கு அள்ளி தருவார்களாம், யாக்கரா ஜமீன்தார்கள்.

இவ்வளவு கீர்த்தியுடன் ஆண்ட யாக்கரா ஜமீனுக்கு பெரும் ஆபத்து திப்பு சுல்தான் வடிவில் வந்தது. ஜமீனின் திரண்ட செல்வத்தைப் பற்றி கேள்விப்பட்ட திப்பு சுல்தான், தனது கேரள படையெடுப்பின்போது சூறையாடப்பட வேண்டிய பட்டியலில் யாக்கரா ஜமீனையும் சேர்த்தான்.

திப்பு சுல்தான் தங்கள் சொத்துக்களை கொள்ளை யடிக்க போவதை அறிந்த யாக்கரா ஜமீன்தார், மற்ற ஜமீன்களுடன் தொடர்பு கொண்டார்.

திப்பு சுல்தான் படையெடுத்து வருவதற்குள் அத்தனை செல்வங்களையும் திரட்டி வண்டிகளில் ஏற்றி பத்திரமாக எடுத்துச் சென்று எங்கேயாவது பத்திரப் படுத்தி வைக்க வேண்டும் என்று எல்லா ஜமீன்களும் முடிவு செய்தன.

அதன்படி

யாக்கரா ஜமீனின் பொக்கிஷங்கள், விலை மதிப்பில்லா வைர வைடுரியங்கள், அம்பல நிலவறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த தங்க கட்டிகள் அனைத்தையும் வண்டிகளில் நிரப்பி, ஜமீன் காவலாட்களின் பாதுகாப்பில், எங்கோ எடுத்துச் செல்லப்பட்டன.

வண்டிகள் கிளம்புவதற்கு முன், ஜமீன் கணக்கர், ஜமீன்தாரிடம் ஒரு பட்டயத்தை அளித்தார்.

ஜமீனிலிருந்து அப்புறப்படுத்தப்படும் அதன் திரண்ட பொக்கிஷத்தின் பட்டியல்தான்.

## அந்த பட்டயம்

- ஜமீன்தாரின் பொன்பாகை.
- அந்த பாகையில் சொருகு வைரங்கள்
- இரத்ன சவுக்கிளி 4
- நவரத்தினங்கள் இழைத்த கண்டாபரணங்கள்
- தோள் வளைகள்
- கல் இழைத்த அட்டிகைகள், ஒட்டியாணங்கள், ஹாரங்கள், பதக்கங்கள்,
- வைர, வைடூரிய ஹாரங்கள், அட்டிகைகள் பதக்கங்கள்.
- நவரத்தின கணையாழிகள், அரைஞான்கள்
- ரத்ன கவசங்கள், வீரவண்டையங்கள்
- 500 தடா நிறைய தங்க நாணயங்கள்
- சுவர்ண விசிறிகள், சுவர்ண தீவட்டிகள்
- யாக்கரா முகுந்தனின் இரத்னாங்கி, வஜ்ராங்கிகள்
- 1200 துலா தட்டு நிறைய தங்க கட்டிகள்!

பட்டயத்தை ஒரு தரம் வாசித்துப் பார்த்த ஜமீன்தார் தலையசைக்க, கணக்கர் உடனே அருகிலிருந்த ஒரு அதிகாரியை பார்த்தார்.

அவர் அந்த பட்டயத்தில் ஏதோ ஒரு இலச்சினையை பதித்து, தங்கள் பொறுப்பில் யாக்கரா ஜமீனின் பொக்கிஷம் இருக்க போவதற்கான ஆதாரத்தை அளிக்க'' இரண்டு பட்டயங்கள் எழுதப்பட்டன. ஒன்று அந்த அதிகாரி வசமும், மற்றொன்று யாக்கரா ஜமீன்தார் வசமும் தரப்பட்டன. கணக்கர் கொடியசைக்க, யாக்கரா ஜமீனின் பொக்கிஷங்கள் தெற்கு நோக்கி எடுத்துச் செல்லப்பட்டன.

திப்பு சுல்தான் படையெடுத்து வந்தான். தான் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்த யாக்கரா ஜமீனின் பொக்கிஷம் அவனுக்கு கிடைக்காமல் போனது. அந்த கோபத்தை ஜமீன் மீதும் அதன் காவலான புழாதர முகுந்தன் அம்பலத்தின் மீதும் காட்டினான்.

ஜமீன் குடும்பம் அழிக்கப்பட்டது. எஞ்சியவர்கள் திக்கொருவராக உயிர் தப்பி ஓடினர். மூலைக்கொருவராக பிரிந்தாலும், திப்பு சுல்தான் திரும்பி சென்றதும், மீண்டும் ஒன்று கூடி, ஜமீனை நிறுவி, பதுக்கி வைக்கப்பட்ட அதன் பொக்கிஷங்களை எடுக்க வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டு அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

இருநூற்றாண்டுகள் உருண்டோடி விட்டன. யாக்கரா ஜமீனை பற்றியும் அதன் பொக்கிஷங்களைப் பற்றியும் அனேகமாக அனைவருமே மறந்து போயினர். அந்த

ஜமீன் பரம்பரையில் வந்த மகேஸ்வர யாக்கரா மட்டும் அந்த புதையலைப் பற்றி அறிந்து இருந்தார். அவர் வசம் இருந்த பட்டயம் பொக்கிஷம் இருப்பது உண்மை என்பதை உணர்த்தியது. அவர் வசம் இருந்த பட்டயத்தில் திருவாங்கூர் சமஸ்தான இலச்சினை காணப்பட்டது! பொக்கிஷம் அவர்கள் வசம் இருக்கக் கூடும் என்பதை அறிந்து சமஸ்தானத்திடம் தொடர்பு கொண்டார்.

ஆனால் சரியான பதில் கிடைக்கவில்லை. 'இருநூறு ஆண்டுகள் சம்பந்தப்பட்ட விவகாரம்' எங்களுக்கு எப்படி தெரியும் என்று போத்தாம் போக்கில் பதில் தரப்பட, மகேஸ்வர யாக்கரா மனம் உடைந்தார். மரண படுக்கையில் தன் ஒரே மகள் ஆதிராவை அழைத்து பட்டயத்தை அவளிடம் கொடுத்தார்.

''ஆதிரா! இது நம்ம ஜமீன் பொக்கிஷத்தை பத்தி சொல்லுற பட்டயம்! இதை பத்திரமா வச்சுக்க! என்னைக்காவது பொக்கிஷம் பற்றிய சேதி வெளியே வரும்! அப்ப நம்ம உரிமையை நிலைநாட்டறதுக்கு இது ஒண்ணுதான் ஆதாரம்! பத்திரம்...'' என்று யாக்கரா ஜமீன் பொக்கிஷத்தின் நினைவிலேயே தன் உயிரை விட்டார்.

ஆதிராவுக்கு ஆதரவில்லாமல் போக, மகேஷ்வர யாக்கராவின் நண்பர் விக்ரம நம்பூத்ரி தன் ஒரே மகன் சசிதரனுக்கு அவளை கலியாணம் செய்துக்கொண்டார்.

ஒரு நாள், சசிதரன் ஏதோ கோபத்தில், 'ஒண்ணும் இல்லாத உன்னை என் தலையில கட்டிட்டார் என் அப்பா' - என்று கத்திவிட, வெகுண்டு எழுந்தாள் ஆதிரா.

''யாரை ஒண்ணும் இல்லாதவனு சொல்றீங்க? எப்பேர்பட்ட வம்சமாக்கும் எங்க யாக்கரா ஜமீன்! என்ன செய்யறது? படையெடுப்புக்கு பயந்து எல்லா ஐஸ்வர்யத்தையும் பதுக்கி வச்சுட்டாங்க! அதெல்லாம் எங்கே இருக்குனு தெரிஞ்சா நாம ஏழு ஜென்மத்துக்கு உட்கார்ந்து சாப்பிடலாமே...'' என்று தன் கையில் இருந்த பட்டயத்தை ஆட்டியபடி ஆவேசமாக பேசினாள், ஆதிரா.

சசிதரன் நம்பூத்ரி அவளையும் அந்த பட்டயத்தையும் அதிசயத்துடன் பார்த்தார்.

அன்றிரவு

ஆதிரா அந்தர்ஜனத்தை படுக்கையில் தன் அன்பினால் திக்குமுக்காட செய்தார். சம்போகம் முடிந்த நிலையில், ஆதிரா கிறக்கத்தில் இருக்க, அப்போது 'இதுதான் சரியான தருணம்' என்று தனது திட்டத்தை ஆதிராவிடம் சொன்னார்.

''ஆதிரா! என்னால புதையல் இருக்கிற இடத்தை எளிதா கண்டு பிடிச்சு சொல்ல முடியும்?''

''வியப்புடன் கண்களைத் திறந்தாள் ஆதிரா எப்படி?''

''நான் சொல்றது எதையும் அப்பாக்கிட்டே சொல்லாதே! நான் ஒரு யட்சிணி உபாசகன். அவ புதையல் இருக்கிற இடத்தை எனக்கு சொல்லிடுவா.''

''நாமெல்லாம் அம்பல பூஜை செய்யறவா. யட்சிணியை உபாசிக்கிறது தப்பு இல்லையா?''

''யட்சிணி உபாசனம் வேகமாக பலனைத் தரக்கூடியது ஆதிரா! தெய்வ உபாசனத்தை விட சுலபமானது''

அவளிடம் கூறிய சசிதர நம்பூத்ரி மறுநாளே யட்சிணி பூஜைக்கான ஏற்பாடுகளில் இறங்கி விட்டார்.

''108 அஷ்டமி நாளன்று யட்சிணி பூஜை செஞ்சா, அவ நம்மோட பேசுவா. அவளை குறுப்பிட்ட மந்த்ரம் ஜபிச்சு உபாசனம் செய்யணும். தடையில்லாம தொடர்ந்து 108 தடவை உபாசிக்கணும்!''

சசிதரன் நம்பூத்ரி சுக்ல அஷ்டமியன்று தனது உபாசனத்தை தொடங்கினார். அவர் செய்யும் உபா சனத்தை வியப்புடன் பார்த்த ஆதிராவுக்கு உபாசிக்கும் வழிமுறைகள் விரைவிலேயே தெரிந்து போனது.

88 அஷ்டமிகள் கடந்து போனது. எண்பத்தி ஒன்பதாவது அஷ்டமி அன்று யட்சிணி உபாசனத்திற்கு நேரம் ஆனதே' என்று கூறியபடி, சசிதரனை எழுப்ப முயன்றவள், திடுக்கிட்டாள்.

தூக்கத்திலேயே சசிதர நம்பூத்ரியின் உயிர் பிரிந் திருந்தது. ஒரு வேளை யட்சிணி பூஜையில் ஏதாவது தவறு செய்து விட்டாரோ' என்கிற பயத்தில் அந்த பூஜையை நிறுத்திவிட்டாள். ஆதரவு இல்லாமல் நடுத்தெருவில் நின்ற அந்தர்ஜனத்தின் நிலையைக் கண்டு வருந்திய குருவாயூர் நம்பூத்ரி ஒருவர், யக்ஞமூர்த்தியின் தாத்தா சர்வேஷ்வர ஐயரின் வீட்டில் அவளை சமையல் காரியாக சேர்த்துவிட்டார்.

யக்ஞமூர்த்தியின் பெற்றோர் கார் விபத்தில் இறந்து விட, அவனை வளர்க்கும் முழு பொறுப்பையும் ஆதிரா அந்தர்ஜனத்திடமே தந்தார், அவனுடைய மாமா வாகீசன். அவருக்கு ஆதிரா மீது அளவுக்கடந்த மரியாதையும் மதிப்பும் இருந்தது. நாளடைவில் யக்ஞ மூர்த்தியின் வளர்ப்பு தாயாகவே மாறிவிட, அவனும் அவளை வாஞ்சையுடன் 'அம்மா' என்றே அழைத்தான்.

ஆனால் இதுநாள்வரை ஆதிரா அவனது சொத்து விவகாரங்களில் மூக்கை நீட்டவில்லை. தனக்கு என்று பணம் கேட்க மாட்டாள். வீட்டு வேலைக்காரர்களிடம் கொடுக்கல் வாங்கல் விவகாரங்களை கூட யக்ஞத்திடம் விட்டுவிடுவாள்.

''அம்மா! உன் செலவுக்கு வச்சுக்கோ!'' யக்ஞமூர்த்தி ஒரு முறை ஆதிராவுக்கு பணம் கொடுக்க, பிடிவாதமாக அதை வாங்க மறுத்து விட்டாள்.

''எனக்கு எதுக்கு பணம் தர்றே! அதை வச்சுண்டு நான் என்ன பண்ண போறேன்...'' ஆதிரா சொன்னாள்.

''அம்மாவுக்கு பிள்ளை செய்யாம யார் செய்வான்?'' யக்ஞராமன் கேட்க, சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டாள் ஆதிரா.

''நீ எனக்கு ஏதாவது செய்யணும்னு நினைச்சா, பட்டாம்பி கிட்டே இருக்கிற எங்க பூர்வீக யாக்கரா காவு இருக்கிற நிலத்தை மீட்டுக்கொடு... வேறு என்ன நான் உன்கிட்டே கேட்கபோறேன்?''

அடுத்த சில தினங்களிலேயே ஆதிராவின் விருப்பத்தை பூர்த்தி செய்தான். யக்ஞம்.

யாக்கரா ஜமீன் இருப்பதாக கருதப்பட்ட நிலங்களை வாங்கி அவள் பொறுப்பில் தந்தான்.

ஒவ்வொரு அஷ்டமியும், யாக்கரா காவுக்கு செல்வதை வழக்கமாக கொண்டிருந்தாள். திடீரென்று ஒரு நாள், காவு இருந்த இடத்தில் புதைந்து கிடந்த நிலவறையை கண்டு பிடித்தாள்.

உள்ளே இறங்கி சென்றவள், விசாலமான அந்த நிலவறையை கண்டு ஸ்தம்பித்தாள். இங்கேதான் ஜமீனின் பொக்கிஷங்கள் வைக்கப்பட்டிருந்தன போலும். மீண்டும் அந்த பொக்கிஷங்களை கண்டு பிடித்து இங்கேயே வைத்தால் எப்படி இருக்கும்?

யக்ஞத்தின் உதவியோடு அந்த நிலத்தில் வளர்ந் திருந்த செடிகொடிகளை அகற்றி இடிபாடுகளை நீக்கி, சிறியதாக ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டாள்.

தன் கணவன் உபாசனம் செய்த யட்சிணி விக்ரகத்தை, அந்த நிலவறையை சுத்தம் செய்து அதில் ஸ்தாபித்தாள்.

புதையல் பற்றிய விவரங்களை அறிய யட்சிணி உபாசனம் செய்தால் என்ன என்று தன் கணவன் விட்டுச் சென்ற உபாசனத்தை, பயபக்தியுடன் மீண்டும் துவக்கினாள்.

நூற்றி ஏழு முறை உபாசனத்தை முடித்துவிட்டு, இதோ இறுதி உபாசனத்திற்காக, தனது யாக்கரா வீட்டை நோக்கி மெதுவாக நடந்து சென்றாள்.

தன் வீட்டை அடைந்தவள், கதவைத் திறந்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். கொல்லை புறமாக ஓடிய

வாய்க்காலில் குளித்துவிட்டு, நிலவறையை நோக்கி நடந்தாள்.

தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த பொக்கிஷ பட்டயத்தை யட்சிணி விக்ரகத்தின் காலடியில் வைத்தவள், உபாசனத்தை துவக்கினாள்.

வெகு நேரத்திற்கு பிறகு கண் விழித்தாள். யட்சிணி விக்ரகத்தையே வெறித்துப் பார்த்தாள். நூற்றியெட்டு முறை உபாசனம் செய்தால் யட்சிணி பேசுவாள் என்று கூறியிருந்தாரே, இவள் கணவர். அவள் பேசக் காணோமே!

வெகுநேரம் காத்திருந்து, அவள் பேசாமல் போக, அலுப்புடன் எழுந்து கொண்டாள், அந்தர்ஜனம். உபாசனம் செய்த இடத்தை சுத்தம் செய்து விட்டு, நிலவறை படிகளில் ஏறத் தொடங்கியபோதுதான் திடீரென

பூஜை பாத்திரங்கள் உருளும் ஒலி கேட்டது. திகைப்புடன் மீண்டும் கீழே வந்தாள். இவள் ஒரு ஓரமாக குவித்து வைத்திருந்த பாத்திரங்கள் உருண்டு கிடந்தன.

''யாரு?'' அந்தர்ஜனம் பயத்துடன் கேட்டாள். நிலவறைப் படிகளில் யாரோ ஏறி இறங்கி விளை யாடுவது போல ஒலி கேட்க, அரண்டு போய் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''அந்தர்ஜனம்''

''யாரு?''

“நான்தான் யட்சிணி! கேள்வியை கேட்டுட்டு பதில் வாங்காம போனா எப்படி?”

ஆதிரா மூச்சுவிடக் கூட மறந்து நின்றாள் “உன் ஜமீன் பொக்கிஷங்கள் எல்லாம் திருவனந்தபுரத்து கோயில் சுரங்கத்து கீழே கிடக்கிறது! படையெடுப்புக்கு பயந்து எல்லா ஜமீன் பொக்கிஷங்களையும் கோயில் நிலவறையில் பதுக்கி வச்சிருக்கு...”

ஆதிரா பயபக்தியுடன் யட்சிணி விக்ரத்தை பார்த்து கும்பிட்டாள்.

“அந்த பொக்கிஷத்தை எடுத்துக்கணும்னா அதுக்கு என்ன செய்யணும்?”

“பொக்கிஷத்தை எடுக்கணும்னா... மனிதர்களால் மட்டும் முடியாது. என்னை மாதிரி யட்சிணி யோட சக்தி உனக்கு உதவணும்...”

“நீயே எனக்கு உதவி செய்யேன்...” ஆதிராவுக்கு பயம் பின்வாங்கி பொக்கிஷத்தை மீட்க வேண்டும் என்கிற உத்வேகம் பிறந்தது.

“உனக்கு உதவி செய்ய ஒரு யட்சிணி பொறந்திருக்கா! அவ மூலமா முயற்சி பண்ணினா உன் பொக்கிஷம் உனக்கு கிடைக்கலாம்...”

“அந்த யட்சிணி எங்கே இருக்கா! அவளை நான் எங்கே தேடி கண்டுபிடிக்கிறது?”

“அவளை நீ தேட வேண்டாம்! அவளே உன் மருமகளா உன்னை நாடி வர்ற போறா! உனக்கு அவளும்,

அவளுக்கு நீயும் பிரயோஜனப் பட போறீங்க... அவ இப்ப சென்னை பட்டணத்துல இருக்கா...''

ஆதிரா அசந்து போய் நின்றாள்.

''அந்த யட்சிணி இப்ப வேற ஒருவனை நினைச்சு மருகிட்டு இருக்கா! உன் வளர்ப்பு பையனை அவ கலியாணம் பண்ணிக்க மறுப்பா... அதுக்கு ஒரே வழி... எனது உபாசனத்துக்காக நீ தயாரிச்சிருக்கிற கருஞ்சாந்தை ஒரு குப்பி நிறைய பத்திரப்படுத்தி வச்சுக்க! யார் நீ சொல்றதை கேட்டு நடக்கணும்னு நினைக்கறியோ, அவங்க இரத்தத்துளில இந்த கருஞ்சாந்தை கலந்து அவர்கள் நெத்தியில வட்டமா இட்டுடு! அப்புறம் அவங்க... நீ சொல்றதை தான் கேட்பாங்க!... ஆனா எச்சரிக்கையா நடந்துக்க...! யட்சிணிகளுல அவ ஆபத்தானவள்.''

தொடர்ந்து கேள்விகளை எழுப்ப முயன்றாள் ஆதிரா! ஆனால் பதில் வராமல் போகவே, யட்சிணி போய் விட்டாள் என்பதை யூகித்தாள் ஆதிரா.

யட்சிணி உபாசனத்திற்காக தான் தயாரித்திருந்த கருஞ்சாந்தை ஒரு வெள்ளி குப்பி நிறைய எடுத்து வைத்தாள்.

குப்பியையும் பட்டயத்தையும் தனது சேலையில் பத்திரப்படுத்தியவள், யட்சிணி விக்ரகத்தை கும்பிட்டு விட்டு நிலவறைப் படிகளில் ஏறிச் சென்றாள்.

பாலக்காட்டில் உள்ள யக்ஞமூர்த்தியின் வீட்டினுள் நுழைந்தபோது, அவன் ஆதிராவுக்காக காத்திருந்தான்.

''அம்மே! வாகீசன். மாமா லெட்டர் போட்டிருக்கார்! எனக்கும் ம்ருகாவுக்கும் கல்யாணம் செஞ்சுடணும்னு தீர்மானிச்சிருக்காறாம்! என்னையும் உன்னையும் கிளம்பி வர சொல்றாரு! நீ எங்கே வரப்போறே? நான் மட்டும் போயிட்டு வர்றேன்...!'' ஆனந்தம் பொங்க சொன்னான் யக்ஞமூர்த்தி.

''நானும் வரேன்!'' ஆதிரா சொல்ல, பிரமித்தான் யக்ஞம்.

''நீயா...?''

''ஆமா! நீ மட்டும் போனா... அந்த ம்ருகா உன்னை கல்யாணம் பண்ணிக்கமாட்டா! நான் வந்தாத்தான் கல்யாணத்துக்கு சம்மதிப்பாள்!''

விஷமத்துடன் ஆதிரா தன் புடவையில் பதுக்கியிருந்த அந்த வெள்ளி குப்பியை தடவிக் கொண்டாள்.

# 19. யாத்திரையில் கலவரம்

## 1939 - சென்னை

தனது ஜாகுவாரை கிளப்பிய ம்ருகா, கல்லூரியை நோக்கி அதனை செலுத்தினாள். அவள் மனம் துள்ளாட்டம் போட்டுக்கொண்டு இருந்தது. அவள் விருப்பப்படியே புருஷ்ஷுக்கு அவளை மணமுடிப்ப தாக வாகீசன் வாக்குறுதி தந்திருந்தார். இது விஷயமாக புருஷோத்தமனின் அம்மாவை பார்த்து பேசி விட்டிருந்தார். அவன் படிப்பை முடித்து வேலையில் சேர்ந்ததும் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று அவன் அம்மா கூறிவிட்டதாக அப்பா வந்து சொன்னதும், வேறு வழியின்றி, அவனுக்காக காத்திருக்க முடிவு செய்தாள். ஆனால் மூலையில் ஒரு சிறு உறுத்தல். புருஷோத்தமன் விஷயமாக, அவன் தாய்க்கும் தனக்கும் மோதல் ஏற்படுவதை தவிர்க்க முடியாது என்பது புரிந்தது!

உடனேயே-

'ப்ப்ச்' என்று அலட்சியமாக சூள் கொட்டினாள்.

இது ஒரு பெரிய விஷயமா என்ன?

கல்யாணத்திற்கு பிறகு அவன் அம்மாவை கத்தரித்து விட வேண்டியதுதான்!

அவள் புருஷோத்தமனை சந்தித்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. அவன் 'ஸ்டடி ஹாலிடேஸை' கழித்துக் கொண்டிருந்தான்.

'பரீட்சை முடியட்டும்' அவனை சந்திக்கலாம், என்று அவளும் அவனை சந்திப்பதை தவிர்த்திருந்தாள்.

சென்ற வாரம், அவன் பரீட்சை முடிந்து விட்டது. பரீட்சையை அவன் பிரமாதமாக செய்திருப்பதாக அவனுடன் படிக்கும் க்ளாரா மூலம் தெரிந்து கொண்டிருந்தாள்.

இன்று மாலையில் கல்லூரி முடிந்ததும் திருவல்லிக் கேணி சென்று அவனை பாராட்ட வேண்டும் என்று தீர்மானித்தபடி, காரை கடற்கரை சாலை பக்கமாக திருப்பினாள்.

ஆங்கில பாட்டை முணுமுணுத்தபடி உற்சாகத்துடன் காரை செலுத்தியவள், சாந்தோம் சர்ச்சை தாண்டிய போது தான், தற்செயலாக ரோட்டில் நடந்து போய் கொண்டிருந்த ஹம்ஸாவைப் பார்த்தாள். அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த விதமே, ஏதோ கல்யாணத்திற்கு போவதை உறுதிப்படுத்தியது. அவளும் புருஷோத்தமனுடன்தான் பரீட்சை எழுதி இருந்தாள். மாம்பழ நிற பட்டுப்பாவாடை தாவணியில் சிவப்பு நிற பார்டர் ஜொலிக்க, கையில் ஒரு பரிசு பொருளுடன் சென்றுக் கொண்டிருந்தாள்.

ம்ருகா தன் காரை அவள் அருகே நிறுத்தினாள்.

"ஹாய் ஹம்ஸா! என்ன இந்தப்பக்கம்?"

''ட்ரிப்ளிகேன்ல ஒரு மேரேஜூக்கு போறேன்...!''

''ட்ரிப்ளிகேனா! போற வழிதானே! வா! நான் டிராப் பண்ணறேன்.''

ம்ருகா கார் கதவை திறக்க, 'தாங்க்ஸ் ம்ருகா!' என்றபடி காரில் ஏறினாள், ஹம்ஸா! கையிலிருந்த கிஃப்ட் பாக்கெட்டை மடி மீது வைத்துக் கொண்டாள்.

''பரீட்சையெல்லாம் எப்படி செஞ்சிருக்கே?'' சாலையில் கவனம் செலுத்தியபடி, ம்ருகா கேட்டாள்.

''நல்லா பண்ணியிருக்கேன்! அஃப்கோர்ஸ் புருஷோத்தமன் மாதிரி கோல்ட் மெடலுக்கு முயற்சி பண்ணலை. பட்... நானும் நல்ல பண்ணியிருக்கேன்...''

ம்ருகா கர்வத்துடன் சிரித்தாள். 'புருஷ்'ஷுக்கு கோல்ட் மெடல் என்ன; இவளே கிடைக்க போகிறாளே! மிகவும் அதிர்ஷடக்காரன் தான்.

''மேல என்ன செய்யப்போறே, ஹம்ஸா! காலேஜ் படிப்பை முடிச்சுட்டியே...!'' ம்ருகா கேட்டாள்.

''வேற என்ன... கல்யாணம்தான்! படிப்பை முடிச்சுட்டு பாய்ஸே கல்யாணம் பண்ணிக்கறச்சே, நானும் செஞ்சுக்க வேண்டியதுதானே... ஹம்ஸா சிரித்தாள்.

''யார் கல்யாணம் பண்ணிக்கிறான்? உன் உறவுக்கார பையனா?''

''நோ... நோ! என் கிளாஸ்மேட்' என்று பதில் கூற ஆரம்பித்த ஹம்ஸாவின் முகம் திடீரென மாறியது. சட்டென்று வார்த்தைகளை விழுங்கியவள், அவசரமாக ''ஆமா... ஆமா! என் உறவுக்கார பையனுக்குதான்...!'' என்று இழுத்தாள்.

சந்தேகம் எழும்ப, ம்ருகா அவள் கண்களை உறுத்துப் பார்த்தாள்.

''க்ளாஸ்மேட்'னு ஏதோ ஆரம்பிச்சே... சட்டுனு பேச்சை மாத்திட்டே... போல இருக்கு...'' என்றவள், ஹம்ஸா எதிர்பார்த்திராத அந்தக் காரியத்தைச் செய்தாள்.

ஹம்ஸா மடியிலிருந்த அந்த கிஃப்ட் பாக்கெட்டை இடக்கையால் லாவகமாக எடுத்து, அதன் மேல் ஒட்டியிருந்த கார்டில் எழுதியிருந்ததை படித்தாள்.

''ஹாப்பி மேரிட் லைஃப் புருஷோத்தமன்''

''க்க்றீச்ச்''

சடர்ன் ப்ரேக் போடப்பட்டதால், பேரொலியுடன் அந்த ஜாகுவார் கார் குலுங்கி நின்றது. ஹம்ஸாவின் மடிமீது ம்ருகா திருப்பி வைத்த கிஃப் பாக்கெட் நழுவி ஹம்ஸாவின் காலடியில் விழுந்தது.

உக்கிரத்துடன் ஹம்ஸாவின் வலது புஜத்தை பிடித்து உலுக்கினாள் ம்ருகா.

''உண்மையை சொல்லு, ஹம்ஸா! யாருடைய கல்யாணத்துக்கு போறே?''

ஹம்ஸா வெலவெலத்துப் போனாள். தனது பூனைக் கண்களால் ம்ருகா உறுத்துப் பார்ப்பதைக் கண்டதும், அவள் வாய் குழறியது.

''என் ரிலேடிவ்... ஒருத்தருக்கு கல்யாணம்! அவரோடு பெயரும்... புருஷோத்தமன் தான்!... வந்து அதாவது நீ நினைக்கிற புருஷோத்தமன் இல்லை...!'' ஹம்ஸா தட்டுதடுமாற, சட்டென்று சகஜ நிலைக்கு வந்தாள், ம்ருகா.

''நீ நினைக்கிற புருஷோத்தமன் இல்லைனு சொல்லறச்சேயே எனக்கு சந்தேகமா இருக்கு'' என்ற ம்ருகா, கார் இன்ஜினின் இயக்கத்தை நிறுத்தினாள்.

''உண்மையை சொல்லு ஹம்ஸா! யார் கல்யாணத்துக்கு போறே? புருஷோத்தமன் கல்யாணத் துக்குதானே?''

தான் அவளிடம் வசமாக அகப்பட்டு கொண்டு விட்டோம் என்பதை புரிந்து கொண்டாள் ஹம்ஸா. தன்னை கல்யாணத்துக்கு அழைத்தபோது, புருஷோத் தமன் விடுத்த எச்சரிக்கை அவள் ஞாபகத்துக்கு வந்தது.

என் கல்யாண விஷயம் ரகசியமா இருக்கட்டும், ஹம்ஸா! காலேஜ்ல தெரிய வேணாம்! குறிப்பா, ம்ருகநயனானிக்கு தெரியவே கூடாது!' என்று சொல்லி இருந்தானே!'

தன் புத்திகெட்டத்தனத்தை எண்ணி தன்னையே சபித்தாள். இப்போது என்ன செய்வது? விஷயத்தை கறக்காமல் இவள் விடமாட்டாள். உடனடியாக ம்ருகா

விடமிருந்து கழன்று கொள்வதுதான் புத்திசாலிதனம் என்று அவள் மனது எச்சரித்தது.

''சை... சை! இது வேற புருஷோத்தமன்!... என்னோட... பெரியப்பா பையன்...! ம்ருகா, நீ என்னை ஐஸ் ஹவுஸ்ல டிராப் பண்ணிடு! நான் கோவிலுக்கு போயிட்டு, அப்புறமாத்தான் கல்யாணத்துக்கு போகப் போறேன்...!'' ஹம்ஸா சமாளித்தாள்.

''உண்மைய சொல்லாம நீ காரைவிட்டு இறங்க போறதில்லை! அப்படி உண்மையை சொல்லலேனா, நான் காரை நேரா எதாவது லாரி மேல மோதிடுவேன்... உன்னை வார்ன் பண்றேன்... ஒழுங்கா என்ன நடக்கிறதுனு சொல்லிடு'' ம்ருகாவின் குரல் மிரட்டலாக ஒலித்தது.

'ஏன் தான் ம்ருகாவை சந்தித்தோமோ? தன் தலை விதியை நொந்துக் கொண்டவள், ம்ருகாவை ஜாக்கிரதை யுடன் பார்த்தாள்.

''ம்ருகா! நான் சொன்னதாக புருஷோத்தமனுக்கு தெரிய வேணாம்! அவனுக்குதான் இன்னைக்கு கல்யாணம். தன்னோட அத்தை பெண் ஜ்யோத்ஸனாவை பண்ணிக்கிறான். இந்த விஷயத்தை உன்கிட்ட சொல்ல வேணாம்னு அவன்தான் சொன்னான். அதனாலதான்...''

ம்ருகாவின் பார்வையை தவிர்க்க, தலையை குனிந்துக் கொண்டாள், ஹம்ஸா!

ம்ருகா உறைந்துபோனாள்! எவ்வளவு பெரிய நம்பிக்கை துரோகம்! பரீட்சை முடியும்வரை இவளை காத்திருக்க சொல்லிவிட்டு, அத்தை பெண்ணை கல்யாணம் செய்துக் கொள்கிறானாமே! இந்த விஷயம் அவள் அப்பாவுக்கு தெரியுமா!... இல்லை அவரும் இந்த சதியில் உடந்தையா?

''ஐ யாம் சாரி ம்ருகா! நான் இப்படியே இறங்கி நடந்து போறேன்!'' குற்ற உணர்வுடன் இறங்க முற்பட்டாள் ஹம்ஸா!

''இல்லை ஹம்ஸா! நானும் கல்யாணத்துக்கு வர்றேன்! என்ன இருந்தாலும், புருஷ் என்னோட நண்பன். அவன் என்னை இன்வைட் பண்ணலேனாக் கூட, நான் அவனை வாழ்த்தியே ஆகணும். ப்ளீஸ் நானும் உன்கூட கல்யாணத்துக்கு வர்றேன்!'' என்ற ம்ருகா, ஹம்ஸாவின் பதிலுக்கு காத்திராமல், காரை ஸ்டார்ட் செய்தாள்.

மனதில் ஏற்பட்டிருந்த அதே அழுத்தத்தை ஆக்சிலேட்டருக்கும் அவள் கொடுக்க, கார் திருவல்லிக் கேணியை நோக்கி பறந்தது.

புருஷோத்தமன் முகத்தில் எப்படி விழிப்பது என்கிற கலக்கத்துடன் ஹம்ஸா உட்கார்ந்திருக்க, அவளிடம் கல்யாண மண்டபத்திற்கு வழிகேட்டபடி, ம்ருகா காரை செலுத்தினாள்.

சிங்கராச்சாரி தெருவில் இருந்த அந்தக் கல்யாண மண்டபத்தை நோக்கி கார் விரைந்தது.

சரியாக

புருஷோத்தமன் காசியாத்திரைக்கு கிளம்பிக் கொண்டிருந்தான். மண்டபத்தை விட்டு இறங்கி, கையில் வாக்கிங் ஸ்டிக் விசிறி சகிதம், கிழக்கு திசை நோக்கி நடந்தான். பெண்கள் தட்டுகளில் மங்கல பொருட்களை ஏந்தி அவன் பின்னே நடக்க, புரோகிதர் இரு கைகளில் தேங்காய்களுடன் முன்னே நடக்க, ஜ்யோத்ஸனாவின் அண்ணன் வரதன் அவனுக்கு குடை பிடித்தபடி வந்தான்.

நாதஸ்வரம் இசைத்தபடி முன்னே நடந்த நாயனக்காரர், ஒரு கட்டத்தில் நின்று திரும்பி வர, ஊர்வலம் மீண்டும் மண்டபத்தை நோக்கி வந்தது. திரும்புவதற்காக புருஷோத்தமன் எத்தனித்தபோதுதான் அந்த ஊர்வலத்தை நிலைகுலைய செய்தபடி, மாப்பிள்ளையை உரசுவது போல வந்து நின்றது அந்த சிவப்பு ஜாகுவார் கார்.

புருஷோத்தமன் பின்னாடி வந்த பெண்கள், குய்யோ முய்யோ என்று அலறியபடி சிதறி ஓட, புரோகிதர் அதிர்ச்சியில் தடுமாற, அவர் கையிலிருந்த தேங்காய் களில் ஒன்று நழுவி அங்கிருந்த சாக்கடையில் உருண்டோடியது.

இது என்ன அபசகுணம்! ஜோடி தேங்காய்கள் பிரியக் கூடாதே! புரோகிதர் தனக்குள் முணுமுணுக்க, வரதன் கோபத்துடன் காரோட்டியை பார்த்தான்.

புருஷோத்தமனின் பார்வை நேராக தன்னை கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்த ம்ருகாவின் விழிகளில் சிக்கின. அவன் முகத்தில் கலவரம் பிறந்தது.

''ஹாய் புருஷ்! விஷிங் யூ எ ஹேப்பி மேரிட் லைஃப்!'' என்று கூறியவள், அவனை குரோதத்துடன் முறைக்க, 'ஆளை விட்டால் போதும்' என்று ஹம்ஸா காரிலிருந்து அவசரமாக இறங்க, அவள் கதவை மூடுவதற்கு கூட அவகாசம் தராமல் காரை வேகமாக கிளப்பிக் கொண்டு ம்ருகா சென்று விட்டாள்.

''என்ன பொண்ணு இவ! இப்படியா வண்டி ஓட்டுவா? தேங்காய் சாக்கடையில் விழுந்துடுத்தே! மாமி! வேற மஞ்சள் தேங்காய் கொண்டாங்கோ!'' புரோகிதர் கத்தினார்.

ஹம்ஸா மனஉறுத்தலுடன் புருஷோத்தமனை பார்த்தாள். அவன் கல்லாய் சமைந்து நின்றிருந்தான். தொலைவில் நின்று எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த நாகராஜன், அருகே வந்து அவனை தட்டி உலுக்கியதும் தான் மீண்டும் இந்த உலகிற்கு வந்தான், புருஷோத்தமன்.

தொடர்ந்து நடந்த திருமண நிகழ்வுகளில் அவன் மனம் லயிக்கவே இல்லை. அவன் கண்கள் முன் ம்ருகாவின் உக்கிரமான பார்வைதான் நிழலாடியது.

விஷயத்தை அறிந்த வனஜா அன்றிரவு தூங்காமல் புலம்பிக் கொண்டே இருந்தாள்.

# 20. அதிர வைத்த ஆதிரா

## 1939 - சென்னை

அந்த நீலநிற மாரிஸ் மைனர் கார் வாகீசனின் பங்களாவினுள் நுழைய, அதிலிருந்து வெளிப்பட்டான் யக்ஞமூர்த்தி. அவனைக் கண்டதுமே ஆன்டனியும், க்ளியோபாட்ராவும் தங்கள் வாலை குழைத்தபடி அவனை நோக்கி ஓடின. தனது மனங்கவர்ந்த ம்ருகாவின் அபிமானத்தை பெற்ற அந்த நாய்களுக்கு எப்போது வந்தாலும் பிஸ்கெட் பாக்கெட் வாங்கி விடுவான். அவை உற்சாகத்துடன் குரைத்தபடி பாய்ந்து வந்தன.

யக்ஞமூர்த்தியை நோக்கி ஓடிச்சென்ற நாய்கள், தொடர்ந்து இறங்கிய ஆதிரா அந்தர்ஜனத்தை கண்டதும் சடாரென்று ஆணியடித்தது போல் நின்றன. அவள் வருகையை விரும்பாதது போல் குரைக்கத் தொடங்கிய ஆன்டனியும், க்ளியோபாட்ராவும் சீற்றத்துடன் அவளை நோக்கி முன்னேற, கருஞ்சாந்து தீட்டியிருந்த தன் கண்களால் அவற்றை உறுத்துப் பார்த்தாள் ஆதிரா. சட்டென்று பீதியுடன் பின்வாங்கின நாய்கள். அவற்றின் வால் பின்னங்கால்களிடையே ஒடுங்க, ஒரு சிறு புலம்பலாக குரைப்பு ஒலி மாறி, இரண்டு நாய்களும் அமைதியாக தரையில் அமர்ந்து விட்டன.

யக்ஞும் கையில் பிஸ்கெட்டுடன் அவற்றை அழைத்தான்.

''ஆன்டனி! க்ளியோபாட்ரா!'' என்று அவன் குரல் கொடுக்க, அவன் அழைப்பை சட்டை செய்யாமல் இருந்தன.

ஆதிரா யக்ஞுத்தின் தோளைத் தட்டினாள்.

''விடு யக்ஞும்! அதுங்க வராது!'' நக்கலான சிரிப்புடன், அவற்றை பார்த்தபடி நடந்தாள்.

நாய்கள் குரைக்கும் சப்தம் கேட்டு, எட்டிப் பார்த்த சாரதா, யக்ஞுத்தைக் கண்டதும் முகம் மலர்ந்தாள்.

''வா யக்ஞும்!'' தன்னை வரவேற்ற சாரதாவின் காலில் விழுந்து எழுந்தான் யக்ஞும்.

''மாமி சௌக்கியமோ?'' மலையாளம் கலந்த தமிழில் அவன் கேட்க, சாரதா தலையாட்டினாள். அவள் பார்வை பின்னால் வந்த ஆதிராவைக் கண்டதும் துணுக்குற்றது.

''வாங்கோ அம்மா! நல்லா இருக்கேளா...?'' மரியாதையுடன் கேட்டாள் சாரதா.

அவளுக்கு ஆதிராவை கண்டாலே உள்ளுக்குள் உதறல். யக்ஞுத்துக்காக தன் வாழ்வை அர்ப்பணித்து கொண்டவள் என்று வாகீசன் அவளை பாராட்டிக் கொண்டிருந்தாலும், அவள் ஆபத்தானவள் என்று உள்ளுணர்வு எச்சரிக்கும். கேரளாவின் 'கருப்பு' சாம்ராஜ்யத்தின் ஒரு பிரஜை இந்த ஆதிரா என்று இவர்கள்

பட்டாம்பிக்கு ஒரு முறை சென்ற போது, அக்கம் பக்கத்தைச் சேர்ந்த பலர் சாரதாவிடம் சொல்லியிருக் கிறார்கள்.

''உங்க மருமகன் யக்ஞுத்தை அவகிட்டே விட்டு வைக்காதீங்க. மருந்து வச்சு அவனை பைத்தியமாக் கிட்டு சொத்தை அபகரிச்சுடுவா...'' என்று அவர்கள் எச்சரிக்க, வாகீசன் அவர்கள் கூறுவதை பொருட்படுத் தாமல், யக்ஞுத்தை அவளிடம் நம்பி ஒப்படைத்தார். அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை.

இன்று யக்ஞும் கம்பீரமான வாலிபன். திரண்ட சொத்துக்களுக்கு அதிபதி! படிப்பு இல்லையென்றாலும் நல்ல அனுபவசாலி.

ம்ருகா புருஷோத்தமன் மீது ஆசை பட்டுவிட, அவனைக் காட்டிலும் யக்ஞுமூர்த்தியே அவளுக்கு பொருத்தமானவன் என்று வாகீசனுக்கும் சாரதாவுக்கும் தோன்றிவிட்டது. அதனால்தான் உடனே கிளம்பி வரும்படி யக்ஞுத்துக்கு கடிதம் போட்டிருந்தார்.

யக்ஞுத்துடன் ஆதிராவும் வருவாள் என்று சாரதா எதிர்பார்க்கவில்லை! ஒரு வேளை ஆதிரா வந்தால் அவளை வைத்து ம்ருகாவை சமாளிக்க முடியும் என்று தன் கணவன் நினைக்கிறாரோ என்னவோ!

ஆதிராவை நமஸ்கரித்தாள் சாரதா.

''நல்லாயிரும்மா!'' ஒரு வார்த்தையில் கூறிய ஆதிராவின் கண்கள் பம்பரமாய் சுழன்றன.

''இந்த வீட்டில்தான் உனக்கு யட்சிணி தரிசனம் கிடைக்க போகிறது'' மீண்டும் மனதிற்குள் குரல் ஒலித்தது.

''மாமா எங்கேயாக்கும்?'' யக்ஞும் கேட்டான்.

''குளிச்சுண்டு இருக்கார்! நீங்க வாங்க! காபி டிபன் சாப்பிடலாம்...''

டைனிங் ஹாலை நோக்கி நடந்த சாரதாவை இருவரும் பின்தொடர்ந்தனர்.

திருவல்லிக்கேணியிலிருந்து அசுர வேகத்தில் காரை ஓட்டி வந்த ம்ருகா, அதே வேகத்தில் தனது பங்களாவினுள் காரைத் திருப்பினாள்.

'புருஷோத்தமனுக்கு கல்யாணம்' என்கிற விஷயம் மீண்டும் மீண்டும் அவள் சிந்தையில் சக்கரமாய் சுழல, அவளது ஆத்திரமெல்லாம் தன்னை ஏமாற்றிய வாகீசன் மீது திரும்பியது.

அப்பாவை முதலில் பழி வாங்க வேண்டும் என்கிற வெறி உதிக்க, என்ன செய்வது என்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அவள் பார்வை ஒரு ஓரமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த அந்த நீலநிற மாரிஸ் மைனர் காரின் மீது விழுந்தது.

இது போதாதா, கூரிய அறிவு படைத்த ம்ருகாவுக்கு! அன்று நடந்தேறிய சதிதிட்டத்தின் சூத்திரதாரி வாகீசன் தான் என்பதை அடுத்த கணமே புரிந்துக்கொண்டாள், ம்ருகா.

அப்பாதான் யக்ஞுத்தை வரவழைத்திருக்கிறார். இவளுக்கு தெரியாமல் புருஷோத்தமன் கல்யாணத்தை நடத்திவிட்டு, இவளை யக்ஞுத்துக்கு மணமுடிக்கும் திட்டத்துடன் அவனை தருவித்திருக்கிறார். பின் எதற்காக அவன் இங்கே வந்திருக்கிறான்?

அவளுடைய கோபமெல்லாம் வெறியாக மாறியது. வாகீசன் கோர்ட்டுக்கு கிளம்புவதற்காக அவருடைய ப்ளைமவுத் கார் போர்ட்டிகோவில் தயாராக நின்றிருக்க, டிரைவர் கரிகாலன் காரைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

வெறியுடன் அந்த ப்ளைமவுத்தை நோக்கியவள், அதன் பின்பாகத்தை குறிவைத்து ஜாகுவரை வேகமாக செலுத்தினாள், அந்த ஜாகுவார் ப்ளைமவுத்தின் மீது பெரும் சத்தத்துடன் மோத, டிரைவர் கரிகாலன் பயத்துடன் நான்கடி பின்னால் நகர்ந்து, போர்ட்டிகோ தூணில் மோதிக்கொண்டான்.

பாத்ரூமிலிருந்து அப்போதுதான் வெளிவந்திருந்த வாகீசன், அவருக்காக துணிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்த சாரதா, ஆதிராவின் தட்டில் இட்லிகளை அடுக்கிக் கொண்டிருந்த சமையல்காரி கோமதி, மிளகாய் பொடியில் எண்ணெய் வார்த்து அதை குழைத்துக் கொண்டிருந்த யக்ஞும், என்று எல்லோர் காதிலும் ‘டமார்’ என்று கார்கள் மோதிக் கொள்ளும் சத்தம் கேட்க, பதறிப்போய் அனைவரும் போர்ட்டிகோவிற்கு விரைந்தனர்.

ஆதிரா மட்டும் தனக்குள் சிரித்தபடி இட்லியை உண்டாள். ''யட்சிணி வந்துட்டா போல இருக்கே'' என்றவள், இட்லி துண்டத்தை வாயில் திணித்தாள்.

உக்கிர காளியாய் டிரைவர் சீட்டில் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ம்ருகா உட்கார்ந்திருந்தாள். கார்கள் மோதியதால் கண்ணாடி நொறுங்க, ஒரு சிறிய கண்ணாடித் துண்டு அவள் நெற்றியை பதம் பார்த் திருந்தது. அதனால் பெருகிய இரத்தத்தை பொருட் படுத்தாமல், இடிபட்ட ப்ளைமவுத்தையே எரித்து விடுபவள் போல பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன்னை சுதாரித்துக் கொண்ட கரிகாலன் அவளிடம் வந்தான்.

''சின்னம்மா! நெத்தியில காயம் பட்டிருக்கே! நீங்க இறங்கி வாங்க...!'' ஜாகுவாரின் கதவை திறக்க முயன்றான்.

''டேய்! கிட்டே வராதே! கொன்னுடுவேன் போடா!'' ஆவேசமாக அவன் நெஞ்சில் கைவைத்து தள்ள, அவன் மீண்டும் போர்ட்டிகோ தூணில் மோதிக்கொண்டான்.

''வாட் ஹேப்பண்ட் டார்லிங்'' வாகீசன் இறங்கி வர, அவரை ஆத்திரத்துடன் பார்த்தாள்.

''கிட்டே வராதீங்க டாடி, மரியாதை கெட்டுடும்'' என்னை நீங்க ஏமாத்திட்டீங்க. எனக்கும் அந்த புருஷோத்தமனுக்கும் கலியாணம் பண்ணி வைக்கிறதா சொல்லிட்டு, என் கழுத்தை அறுத்திட்டீங்க! யூ... நோ... இந்நேரம் அவனுக்கு கல்யாணம் நடந்து முடிஞ்சிருக்கும்...''

எரிமலையென அவள் வெடிக்க, வாகீசன் மற்றும் சாரதா மனதில் நிம்மதி பரவியது. அதை வெளிக் காட்டிவிட போகிறோமே என்கிற பயத்தில் மிகவும் சிரமப்பட்டு, அந்த உணர்வை அடக்கினர்.

“வந்து... ம்ருகா! நான் சொல்றதை கேளு!” வாகீசன் தடுமாற, யக்ஞும் அதே சமயம் போர்ட்டிகோவுக்கு வந்தான்.

“ம்ருகே சௌக்கியமோ?” சிரித்தபடி யக்ஞும் கேட்டதுதான் தாமதம்.

ஆவேசத்துடன் காரிலிருந்து இறங்கியவள், தன் அறையை நோக்கி கூப்பாடு போட்டுக் கொண்டே நடந்தாள்.

“இந்த கன்ட்ரி ப்ரூட்டை என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது”

நெற்றியில் இரத்தம் கொப்பளிக்க கத்திக்கொண்டு சென்றவளை, டைனிங் டேபிள் முன் அமர்ந்து இட்லியை சாப்பிட்டுக்கொண்டிருந்த ஆதிரா பார்த்தாள். இடக்கையால் மடியில் முடிந்திருந்த அந்த வெள்ளிக் குப்பியை ஒரு தரம் ஸ்பரிசித்தவள், விஷமப் புன்னகை யுடன் மாடியேறும் ம்ருகாவையே வெறித்தாள்.

கோபம் அடங்கி, தானே கீழே வருவாள் என்று அனைவருமே காத்திருக்க, இரவு வரை ம்ருகா வரவில்லை.

மனது கேட்காமல், ஒரு தட்டில் ம்ருகாவுக்கு கொஞ்சம் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு மாடிக்கு

சென்றாள் கோமதி. அவளது அறைக்கதவை தட்டுவதற்காக எத்தனித்தவள், கதவு ஒருக்களித்து திறந்துக் கொள்ள சற்று நிதானித்தாள்.

உள்ளே ம்ருகாவுடன் யாரோ இருந்தார்கள். பேச்சுக்குரல் கேட்டது.

தயக்கத்துடன் உரையாடலை கவனிக்க தொடங்கினாள். உள்ளே ஆதிரா அந்தர்ஜனம்தான் ம்ருகாவிடம் பேசிக் கொண்டிருந்தாள். உரையாடலைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்த கோமதியின் முகத்தில் குழப்பம் நிலவி, அது பிறகு பீதியாக மாறியது.

உள்ளே பேச்சுக்குரல் நின்று போக, அதை கூட கவனியாது தான் கேட்ட விஷயங்களை எண்ணி பிரமித்துப் போயிருந்தாள்.

படாரென்று கதவு திறந்தது.

''என்ன வேணும்'' கடுமையுடன் கோமதியை பார்த்தாள், அந்தர்ஜனம்.

''ம்ருகாவுக்கு சாப்பாடு கொண்டு வந்திருக்கேன்...''

''வச்சுட்டு போ!'' அடித்தொண்டையில் இருந்து ஆதிராவின் குரல் கட்டளையாக ஒலிக்க, கோமதியின் நெஞ்சை பயம் கவ்வியது.

அவசரமாக அறையினுள் நுழைந்து, அங்கிருந்து மேஜையின் மீது சாப்பாடு தட்டை வைத்துவிட்டு, நிமிர்ந்தவள், திகைத்துப்போய் நின்றாள்.

ம்ருகாவா அது?

அவளையே மலைத்துப்போய் பார்த்துக் கொண்டிருக்க, ஆதிரா ஆத்திரத்துடன் அவளை நெட்டித் தள்ளினாள்.

“கீழே போடி!”

கோமதி நடுக்கத்துடன் அவசரமாக கீழே இறங்கினாள். கீழே சோபாவில் உட்கார்ந்திருந்த வாகீசன், சாரதாவிடம் சென்றாள்.

“சீக்கிரம் மாடிக்கு போங்கோ! ம்ருகா என்னவோ மாதிரி இருக்கா... பார்க்கவே பயமா இருக்கு...” கோமதி பதறினாள்.

கோமதி சொன்னதும்தான் தாமதம். வாகீசனும், சாரதாவும் அவசரமாக மாடிக்கு ஓட, அதைப் பார்த்து யக்ஞமும் அவர்களை பின் தொடர்ந்தான்.

ம்ருகாவின் அறைக்குள் நுழைந்தவர்கள் திகைத்து போயினர்.

சர்வாலங்கார பூஷிதையாக ஒரு கல்யாண பெண்ணைப்போல தன்னை சிங்காரித்துக்கொண்டு ஒயிலாக உட்கார்ந்து இருந்தாள் ம்ருகா.

“டாடி, மம்மி! நான் யக்ஞம் அங்கிளை கலியாணம் செஞ்சுக்க தயார். சீக்கிரம் ஏற்பாடு பண்ணுங்கோ...”

ம்ருகா சொல்ல அனைவரும் அதிர்ச்சியுடன் ஆதிராவைப் பார்க்க, அவள் யக்ஞத்தை சிரிப்புடன் பார்த்தாள்.

''என்ன யக்ஞும்! கல்யாணத்தை எங்கே வச்சுக்கலாம்?''

''ம்ருகே... என்னை கலியாணம் பண்ணிக்க சம்மதிச்சுட்டாளா?'' யக்ஞும் இன்ப அதிர்ச்சியில் ஆழ்ந்திருந்தான்.

''அங்கிள்... உங்களுக்கு என்னை பிடிச்சிருக்கா?...'' ம்ருகா கேட்டாள்.

''என்ன ம்ருகே இப்படி கேட்கறே! உனக்காகத்தானே நான் இவ்வளவு நாளா காத்துக் கிடக்கிறேன்...!''

ம்ருகா யக்ஞத்தின் காலில் விழ, வாகீசன் தன் கண்களையே நம்பாமல் சாரதாவைப் பார்த்தார்.

'கல்யாண பொண்ணு மாதிரிதானே அலங்கரிச்சுண்டு இருக்கா, ம்ருகா! இதைப் பார்த்து பயப்பட என்ன இருக்கு? கோமதி ஏன் பயந்து போய் கீழே ஓடி வந்தா... எப்படியோ யக்ஞத்தை கலியாணத்தை பண்ணிக்க சம்மதிச்சாளே! அது போதும்...' தனக்குத் தானே பேசியபடி கீழே இறங்கினாள் சாரதா. அவள் கவனித்து பார்த்திருந்தால், ம்ருகாவின் நெற்றியில் கருஞ்சாந்து பொட்டு ஒன்று வட்டமாக மிளிர்வதைப் பார்த்திருக்கலாம்.

அன்றிரவு-

சமையலறையை ஒட்டிய டைனிங் ஹாலில் படுத்திருந்தாள் கோமதி.

வழக்கமாக கட்டையை கிடத்திய உடனேயே தூக்கம் வந்துவிடும் கோமதிக்கு. அன்று ஏனோ தூக்கம் வராமல்

இப்படியும் அப்படியும் புரண்டுக் கொண்டிருந்தாள். ம்ருகாவின் அறையில் அவள் கண்ட காட்சி அவளை பெருங் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தது.

ஏதோ ஒரு விசித்திரமான காட்சியை மாமி கண்டிருந்தாள். ஆனால் அது இன்னதென்று அவளுக்கு புலப்படவில்லை. ம்ருகாவின் அறைக்குள் நுழைவதற்கு முன் ஆதிராவும் அவளும் பேசிக் கொண்டிருந்ததை எண்ணிப்பார்த்தாள். அவள் குழப்பம் அதிகரித்தது. 'கேட்கக் கூடாதது எதையோ கேட்டு விட்டோம். பார்க்க கூடாதது எதையோ பார்த்து விட்டோம்!' அதனால்தான் ஆதிரா கோபத்துடன் இவளை வெளியே தள்ளினாள். அப்படி என்ன நாம் பார்த்தோம்? மீண்டும் யோசித்தாள், கோமதி.

ம்ருகா அறையினுள் உணவுதட்டுடன் நுழைந்த நேரத்திலிருந்து நடந்தவற்றை நினைவு கூர்ந்தாள், கோமதி.

கல்யாண பெண் அலங்காரத்தில் கண்ணாடி முன் உட்கார்ந்திருந்தாள், ம்ருகா. இதில் என்ன ஆச்சர்யம்? ஆனால்... ஏதோ ஒன்று மனதில் உறுத்துகிறது. ஆனால் சிந்தையில் எட்டவில்லை.

குதிரையாக பாய்ந்து கொண்டிருந்த சிந்தனையை கட்டுபடுத்தி தூக்கத்தில் ஆழ நினைத்தவள், எழுந்து அருகில் இருந்த கூஜாவை திறந்து 'க்ளக் க்ளக்' என்று தண்ணீரை குடித்தவள், மீண்டும் படுத்துக் கொண்டாள்.

கண்களை மூடியபடி உறங்க முற்பட்டாள். திடீரென்று, ஒரு சிறு பொறி வெளிச்சமாக அவள் நினைவில் பரவியது.

உணவு தட்டுடன் ம்ருகாவின் அறைக்குள் நுழைந்தவள், அதை மேஜை மீது வைத்துவிட்டு திரும்பினாள். தற்செயலாக மணப்பெண் கோலத்தில் கண்ணாடி முன் உட்கார்ந்திருந்த ம்ருகாவை பார்த்தபடி திகைத்துப்போய் நின்றாள். கண்ணாடியில் அவள் பிம்பத்தைப் பார்த்ததும் குழம்பிப்போனாள். ஆமாம்! ம்ருகாவின் முகம் கண்ணாடியில் வித்தியாசமாக காணப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் அது ம்ருகாவின் முகமே இல்லை. கடுமையுடன் காணப்பட்ட வேறு ஒரு முகம்தானே தென்பட்டது.

கோமதியின் உடல் சில்லிட்டது. இந்த வீட்டில் ஏதோ நடக்கிறது! யக்ஞுத்துடன் வந்திருக்கும் ஆதிரா ஆபத்தானவள். ம்ருகாவுக்கு ஏதோ கெடுதல் நினைக்கிறாள். அவள் பேசும்போது யட்சிணி, புதையல் என்றெல்லாம் சொன்னாளே...!

நாளை காலை எழுந்தவுடன் முதல் வேலையாக சாரதா மாமியை எச்சரிக்க வேண்டும்!

திடீரென

கோமதியின் கால்பக்கமாக 'கிர்கிர்' என்று ஏதோ சத்தம். தூக்கிவாரிப்போட கண் விழித்தாள். ஆண்டனி நாய்தான் நின்றுக் கொண்டிருந்தது. அதன் அருகே கையை கட்டியபடி ம்ருகா நிற்க, அவள் பின்னால் ஆதிரா கோமதியை முறைத்தபடி நின்றிருந்தாள்.

''என்ன மாமி! தூக்கம் வர்றலியா?'' ஏதோ சொல்ல முற்பட்ட கோமதியின் சிந்தையில், நூலிழை பட்டென்று அறுந்தது போன்ற உணர்வு.

மறுநாள்

சாரதா கீழே இறங்கி வந்தாள்.

''மாமி! காபி தயாரா?'' கேட்டபடி சமையலறைக்குள் நுழைந்தவள் விக்கித்து போனாள்.

கோமதி புடவையை தாறுமாறாக கிழித்துக்கொண்டு, கூந்தலில் மாவைக் கொட்டிக்கொண்டு, 'கே... கே' என்று இளித்தபடி, தனக்குத்தானே பேசிக் கொண்டிருந்தாள். அவளால் சாரதாவை இனங்கண்டு கொள்ளவே முடியவில்லை.

கோமதியின் நெற்றியில் வட்டமாக கருஞ்சாந்து பொட்டு ஒன்று காணப்பட்டதை கண்டாள் சாரதா.

அனாதையான கோமதி அன்று பிற்பகலுக்குள்ளாக, பைத்தியகார ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப் பட்டாள்.

# 21. கருஞ்சாந்து பொட்டு

## 1940 - திருவல்லிக்கேணி

''அம்மா! என்னோட இந்த மாச சம்பளம்'' புருஷோத்தமன் நீட்டிய கவரை பிரித்து பணத்தை எண்ணினாள் வனஜா.

''என்னடா! உன் சம்பளம் 250 தானே! இதுல நானூறு இருக்கே!'' வியந்தாள்.

''எனக்கே ஆச்சரியம்தாம்மா! முதலியார் கிட்டே அதிகமா கொடுத்திட்டீங்கோன்னு சொன்னேன். அதுக்கு அவர் 'நான் கால் வச்ச நேரம் நல்ல நேரமாம்! ரொம்ப நாளா... இழுத்துண்டு இருந்த கேசுல அவர் ஜெயிச்சுட்டாராம்! இலண்டன் ஷேர் மார்க்கெட்ல வேற நல்ல லாபம் கிடைச்சுதாம்! அதனால என் சம்பளத்தை உயர்த்திட்டார்...''

''எல்லாம் ஜ்யோத்ஸனா வந்த வேளை'' வனஜா பெருமிதத்துடன், காபியை ஆற்றியபடி வந்த மருமகளை பார்த்தாள்.

''புருஷோத்தமா! உன் மாமனார் வந்திருந்தார். ஜ்யோத்ஸனாவை சீமந்தம் முடிஞ்ச கையோட அவா ஆத்துக்கு அழைச்சுண்டு போறாளாம்... நீ என்ன சொல்றே?'' வனஜா கேட்டாள்.

"என்னை ஏம்மா கேட்கறே! நீ என்ன சொல்றியோ அதுதான்...!"

ஜ்யோத்ஸனா அடுக்களையினுள் புக, புருஷோத்தமன் ஜாடையாக அவள் பின்னால் எட்டிப் பார்ப்பதை ஓரக்கண்ணால் கவனித்தாள் வனஜா.

ஏதோ நினைவுக்கு வந்தது போல திடீரென எழுந்து நின்றாள்.

"ஜ்யோத்ஸனா! நான் சுபத்ரா மாமியாத்துக்கு போயிட்டு வர்றேன். கொஞ்சம் நாழி ஆகும். எனக்கு காத்துண்டு இருக்காம, ரெண்டு பேரும் பொழுதோட சாப்பிட்டுட்டு படுத்துக்கோங்கோ..." என்றபடி வாசலை நோக்கி நடந்தாள்.

சுபத்ரா மாமியுடன் நேரம் போவது தெரியாமல் வயலின் வாசித்துக் கொண்டும் பேசிக்கொண்டும் பொழுதை போக்கிய வனஜா, தன் வீட்டிற்கு கிளம்பிய போது மணி ஒன்பதாகிவிட்டது.

"துணைக்கு பையனை அனுப்பட்டா?" சுபத்ரா மாமி கேட்க, அவசரமாக தலையசைத்து மறுத்தாள் வனஜா.

"இதோ எட்டடியில இருக்கு எங்காம்! வழியெல்லாம் தெரிஞ்ச மனுஷா! என்ன பயம் மாமி" என்றபடி விடைபெற்றுக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

குளக்கரை பக்கமாகத் திரும்பியபோதுதான், அந்த பெண் இவள் எதிராக வந்தாள். அவளுக்கு வழிவிட்டு சற்றே ஒதுங்க, அவளோ நேராக இவளை நோக்கியே

வந்தாள். கையிலிருந்த ஏதோ ஒரு பொருளால் இவள் கையை கீற, வேதனையுடன் குனிந்தாள் வனஜா. அந்த பெண் கண்ணாடி துண்டம் ஒன்றினால் இவள் மணிக்கட்டை கீறியிருந்தாள்.

''ஐயையோ! மன்னிச்சுக்கம்மா... ரத்தம் வருதே...'' அந்த பெண்மணி பெருகிய ரத்தத்தை துடைக்க முயல, எரிச்சலுடன் வனஜா தலைநிமிர்ந்த அதே நேரம், அந்த சிவப்பு நிற கார் இவளை உரசுவது போல வந்து நின்றது.

உள்ளே ம்ருகா உட்கார்ந்திருந்தாள் ''என்ன மேடம்! சௌக்கியமா?'' ம்ருகா கேலியாக கேட்டதும், வனஜாவுக்கு சப்த நாடியும் ஒடுங்கியது.

''அந்தர்ஜனம்! நான் சொன்னேன் இல்லை! என் மனசை கவர்ந்த புருஷோத்தமனை என் கிட்டே சேரவிடாம பிரிச்சவள் இவதான்! அவனோட அம்மா...!''

இப்போது வனஜாவின் முகம் சலனமின்றி அமைதியாக இருந்தது.

''நீ என்ன பண்றே! இதோ... இருக்கே கோவில் குளம்! அதுல இறங்கி உன் உயிரை விடறே...'' ம்ருகா காட்டமாக கூற, இயந்திரகதியில் வனஜா குளத்தில் இறங்கினாள்.

''தொபக்'' என்று வனஜா குளத்தில் விழும் ஒலி கேட்டதுமே, அந்த கார் அங்கிருந்து விரைந்து சென்று மறைந்தது.

அன்றிரவு

வனஜா வீடு திரும்பவில்லையே என்கிற கவலையில் புருஷோத்தமன் சுபத்ரா மாமி வீடு உள்பட திருவல்லிக்கேணி முழுவதிலும் தன் அம்மாவைத் தேடினான்.

மறுநாள் காலை ரகோத்தம ராவ்தான் பரபரப்புடன் வந்தார்.

''புருஷோத்தமா! உன் அம்மா கோவில் குளத்தில் பிணமா மிதக்கிறா''

அலறிக்கொண்டு ஓடினார்கள். புருஷோத்தமனும், ஜ்யோத்ஸனாவும்.

வனஜாவின் உடலை எடுத்து குளக்கரையில் கிடத்தியிருந்தனர். புருஷோத்தமன் அம்மாவின் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறிக்கொண்டிருக்க, அழக்கூட திராணியில்லாமல், மாமியாரின் உடலையே பார்த்துக் கொண்டிருந்த ஜ்யோத்ஸனா திடுக்கிட்டாள்.

வனஜாவின் நெற்றி மையத்தில் வட்டமாக கருஞ்சாந்து துலங்கியது. தன் மாமியாருக்கு சாந்து வைத்துக்கொள்ளும் வழக்கமில்லையே! குழப்பத்துடன் வெறித்துக் கொண்டிருந்தாள், ஜ்யோத்ஸனா.

அன்றொருநாள், நாம்மாழ்வார் ஆஸ்பத்திரியில் சமுத்திரத்தில் விழுவேன் என்று சொன்ன அம்மாவிடம், இதோ அருகிலேயே கோவில் குளம் இருக்கிறதே என்று தான் கிண்டல் செய்தது நினைவுக்கு வர, புருஷோத்தமன் அதிர்ச்சியில் உறைந்து போனான்.

# 22. ஆரா அமுதம்

## 1940 - திருவல்லிக்கேணி

ஜ்யோத்ஸனாவுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. உடனடியாக கடிதம் போட்டு நம்பாடுவானை வரவழைத்தான் புருஷோத்தமன்.

குழந்தையின் சகடநாடியை படித்த நம்பாடுவான் திருப்தியுடன் தம்பதியை நோக்கினார்.

''புருஷோத்தமா! அந்த யட்சிணியை ஜெயிக்கிற ஆயுதம் இவன்தான்! மூல நட்சத்திரத்துல பொறந்திருக்கான். இனிமே நீ எந்த கவலையும் படவேணாம்... கூடிய வரையில் அவ கண்ணுல படாம இருந்தா போதும்...''

புருஷோத்தமன் நிம்மதி அடைந்தான் ''தாத்தா! கொஞ்ச நாளாகவே அவளால தொல்லை இல்லை! அவளுக்கும் அவ மாமாவுக்கும் கல்யாணம் நிச்சயமாகி இருக்கிறதா கேள்விப்பட்டேன். இனிமே அவ என் விஷயத்துல குறுக்கிடுவான்னு தோணலை.''

நம்பிக்கையுடன் பேசிய தன் கணவனை பரிதாபமாக பார்த்தாள் ஜ்யோத்ஸனா. குளத்தில் விழுந்து உயிரை விட்ட தன் மாமியாரின் நெற்றியில் இருந்த கருஞ்சாந்துப்

# 23. யக்ஞ - புருஷன்

## 1940 - சென்னை

அடையாறு ஆற்றை ஒட்டிய அந்த சாலையை அடைத்து விஸ்தாரமான பந்தல் போடப்பட்டிருந்தது. தனது பங்களாவுக்கு அருகே இருந்த மைதானம் ஒன்றை வாடகைக்கு எடுத்து மிக விமரிசையாக ம்ருகாவின் கல்யாணத்தை நடத்தினார், வாகீசன்.

கவர்னரே கல்யாணத்துக்கு வருகை தந்திருந்தார். விதேசி, சுதேசி மற்றும் இதர விருந்தினர்கள் மூக்கில் விரலை வைக்கும்படி பாட்டு கச்சேரி, சாப்பாடு என்று எதிலுமே குறைவைக்காமல் தடபுடல் செய்து விட்டார்.

கல்யாணம் முடிந்து ம்ருகாவுக்கு முதலிரவு. சாரதா ம்ருகாவை அலங்கரித்து யக்ஞமூர்த்தி இருந்த அறைக்கு கொண்டு விட்டாள்.

அறைக்குள் நுழையாமல் சாரதா திரும்பி செல்லும்வரை அங்கேயே நின்ற ம்ருகா, பிறகு மெதுவாக மொட்டை மாடியை நோக்கி சென்றாள்.

அங்கே

அந்தர்ஜனம் வானத்தைப் பார்த்தபடி தனிமையில் அமர்ந்திருந்தாள்.

பொட்டைப் பற்றி நம்பாடுவானிடம் கூறி விட நினைத்தாள். நிம்மதியாக இருக்கும். தன் கணவனை மீண்டும் குழப்புவானேன் என்று அந்த எண்ணத்தை கைவிட்டு அடுக்களைக்கு சென்றாள்.

புருஷோத்தமனுக்கு ஆயிரம் எச்சரிக்கைகளை கூறிவிட்டு, நம்பாடுவான் ஊருக்கு கிளம்பினார்.

''அந்தர்ஜனம்''

ம்ருகா அழைப்பதைக் கேட்டு திரும்பிப் பார்த்தாள், ஆதிரா

''நீ கேட்டபடி உன்னோட புதையலை எடுக்கறதுக்கு நான் உதவறேன். நான் கேட்டதை பதிலுக்கு நீ தரணும்...''

உச்சி குளிர்ந்து போனது, ஆதிராவுக்கு. எழுந்து வந்து, ம்ருகாவை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

''ம்ருகே! நான் கேட்டது பெரிய விஷயம்! அதையே நீ செஞ்சு தர்றேன்னு சொல்றச்சே, நீ கேட்கற சின்ன விஷயத்தை நான் செய்யாம இருப்பேனா?...

''உனக்கு வேண்டியது இந்தக் கருஞ்சாந்து குப்பி தானே... எடுத்துக்கோ. நீ ஆசைப்படற புருஷோத்தமன் சீக்கிரமே உன் காலடியில் வந்து விழுவான்...''

அவள் நீட்டிய வெள்ளிக் குப்பியைப் பெற்றுக் கொண்ட ம்ருகா, யக்ஞம் இருந்த அறையை நோக்கி நடந்தாள்.

இந்த நாளுக்கு தானே வெகுகாலம் காத்திருந்தான் யக்ஞம். உள்ளே நுழைந்த ம்ருகாவை ஆசையுடன் கட்டி அணைத்தபடி கட்டிலை நோக்கி நடந்தான். அவன் பிடியிலிருந்து திமிறிய ம்ருகா, தட்டிலிருந்த ஆப்பிள் ஒன்றை எடுத்து, கத்தியால் நறுக்கி, 'இந்தாங்கோ' என்று யக்ஞத்திடம் நீட்டினாள். அவன் பழத்தை வாங்க கைநீட்டியபோது, சட்டென்று கையிலிருந்த கத்தியால் அவன் கையை கீற, இரத்தம் குபுக்கென்று வந்தது.

''ஐயையோ... சாரி இரத்தம் வருதே! இருங்கோ மருந்து கொண்டு வரேன்'' என்றபடி அடுத்த அறைக்கு சென்றாள். ஆதிரா தந்த வெள்ளிக் குப்பியை திறந்து, அதில் இருந்த கருஞ்சாந்தை தன் நடுவிரலில் தீற்றினாள்.

மீண்டும் பள்ளியறைக்கு வந்தவள், யக்ஞத்தின் கையில் மருந்தை தடவுவது போல, அவன் நெற்றியில் கருஞ்சாந்தை தீற்றினாள்.

''ம்ருகா! உன்னை கல்யாணம் பண்ணிக்கணும்னு நான் வேண்டாத தெய்வம் இல்லை! இங்கலீஷ் தெரியாத என்னை நீ கல்யாணம் பண்ணிக்க மாட்டி யோன்னு நினைச்சேன்! எப்படியோ நாம ஒண்ணு சேர்ந்துட்டோம்... இனிமே'' என்று பேசிக் கொண்டிருந்த யக்ஞம் திடீரென மௌனம் சாதித்தான்.

''என்ன யக்ஞம்! பேசறதை நிறுத்திட்டீங்க!''

கிணற்றுக்குள்ளிருந்து ஒலித்தது அவன் குரல்.

''நான் யக்ஞமூர்த்தி இல்லை! நான் புருஷோத்தமன்!''

''நிஜமாவா! என் கண்ணுக்கு நீங்க யக்ஞமூர்த்தியா தான் தெரியறீங்க!''

''இல்லை ம்ருகா! நான் புருஷோத்தமன்! என்னை புருஷோத்தமனா நினைச்சு பாரு! நான் புருஷோத்தமனா தெரிவேன்!''

ம்ருகா அவனை நோக்கி நகர்ந்தாள். அவனது முகத்தை தன் இருகைகளால் ஏந்தி, அவனைக் கூர்ந்து கவனித்தாள்.

இப்போது

அவள் கண்களுக்கு அவன் புருஷோத்தமனாக தோன்றினான்.

''புருஷ்!''

''ம்ருகா!''

'புருஷ்' என்கிற புனைபெயரில் தனது திருமண வாழ்வில் முதல் அத்தியாயத்தை எழுத தொடங்கி யிருந்தான், யக்ஞமூர்த்தி. அவனை யக்ஞபுருஷனாக மாற்றி விட்டிருந்தாள், ம்ருகா!

# 24. நடுஇரவில் ஒரு விருந்து

## 1942 - சென்னை

சென்னை அட்மைராலடி ஹால்!* கவர்னர் ஆர்தர் ஹோப் பெரிய 'பால்' விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். சர் வாகீசன், ம்ருகநயனானி இருவருமே முக்கிய விருந்தினர்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர். தன்னை விசேடமாக அலங்கரித்துக் கொண்டிருந்தாள் ம்ருகா. கருப்பு நிற பட்டுப் புடவையில் ஜொலித்தாள்.

வெள்ளைக்கார சீமாட்டிகள் அவளுடைய புடவையை ''ஹவ் நைஸ்'' என்று சுற்றி நின்று பாராட்டினர்.

'காட் சேவ் தி கிங்'

என்று பாண்ட் குழுவினர் இங்கிலாந்து மன்னரை போற்றி கீதம் இசைக்கத் தொடங்கியவுடன், அனைவரும் மரியாதையுடன் எழுந்து நின்றனர்.

கவர்னர் ஆர்தர் ஹோப்பே உடன் சேர்ந்து பாடத்தொடங்க, அங்கிருந்தவர்களும் கோரஸில் சேர்ந்துக் கொண்டனர்.

---

*** தற்போதைய இராஜாஜி ஹால்**

கீதம் நின்றதும், விருந்து தொடங்கியது. கவர்னர் ஹோப் ஒவ்வொரு டேபிளாக சென்று பேசிக் கொண்டிருந்தார். சிலர் ஆங்காங்கே ஜோடிகளாக பால் டான்ஸ் ஆடிக்கொண்டிருந்தனர். ம்ருகாவிடம் வந்த கவர்னர், அவள் வலக்கையின் பின்புறத்தைப் பற்றி முத்தமிட்டார்.

''யூ லுக் டாஸ்லிங், டியர்!''

''தாங்க்யூ'' ம்ருகா முறுவலித்தாள்.

''சர் வாகீஷ்! ஐ யாம் அப்பாயிண்டிங் யுவர் டாட்டர் ஹாஸ் மை இன்டர்பிரெட்டர்... ஐ திங் ஷீ வில் சூய்ட் த ஜாப்'' ஹோப் கூறினார்.

''அட் யுவர் சர்விஸ், யுவர் எக்ஸலன்ஸி!'' ம்ருகா தலையை பணிவுடன் தாழ்த்தினாள்.

கவர்னர் அடுத்த மேஜைக்கு போக, வாகீசன் பூரிப்புடன் ம்ருகாவைப் பார்த்தார்.

''இதுதான் ஹனி வாழ்க்கை! போயும் போயும் அந்த ட்ரிப்ளிகேன் பையன் மேல ஆசைப்பட்டியே...'' என்று சொல்ல ஆரம்பித்தவர், தனது பூனைக் கண்களால் ம்ருகா உறுத்துப்பார்ப்பதை கண்டதும், அமைதியானார். இரவு முழுவதும் விருந்து நீண்டுக்கொண்டே போனது.

இரவு மணி பன்னிரெண்டு! சிலர் விடைபெற்றுப் போக, ம்ருகாவும் வாகீசனும் புறப்பட ஆயத்தமாயினர். கவர்னரிடம் விடைப்பெற்றுக் கொண்டு, அட்மைராலடி ஹாலின் பிரும்மாண்ட படிகளில் இறங்கினர்.

டிரைவர் கரிகாலன் காரை ஹாலின் பின்புறமாக நிறுத்தியிருந்தான். ம்ருகாவும் வாகீசனும் தங்கள் காரை தேடியபடி பின்புறமாக சென்றனர்.

அட்மைராலடி ஹாலின் பின்புறம் இருந்த விஸ்தாரமான புல்வெளியில் நிறைய ஆங்கிலேயர்கள் குழுமியிருந்தனர். கூச்சலும் சிரிப்புமாக இருந்தவர்களிடையே திடீர் பரபரப்பு.

ஒரு பெண் வீல் என்று அலறினாள்.

★ ★ ★

அன்று வைகுண்ட ஏகாதசி

திருவல்லிக்கேணியே தூங்காமல், நடு இரவில் பார்த்தசாரதி பெருமாள் மாட வீதிகளை வலம் வரும் நிகழ்ச்சிகளை எதிர்பார்த்து காத்திருந்தது. ஒவ்வொரு வீட்டின் முன்பும் பெரிய கோலம் போடப் பட்டிருந்தது.

புருஷோத்தமன் கோவிலுக்கு சென்றிருந்தான். தேரடித் தெருவில் இப்போது அவன் குடி வந்திருந்தான். வனஜா இறந்த பிறகு, பழைய வீட்டில் இருக்கப் பிடிக்காமல் நண்பன் நாகராஜன் வீட்டு பக்கத்து வீட்டில் ஒரு போர்ஷனை வாடகைக்கு எடுத்திருந்தான்.

தேரடித் தெருவில் அனைவரும் பெருமாளின் வருகைக்காக காத்திருக்க, அப்போது அந்த தெருவில் நுழைந்தது அந்த சாரட். ஒரு இந்திய சிப்பாயும் இன்னும் இரண்டு ஆங்கிலேய சிப்பாய்களும், அந்த சாரட்டில் அமர்ந்திருக்க, அது நேராக புருஷோத்தமன் குடியிருந்த வீட்டின் முன் வந்து நின்றது.

வாசலில் நின்றுக்கொண்டிருந்த ஜ்யோத்ஸனாவை அவசரமாக அழைத்தனர், சிப்பாய்கள்.

''யுவர் சர்வீஸஸ் ஆர் ரிக்வயர்டு டு தி கவர்னர்...''

''ஐயோ... குழந்தை உள்ளே தனியா தூங்கறான்.''

ஜ்யோத்ஸனா மறுக்க, சிப்பாய்கள் அவள் பதற்றத்தை இலட்சியம் செய்யாமல், அவளைத் தரதரவென இழுத்துக் கொண்டு போய் சாரட்டில் ஏற்றினார்கள்.

ஜ்யோத்ஸனா அலற, சாரட் அவசரமாக அங்கிருந்து பறந்தது. இந்தக் காட்சியை பார்த்து திகைத்துப் போன அக்கம்பக்கத்தினர், அதிர்ச்சியிலிருந்து மீண்டனர்.

''என்ன... இது அநியாயம்? இவங்களை கேட்பாரே இல்லையா?'' என்று சிறு முணுமுணுப்பாக கிளம்பியது, கோபம்

''ஜ்யோத்ஸனா... அழகா இருக்காளோனோ... அதுதான் அவா கண்ணுல பட்டுட்டா...'' ஒரு பாட்டி விஷயத்தை திசைதிருப்ப, அவ்வளவுதான் விஷயம் காட்டுத்தீயாக பரவியது.

உலா வர இருந்த பெருமாளை மறந்த மாட வீதிவாசிகள், ஜ்யோத்ஸனாவை சிப்பாய்கள் இழுத்து சென்றதை பற்றி கதை கதையாக பேசிக் கொண்டிருந்தனர்.

கோவிலில் இருந்து வந்த புருஷோத்தமன் அனைவரும் தன்னை ஒரு மாதிரியாக பார்ப்பதைக் கண்டதும் திகைத்தான். நாகராஜன் வந்து விவரத்தை கூற,

பதைபதைத்துப்போன புருஷோத்தமன், சைக்கிளில் அட்மைராலடி ஹாலுக்கு விரைந்தான்.

மறுநாள் காலை

திருவல்லிக்கேணி வீட்டு வாசலில் சாரட் வந்து நிற்க, ஜ்யோத்ஸனா அதிலிருந்து இறங்கி தன் போர்ஷனை நோக்கி நடந்தாள். அவளுக்கு பெரும் அதிர்ச்சி!

ஜ்யோத்ஸனா என்று வாய் நிறைய கூப்பிடும் அக்கம்பக்கத்தினர் இவளைக் கண்டதும், முகத்தை திருப்பிக் கொண்டனர். சிலர் தங்கள் போர்ஷன் கதவை மூடிக் கொண்டனர்.

எதிர்ப்பட்ட வீட்டுக்கார ஐயங்கார் இவள் முகத்தை ஏறெடுத்து கூட பார்க்காமல், ''இதோ பாரும்மா! அடுத்த மாசத்துக்குள்ளே காலி பண்ணிடு'' என்றபடி திரும்பி பாராமல் நடந்தார்.

ஏன் இவர்கள் இப்படி நடந்துக் கொள்கிறார்கள் என்று புரியாமல் தன் போர்ஷனுக்குள் நுழைந்தவளுக்கு பெருத்த அதிர்ச்சி காத்திருந்தது.

வீட்டில் புருஷோத்தமன் இல்லை! குழந்தை ஆராவமுதன் மட்டும் தனியாக அழுதுக் கொண்டிருந்தது.

# 25. விடைகேட்டான்; விடை பெற்றாள்

### 1942 - திருவல்லிக்கேணி

குழந்தை அமுதனுடன் ஜ்யோத்ஸனா தன் அண்ணன் வரதன் வீட்டில் தஞ்சமடைந்து ஒரு வருடம் ஆகிவிட்டது.

வெறும் வாயை மெல்லும் திருவல்லிக்கேணி வாசிகளுக்கு அவல் கிடைத்துவிட, ஜ்யோத்ஸனாவின் அன்றாட வாழ்க்கையை நரகமாக்கி விட்டார்கள். குழந்தை அமுதனுக்காக எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள். புருஷோத்தமன் திரும்பி வருவான் என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாள்.

''எப்படி வருவான்! அவன் மானஸ்தன்...'' மன்னி பத்மாசினி கூறிய வார்த்தைகள் ஊசியென அவள் இதயத்தை தைத்தன. குழந்தைக்காக பொறுமையை கடைபிடித்தாள்.

''அம்மா! எனக்கு அப்பா கிடையாதா?'' ஒருநாள் பள்ளிக்கூடத்தில் இருந்து வந்த அமுதன் கேட்டான்.

''உன் அப்பாவை புருஷாமிருகம் பிடிச்சுண்டு போயிடுத்துடா கண்ணா..'' சோகமாக சொன்னாள் ஜ்யோத்ஸனா.

மற்றொரு நாள் -

''அம்மா! என் அப்பா ஒரு வெள்ளைக்காரரா? எல்லோரும் சொல்றாளே!''

ஜ்யோத்ஸனா நொறுங்கிப் போனாள்.

மறுநாள்

அமுதன் பள்ளிக்கு கிளம்பி சென்ற போது அவனை உச்சி முகர்ந்து கட்டியணைத்து முத்தம் தந்து விடைபெற்றாள்.

அவன் மாலை பள்ளியிலிருந்து திரும்பி வந்த போது காணாமல் போயிருந்தாள் ஜ்யோத்ஸனா.

# 26. நிலவறையில் நிம்மதி

## 1942 – பாலக்காடு, பட்டாம்பி

**“ம்**ருகா...!”

ஆதிரா அந்தர்ஜனம் தன் பின்னால் வந்து நிற்பதை உணர்ந்தும், கண்டும் காணாதவளாக, நீல நிற மாரீஸ் மைனர் காரில் கோயமுத்தூருக்கு கிளம்பிக் கொண்டிருந்த யக்ஞமூர்த்திக்கு விடைத்தரும் சாக்கில், கையை ஆட்டி ‘டாட்டா’ காட்டிக்கொண்டிருந்தாள், ம்ருகா. ஆதிரா மனதில் ஆயிரங்கேள்விகளுடன் அவள் பின்னால் நின்றுக் கொண்டிருப்பது தெரியும். அவளை எப்படி சமாளிப்பது என்று தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தாள், ம்ருகா.

அந்தர்ஜனம் உண்மையிலேயே பொறுமையை இழந்து விட்டாள்.

யக்ஞம் கோவைக்கு கிளம்பி போகட்டும்! அதற்கு பிறகு ம்ருகாவை ஒரு வழி செய்து விடலாம் என்று பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருந்தாள், ஆதிரா.

அவன் கார் அகன்றதும், இதோ வந்து நின்று விட்டாள்.

ம்ருகாவுக்கும், யக்ஞத்துக்கும் திருமணம் நடைபெற்ற அன்றே ஆதிரா அந்தர்ஜனம், ம்ருகாவுடன் இரகசியமாக ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டாள்.

புருஷோத்தமனை அவள் வசம் நிரந்தர அடிமையாக கிடக்கும்படி செய்கிறேன்.

பதிலுக்கு

திருவனந்தபுர கோவிலில் புதைந்து கிடக்கும் அவள் முன்னோர்கள் யாக்கரா ஜமீனின் பரம்பரை சொத்தான புதையலை எடுக்க ம்ருகா உதவ வேண்டும் என்பதே ஆதிராவின் நிபந்தனை.

''இது ஒரு பெரிய வேலையே இல்லை, ஆதிரா! நான் கவர்னர் ஆர்தர் ஹோப்போட மொழிபெயர்ப்பாளர். நான் ஒரு வார்த்தை அவருகிட்டே சொன்னேனா... போதும்... நிச்சயம் அதை எடுக்கறதுக்கு உதவி செய்வார்! உன் வம்சத்து சொத்து... உன்கிட்டே வந்துடும்...'' என்று ம்ருகா கூறியிருந்தாள். ஆதிராவும் உற்சாகத்துடன் ம்ருகா கேட்டபடி புருஷோத்தமனை வளைத்துக்கட்ட உதவி செய்தாள்.

ஜியோத்ஸனாவை தேடி அட்மைராலடி ஹாலுக்கு புருஷோத்தமன் வர, அவனை தன் வசம் வீழ்த்துவதற்கு அதுவே நல்ல தருணம் என்பதை உணர்ந்த ம்ருகா, அவனை மயக்கி தன் காரிலேயே நேராக பாலக்காடு அழைத்துச் சென்றாள்.

அவள் எதிர்பார்த்தது போல, அன்று யக்ஞும் வீட்டில் இல்லை. தனது எஸ்டேட்டை பார்க்க, சிக்மகளூர் சென்று விட, ம்ருகாவுக்கு வசதியாக போய்விட்டது.

பாலக்காட்டு வீட்டிலேயே புருஷோத்தமனை தங்க வைத்தாள்.

‘‘ஆதிரா! புருஷோத்தமனை நீ சொன்னபடியே அழைச்சுண்டு வந்துட்டேன்? அடுத்தது என்ன...?

‘‘அடுத்தது... நாம மூணு பேரும் யாக்கரா கிராமத்துக்கு போறோம்! ‘கருஞ்சாந்து’ உபயோகித்து அவனை வசியப்படுத்த போறேன். அவன் பட்டாம் பிலேயே இருக்கட்டும்! யக்ஞுத்துக்கு எதுவும் தெரிய வேணாம்!...’’

‘‘யக்ஞும் பட்டாம்பிக்கு போகறச்சே... புருஷ்’ஷை பார்த்துட்டா என்ன பண்றது.’’

‘‘பட்டாம்பி வீடு என்னோடது, ம்ருகா! அங்கே யக்ஞும் வர்றதே கிடையாது... அப்படி தப்பித்தவறி வந்தாலும் கவலையில்லை. அந்த வீட்டுல இருக்கிற நிலவறையில புருஷோத்தமனை ஒளிச்சு வச்சுடலாம்... நிலவறை இருக்கிறதோ, எங்களோட யாக்கரா புதையலை பத்தியோ, யக்ஞுத்துக்கு நான் சொல்லவே இல்லை!

‘‘நிஜமாவா? புதையல் விஷயம் வேற யாருக்கும் தெரியாதா?’’

‘‘தெரியாது...! எனக்கு அப்புறம் உன்கிட்டே மட்டும் தான் நான் சொல்லியிருக்கேன்! நீயும் யக்ஞுத்துக்கு கிட்டே சொல்லாதே...’’ ஆதிரா எச்சரித்திருந்தாள்.

‘‘எப்படி சொல்வேன் அந்தர்ஜனம்! என் குடுமி உன் கையில... உன் குடுமி என் கையில! நீ புருஷோத்த மனைப் பத்திய விவரத்தை யக்ஞுத்து கிட்டே சொல்லாதே! நான் புதையலைப் பத்தி மூச்சு விட

மாட்டேன்...!'' ஆதிராவிடம் ம்ருகா உறுதி கூறியிருந்தாள்.

ஆதிரா தான் சொன்னபடி செய்தாள். புருஷோத்த மனை பூஜை மூலம் வசியம் செய்து அவனை, ம்ருகா சொல்வதை மட்டும் கேட்கும் படியான மனநிலைக்கு தள்ளியிருந்தாள்.

அவனை பட்டாம்பியில் ஆதிராவின் வீட்டிலேயே தங்க வைத்திருந்தாள், ம்ருகா!

இதோ

யக்ஞும் கோயமுத்தூர் கிளம்பி போக, ம்ருகாவுக்கு பட்டாம்பி சென்று புருஷோத்தமனைக் காண வேண்டும் என்கிற துடிப்பு.

''நான் சொன்னதை செய்துவிட்டேனே! நான் கேட்டதை நீ எப்போது செய்யப்போகிறாய்'' என்று நச்சரிக்க ஆரம்பித்திருந்தாள், ஆதிரா அந்தர்ஜனம்.

''நான் கவர்னர் ஹோப் கிட்டே பேசிட்டேன்! யக்ஞும் கோவைக்கு கிளம்பி போன உடனே நாம பேசலாம்...'' என்று காலையில் ஆதிராவிடம் சொல்லி, கொஞ்சம் அவகாசம் வாங்கியிருந்தாள்.

இனிமேல் சால்சாப்பு சொல்ல முடியாது! ஆதிரா நம்பும்படியாக எதையாவது கூறிவிட்டு அவளை கழற்றி விட வேண்டும். என்ன செய்யலாம்! மனதிற்குள் யோசித்துக் கொண்டிருந்தாள், ம்ருகா!

யக்ஞத்தின் கார் வளைவில் மறைந்து விட, மெதுவாக திரும்பி ஆதிராவின் கண்களை நோக்கினாள்.

''ஆதிரா! கவர்னர் ஹோப் கிட்டே புதையல் விஷயம் பத்தி பேசினேன்! மலைச்சு போயிட்டார்! முதல்லே அவர் நம்பவே இல்லை! என் மாமியார் கிட்டே ஆதார பட்டயம் இருக்குனு சொன்னேன். ஆச்சர்யபட்டாரு! தன்கிட்டே ஆதாரத்தை காட்டி நிரூபிக்க முடியுமானு கேட்டார்...

ஆதிரா உஷாரானாள். ''ம்ருகா! என்னோட பட்டயத்தை நான் யார்கிட்டேயும் தர மாட்டேன்! புதையல் எங்க யாக்கரா ஜமீனுக்கு சொந்தமான துங்கிறதுக்கு ஒரே ஆதாரம் இதுதான்! அதை நான் எப்படி, கவர்னர்கிட்டே தர முடியும்!''

''எனக்கு தெரியாதா... அந்தர்ஜனம்! அதுக்குத்தான் நான் ஒரு ஐடியா வச்சிருக்கேன்!

''யக்ஞும் திரும்பி வர ரெண்டு நாள் ஆகும்! அதனால நானும் நீயும் இப்பவே யாக்கரா கிராமத்துக்கு கிளம்பி போகலாம்! அந்த நிலவறையை எனக்கு காட்டு! அதை ஃபோட்டோ பிடிச்சு, கவர்னர் கிட்டே காட்டப் போறேன். அப்பதான் அவருக்கு நம்பிக்கை வரும்!... புதையல் இருக்கறது உண்மைனா அவரு திருவாங்கூர் சமஸ்தானத்துக் கிட்டே பேசி யாக்கரா ஜமீன் புதையலை வாங்கி கொடுத்துடறேன்னு சொல்லி யிருக்கார்'' திருவாங்கூர் சமஸ்தானம் கவர்னரோட நட்பாதானே இருக்கா...!'' ம்ருகா சொல்ல,

ஆதிரா முகம் மலர்ந்தது. ''இது நல்ல யோசனை'' என்றாள்.

''ஆனா அந்தர்ஜனம்! புதையலை நான் எடுத்துக் கொடுத்ததும், புருஷோத்தமன் விவகாரத்தை யக்ஞும் கிட்டே சொல்லக்கூடாது...!'' ம்ருகா பதிலுக்கு எச்சரித்தாள்.

''நான் ஏன் சொல்லப் போறேன்! புதையலை எடுத்த உடனேயே நான் என் வழியே போகப்போறேன்! யக்ஞும் நான் பெத்த பிள்ளையா என்ன..., அவனோட காலமெல்லாம் ஒட்டி உறவாட! அந்த இடத்துல, திரும்பி என் குலதெய்வ கோவிலை பெரிசா கட்டி, கும்பாபிஷேகம் செய்யப் போறேன்! இது ஒண்ணுதான் என்னோட ஆசை! அதை முடிச்சுட்டேனா... நான் உயிரை விட தயார்...'' ஆதிரா சொன்னாள்.

''அப்ப தயாரா இரு... ஆதிரா'' ம்ருகா சொன்னாள் குழப்பத்துடன் ம்ருகாவை ஏறிட்டாள் ஆதிரா.

''யாக்கரா கிளம்பறதுக்கு ரெடியாகு'னு சொன்னேன்.'' ம்ருகா கூற, ஆதிரா தலையசைத்தாள்.

யாக்கரா கிராமம்! ஆதிராவின் வீட்டில் புருஷோத்தமன் நன்றாக தூங்கிக் கொண்டு இருந்தான்.

''கொஞ்ச நாளைக்கு அவன் அப்படிதான் இருப்பான்! பிறகு சரியாகி விடும்...'' ஆதிரா அவளுக்கு சமாதானம் சொன்னாள்.

தன் கேமராவை எடுத்துக் கொண்டு ஆதிராவைப் பின் தொடர்ந்தாள், ம்ருகா.

வீட்டின் சமையலறைக்கு சென்ற ஆதிரா, கீழே விரிக்கப்பட்டிருந்த சணல் மிதியடியை விலக்க, கீழே நிலவறையின் கதவு தெரிந்தது.

தாளை நீக்கி கதவை உயர்த்திய ஆதிரா, கையில் விளக்குடன் உள்ளே இறங்க, அவளைப் பின் தொடர்ந்து இறங்கினாள் ம்ருகா.

''ஆதிரா! பார்க்கறதுக்கே பிரமிப்பா இருக்கு! இந்த நிலவரையிலேயா... உங்க ஜமீன் சொத்துக்களை வச்சிருந்தாங்க...!''

''ஆமா!'' கர்வத்துடன் சொன்னாள் ஆதிரா! ''இந்த நிலவறை அந்தக்காலத்துல புழாதரன் கோவிலோட கஜானா பகுதியா இருந்தது... இந்த நிலவறை முழுக்க வைர வைடூரிய நகைகளும் தங்ககட்டிகளும் இருந்ததாம்...!''

ம்ருகா அவளை மதிப்புடன் பார்த்தாள்.

''எவ்வளவு பெரிய வம்சத்தை சேர்ந்தவ... நீ அந்தர்ஜனம்...!''

அந்தர்ஜனதுக்கு பெருமை பிடிபடவில்லை. ''சீக்கிரம்... போட்டோ எடு... ம்ருகா...!''

ஆதிரா... நிலவரையில் இருந்த யட்சிணி விக்ரகத்தை நோக்கி பயபக்தியுடன் கை கூப்பிவிட்டு அதன் முன்னே விளக்கை வைத்தாள்.

''ஐயையோ'' ம்ருகா தலையில் கை வைத்தாள்.

''என்னாச்சு... ம்ருகா''

''நிலவறை இருட்டா இருக்கும்னு நான் எதிர் பார்க்கலை! ஃபோட்டோ எடுக்க ஃப்ளாஷ் இல்லாம வந்துட்டேன்! மேல ரூம்ல இருக்கு... நான் போய் எடுத்துண்டு வரேன்...'' ம்ருகா சொன்னாள்.

''சீக்கிரம் எடுத்துண்டு வா... அதுக்குள்ளே நான் நிலவறையை பெருக்கிடறேன்.'' கையில் விளக்கு மாறை எடுத்தபடி, நிலவறையை கூட்ட ஆரம்பித்தாள், ஆதிரா.

மெதுவாக நிலவறைப் படிகளில் ஏறிய ம்ருகாவின் உள்ளே மிருகம் விழித்துக்கொண்டது.

நிலவறை இருப்பது யக்ஞும் உள்பட யாருக்குமே தெரியாது! புதையல் விஷயத்தை யாரிடமும் ஆதிரா கூறியிருக்கவில்லை!

இப்போது ஆதிரா அந்தர்ஜனம் நிலவறையில் இருக்கிறாள். அவள் அதன் உள்ளே இருப்பது ம்ருகாவுக்கு மட்டும்தான் தெரியும். வெளியுலகிற்கு தெரியவே தெரியாது!

புருஷோத்தமன், புதையல் எல்லாமே இவளுக்கு சேர வேண்டும் என்கிற போது அந்தர்ஜனம் எதற்கு நடுவில்?

அந்தர்ஜனத்தை நிலவறையிலேயே 'அந்தர்ஜனமாக இருக்க செய்தால் என்ன?

அடுத்த கணம்

ஆம்... அப்படித்தான் செய்ய வேண்டும்! ஆதிரா எங்கே... என்று யக்ஞும் கேட்பான்! எதையாவது கூறி சமாளித்துவிடலாம். இனி அந்தர்ஜனம் இவள் வழியில் குறுக்கிடகூடாது.

நிலவறையின் மேலே வந்தவள், சடாரென்று அதன் கதவை மூடி தாளிட்டு, மீண்டும் சணல் மிதியடியை அதன் மீது பரத்தினாள்.

நிலவறை கதவு பெருத்த ஓசையுடன் மூடப்பட, அந்த ஒலி ஆதிராவின் காதில் விழுந்தது.

திகைப்புடன் படிகளை நோக்கினாள்.

''ம்ருகா...!''

பதில் இல்லை! பரபரப்புடன் படிகளில் ஏறினாள். நிலவறை கதவு மூடப்பட்டிருந்தது.

ஆதிரா அந்தர்ஜனத்தின் உடல் சில்லிட்டது. ''ம்ருகே!'' என்று மீண்டும் அழைத்தாள். மௌனம்தான் நிலவியது.

ம்ருகா தன்னை முதுகில் குத்தி விட்டாள் என்பதை புரிந்து கொள்வதற்கே ஆதிராவுக்கு அதிக நேரம் பிடித்தது.

''ம்ருகே... ம்ருகே...'' என்று தொண்டை நீர் வரள, கதவைத் தட்டிக் கொண்டிருந்தவள், இனி ம்ருகாவை நம்பி பயனில்லை, என்கிற ஞானோதயம் ஏற்பட, வேறு வழியின்றி, யட்சிணி விக்ரகத்திடம் சரணடைய எண்ணி பயத்துடன் படிகளில் இறங்கினாள்.

யட்சிணி விக்ரகம் வைத்திருந்த இடத்திற்கு சென்றாள். பயபக்தியுடன் கை கூப்பினாள்.

அதிர்ந்துப் போய் நின்றிருந்தாள் ஆதிரா.

யட்சிணி விக்ரகம் அவள் வைத்திருந்த இடத்தில் காணப்படவில்லை.

அப்போதே மூச்சு திணர ஆரம்பித்தது, ஆதிரா அந்தர்ஜனத்துக்கு.

# 27. கல்விளக்கு

## 1957 - சிதம்பரம்

"இதுதாண்டா அமுதா உன் கதை!" நம்பாடுவான் சொல்லி முடிக்க, கனத்த இதயத்துடன் உட்கார்ந்திருந்தான் அமுதன்.

"அன்னைக்கு காணாமல் போன உன் அப்பாவைப் பத்தி அதற்கப்புறம் எந்த தகவலும் இல்லை!" நம்பாடுவான் கண்கள் கலங்கின... "எப்படி வாழ்ந்த குடும்பம் இப்படி ஆயிடுத்து!"

அமுதன் மௌனம் சாதித்தான்.

நம்பாடுவான் ஆறுதலாக அவன் கையைப் பிடித்து தட்டிக் கொடுக்க, அவன் வேதனையுடன் அவரைப் பார்த்தான்.

"தாத்தா! அந்த வைகுண்ட ஏகாதசி அன்னைக்கு என்ன நடந்தது?"

"தெரியலை! சிப்பாய்ங்க உங்கம்மாவை அவசரமா இழுத்துட்டு போனாங்க! மறுநாள் காலைலதான் அவ வந்தா! அவளைத் தேடிப் போன உங்கப்பா திரும்பி வரவேயில்லை! வெள்ளைக்காரங்க அவனைக் கொன்னுட்டதா கூட சிலபேர் சொன்னா! மனசு

உடைஞ்சு தற்கொலை பண்ணிட்டான்னு இன்னும் கொஞ்ச பேர் சொன்னா...!''

''நீங்க அதை நம்பறேளா... தாத்தா?''

''நான் எப்படி நம்புவேன், அமுதா! உன் குடும்பத்தை பத்தி அறிஞ்சவன் நான். உங்கப்பாவோட சகட நாடியை படிச்சதால சொல்றேன்! அவனுக்கு அந்த மாதிரி துர் மரணம் ஏற்பட வாய்ப்பில்லை.

அமுதன் நம்பிக்கையடைந்தான்.

''அப்ப எங்கப்பா உயிரோட இருக்காரா?''

''இருக்கணும்! ஒரு வேளை அந்த ம்ருகா கிட்டே சிக்கியிருக்கலாம்...''

யோசித்தபடி உட்கார்ந்திருந்த அமுதன் ஒருவித தீவிரத்துடன் எழுந்தான்.

''தாத்தா! பிரிஞ்சிருக்கிற என் குடும்பத்தை நான் ஒண்ணு சேர்க்கப்போறேன்! அதுக்கு உங்க ஆசீர்வாதம் வேணும்!''

''நீ கேட்கவே வேண்டாம், அமுதா! என் ஆசி உனக்கு எப்பவும் உண்டு! உங்கப்பா நாடிப்படி அவனுக்கு பிள்ளையால விமோசனம் பொறக்க வாய்ப்பு இருக்கு! ஆனா... நீ முதலுல தேடவேண்டியது அம்மாவை!''

''நான் அம்மாவை எங்கே போய் தேடறது?''

ஆதூரத்துடன் அவனைத் தட்டிக் கொடுத்தார் நம்பாடுவான்.

''நீ செய்ய போறது பெரிய யுத்தம்! ஜென் மாந்தரங்களா உன் அப்பாவை துரத்துற யட்சிணியோட மோதப் போறே! அவள் ரொம்ப ஆபத்தானவ! அவளோட மோதறத்துக்கு முன்னாடி நீ உன்னை ஆயத்தப் படுத்திக்கோ.

''எப்படி தாத்தா... பண்றது? அதுக்கு ஏதாவது பூஜை பண்ணனுமா?

நம்பாடுவான் சிரித்தார்.

''பூஜையெல்லாம் செய்ய வேண்டாம்! நீ பண்ணற காயத்ரி ஜபமே உன்னை காப்பாத்தும்! நான் சொல்ல வந்தது வேற...''

''இப்போ நீ பதினாறு வயது குமரன். உனக்கு பொண்ணுங்க மேல ஈடுபாடு உண்டாகற பருவம்! அவங்களோட உறவுக்காக மனசு ஏங்கும்! மனசை நீ கட்டுப்படுத்து! உன் அப்பாவை பிடிச்சு வச்சிருக்கிற ம்ருகா, மதன பயங்கரி வகையைச் சேர்ந்தவள்! சல்லாபமே அவ ஆயுதம்! அதை முறியடிக்கிற ஒரே ஆயுதம் உனது பிரும்மச்சரியம்தான்...!''

''உனக்கு புரியும்னு நினைக்கிறேன்! உங்கப்பாவை அவகிட்டேர்ந்து மீட்டு உங்கம்மா கிட்டே ஒப்படைக்கிற வரைக்கும், நீ எந்த பொண்ணோடவும் உறவு வச்சுக்காதே...

''பாம்பு தனது விஷத்தை கக்காம தேக்கி வச்சா, அது நாளடைவுல மாணிக்க கல்லா ஆகிடறது போல, உன் இந்திரிய சக்தியை தேக்கி வச்சேனா, ஒப்பில்லாத

பிரம்மச்சரிய சக்தி உனக்கு கிடைக்கும். மதனபயங்கரி பயப்படும் ஒரே சக்தி பிரம்மச்சரிய சக்தி! அதை கடைபிடி!''

''சரி தாத்தா!'' உறுதி முகத்தில் கொப்பளிக்க, தலையாட்டினான், அமுதன். நம்பாடுவான் அவனை அன்புடன் பார்த்தார்.

''அது சுலபமில்லை, அமுதா! பிரம்மச்சரியம் கடை பிடிக்கிறது ரொம்ப கஷ்டம்! கோபம் வரும்! சிந்தை கலங்கும்! போர்க்குணம் பெருகும்! இலக்கை அடைய விடாமல் புத்தி பேதலிக்கும்! எல்லாத்தையும் சமாளிக் கணும். எல்லாத்தையும் விட, அந்த யட்சிணி நீ புருஷோத்தமனை காப்பாத்த வரேணு தெரிஞ்சுட்டா உன்னை அவள் குறி வைப்பா! நீ ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். உன்னை காப்பாத்த போற ஒரே ஆயுதம் உன்னோட கட்டுப்பாடுதான்...!'' நம்பாடுவான் எச்சரித்தார்.

''தாத்தா! உடனடியா நான் என்ன செய்யணும்?''

நம்பாடுவான் அவன் நெற்றியில் கை வைத்தார்.

**''மூலத்திலுதித்த மைந்தா கேள்!**
**இலக்கொன்று உனக்குண்டு காண்**
**ஆலக்கால நஞ்சாய் காமகிழத்தி உன்**
**அத்தனை அபகரித்தாள்; அவள்**
**குலையறுக்க காலமுண்டு நீயறிவாய்**
**நலமுண்டதுவரை நானுரைப்பேன்**
**பிராயங்கள் கழிய காத்திருப்பாய்.**

''என்ன சொல்றீங்க தாத்தா''

''யட்சிணியோட மோதறதுக்கு இன்னும் காலமிருக்கு அமுதா! அதுக்குள்ளே உன் அறிவை வளர்த்துக்கோ! நல்லா படி! நல்லா சம்பாதி! பெரிய மனுஷனா வா!''

''அப்போ... என் அப்பா அம்மாவை நான் எப்போ கண்டுபிடிக்கறது! அதுக்குள்ளே அவாளுக்கு ஏதாவது ஆயிட்டா?'' அமுதன் கவலையுடன் கேட்டான்.

''பயப்படாதே! அவங்க நிச்சம் உயிரோடதான் இருக்காங்க! அவங்களுக்கு ஒண்ணும் ஆகாது! உன் சகட நாடிப்படி நீ அவங்களோட திரும்பி சேருவேனு தெரியறது...''

நம்பாடுவான் தள்ளாடியபடி கோயில் மண்டப படியினை விட்டு இறங்கினார்.

''தாத்தா! நீங்க என் கூட வாங்களேன்! நாம ரெண்டு பேரும் சேர்ந்து என் அப்பா அம்மாவை கண்டு பிடிக்கலாம்...?'' அமுதன் கூறினான்.

நம்பாடுவான் சிரித்தார்.

''இப்ப எனக்கு என்ன வயசுனு நினைக்கிறே! 81 ஆகிறது! உனது கொள்ளு தாத்தா ஸ்ரீவத்ஸாங்கமும் நானும் ஒரே வயசு. என் ஆட்டம் இன்னும் ரெண்டு வருஷத்துல முடியப் போறது. அந்த சமயம் நீ படிச்சுண்டு இருப்பே! நீ படிப்பு முடிஞ்சு உத்யோகத்துல சேர்ந்தப்புறம்தான் உங்கப்பா அம்மாவை கண்டு பிடிப்பே! அப்போ நான் போன இடத்துல புல் முளைச்சிருக்கும்...''

அமுதன் ஏமாற்றமடைந்தான். ''உங்க உதவியாலதான் நான் அவர்களை கண்டு பிடிக்க முடியும்! நீங்க இல்லேனா எப்படி?''

''அமுதா! உன் குடும்பத்தை பத்தி இன்னைக்கு நேத்தி இல்லை! உன் கொள்ளுத்தாத்தா காலத்துலேர்ந்து உங்களுக்காக சகட வாக்கியம் படிக்கிறேன். என் காலம் முடிஞ்சு போச்சுனு இப்பதான் எனக்கு சூசகம் கிடைச்சுது. அதனாலதான் அப்படி சொன்னேன். கவலைப்படாதே!

''உன்னோட ஸ்ரீவத்ஸாங்கம் தாத்தா சாகறதுக்கு முன்னாடி என்கிட்டே ஒரு வேண்டுகோள் கேட்டார். பீமனை கண்ணன் காப்பாத்தின மாதிரி நான் புருஷோத்தமனை காப்பாத்தணும்னு சொன்னார்! நானும் சரினு தலையாட்டினேன். அப்ப எனக்கு அனுபவம் பத்தலை! என்னோட 75-வது வயசுல சகடவாக்கியம் படிக்கிற சில பேரோட அகஸ்த்ய கூடம் போயிருந் தேன். அங்க சில விசித்திர தகவல்கள் கிடைச்சது! அப்புறம்தான் எனக்கு உங்க அப்பாவை அந்த யட்சிணி கிட்டே இருந்து மீட்க முடியும்னு நம்பிக்கை பிறந்தது.

''அமுதா! நான் உயிரோட இல்லேனா கூட, என் உதவி கட்டாயம் உனக்கு கிடைக்கும்...'' நம்பாடுவான் யோசனையுடன் சொன்னார்.

''எப்படித் தாத்தா?''

''பொதுவா, ம்ருகரஞ்சிகா மாதிரி யட்சிணி யோட வசியம் சக்தி வாய்ந்தது! அதை உடைக்கிறதுக்கு எந்த சக்தியாலும் முடியாதுனு நினைச்சிருந்தேன். காரணம்,

அவ யாரை மயக்க நினைக்கிறாளோ, அவங்க ரத்தத்துளியில கருஞ்சாந்து கலந்து அவன் நெத்தியில வச்சா அவன் காலமெல்லாம் அவளுக்கு அடிமையா இருப்பான்னு கேள்விப்பட்டிருக்கேன். அந்த யட்சிணி வசியத்துக்கு மாற்று கிடையாதுங்கிறதாலதான் காப்பாத்தறது கஷ்டம்னு சொன்னேன்.

''ஆனா... நான் அகஸ்திய கூடம் போயிருந்தப்ப, அகஸ்தியர் மகான் தயாரிச்ச பூபதி குளிகை பத்தி தெரிஞ்சுகிட்டேன். இந்த பூபதி குளிகை சக்தி வாய்ஞ்சது. வசியம் செய்த யட்சிணியோட இரத்தத்துல குளிகத்தை குழைச்சு அதை வசியம் செய்யப்பட்டவர் களோட நெத்தியில பூசினா, அந்த யட்சிணி வசியம் போயிடும்னு ஒரு சுவடில படிச்சேன்...

''நாங்க ஒரு கூட்டமா அந்த குளிகத்துக்காக அலைஞ் சுண்டு இருக்கோம்! அந்த குளிகம் கிடைச்சுதுனா சுலபமா உன் அப்பாவை மீட்டுடலாம்'' நம்பாடுவான் சொன்னார்.

''தாத்தா! அந்த குளிகை கிடைச்சதுன்னா எனக்கு தகவல் தருவீங்களா?'' அமுதன் கேட்க, அவனது பார்வையில் பிரதிபலித்த நம்பிக்கை அவரை உருக்கி விட்டது.

''அமுதா! எனக்கென்னவோ... நான் உன்னை பார்க்கிறது இதுவே கடைசினு தோணுது! நீ கவலைப் படாதே. அந்த குளிகை கிடைச்சுதுனா அது தானாகவே உன்னை தேடி வரும்...''

''எப்படி தாத்தா! நான் உயர் படிப்புக்கு வெளியூர் போகலாம்னு இருக்கேன்.''

"எப்படினு நீ கேட்டா எனக்கு இப்போ பதில் சொல்ல தெரியலை. பொறுமையா இரு! காலம் கனியட்டும்... நான் உயிரோட இல்லேனா கூட, உனக்கு உதவி கிடைக்கும்."

நம்பாடுவான் யோசனை செய்தபடி நின்றவர்,. திடீரென அமுதனின் கையைப் பற்றினார்.

"அமுதா! எனக்கு ஒரு யோசனை தோணுது! என்னோட... வா..." என்றபடி இருவரும் கோவிலை விட்டு நீங்கி வாயிலுக்கு வந்தனர்.

சற்று தொலைவில் மாட்டுவண்டிக்காரன் ஒருவன் உட்கார்ந்திருந்தான்.

"ஏலே மட்டையா...!"

நம்பாடுவான் அழைக்க, அந்த வண்டிக்காரன் பணிவுடன் ஓடி வந்தான்.

"இது யார் தெரியுதா?" அமுதனை சுட்டி காட்டினார், நம்பாடுவான்.

மட்டையன் தன் இடுங்கிய கண்களால் அமுதனை ஏற இறங்க பார்த்தான்.

தெரியவில்லை என்பது போல தலையாட்ட, "நம்ம ஸ்ரீவத்ஸாங்கம் ஐயங்காரோட பேரன்டா!" என்று நம்பாடுவான் சொன்னதுமே, உடம்பெல்லாம் புல்லரிக்க அந்த கிழவன், தோளில் இருந்த துண்டை இடுப்பில் கட்டி, கையை கூப்பியபடி நின்றான்.

"சாமியோட பேரனா... நான் பார்த்ததே இல்லை. இவங்களோட அப்பாரையே சின்ன வயசுல பார்த்த

தோட சரி...'' பழைய நினைவுகளில் மட்டையன் இறங்க, அவனை தடுத்தார் நம்பாடுவான்.

''மட்டையா! எங்க ரெண்டு பேரையும் சின்னமஸ்தா கோவிலுக்கு அழைச்சுண்டு போ...'' என்றபடி வண்டியில் ஏறிக்கொள்ள, அமுதனும் அவர் பின்னால் தொற்றிக் கொண்டான்.

நீண்ட நேர பயணத்திற்கு பிறகு வயல்வெளியின் நடுவே இருந்த ஒரு சிறிய கோவில் தென்பட்டது. இருவரும் வரப்பில் நடந்து சென்று கோவிலை அடைந்தனர்.

கோயிலின் சன்னதி முடப்பட்டிருக்க, அமுதனை கோவிலின் பின்புறமாக அழைத்துச் சென்றார். அங்கே ஒரு பெரிய கல்விளக்கு நின்றது.

''அமுதா! உன் அப்பா பொறந்த சந்தோஷத்துல ஸ்ரீவத்ஸாங்கம் இந்த கோவிலுக்கு கல் விளக்கு தானம் செஞ்சார். இந்த விளக்கை செய்யறதுக்கு நான்தான் ஏற்பாடு செஞ்சேன்! இனி நான் சொல்றதை கவனமா கேளு!

''இந்த விளக்கோட மேல் குமிழை திருப்பினா, விளக் கோட, மேல்பாகத்தை அப்படியே கழட்ட முடியும்...''

மேல் குமிழைத் திருப்பி, விளக்கின் மேல்பாகத்தை கழற்றி கையில் எடுத்தார். அதன் அடியே மறைவாக, சிறு அறை இருந்தது.

''அமுதா! இந்த பகுதி எதுக்கு தெரியுமா! அந்த காலத்தில் ஜனங்க இதுல எண்ணைய நிரப்பி

வைப்பாங்க! விளக்கு ஏத்தற நேரத்துல எண்ணைக்கு அலையாம, தேவையான எண்ணையை இந்த அறைலேந்து எடுத்துப்பாங்க! கோவிலுக்கு எண்ணை தானம் செய்யறேனு வேண்டிக்கிறவங்க. இதுல தான் அதை ஊத்துவாங்க! ஆனா காலம் மாறிபோச்சு! இப்போ யாருமே இதுல எண்ணை ஊத்தறது இல்லை. கோவிலுல கூட மின்சார பல்ப் போட்டுட்டாங்க.

''இப்ப இருக்கிறவங்க இந்த கல் விளக்கை திரும்பி பாக்கறதில்லை! அப்படி இருக்கச்சே அவங்களுக்கு எங்கே இந்த விளக்குல இருக்கிற இந்த எண்ணை குழியைப் பத்தி தெரிய போறது...?

''அதனால நான் சொல்றபடி செய்! ஒரு வேளை... நான் தேடற அந்த பூபதி குளிகை கிடைச்சுதுனா, அதை நான் இந்த கல் விளக்கோட எண்ணை குழில பத்திரப்படுத்தி வக்கிறேன்! கிடைச்சாதான்!

''பிராப்தம் இருந்தா நிச்சயம் கிடைக்கும்! நீ அடுத்த முறை சிதம்பரம் வர்றச்சே இங்கே வந்து இந்த விளக்கோட எண்ணை குழியில கை விட்டு பாரு! குளிகை அதுல இருந்ததுனா நிச்சயம் உன்னால உங்கப் பாவை காப்பாத்த முடியும். அப்படி குளிகை இல்லேன்னா... உன்னால உன் அப்பாவை காப்பாத்த முடிஞ்சாக்கூட, வசியம் விடுபடாததாலே அவன் சித்தம் கலங்கியவனாகத்தான் இருப்பான்.''

அமுதன் பிரம்மிப்புடன் கேட்டுக்கொண்டிருக்க நம்பாடுவான் தொடர்ந்தார்.

''இந்த கல்விளக்கை மறக்காதே அமுதா! இது உன் தாத்தா வாங்கிக் கொடுத்தது. இந்த விளக்குதான் உன் குடும்பத்தை ஒண்ணு சேர்க்க போகுது...'' என்றவர் அமுதன் தலையில் தன் கையை வைத்து ஆசிர்வதித்தார்.

''நேரமாச்சு! கிளம்பி சத்திரத்துக்கு போ! உன் மாமா தேடப்போறார்! எலே மட்டையா! தம்பியை அழைச்சுட்டு போய் சன்னிதி தெரு சத்திரத்துல விட்டுடு...?'' என்று உத்தரவிட்டார். நம்பாடுவான் காலில் விழுந்து வ்ணங்கிய அமுதன், மட்டையனுடன் நடந்தான்.

தனது நண்பன் ஸ்ரீவத்ஸாங்கத்தின் கொள்ளுப்பேரன் அமுதன், ஏராளமான நம்பிக்கைகளோடும் கனவுகளோடும் செல்வதை கண்கள் பனிக்க பார்த்துக் கொண்டிருந்தார், நம்பாடுவான்.

அடுத்த இரண்டு வருடங்களில் நம்பாடுவானின் மரணச் செய்தி, அவன் மாமா மூலமாக அமுதனுக்கு கிடைத்தது.

# 28. தீபகர்ப்பம்

## 1967 - இலண்டன்

## யூனிவர்சிடி ஆஃப் இலண்டன்

மாடில்டா ட்யூடர் தனது காரை இலண்டன் பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் துறையின் பார்க்கிங் ஏரியாவில் நிறுத்த, அதிலிருந்து முதலில் நந்தனா இறங்கினாள். பின்னால் இருவரின் பைகளையும் சுமந்தபடி மாடில்டா இறங்க, நந்தனா ஓடிச் சென்று தன் பையை வாங்கிக் கொண்டாள். தங்க நிறத்தில் தகதகத்த தன் தலைமுடியை கோதியபடி நந்தனாவுடன் நடந்தாள், மாடில்டா.

''நந்த்! வில் புரொபசர் அரை முத்தன் அக்ரி டு மை ரிக்வஸ்ட்?''

நந்தனா கலகலவென சிரித்தாள் ''கடவுளே! அவரு அரை முத்தன் இல்லே மாட்! ஆராவமுதன்!... மீனிங்... நெக்டர்... ஹனி!''

''அரை முத்தன்!'' ஒரு முறை உச்சரித்துப் பார்த்தாள் மாட்.

''நீ உச்சரிக்கிற விதம் டாமேஜிங்கா இருக்கு! நீ வேணுமினா பாரேன்! புரொபஸர் நம்ம ரெண்டு பேரையும் 'கெட் லாஸ்ட்'னு சொல்லப் போறார்...''

''ஐ... நோ!'' மாட் சிரித்தாள்.

நந்தனா தன் ஃபைலில் பத்திரப்படுத்தியிருந்த புரொபஸர் டோனால்டு ஸ்டூவர்டின் சிபாரிசு கடிதம் இருக்கிறதா என்று ஒரு தரம் தடவிப் பார்த்தாள்.

பில்பேர்க் கல்லூரியில் நந்தனா, மாட் இருவருமே புராதன சரித்திரத்தை படித்து வந்தனர். அவர்களுடைய புரொபசர்தான் டொனால்டு ஸ்டூவர்ட். இந்தியாவைப் பற்றியும் அதன் தொன்மையான கலாச்சாரத்தைப் பற்றியும் படித்த மாடில்டாவுக்கு பிரமிப்பாக இருந்தது. இந்தியாவைப் பற்றி ஒரு டாகுமெண்டரி தயாரிக்க வேண்டும் என்று பில்பேர்க் கல்லூரிக்கும் பி.பி.சி. நிறுவனத்துக்கும் ஒப்பந்தம் ஏற்பட, மாடில்டாதான் உடனடியாக அனைவரின் கவனத்திற்கும் வந்தாள்.

புரொபசர் அமுதன் இலண்டன் யூனிவர்சிடியில் தொல்பொருள் கல்லூரியின் விரிவுரையாளராக பணியாற்றி வந்தான். திடீரென தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு, இந்தியாவுக்கே திரும்ப முடிவு செய்து விட்டதாக தகவல் வர, யூனிவர்சிடி அவனது மனதை மாற்ற முயன்று தோல்வியுற்றது. இந்த தகவலை அறிந்த டோனால்ட் ஸ்டுவார்ட்டுக்கு அந்த யோசனை பிறந்தது.

இந்தியாவைப் பற்றிய டாகுமெண்டரி தயாரிப்பதற்கு மாடில்டா, புரொபசர் அமுதனின் உதவியை நாட வேண்டும் என்று முடிவு செய்தார். மாடில்டாவுக்கு டாகுமெண்டரி தயாரிப்பதில் உதவுமாறு தன் கைப்பட அமுதனுக்கு கடிதம் எழுதினார். அந்த கடிதத்தை சுமந்து கொண்டுதான் இருவரும் புரொபசர் அமுதனை காண சென்றுகொண்டிருந்தனர்.

இருவருமே பில்பேர்க் கல்லூரியில் படிப்பதால், இலண்டன் பல்கலைக்கழகத்துக்கு குறிப்பாக தொல்பொருள் துறைக்கு முன்பு வந்தது கிடையாது.

'அமுதன்' என்கிற போர்டை தாங்கி நின்ற கதவைத் தள்ளியவர்கள்.

'எக்ஸ்க்யூஸ் மீ புரொபஸர்!' என்று கோரஸாக சொன்னவர்கள், திகைத்து நின்றனர். உள்ளே புரொபஸர் இல்லை! யாரோ ஒரு மாணவன், ஏதோ ஒரு புத்தகத்தை படித்துக்கொண்டிருந்தவன், இவர்களை ஏறிட்டுப் பார்த்தான்.

''புரொபஸர்... இல்லையா?''

''யெஸ்! ஐ யாம் புரொபஸர் ஆராவமுதன்,'' தன் கையில் இருந்த புத்தகத்தை மூடியபடி அவன் கூற, நந்தனாவும் மாட்டும் திகைத்து போய் நின்றனர்.

'இவனா புரொபஸர் அமுதன்?' வழுக்கை தலை விளக்கொளியில் தகதகக்க, சோடா புட்டி கண்ணாடி அணிந்து பட்டை வைத்த பேண்ட் அணிந்து, வாயில் பைப் புகைத்தபடி ஒரு நபரை எதிர்பார்த்திருந்த இருவரும், அவனைக் கண்டு குழம்பி போனார்கள்.

இளமையும் வாலிபமும் கூட்டணி அமைத்து அவன் நெடிய தேகத்தை கவர்ச்சிகரமாக அமைந்திருக்க, அந்த கவர்ச்சியை கம்பீரமான ஆடைகளால் மறைத்திருந்தான். அமைதியான முகம் அவனது மேதாவிதனத்தை பறை சாற்றியது.

'ப்ளீஸ்! டேக் யுவர் சீட்!' அவனது கம்பீரமான குரலில் சொக்கி போனார்கள் இருவரும்.

"உங்களுக்கு என்ன செய்யணும்?" மரியாதையுடன் கேட்டான்.

நந்தனா நீட்டிய கடிதத்தை வாங்கிய மாட், அதை அமுதனிடம் கொடுக்க, அவன் அதை பிரித்துப் படித்தான்.

சற்று நேரம், அந்த கடிதத்தையே வெறித்துப் பார்த்தவன், 'ஓகே' என்றபடி அதை மடித்தான்.

"தாங்க்யூ புரொபஸர்!" மகிழ்ச்சியோடு இருவரும் எழுந்துக்கொள்ள, 'வெயிட்' என்று அவர்களை கையமர்த்தியவன், இன்டர்காமில் மூன்று காபிக்கு ஆர்டர் செய்தான்.

அமுதன் பார்வை மாடில்டா பக்கத்தில் அமர்ந்திருந்த நந்தனாவின் மீது படர்ந்தது. அவன் கண்கள் வியப்பில் ஆழ்ந்தன.

இலண்டனில் இந்திய கலச்சாரத்திற்கு தகுந்தபடி தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்த பெண்ணை முதன் முறையாக பார்க்கிறான் இலண்டனில் இந்திய பெண்கள் குறைவு. அப்படி அங்கு வசித்த பெண்களும், பெரும்பாலும் வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள்தான்.

ஒரு தென்னிந்திய பெண் குறிப்பாக தமிழ் பேசும் பெண்ணை பார்த்ததுமே அவன் மனம் துள்ளாட்டம் போட்டது.

அவளது வெண்மை நிறத்தை எடுத்துக் காட்டும் நேவி ப்ளூ சேலை, காதில் தங்க வளையங்கள், தலைமுடியை இரட்டை பின்னல்களாக போட்டு ஒன்றை முன்புறமும் மற்றொன்றை பின்புறமாகவும் விட்டிருந்தாள். ஆடம்பர

மில்லாத அலங்காரம், ஆர்ப்பாட்டமில்லாத அழகு, பளிச்சென்று இருந்த அந்த பெண் உடனடியாக அமுதனை ஈர்த்துவிட்டாள்.

''இவங்க பேசமாட்டாங்களா?'' அமுதன் நந்தனாவை சுட்டிக்காட்டி மாடில்டாவிடம் கேட்டான்.

''அவள் ஒரு ஓல்ட்மேனை எதிர்பார்த்தாள்! ஸ்மார்ட்டா உங்களை பார்த்த உடனே... ஃப்ளாட் ஆயிட்டா...!''

மாட் சிரிக்க, நந்தனா அவள் தொடையை இரகசியமாக கிள்ளினாள்.

அமுதன் புன்னகைத்தபடி நந்தனாவை பார்க்க, அவள் சங்கோஜத்துடன் தலைகுனிய, அதையும் ரசித்துப் பார்த்தான் அமுதன்.

ஒரு பெண் ட்ரேயில் காபி கொண்டு வர, அமுதன் தானே இரண்டு கப்களை எடுத்து நந்தனாவிடமும் மாட்டிடமும் தந்து விட்டு, பிறகு தனக்கும் ஒரு கப்பை எடுத்துக்கொண்டான்.

''ஸோ... இண்டியாவைப் பத்தி படம் எடுக்க போறீங்க...'' காபியை உறிஞ்சியபடி கேட்டான்.

''யெஸ்'' என்றபடி காபியை பருகுவதில் கவனம் செலுத்திய மாட், கோப்பையை மேஜையின் மீது வைத்த பிறகே பேசினாள்.

''புரொபஸர்! இந்தியாவை பத்தி ஒரே வார்த்தையில உங்களால சொல்ல முடியுமா?... ஐ... மீன்! உலக நாடுகளுல இந்தியாவுக்கு என்ன பொசிஷன் கொடுப்பீங்க?'' மாட் கேட்க, அமுதன் யோசித்தான்.

''ஒரே வார்த்தையில சொல்றேன்! கர்ப்பபை'' அமுதன் புன்னகைத்தான்.

பெண்கள் இருவரும் அவனை விசித்திரமாக பார்த்தனர்.

''கர்ப்பபையா... புரியலையே!''

அமுதன் பெருமிதத்துடன் சொன்னான்.

''ரொம்ப ஈஸி! மனிதனோட உறுப்புல முக்கிய மானது எதுனு கேட்டா ஒருத்தன் இதயம்னு சொல்லு வான். ஒருத்தன் மூளைனு சொல்லுவான்! ஒருத்தன் கண்ணுனு சொல்வான்! இன்னொருத்தன் வயிறுனு சொல்வான். ஆனா முழுசா ஒரு மனுஷன் உருவாகிற இடமே, அவன் தாயோட கர்ப்பபை தானே!

''எத்தனையோ அங்கங்களை கொண்டு மனுஷன் சாதனைகள் படைச்சாலும், அவனை உருவாக்கின இடம் அவன் அம்மாவோட கருப்பைதான். அதை விட சிறந்த இடம் உண்டா?

''இன்னைக்கு எத்தனையோ நாடுகள் நிறைய சாதனைகள் செஞ்சிருந்தாலும், இந்த உலகம் உருவான இடம், கணிதம், கலைகள், விஞ்ஞானம், ஆத்ம ஞானம் எதை எடுத்துண்டாலும், அது உருவான இடம் இந்தியாதான்!

''உலக ஞானங்களை உருவாக்கின கர்ப்பப்பை இந்தியாதான்''

அமுதன் விளக்க, நந்தனா பிரமித்துப் போனாள்.

எத்தனையோ பேர் இவளிடம் இந்தியாவை கிண்டலடித்து பேசியுள்ளனர். அவர்களிடம் இம்மாதிரி ஆணித்தரமாக பதில் கூற தோன்றியதில்லையே...

மாட் அமுதனை மடக்கி விட நினைத்தாள்.

''புரொபஸர்! நீங்க இந்தியாவை கர்ப்பபைனு சொல்றது கரெக்ட்தான்! அதனால்தான் உங்க நாட்டுல ஜனத்தொகை அதிகமா இருக்கோ?''

''ஜனத்தொகை பெருக்கத்தை நீங்க நெகடிவா பாக்கறீங்க! எங்க நாட்டுல அதை பாசிடிவா பாக்கறோம்! நீங்க வேணுமினா பாருங்க! உங்க ஐரோப்பிய தேசங்கள் மனித சக்திக்காக, மனித உழைப்புக்காக, எங்க இந்தியா கிட்டே கையேந்தி நிக்கிற காலம் நிச்சயம் வரும்...''

'காட்' மாடில்டா அதிர்ந்தாள். அவனுக்குள் தான் என்ன தீவிரம்! என்ன ஒரு தொலைநோக்கு! இவனை விடக்கூடாது! தனது டாகுமெண்டரி பணிகளுக்கு இவனை விட சிறந்த மனிதன் கிடைக்கமாட்டான்.

''என்னோட புராஜக்டுக்கு ஒரு நல்ல கெய்டை பிடிச்சுட்டேன்..!'' மாட் சிரித்தாள்

''எல்லா நாகரீகங்களுக்கும் முந்தைய நாகரீகம் எங்க இந்தியாவோடது! அதை ஒரு அறுபது நிமிஷ டாகுமெண்டரில உங்களால ஷுட் பண்ண முடியாது..''

''வை நாட்?'' மாடில்டா வியந்தாள்.

''இந்தியா பல மர்மங்களை கொண்டிருக்கிற நாடு! உங்களால எல்லாத்தையும் டாப் பண்ண முடியாது...''

''இதைதான் என் தாத்தாவும் சொன்னார்!'' மாட் ஆச்சரியப்பட்டாள்.

''புரொபஸர் நீங்க அவசியம் எங்க சீமர் எஸ்டேட்டுக்கு வர்றணும். என் தாத்தா உங்களைப் பார்த்தா ரொம்ப சந்தோஷப்படுவார். அவர் சென்னையில் ரொம்ப காலம் இருந்திருக்காரு...'' மாட் உற்சாகத்துடன் கூறினாள்.

''அப்படியா!... ஆனா... எனக்கு நேரமில்லை! பாக்கிங் பண்ணனும்! நண்பர்கள் எல்லாரும்... ஃபார்வெல் நடத்தறாங்க. போகலேனா நல்லா இருக்காது...'' அமுதன் கழன்று கொள்ள முயன்றான்.

''ப்ளீஸ் புரொபஸர்!'' முதல் தடவையாக பேசினாள் நந்தனா. ''மாடில்டாவின் தாத்தா சென்னை மேல ரொம்ப ஈடுபாடு கொண்டவர். சென்னையில் தான் கழிச்ச நாட்களைப் பத்தி புத்தகமே எழுதியிருக்கார். நான் கூட அவர்கிட்ட நிறைய பேசியிருக்கேன். வெரி இன்டரஸ்டிங் பெர்சன்! ஒரு முறையாவது நீங்க அவரை சந்திக்கணும்...''

நந்தனாவே கேட்டுவிட, அமுதனால் அவள் கோரிக்கையை தட்ட முடியவில்லை. யோசித்துவிட்டு 'ஓ கே' என்றபடி எழுந்தான். அவன் சொன்ன 'ஓகே' என்கிற அந்தச்சொல், அவன் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தப்போகின்றது என்பதை அப்போது அவன் அறிந்திருக்கவில்லை.

மாட்டும், நந்தனாவும் விடைபெற்றனர். அந்த அறையை விட்டு வெளியேற மனமின்றி, எதையோ பறிகொடுத்தவளைப் போல காரை நோக்கி நடந்தாள், நந்தனா.

# 29. பாதை தெரிந்தது

## 1967 - இலண்டன்

**ஞா**யிற்றுக்கிழமை

மாடில்டாவே தன் காரை எடுத்துக்கொண்டு, அமுதன் தங்கியிருந்த குவாட்டர்சுக்கு வந்திருந்தாள். அவளுக்காக தயாராக காத்திருந்தான் அமுதன்.

அவன் ஏறிக்கொள்வதற்காக முன் கதவைத் திறந்து வைக்க, காரை கிளப்பினாள் மாட்! சட்டென்று மழை பிடித்துக்கொண்டது.

''கடவுளே! மழை இந்த ஞாயிற்றுக்கிழமையை பாழாக்கிடும் போல இருக்கே...'' அமுதன் சொன்னான்.

''நோ... புரொபஸர்! மழை பெய்யட்டும்! எங்க சீமர் எஸ்டேட், மழை நாளுல பார்க்கறதுக்கு ஹெவன் போல இருக்கும்! எங்க சீமர் எஸ்டேட்ல அழகான தோட்டங்கள் இருக்கு! நீங்க இனிமே எங்கே இலண்டன் வரப்போறீங்க... பார்த்துட்டு போங்க...?'' மாட் சிரித்தாள்.

''உங்க ஃப்ரெண்ட் நந்தனா வரலியா?''

''அவளோட ரூம்மேட்டுக்கு பர்த்டே! அதுல பிசியா இருக்கா...''

இதை கேட்டதும், சற்று ஏமாற்றமாக இருந்தது, அமுதனுக்கு.

தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை மறைக்க, இயற்கை காட்சிகளை இரசித்தபடி வந்தான்.'' உண்மையிலேயே பெருக்கெடுத்து ஓடிய மழைநீர் அந்த இயற்கை காட்சிகளின் ரம்யத்தை அதிகரிக்கச் செய்தது.

இருவரும் மௌனமாக பயணித்தனர். கார் ஒரு வளைவில் திரும்பி 'சீமர் எஸ்டேட்' என்கிற பலகையை தாங்கிய ஒரு நுழைவாயினுள் நுழைந்து முன்னேறியது.

எங்கு பார்த்தாலும் வண்ண மலர்கள் பூத்து குலுங்கிய செடிகள், நீர் ஊற்றுகள் என்று மனதை குதூகலப் படுத்தும் காட்சிகளே இருந்தன.

பெயர் தெரியாத விசித்திரமான பறவைகள் கூவி, அந்த காட்சிகளுக்கு பின்னணி இசையைத் தந்தன.

சொக்கிபோய் விட்டான், அமுதன்

''மாட்! நீ சொல்றது கரெக்ட்தான்! உன் எஸ்டேட் தெய்வீகமா இருக்கு! என்னால இந்த காட்சியை மறக்க முடியாது!'' அமுதன் கூற, மாட் புன்னகைத்தாள்.

''புரொபஸர்! என் தாத்தாவுக்கு அப்புறமா இதெல்லாம் எனக்குத்தான் தெரியுமா!''

மாட் காரை பிரம்மாண்டமான ஒரு வெள்ளை மாளிகையின் முன் நிறுத்தினாள்.

'சென்னை ஹவுஸ்' என்கிற எழுத்துக்கள் அந்த மாளிகையின் முகப்பில் செதுக்கப்பட்டிருந்தன.

திகைப்பின் உச்சக் கட்டத்திற்கே போய் விட்டான் அமுதன்.

பெரிய வினாயகர் சிலை ஒன்று ஒரு புறம் இருக்க, மெரீனா கடற்கரையின் வரைபடம் ஒன்று பெரியதாக நுழைவாயிலில் மாட்டப்பட்டிருந்தது.

உண்மையிலேயே மாடில்டாவின் தாத்தாவிற்கு சென்னை மீது தீராத காதல் ஏற்பட்டிருக்க வேண்டும். சென்னையை நினைவுபடுத்தக் கூடிய பல சமாச்சாரங்கள் அங்கே இருந்தன.

படங்களை வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்த அமுதனை, 'வெல்கம் சன்' என்கிற கம்பீரமான குரல் ஈர்த்தது.

திரும்பிப்பார்த்தான். 60 வயதை எட்டி பிடித்திருந்த ஜெனரல் ரூபர்ட் சீமர் வாயெல்லாம் சிரிப்புடன் அவன் கையைப் பற்றி உலுக்கினார்.

''ஐ யாம் ரூபர்ட் சீமர்! இரண்டாம் உலகப்போர்ல ஃபைட் பண்ணியிருக்கேன்! 1935ல் இருந்து 1945 வரையில சென்னையில வேலை பார்த்திருக்கேன்.

''நான்... அமுதன்! யுனிவர்சிடி ஆஃப் இலண்டன்ல டீச் பண்ணினேன்! திரும்பி இந்தியாவுக்கு போறேன்...!'' தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''ஸோ.... யூ... ஆர்... ஃப்ரம் சென்னை! ஐ லவ் சென்னை'' என்று அமுதனின் தோளில் கைவைத்து உள்ளே போக, பின்னால் மாட் வந்தாள்.

''உட்காருங்க... அமுதன்!'' என்றவர் அவன் எதிரே அமர்ந்தார்.

எதிரே டீப்பாயில் பல்வேறு அளவுகளில் புகைப்பட ஆல்பங்கள் நிறைய இருந்தன. அவன் பார்வை போகும் திக்கை உணர்ந்த மாட் சிரித்தாள்.

''எல்லாம் சென்னையை பத்தித்தான்! உங்க ஊரைப்பத்தி உங்களுக்கு தெரியாத விஷயமெல்லாம் கூட என் தாத்தாக்கிட்டே இருக்கு...''

''சன்! எனக்கு வாய்ப்பு கிடைச்சா இன்னொரு முறை நான் சென்னையில் வாழத்தயார்!...'' சீமர் சொன்னார்.

''மாட் கூட நீங்களும் வரலாமே...''

''இல்லை சன்!'' தலையசைத்து மறுத்தார், ரூபர்ட்!

''நான் பார்த்த சென்னை சொர்க்கம்! அதை என்னால மறக்க முடியாது! இப்ப நான் சென்னைக்கு வந்து அந்த பழைய காட்சிகளை பார்க்க முடியலேனா மனசு கஷ்டப்படும்! சுதந்திர இந்தியா தன்னோட பழமையை புறக்கணிக்கிறதா கேள்விப்படறேன்! அதை நான் விரும்பலை! அதனாலதான் சென்னை வர்ற விரும்பலை...''

அமுதன் அதிசயித்தான். சென்னையின் மீது இப்படி ஒரு தாக்கமா...?

''நான் சென்னையில வசித்த காலம்தான் என் வாழ்க்கையில இனிமையான நாட்கள். என் மகள் ப்யூலாவும் அவ ஹஸ்பென்ட் ட்யூடரும், ப்ளேன் கிராஷ்ல இறந்ததுதான் என் வாழ்க்கையில சோகமான

நாட்கள். அந்த சோகமான நாட்களை சென்னை பற்றிய நினைவுகள்தான் மறக்க வைத்தது. என்னை இப்ப உயிர் வாழ வைக்கிற விஷயங்கள் ரெண்டு! ஒண்ணு... என் பேத்தி மாட்! ரெண்டு... 'சென்னை'...

''இப்பத்தெரியுதா! நான் ஏன் இந்தியாவைப் பத்தி டாகுமெண்டரி எடுக்கிறேன்னு. சென்னையை பத்தி பேசி... பேசியே என்னை தாத்தா வளர்த்தார். இட்லி, சாம்பார் ட்ரிப்ளிகேன், மூர்மார்க்கெட் இதெல்லாம் எனக்கு தெரிஞ்ச சமாச்சாரங்கள்...'' மாட் சொன்னாள்.

''சென்னையில் என்ன வேலை பார்த்தீங்க...? அமுதன் கேட்டான்.

''நான் கவர்னர் ஆர்தர் ஹோப்புக்கு ஏய்ட் டீ காம்ப்'பா இருந்தேன். அட்மைராலிடி ஹாலுலதான் என் வேலை!... ட்ரிப்ளிகேன்ல இருந்ததுனு நினைக்கிறேன். ட்ரிப்ளிகேன்! அந்த இடத்தை மறக்கவே முடியாது! தட் டெம்பிள், தட் நாமம் ஸ்போர்ட்டிங் ஐயங்கார்ஸ்...'' சீமர் மெய்மறந்தார்.

அமுதன் பெருமையுடன் சொன்னார் ''ஜெனரல் சீமர்! என் அப்பா அம்மா கூட ட்ரிப்ளிகேன்ல தான் இருந்தாங்க! இப்போ என் மாமா கூட அங்கேதான் இருக்கார்!''

''ஐ... ஸீ! எவ்வளவு மேதாவிகள் வாழ்ந்த இடம்! மாதமேடிஷியன் ராமானுஜன், பாரதியார்...'' சீமர் உணர்ச்சியுடன் கூறினார்.''

அமுதனுக்கு திடீரென்று நம்பாடுவான் கூறிய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. அவனுடைய அழகிய

அம்மாவை சிப்பாய்கள் அட்மைராலடி ஹாலுக்கு 'தானே கடத்திச் சென்றனர்?... உடனே மனம் பாரமாகியது. இந்த சீமர் அந்த சமயத்தில் அங்கே இருந்திருப்பாரா?

1942-ல் சென்னையில் இருந்திருந்தால் நிச்சயம் அவருக்கு அந்த சம்பவம் பற்றி தெரிந்திருக்கக் கூடுமே... கேட்டுப் பார்க்கலாமா?

"ஜெனரால் சீமர்! 1942-ல சென்னைல அட்மைராலடி ஹாலுலதானே வேலைப்பார்த்தீங்க!"

சீமர் நினைவு கூர்ந்தார்.

"யெஸ்! 1942 வரைக்கும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலதான் கவர்னர் இருந்தார். ஆனால் அவருக்கு ஆடம்பரமாக மாளிகை வேணும்னு அட்மைராலடி ஹாலை கட்டினாங்க! அதுல முதன் முதலா குடியேறினார் கவர்னர் ஹோப். அவர்கிட்டே தான் நான் ஏய்ட் டீ கேம்பா இருந்தேன்... அந்த மாளிகையில்தான் நான் தங்கியிருந்தேன்..."

அமுதன் கைகால்கள் மரத்துப்போயின! 1942-ல இவர் அந்த மாளிகையில் தங்கியிருந்ததாக சொல்கிறாரே! அப்படியென்றால்.

அம்மா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியை பற்றி இவர் நிச்சயம் அறிந்திருப்பார். ஒரு வேளை... இவரே அதற்கு உடந்தையாக இருந்திருந்தால்...?

அமுதனுக்கு சீமர் மீதிருந்த மதிப்பு மறைந்து துவேஷம் உண்டானது. அந்த சம்பவத்திற்கும் இவருக்கும் தொடர்பு இருக்குமானால், அந்த வீட்டில் உணவு உண்ணவே கூடாது.

அவன் மனதிற்குள் கூறிக்கொண்ட அதே சமயம், தான் அமர்ந்திருந்த இடத்தினில் இருந்து எழுந்த ரூபர்ட் சீமர், ஒரு குறிப்பிட்ட ஆல்பத்தை தேடி எடுத்தார்.

''புரொபஸர் அமுதன்! நான் ஏன் சென்னையை நேசிக்கிறேன்னு உங்களுக்கு தெரியாது அதுக்கு காரணமே ஒரு பெண்தான்! சென்னையிலேயே என் வாழ்க்கை முடிஞ்சிருக்கணும். உங்க ட்ரிப்ளிகேன் லேடி ஒருத்திதான் எனக்கு உயிர் பிச்சைகொடுத்தா தெரியுமா...!''

சீமர் உணர்ச்சியுடன் கூற, அவரை வியப்புடன் பார்த்தான், அமுதன்.

''டு யூ வாண்ட் டு ஹியர் த ஸ்டோரி?''

''நீங்க கதையை கேளுங்க! நான் லஞ்ச் ரெடியா இருக்கானு பாத்துட்டு... வரேன்...?'' மாடில்டா உள்ளே போக, சீமர் பழைய நினைவுகளில் ஆழ்ந்தார்.

*1942*

சென்னை அட்மைராலடி ஹால்!

புது மாளிகையில் குடியேறியதற்காக கவர்னர் ஆரிதர் ஹோப், விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார். விருந்து முடிந்து, ஏய்ட் டீ கேம்ப் ரூபர்ட் சீமரும், அவர்

மனைவி ஜேன் சீமரும் விருந்துக்கு வந்த சீமாட்டிகள் சிலரை வழியனுப்பிக் கொண்டிருந்தனர்.

அதே சமயம்

கவர்மெண்ட் ப்ளீடர் வாகீசனும் அவர் மகள் ம்ருகாவும் கிளம்பி போவதைப் பார்த்து அவர்களை நோக்கி கையசைத்தார், சீமர்.

அப்போது 'வீல்' என்று ஒரு சீமாட்டியிடம் இருந்து அலறல் சத்தம் எழுந்தது. அவர் கால் அருகே ஒரு பாம்பு படமெடுத்து ஆடியபடி இருக்க, அதைக் கண்டு நடுங்கிப் போன அந்த பெண் தன் உணர்வை இழக்கத் தொடங்கினாள். மற்ற பெண்கள் அங்கிருந்த நாற்காலி களின் மீது ஏறி அலற, ஒரே பதட்டமான சூழ்நிலை நிலவியது.

ரூபர்ட் சீமர் துணிவுடன் அந்த பாம்பை அப்புறப் படுத்த எண்ணி அதனை நோக்கி நடந்தார். இப்போது அந்த பாம்பின் கவனம் அந்த சீமாட்டியிடமிருந்து திரும்பி, ரூபர்ட் பக்கமாக தாவியது.

சற்று நேரம் அசையாது நின்று, அதன் முழு கவனத்தையும் தன்னிடம் பெற்ற சீமர், சடாரென்று தன் கையால் அதைப் பிடித்து அப்பால் தூக்கி போட முயன்றார்;

ஆனால்

அவர் எதிர்பாராத வண்ணம், அந்தப் பாம்பு அவர் கையை சுற்றிக் கொண்டதோடு இரு முறை அவர் கையை கொத்தி பதம் பார்த்தது.

வலி தாங்காமல் அலறிய சீமர் துவண்டு சரிய, அவர் மனைவி ஜேன் கதறினாள்.

காவலாளிகள் சீமரை அட்மைராலடி மாளிகையின் அறை ஒன்றிற்கு அவசரமாக தூக்கிச் செல்ல, இதர சிப்பாய்கள் நழுவிச் சென்ற பாம்பை தேடிக் கொண்டிருந்தனர்.

ரூபர்ட் சிறிது சிறிதாக நினைவை இழக்கத் தொடங்கினார். விவரத்தை அறிந்த கவர்னர் பதைபதைப்புடன் ஓடி வந்தார்.

''கால் தி டாக்டர்!'' கவர்னர் சொல்ல,

''அவர் புதுச்சேரி போயிருக்கார்.. யாரோ சொல்ல, ''தென் கால் டாக்டர் ராகவாச்சாரி'' கவர்னர் பதறினார்.

''இன்னைக்கு வைகுண்ட ஏகாதசி! அவர் ஸ்ரீரங்கம் போயிருக்கார்...'' அந்த அதிகாரி கையை பிசைந்தார்.

''டூ சம்திங்! சீமரை காப்பாற்றுங்கள்!'' உத்தரவிட்டார் கவர்னர்.

ஜேன் சீமர் அழுதுக்கொண்டிருக்க, தலைமை சிப்பாய் குழம்பினான்.

''இப்ப என்ன செய்யறது! நிலைமை மோசமாகிட்டே போறது! வாயிலே நுரை தள்ளுதே...!''

''இங்கே யாராவது லோக்கல் டாக்டர் கிடைப் பாங்களா...?'' ஜேன் சீமர் கண்ணீர் விட்டபடி கேட்க, சிப்பாய் ஒருவன் முன்வந்தான்.

''துரைசானி அம்மா! இதோ இங்கே திருவல்லிக் கேணி'யில ஒரு அம்மா இருக்காங்க! பாம்பு, தேள்கடி, மஞ்சகாமாலைக்கு எல்லாம் மந்திரிச்சு விஷம் இறக்குவாங்க! அவங்க வீடு இங்கேதான் இருக்கு! நீங்க சரின்னு சொன்னா... நான் அழைச்சுட்டு வரேன்!'' நாமம் இட்டுக்கொண்டிருந்த அந்தச் சிப்பாய் சொல்ல, ஜேன் விழித்தாள்.

''வாட்ஸ் ஹி சேயிங்'' கவர்னர் கேட்டார்.

நிலைமையை அறிந்து தன் அப்பாவை மட்டும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு அங்கு வந்து நின்ற ம்ருகா, அந்த சிப்பாய் கூறியதை கவர்னரிடம் மொழி பெயர்த்தாள்.

''யுவர் எக்சலன்ஸி! இங்கே ட்ரிப்ளிகேன்ல ஒரு பெண் இருக்காளாம். ஷீ ஹாஸ் எ ட்ரெடிஷினல் வே ஆஃப் கியூரிங் ஸ்னேக் பைட்! ஐ மீன்... மந்திரம் சொல்லி பாம்பு விஷத்தை இறக்கி, உயிரை காப்பாத்திடுவாளாம்..'' ஆங்கிலத்தில் ம்ருகா சொல்ல, கவர்னர் உடனடியாக அவளை அழைத்து வரும்படி உத்தரவிட்டார்.

''போயி அந்தம்மாவை அழைச்சுட்டு வா!'' ம்ருகா அந்த சிப்பாயிடம் சொல்ல, அந்த சிப்பாய் வழிகாட்ட, இரண்டு ஆங்கிலேய சிப்பாய்கள் சாரட்டில் பறந்துச் சென்று ஜ்யோத்ஸனாவை அழைத்து வந்தனர்.

சீமரை பார்த்ததுமே நிலைமையை யூகித்து விட்டாள், ஜ்யோத்ஸனா.

"மாமி! லோட்டாவுல கொஞ்சம் ஜலமும், ஒரு ஊசியும் எனக்கு வேணும்..." தன்னைச் சுற்றி ஆங்கிலேயர்கள் இருக்க, தமிழ்பேசும் முகமாய் தெரிந்த ம்ருகாவிடம் கேட்டாள், ஜ்யோத்ஸனா.

ம்ருகா சிப்பாய் ஒருவனிடம் அவன் கேட்டதை கொண்டு வரும்படி சொன்னாள்.

ஒரு கயிற்றால் சீமரின் புஜத்தை இறுக கட்டிய ஜ்யோத்ஸனா, பாம்பு தீண்டியதற்கு அடையாளமாக பதிந்திருந்த புள்ளிகளில் ஊசியை இறக்கினாள்.

கருட தண்டகத்தை உச்சரித்து, மனதிற்குள் மந்திரத்தை ஜபிக்கத் தொடங்கினாள்.

**ஓம்... அறிவுற்ற சக்தி**
**விஷம் கண்ட கண்ட**
**விஷம் துண்ட துண்ட**
**விஷம் நாச நாச**
**அற்றதே விஷம்; பெற்றதே சுகம்!**

என்று உச்சரித்தபடி ஊசி முனையை அவ்வப்போது நீரில் வைக்க, தண்ணீரின் நிறம் நீலமாக மாறத் தொடங்கியது.

மெதுவாக சீமரின் வாயிலிருந்து நுரை தள்ளுவது நிற்க, சிறிது சிறிதாக உச்சாடனம் மூலம் விஷத்தை இறக்கினாள் ஜ்யோத்ஸனா.

கவர்னர் தம்பதியர், ஜேன் சீமர், இதர ஆங்கிலேய அதிகாரிகள், சிப்பாய்கள் மற்றும் ம்ருகா அனைவரும்

அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருக்க, ஜ்யோத்ஸனா கருமமே கண்ணாக இருந்தாள்.

சற்று நேரத்திற்கு பின் சீமரின் முகத்தில் சலனம் தோன்றியது. மெதுவாக கண்களைத் திறக்க, அவரை கட்டி அணைத்தாள் ஜேன்.

''இது எப்படி சாத்தியம்'' கவர்னர் அசந்துப் போனார். ஜ்யோத்ஸனா அவர் கேட்பது புரியாமல், வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

''தட்ஸ் இந்தியா!'' ஒரே வார்த்தையில் அவருக்கு பதில் கூறினாள் ம்ருகா.

அன்றிரவு ம்ருகாவின் ஆலோசனைப்படி, லேடி ஜேன் சீமர், ஜ்யோத்ஸனாவை தங்கள் அறையிலேயே இருத்திக் கொண்டாள். ஜேன் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள, வேறு வழியின்றி அன்றிரவை அவர்களுடனேயே கழிக்கும்படியாகிவிட்டது.

மறுநாள் காலை

ரூபர்ட் சீமரும் ஜேன் சீமரும் அவர்கள் பெண் ப்யூலாவும் அவளுக்கு வாய் வலிக்க நன்றி கூறினார்கள். மூவரும் ஜ்யோத்ஸனா மறுத்தும் கேளாமல் அவளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

லேடி ஜேன் தன் அன்பின் அடையாளமாக, தான் கழுத்தில் அணிந்திருந்த வைர பதக்கத்துடன் கூடிய தங்க செயினை கழற்றி கையில் தர, அவள் ஸ்தம்பித்துப் போனாள்.

பிரமிப்புடன் அந்த நகையை இப்படியும் அப்படியும் திருப்பி பார்த்தபடி அந்த அறையை விட்டு வெளியேறினாள் ஜ்யோத்ஸனா.

''அந்தப் பொண்ணு மட்டும் என்னை காப்பாத்த லேனா, என் கதை அன்னைக்கே முடிஞ்சிருக்கும்...''

கண்களில் நீர் மல்க, தன் கதையை கூறி முடித்தார் சீமர். அமுதனின் கண்களிலும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்துக் கொண்டிருந்தது.

''மை சன்! என் கதை உன்னையும் உருக்கி விட்டதா என்ன...?'' ஆங்கிலத்தில் நெகிழ்ச்சியுடன் கேட்டார், ரூபர்ட் சீமர்.

அமுதனின் மனதில் கடைசியாக தான் பள்ளிக்கூடம் சென்ற அன்று, அவன் அம்மா அவனை உச்சி முகர்ந்து விடைக் கொடுத்த காட்சி நினைவுக்கு வர, ஜெனரல் சீமரின் கேள்விக்கு பதில் கூற முடியாமல், விசித்து அழத் தொடங்கினான்.

'லஞ்ச் தயார்' என்பதை அறிவிப்பதற்காக அங்கே வந்த மாடில்டா, அங்கு நிலவிய சூழ்நிலைக் கண்டு திகைத்தாள்.

''புரொபஸர்! வாட்ஸ் ராங் வித் யூ'' சீமர் அமுதனின் தோளைத் தட்டி அவர் கையைப் பற்றிக் கொண்டு கதறினான் அமுதன்.

''ஜெனரல்! ஐ யாம் பார்ன் அகெய்ன் டுடே! நான் இன்னைக்கு மறுபடியும் பொறந்திருக்கேன்...'' அமுதன் நெகிழ்ச்சியுடன் கூறினான்.

''என்ன சொல்றீங்க அமுதன்?'' ரூபர்ட் சீமர் திகைத்தார். அமுதன் வார்த்தைகளைத் தேடினான்.

''ஜெனரல்! உங்களை காப்பாத்தின அந்த பெண் பெயர் ஜ்யோத்ஸனாவா?''

ஜெனரல் சீமர் அதிர்ந்தார். ''யூ ஆர் ரைட்! உங்களுக்கு எப்படி அவளை தெரியும்!''

''தெரியும்!'' தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன், நடுங்கும் குரலில் சொன்னான்.

''நான் ஜ்யோத்ஸனாவின் பிள்ளை'' என்றதும் கல்லாக சமைந்து நின்றார் சீமர்.

பிறகு அவசரமாக அந்த ஆல்பத்தை எடுத்து ஒரு குறிப்பிட்ட புகைப்படத்தைக் காட்டினார்.

''இதோ பாருங்க அமுதன்! உங்கம்மா போட்டோ!...'' அவர் நீட்டிய புகைப்படத்தை பரபரப்புடன் வாங்கிப் பார்த்தான் அமுதன்.

அவன் தாய் ஜ்யோத்ஸ்னாவேதான்! லேடி ஜேன் மற்றும் ப்யூலாவின் நடுவே ஜ்யோத்ஸனா நிற்க, ஜேன் பக்கத்தில் ரூபர்ட் சீமர் தளர்ச்சியுடன் நின்றிருந்தார்.

மற்றொரு படத்தில் ஜ்யோத்ஸனாவுக்கு லேடி ஜேன் தனது செயினை அளித்துக் கொண்டிருந்தாள்.

''யெஸ்! இதுதான் என் அம்மா!'' அமுதன் சொல்லவும், ஆனந்தத்துடன் அவனை அணைத்துக் கொண்டார் சீமர்.

''கரெக்டான இடத்துக்குத்தான் நீங்க வந்திருக்கீங்க. என் உயிரை காப்பாத்தின ஏஞ்சலோட பையன் நீங்க...!'' உணர்ச்சியுடன் கூறினார், சீமர்.

''உங்க உயிரை காப்பாத்தினா! ஆனா... அதுக்கு விலையா தன்னோட வாழ்க்கையையே பலி கொடுத்துட்டா...'' சோகத்துடன் ஒலித்தான் அமுதன்.

''என்ன ஆச்சு அமுதன்? ஜ்யோத்ஸனா உயிரோடத் தானே இருக்கா?''

''தெரியலை! உங்களை காப்பாத்த வந்ததால அவங்க பெயர் கெட்டு போச்சு! சிப்பாய்கள் என் அம்மாவை கடத்திண்டு போயிட்டதா ஊர்ல பேசினா... ஒரு நாள்... நான் ஸ்கூலுக்கு போயிட்டு வர்றச்சே... என் அம்மா காணாமலே போயிட்டா! அந்த ராத்திரிக்கு அப்புறம் என் குடும்பமே இல்லாம போயிடுத்து. உங்க உடம்புல இறங்கின விஷம், ஊரார் வாயில ஏறிடுத்து... அம்மாவை எல்லோரும் கேவலமா பேசினா...'' மனம் வெதும்பினான், அமுதன்.

''என்னோட கதைக்கு கேவலமான இன்னொரு பக்கம் இருக்கறது, எனக்கு தெரியலையே'' வருத்தத்துடன் நாற்காலியில் தொப்'பென்று சரிந்தார் ரூபர்ட் சீமர்.

மாடில்டா இருவரையும் சமாதானம் செய்தாள்.

''ஹிஸ்டரி க்ளாஸ் ஓவர்! டைம் ஃபார் லஞ்ச்!'' என்றபடி அமுதனின் கரத்தை ஆதரவுடன் பற்றி எழுப்பினாள்.

''ஒரு பெரிய தியாகியோட பிள்ளை நீங்க! அந்த பெருமையோட சாப்பிட வாங்க! இது சாதாரண லஞ்ச் இல்லை! என் தாத்தா உயிரைக் காப்பாத்தின ஒரு ஒப்பற்ற பெண்ணோட மகனை கவுரவிக்கிற ஒரு விருந்து...'' என்று உருக்கத்துடன் சொல்ல, அமுதன் அவளைப் பார்த்து முறுவலித்தான்.

''ஐ யாம் ஸாரி! குழந்தைதனமா நடந்துண்டுட்டேன்...''

''இந்தியா ஒரு கர்ப்பப்பைனு நீங்கதானே சொன்னீங்க! அப்ப இண்டியன்ஸ் எல்லாருமே குழந்தை களை போல கள்ளங்கபடு இல்லாதவங்க தான்! நீங்க கரெக்டாதான் நடந்துட்டு இருக்கீங்க..'' என்று மாட் சொல்ல, அமுதன் அவளை பின் தொடர்ந்தான். அதுவரை கலகலப்பாக பேசிக்கொண்டிருந்த ஜெனரல், ஏனோ உணவு சாப்பிடும் வேளையில் அமைதி காத்தார்.

லஞ்ச் முடிந்ததும், அமுதனின் கைகளை உணர்ச்சி யுடன் பற்றிக் கொண்டார்.

''புரொபஸர் அமுதன்! நான் உங்களுக்காக பிரார்த்தனை செய்யறேன்! சீக்கிரம் உங்க குடும்பம் ஒன்றாக ஆகணும்! இனிமே இதுதான் என்னோட டெய்லி பிரேயர்!''

''மாடில்டா'' தன் பேத்தியை அழைத்தார்.

''தாத்தா!''

''நீ எனக்கு ஏதாவது செய்யணும்னு ஆசைப்பட்டா, அதை அமுதனுக்கு செய்! அமுதன் கூடவே அவரோட

நிழலா தொடர்ந்துப்போ! எப்படியாவது அவரோட அப்பா அம்மாவை கண்டுபிடி. அந்த குடும்பம் ஒண்ணு சேருகிறவரைக்கும், நீ திரும்பி இலண்டன் உள்ளே காலை வைக்கக்கூடாது! இது என்னோட ஆர்டர்!'' சீமர் கூற, மாடில்டா தலை அசைத்தாள்.

''யெஸ்'' என்றவள் அமுதனைப் பார்த்து சல்யூட் ஒன்றை வைத்தாள்.

''அட் யுவர் சர்வீஸ், புரொபஸர்'' என்றாள் குறும்புடன்.

# 30. அமுதம் யாருக்கு?

## 1967 - விமானத்தில்

மூவரும் இலண்டனில் விமானம் ஏறினார்கள். நந்தனாவைப் பார்த்த மாத்திரத்தில் உற்சாகம் அடைந்த அமுதன், அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

''என்ன மிஸ் நந்தனா! உங்களைப் பார்த்தால், லண்டன் ரிடர்ன்னு யாரும் சொல்ல மாட்டா!'' இங்கலீஷ்ல பிளக்க வேண்டாமோ! இப்படி அமைதியா இருக்கீங்களே!''

ஒரு புன்னகையை அவனுக்கு பதிலாக தந்துவிட்டு, தான் படிக்கும் புத்தகத்தினுள் ஆழ்ந்துப்போனாள் நந்தனா! அதற்கு மேல் அவளிடம் பேச்சு வளர்க்க விரும்பாமல், மாடில்டாவின் பேச்சுகளுக்கு செவி சாய்த்தான்.

''இந்திய ஏர்ஹோஸ்டஸ் அழகா இருக்காங்க! பட்... புடவை கட்டிட்டு அவங்களால எப்படி இவ்வளவு ஃப்ரியா நடமாட முடியுது?'' மாட் கேட்டாள்.

''அவங்களையே கேளேன்!'' அமுதன் சொல்ல, மாட் ஒரு ஹேர்ஹோஸ்டஸை தடுத்தி நிறுத்தி அவளிடமே அந்த கேள்வியைக் கேட்டாள்.

அந்த ஹேர்ஹோஸ்டஸ் புன்னகைத்தாள்.

''புடவை கட்டிகிட்டா எங்களுக்குள்ளே ஒரு எச்சரிக்கை உணர்வு எப்பவும் இருக்கும்! அதனால எங்க நடை உடைபாவனை பேச்சு எல்லாத்துலயும் அந்த எச்சரிக்கை உணர்வைக் காட்டுவோம்! புடவை கட்டினா தான் அந்த எச்சரிக்கை உணர்வு பிரதிபலிக்கும்! அதனால தான் நாங்க புடவை கட்டறோம்...''

''நந்தனா கூட புடவை கட்டியிருக்கா..'' மாட் சொன்னாள்.

''அதனாலதான் எச்சரிக்கை உணர்வோட பின்னாடி உட்கார்ந்திருக்கா...!'' என்றான் அமுதன்.

ஒரு முறை எழுந்து பாத்ரூமுக்கு சென்று விட்டு வந்த நந்தனா, தற்செயலாக அமுதனை நோக்கினாள்.

அமுதன் சீட்டில் சாய்ந்து கண் அயர்ந்திருக்க, அவன் தோளில் தலை சாய்த்து தூங்கிக்கொண்டிருந்தாள், மாட்!

அந்த காட்சி நந்தனாவின் மனதை என்னவோ செய்தது. ஏர்ப்போட்டுக்கு அவர்களை வழியனுப்ப வந்திருந்த ரூபர்ட் சீமர், கிளம்பும் போது கூறியது, நந்தனாவின் காதில் ஒலித்தது.

''மாட்! எந்த காரணத்தை முன்னிட்டும் புரொபஸர் அமுதனை விட்டு பிரியக்கூடாது! அமுதன்! மாட் இஸ் யுவர்ஸ்'' என்றாரே. அதற்கு என்ன அர்த்தம்?

அப்படியானால்

மாட்'டும் அமுதனும் ஒருவரையொருவர் நேசிக்கிறார்களா என்ன?

அமுதன் இவள் மனதை வெகுவாகவே பாதித்திருக்கிறான், ஆனால் அதை அவனிடம் எப்படி சொல்லுவது? இனிமேல் அதை சொல்லவும் கூடாது.

மாட் அவனை கவர்ந்துவிட்ட பிறகு, இவள் அதைப்பற்றி பேசுவதே அநாகரிகம்!

தனது சீட்டுக்கு சென்றவள், மீண்டும் புத்தகத்தில் கவனம் செலுத்த முயன்றாள். மனம் அதில் ஒன்றவில்லை.

அமுதன் ஏன் இவளை தேர்ந்தெடுக்காமல், வெளிநாட்டுக்காரியான மாடில்டாவை தேர்ந்தெடுத்தான்?

சிறுவயது முதலே இவள் ஆசைப்பட்டது எல்லாமே கிடைத்துள்ளது. ஆனால், முதன் முறையாக இவள் ஆசைப்பட்டதை வேறு ஒருத்தி பறித்துக் கொண்டு விட்டாளே!

'பயணிகள் கவனத்திற்கு'

லேண்டிங் கால் தரப்பட, தூங்கிக் கொண்டிருந்த அமுதனும் மாடில்டாவும் கண் விழித்து, பரபரப்புடன் சீட் பெல்டை அணிந்துக் கொண்டனர்.

''நந்தனா! நல்லா தூங்கினியா?'' மாட் கேட்க, அவள் தலையசைத்தாள். பம்பாயில் பிளேன் தரை இறங்கியதும் சென்னைக்கு செல்ல வேண்டிய விமானத்திற்கு மாறினார்கள், அமுதனும் மாடில்டாவும்.

நந்தனா பம்பாயிலிருந்து கோவை செல்வதற்கு திட்டமிட்டிருந்தாள்.

''ஸீ... யூ... புரொபஸர்!'' ஒரே வார்த்தையில் அமுதனிடம் விடைபெற்றவள், மாடில்டாவை கட்டி அணைத்து அவள் கன்னத்தில் முத்தம் ஒன்றை பதித்தாள்.

''குட் லக் மாட்'' என்றவள் அவர்களை திரும்பிப் பார்க்காமல் ஏர்போர்ட் லௌஞ்சை நோக்கி நடந்தாள். அவள் போவதையே விசித்திரமாக பார்த்தாள், மாட்.

''வாட் இஸ் ராங் வித் ஹர்?'' தனக்குள் மாட் கேட்க, தொலைவில் போகும் நந்தனாவையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான், அமுதன்.

# 31. அம்மா அழகானவள் ஆனால்...

## 1967 - கோத்தகிரி

**வு**ட்பெக்கர் எஸ்டேட்டை நோக்கி அந்த ஹெரால்ட் கார் மலைச்சரிவுகளில் ஊர்ந்துக் கொண்டிருந்தது. டிரைவர் சவுண்டப்பன் நிதானமாக காரை செலுத்திக் கொண்டிருக்க, நீலகிரி மலைத்தொடரின் குளிர்காற்று, அந்த ஹெரால்டின் பின் சீட்டில் அமர்ந்திருந்த நந்தனாவின் உடலை ஊசிகளாக துளைக்க, அவள் சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

''என்ன இது! இலண்டன் குளிரையே தாங்க முடிஞ்ச என்னால இந்த ஊட்டியின் குளிரை தாங்க முடியலையே!'' வியப்புடன் நந்தனா கேட்க, சவுண்டப்பன் சிரித்தான்.

''கண்ணாடியை ஏத்திக்கீங்க, சின்னம்மா!''

''இல்லை சவுண்ட்! இந்த காட்சிகளை பார்த்து நாலு வருஷமாச்சு!''

பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டு இலண்டனுக்கு சென்றவள், இப்போதுதான் திரும்பி வருகிறாள். வுட்பெக்கர் எஸ்டேட்தான் இவளுடைய சொர்க்கம்,

தேவலோகம் எல்லாமே! எஸ்டேட்டில் இவளது பங்களாவின் பின்புறமாக சற்று தூரம் நடந்தால் ஒரு பெரிய மரம் வரும்! பாதை அந்த மரத்தை சுற்றி செல்லும்.

அகன்ற அந்த மரத்தின் கிளைகள் நாலாபக்கமும் விரிந்திருக்க, கிளைகள் பிரியும் இடத்தில், மேடையைப் போன்ற பகுதியில், இவளுக்காகவே ஒரு 'மர வீடு' கட்டப்பட்டிருந்தது. அவளது படிப்பு விளையாட்டு எல்லாமே அந்த இடத்தில்தான்.

நந்தனா நெஸ்ட் (நந்தனாவின் கூடு) என்று அதற்கு பெயரிட்டிருந்தாள். அது இப்போது எப்படி இருக்கிறதோ?

அதை அவ்வப்போது சுத்தம் செய்து வருவதாக அம்மா தெரிவித்திருந்தாள். நடராஜ் மாமா வரைந்திருந்த ஓவியம் ஒன்றை அங்கே மாட்டியிருப்பதாகவும் சொல்லியிருந்தாள்.

நடராஜ் மாமா! இவள் மீது உயிரே வைத்திருக்கும் அம்மாவின் அண்ணன். இவள் குடும்பத்திற்காக தன்னையே உருக்கிக் கொண்ட மெழுகுவர்த்தியாகத் தான் அவரை நந்தனா பார்த்தாள். இவளது துன்பத்தை தன் துன்பமாகவும் இவளது இன்பத்தை தனது சுகமாகவும் பாவிப்பவர்.

ஆண்களுக்கு அன்பு செலுத்துவதெல்லாம் தெரியாது! ஏதாவது காரியம் ஆக வேண்டும் என்றால் மட்டும் அன்பைக் காட்டுவது போல் நடிப்பார்கள்! என்று மாடில்டா இவனிடம் பலமுறை கூறியிருக்கிறாள்.

அப்போதெல்லாம் நடராஜ் அங்கிள் இவள் நினைவுக்கு வருவார்.

''நீ என் மாமாவை பார்த்தால் உன் எண்ணத்தை மாற்றிக் கொள்வாய்'' மாடில்டாவிடம் அவள் சொல்லுவாள்.

மாடில்டாவை பற்றி நினைத்தவுடன், உடனேயே நந்தனாவின் மனம் அமுதனிடம் தாவியது. அமுதனும், மாட்டும் என்ன செய்து கொண்டிருப்பார்கள். பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொண்டிருப்பார்களா?

அவள் இதயத்தின் மூலையில் வலித்தது. எல்லா விதத்திலும் மாடில்டாவை விட தகுதியானவளாக இருந்தும், அவன் ஏன் மாட்டை தேர்ந்தெடுத்தான்.

ஒருவேளை மாடில்டாவின் 'சீமர் எஸ்டேட்டை' பார்த்து மயங்கி விட்டானா?

'ஏன்! இவள்கூடத்தான் கோத்தகிரியில் வுட்பெக்கர் எஸ்டேட்டின் சொந்தக்காரி. மாட்டின் எஸ்டேட்டைக் காட்டிலும் பெரியது. இவளுக்கும்தான் அழகிய பங்களா இருக்கிறது.

ஒரு முறை அமுதனை இங்கே வரவழைத்து வுட்பெக்கர் எஸ்டேட்டை காட்டினால் என்ன?

'தவறு செய்து விட்டோம்! நாமும் அமுதனுடன் சென்னைக்கு சென்று மனம் விட்டு பழகி யிருக்கலாமோ?'

'படிப்பை முடித்துவிட்டாய்! இனிமேல் மாரேஜ்தான்' கடைசியாக எழுதியிருந்த கடிதத்தில் அம்மா குறிப்பிட்டிருந்தது நினைவுக்கு வந்தது.

மாப்பிள்ளை கூட யாரோ தயாராக இருப்பதாக எழுதியிருந்தாளே.

''கோயமுத்தூர் தொழிலதிபரின் பிள்ளை. தொழிலதிபர் தேர்தலில் நிற்க போவதால், அவர் மகன் சேர்மனாக பதவி ஏற்க போகிறான். அவன்தான் மாப்பிள்ளை! என்று எழுதியிருந்தாள்.

கல்யாணம் செய்துக் கொள்ள தான் தயாரா? தன் மனதையே கேட்டுக் கொண்டாள், நந்தனா.

''சென்ற வாரம் வரை இப்போது வேண்டாமே என்று சொல்லிக் கொண்டிருந்த மனம் இன்று என்ன சொல்கிறதோ?

தன் மனம் கூறுவதைக் கேட்டாள்.

''பண்ணிக்கலாம்! அமுதன் மாப்பிள்ளையா இருந்தா...'' என்று அந்த குரல் கூற, அந்த பதிலைக் கேட்டு திடுக்கிட்டு நந்தனா கண்களைத் திறக்கவும், கார் 'வுட்பெக்கர்' எஸ்டேட் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

எஸ்டேட்டின் பாம்பு போல நெளித்துச் சென்ற சாலையில் அந்த கார் போக, சற்றுத் தொலைவில் அவளுடைய பங்களா தெரிந்தது. போர்ட்டிகோவின் மீது இருந்த திறந்தவெளி பால்கனியில் அம்மா இவளுக்காக காத்திருந்தாள்.

நந்தனாவின் மனம் துள்ளியது. நம் மனிதர்களை நான்கு வருடத்திற்கு பிறகு பார்க்கப்போகிறேன். அம்மாவை நோக்கி குழந்தையைப் போல கையாட்டினாள்.

கார் வந்து நிற்கவும், அவள் அம்மா கீழே இறங்கி வரவும் சரியாக இருந்தது.

''மம்மி! நான் வந்துட்டேன்!'' பாய்ந்து சென்று அம்மாவைக் கட்டிக் கொண்டவள், இரண்டடி பின்னால் சென்று அவளை ஏற இறங்கப் பார்த்தாள்.

''நிஜமாவே நீ என் மம்மிதானா...? என்னால நம்பவே முடியலை! நான் உன் பொண்ணுனு சொன்னா யாருமே நம்பமாட்டா! இன்ஃபாக்ட் நாம இப்ப அக்கா தங்கை போலத்தான் இருக்கோம்!'' வியந்து கூறினாள், நந்தனா.

''ஆமா! உன்னை அக்கா'ன்னும் உன் அம்மாவை தங்கைன்னும் தான் எல்லாரும் நினைச்சுப்பா..''

குரல் வந்த திக்கை நோக்கி திரும்பினாள் நந்தனா.

''ஹாய் நடராஜ் அங்கிள்! எப்படிஇருக்கிங்க?'' ஓடிப்போய் அவர் கையை பிடித்து உலுக்கினாள்.

''நான் நல்லா இருக்கேன்! நீ எப்படிம்மா இருக்கே?'' அவள் தலையை வாஞ்சையுடன் வருடினார்.

''போதும், அவளை கொஞ்சினது! போய் காரிலிருந்து அவள் லக்கேஜை இறக்கு!...''

சொல்லிவிட்டு விர்ரென்று அம்மா உள்ளே போக, அங்கிள் மௌனமாக குனிந்த தலையுடன் போர்ட்டிகோவில் இறங்கி காரை நோக்கி நடந்தார்.

நந்தனாவுக்கு பொறுக்கவில்லை. ''என்னம்மா! லக்கேஜை டிரைவர் சவுண்டப்பன் எடுத்துண்டு வருவானே! மாமாவை போய் ஏன் வேலை வாங்கறே?''

தன்னை மறந்து கேட்டு விட்ட நந்தனாவை திரும்பி சுடச்சுட பார்த்தாள், அவள் அம்மா.

''அது எனக்கும் என் பிரதருக்கும் இடையே உள்ள விஷயம்! யூ மைண்ட் யுவர் பிசினஸ்...!'' சுள்ளென்று சொன்னபடி அவள் நடக்க, பின்தொடர்ந்தாள், நந்தனா.

'அம்மா அழகானவள்! ஆனால் மர்மமானவள்' சிறு வயது முதலே தனக்குள் கூறிக்கொண்டிருந்ததை இப்போதும் முணுமுணுத்தாள்.

ஹாலினுள் பிரவேசித்தவளை தடுத்து நிறுத்தியது பலவீனமான குரல் ஒன்று.

''நந்தனா வந்துட்டியா?'' திரும்பி பார்த்தாள். கீழே இருந்த அறை ஒன்றின் கதவை பாதி திறந்து, தலையை மட்டும் நீட்டி அவளிடம் பேசினார் அப்பா!

''ஹாய் டாடி!'' உற்சாகத்துடன் அவரை நோக்கி ஓடினாள். அதற்குள் அம்மா விஷமென வார்த்தைகளைக் கொட்டினாள்.

''உங்களை யார் இப்ப கூப்பிட்டது? ஏற்கெனவே நந்தனா டயர்டா இருக்கா! கதவை மூடிண்டு போய்ப் படுங்க! குளிச்சு சாப்பிட்டுட்டு ஃப்ரியா இருக்கச்சே அவ உங்ககிட்டே வந்து பேசுவா...''

பயம் முகத்தில் பரவ, அவள் அப்பா தன்னை நோக்கி நந்தனா வேகமாக வருவதைக்கூட பொருட்படுத்தாமல், சட்டென்று கதவை மூடிக்கொண்டார்.

ஏமாற்றத்துடன் அம்மாவை ஒரு தரம் திரும்பி பார்த்தாள்.

இவளுடைய சர்வாதிகாரத்துக்கு அளவே கிடையாதா?

''வை டூ யு ஸ்டேர் அட் மீ லைக் தட்'' போயி குளிச்சு டிபன் சாப்பிடு! எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு...!''

அம்மா தன் அறைக்குள் புக, நந்தனா அப்படியே நிலைபெற்று நின்றாள். அவள் பார்வை ஹாலின் உயரே மாட்டப்பட்டிருந்த இவள் அம்மாவின் ஓவியம் மீது படர்ந்தது.

இரண்டு மான்களை கையில் பிடித்தபடி கர்வத்துடன் சிரித்துக் கொண்டிருந்தாள் அம்மா-

ஓவியத்தின் கீழே 'புருஷா-மிருகம்' என்று பெயரிடப் பட்டிருந்தது.

நந்தனாவின் அம்மா பெயரை இதுவரை சொல்லாமல் இருந்ததற்கு மன்னிக்கவும்.

''ம்ருகா' என்கிற ம்ருகநயனானியை அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியுமா என்ன?

அன்றிரவு

டின்னர் முடிந்து, ம்ருகா பால்கனியில் சென்று அமர்ந்து கொண்டாள். பின்னாலேயே நடராஜ் அங்கிளும், நந்தனாவும் போய் அவளுக்கு எதிராக உட்கார்ந்தனர்.

அப்பாவும் இங்கே இருந்தால் நன்றாக இருக்கும் போல் தோன்றியது, நந்தனாவுக்கு! ஆனால் மனதில் பட்டதை சொல்ல தயக்கமாக இருந்தது. அம்மா கடுமையாக ஏதாவது கூறி, அந்த இரவின் அமைதியான சூழ்நிலையை கெடுத்து விட்டால்?

இவள் எண்ண ஓட்டத்தை புரிந்து கொண்டவளை போல, ம்ருகா பதில் சொன்னாள்.

"அப்பாவுக்கு இந்த குளிர் ஒத்துக்காது... அவர் தன் ரூம்லயே இருக்கட்டும்..."

தூக்கி வாரிப்போட்டது நந்தனாவுக்கு! இவள் மனதின் எண்ண ஓட்டத்தை அப்படியே படிக்கிறாளே... அம்மா!

"எப்படிம்மா இருந்தது, லண்டன்?" நடராஜ் அங்கிள் கேட்டார்?"

"பைன் அங்கிள்! எப்படியோ படிப்பை முடிச்சுட்டேன்..."

"படிப்பை முடிச்சுட்டே இல்லை! அப்ப நான் கல்யாண வேலையில் இறங்கறேன்" ம்ருகா சொன்னாள்.

"இதுக்குள்ளே எனக்கு கல்யாணமா?" கொஞ்ச நாளைக்கு நான் லைஃபை என்ஜாய் பண்ண போறேன்..." நந்தனா சொல்ல, எரிந்து விழுந்தாள் ம்ருகா!

"நான்சென்ஸ்! தனியா எதை என்ஜாய் பண்ண போறே? ஜோடியா இருந்தாதான் வாழ்க்கையை

அனுபவிக்க முடியும்! என்ன சொல்றே நடராஜ்?''

ம்ருகா அவரை வெறித்துப் பார்க்க, தலை குனிந்து கொண்டார், நடராஜ் அங்கிள்.

''அதுக்கில்லைம்மா... வந்து... நான்?''

''இதோ பாரு நந்தனா! நான் முடிவு எடுத்துட்டேன்! உன்னை கல்யாணம் செஞ்சு கொடுத்துட்டேன்னா, என் ட்யூட்டி ஓவர்! அதுக்கப்புறம் கேன்சர் நோயாளியான உங்கப்பாவை கவனிக்கனும்! நடராஜ் அங்கிளுக்கு ஒரு வழி பண்ணனும்...''

ம்ருகாவின் கண்கள் நடராஜை சூன்யத்துடன் வெறிக்க, அவர் திக்பிரமையுடன் உட்கார்ந்திருந்தார்.

''அம்மா! நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்லலை!... ஆனா...'' நந்தனா மிடறு விழுங்கினாள்.

''ஆனா?''

''இலண்டன் யூனிவர்சிடியில் ஒரு தமிழ் புரொபஸரை பார்த்தேன்! அவர் பெயர் அமுதன்! ஆர்க்கியாலஜி சொல்லி தர்றாரு! சின்ன வயசுதான்! பார்க்க கம்பீரமா இருக்கார்! அவரை...'' நந்தனா தொடர்ந்து பேச முடியாமல் தவித்தாள்.

''உனக்கு பிடிச்சிருக்கா?'' ம்ருகா கேட்டாள். மெல்ல தலையசைத்தாள் நந்தனா.

''உனக்கு பிடிச்சிருந்தா ஓகே!... நந்தனா! ஒருத்தரை ஆசைப்பட்டுட்டா அவரை எப்படியாவது அடைஞ்சுடணும்! அவரே மறுத்தா கூட, அவரை நம்ம வழிக்கு வரவழைக்கணும்! என்ன சொல்றே நடராஜ்?''

நடராஜ் மௌனத்தை கடைபிடிக்க, ம்ருகா தொடர்ந்தாள்.

''நந்தனா! நான் அந்த பையனை பார்க்கணும்! நான் ஒரு தடவை பார்த்துட்டேனா, கல்யாணத்தை நிச்சயித்துடலாம்...''

தன் செவிகளையே நம்ப முடியாமல் திணறினாள் நந்தனா.

இவ்வளவு எளிதாக அம்மா ஒப்புக்கொண்டு விட்டாளே! அப்போதுதான் தன் தவறை உணர்ந்தாள் நந்தனா.

'ஆகா! அவசரப்பட்டுவிட்டேன்! அமுதன் மனசுல என்ன இருக்குனு தெரியாம அம்மாகிட்டே இந்த பேச்சை எடுத்திருக்கவே கூடாது. இப்போது அவள் உடும்பு பிடியாக பிடித்துக் கொண்டு விடுவாளே!

''அம்மா! இப்ப அவரும் என் ஃப்ரெண்ட் மாடில்டாவும் ஒரு டாகுமெண்டரி தயாரிக்கிற விஷயமா சென்னையில இருக்காங்க...''

''சரி! அந்த பையன் ஒரு வாரம் நம்ம கூட வந்து இருக்கட்டும்!... நான் அவனை ஸ்டடி பண்ணணும்...'' என்று சொன்னவள், தொடர்ந்தாள்.

''நந்தனா! நீ டயர்டா இருக்கே! போய் படுத்துக்கோ! நானும் அங்கிளும் கொஞ்சம் பேசணும்...''

நந்தனா தயக்கத்துடன் எழுந்து செல்ல, அவள் போகும்வரை காத்திருந்த ம்ருகா, விருட்டென்று எழுந்து நின்றாள்.

''என்ன நடராஜ் போகலாமா?''

நடராஜ் எழுந்து நிற்க, அவரை முன்னால் போக விட்டு, தான் அவனை பின் தொடர்ந்தாள்.

பால்கனியின் கடைசியில் இருந்த அறைக்குள் நடராஜ் நுழைய, அவரை பின் தொடர்ந்த ம்ருகா, கதவை தாளிட்டாள்.

தன் அறையினுள் நுழையாமல், அவர்கள் இருவரையும் நோட்டம் விட்டுக் கொண்டிருந்த நந்தனா அதிர்ந்தாள்.

அம்மாவும், மாமாவும் அறைக்குள் நுழைந்து கதவை தாளிட்டுக் கொண்டு அப்படி என்ன பேசப் போகிறார்கள். தன் அறைக்குள் நுழையாமல், அந்த பால்கனியை அடைந்து, தாளிடப்பட்ட அறை வாயிலில் தயங்கியபடி நின்றாள்.

அந்த பால்கனி தொடர்ந்து சென்று அந்த அறையை தாண்டி இடப்புறமாக திரும்பும். திரும்பியதும் அந்த அறையின் சன்னல் ஒன்று தென்படும்.

அடிமேல் அடி வைத்து, பால்கனியின் இடப்புறம் திரும்பி அந்த அறையின் சன்னலை ஒட்டி நின்றுக் கொண்டாள்.

மெதுவாக சன்னல் கதவை இழுக்க, அது திறந்து கொண்டது. சிறிய இடைவெளி விட்டு உள்ளே நடப்பதை கவனித்தாள்.

நடராஜ் தன் சட்டை பித்தான்களை அவிழ்த்துக் கொண்டிருந்தவர், பிறகு சட்டையை கழற்றி வெற்றுடம்புடன் நின்றார். அவரது அகன்ற மார்பை வெறியுடன் பார்த்தபடி நின்றாள் ம்ருகா. பிறகு மெதுவாக அங்கிருந்த

பீரோவின் பின்பாக மறைக்கப்பட்டிருந்த சவுக்கை எடுத்தாள்.

"புருஷ்! நீ என்னை ஏமாத்தின நாள் இன்னைக்கு! அதாவது உன்னோட வெட்டிங்டே! சரியா 27 வருஷத்துக்கு முன்னாடி, இதே நாளுலதான் நீ என்னை ஏமாத்தினே! அதை நான் ஜென்மத்துக்கும் மறக்க மாட்டேன்...!"

உக்கிரத்துடன் பல்லை கடித்தபடி, அந்த சவுக்கை சுழற்றியவள், அவரை விளாச ஆரம்பித்தாள்.

முகத்தில் எந்தவித சலனத்தையும் பிரதிபலிக்காமல், அந்த சவுக்கடிகளை வாங்கிக் கொண்டார், புருஷ் என்கிற நடராஜ்.

"இனிமே... என்னை ஏமாத்துவியா...?" ஆவேசமாக கூக்குரலிட்டபடி ஒன்று இரண்டு மூன்று என்று அவள் அடித்துக் கொண்டு இருக்க, நந்தனா அந்த சவுக்கடிகளை எண்ணினாள்.

மொத்தம் 27 சவுக்கடிகள்! நடராஜ் அங்கிளுக்கு அன்று 27வது கல்யாண நாளாமே! அங்கிளுக்கு கல்யாணம் ஆயிடுத்தா என்ன?

நந்தனா அதிர்ந்து போனாள்.

# 32. உத்தமிபுத்திரன்

## 1967 – திருவல்லிக்கேணி

எட்வர்ட் எலியட்ஸ் ரோட்டில் இருந்த அந்த ஹோட்டலினுள் நுழைந்தது, அந்த பேபி டாக்ஸி.

டாக்ஸியை பார்த்த மாத்திரத்திலேயே ஹோட்டல் பணியாளர்கள் இருவர் அதை எதிர்கொள்ள, அதிலிருந்து இறங்கிய அமுதனையும், மாடில்டாவையும் 'குட்மார்னிங்' என்று வரவேற்றனர்.

ரிசப்ஷனில் இருந்து வந்த ஒரு பெண் பணிவுடன் நமஸ்தே என்றவள், ''உங்களுடைய ரூம் 11, 12 ரெடி...'' என்றபடி, அதற்கான சாவிகளை பணியாளர் களிடம் நீட்டினாள்.

''வாவ்! திஸ் ஹோட்டல் இஸ் ஹோம்லி!'' என்றாள் மாடில்டா!

''பக்கத்துல ரெஸ்டாரண்ட் இருக்கு! டிபன், காபி, சாப்பிட்டுட்டு ரூமுக்கு போகலாம்! எனக்கு கொள்ளை பசி!'' என்று அமுதன் உணவகத்தை நோக்கி நடந்தான்.

லக்கேஜை எடுத்த பணியாளர்களிடம் ''பீ... கேர்ஃபுல்! உள்ளே என் காமெரா இருக்கு'' என்றபடி அமுதனை தொடர்ந்தாள் மாடில்டா.

இட்லியை ஸ்பூனால் வெட்டி வாய்க்குள் திணித்த மாட், அமுதனை பார்த்தாள்.

''புரொபஸர்! இன்னைக்கு என்ன புரோகிராம்.''

''என் மாமா வீடு ட்ரிப்ளிகேன்ல இருக்கு! நான் அவரை பார்க்க போகணும்! அங்கே ஒரு புராதன கோவில் இருக்கு! பார்த்தசாரதி கோவில்... அதுதான் நான் உன்னை அழைச்சுண்டு போற முதல் கோவில்... ட்ரிப்ளிகேன் இஸ் எ நைஸ் ப்ளேஸ்...'' அமுதன் சொன்னான்.

''ஐ ஆம் ரெடி!''

''இப்ப இல்லை! குளிச்சுட்டு அப்புறமாத்தான்'' அமுதன் காபிக்கு ஆர்டர் செய்தான்!

''இதுதான்... ட்ரிப்ளிகேன்'' அமுதன் சொல்ல, மாடில்டா பிரமித்தாள்.

''சின்ன வயசுல இருந்து என் தாத்தா இந்த ஏரியாவை பத்தி சொல்லிட்டே இருப்பார்! இப்பதான் பார்க்க சான்ஸ் கிடைச்சது...''

கோவிலையும் அதன் முன்னே இருந்த குளத்தையும் பார்த்தவுடன், கையில் இருந்த கேமராவுக்கு வேலை தந்தாள்.

கோவில் யானை, குளம், மாடு சாணம் போடுவது, மடிசார் மாமி, ஜட்கா வண்டி, கைரிக்ஷா என்று பார்த்ததையெல்லாம் தனது கேமராவில் படம்பிடித்துக் கொண்டிருந்தாள்.

"நீ இப்படியே படம் பிடிச்சுண்டு இரு! நான் என் மாமா வீட்டுக்கு போயிட்டு வந்துடறேன்..." மாடில்டா விடம் சொல்லிவிட்டு, தெற்கு மாடவீதியில் இருந்த தன் மாமாவின் வீட்டுக்கு சென்றான். ஞாபகமாக, மாமா குடும்பத்திற்கு வாங்கிவந்த பரிசு பொருட்களை எடுத்துக் கொண்டான்.

இவன் உள்ளே நுழைவதைப் பார்த்ததுமே, வரதன் மாமா வாசலுக்கு ஓடி வந்தார்.

"வாடா! அமுதா! எப்படி இருக்கே?" பாய்ந்து வந்து கட்டிக்கொண்டார்.

கையில் கரண்டியுடன் பத்மாசனி மாமி சமையலறையிலிருந்து வெளிவர, மாமா பையன் சந்தானம் மற்றும் மாமா பெண் சௌமித்ரி இருவரும் ஹாலுக்கு வந்தனர்.

"ஹாய் சந்தானம் எப்படியிருக்கே? சௌமி... ரொம்ப உயரமா வளர்ந்துட்டியே... மாமி! எப்படி இருக்கீங்கோ?"

என்று மடமடவென்று விசாரித்தவன், பையை திறந்து பரிசுபொருட்களை எடுத்தான். மாமாவுக்கு வாட்ச், சந்தானத்துக்கு கேமரா, சௌமித்ரிக்கு ப்ரேஸ்லட் என்று கொடுத்து அவர்களை மலைக்க வைத்தவன், மாமியை பார்த்தான்.

"மாமி! உங்களுக்கு உபயோகமா ஒண்ணு வாங்கிண்டு வந்திருக்கேன்" என்றவன், பையில் இருந்து அந்த சிறிய பார்சலை பிரித்தான்.

‘‘என்னது... இது?’’

‘‘இது பெயர் மினி மிக்ஸி! இலண்டன்ல வாங்கினேன்...’’

‘‘இதை வச்சுண்டு என்ன பண்றது?’’ மாமி குழம்பினாள்.

‘‘சொல்றேன்’’ இப்ப என்ன பண்ணிண்டு இருக்கீங்கோ?’’

‘‘ராத்திரி மாமாவுக்கு பலகாரம்! இட்லி பண்ணி மிளகாய் பொடி இடிக்கப்போறேன்.’’

‘‘மிளகாய் பொடி இடிக்க போறீங்களா? எப்படி... உரலுலதானே...?’’

‘‘ஆமா!’’

‘‘கை வலிக்க கடப்பாரையில இடிக்கப் போறேளா! இனிமே அதுக்கு அவசியம் இல்லை’’ என்றவன், மிக்ஸியின் பிளக்கை பாயிண்டில் சொருகினான்.

மாமி வறுத்து வைத்திருந்த மிளகாய் பொடிக்கான கலவையை, மிக்சியில் போட்டு குமிழைத் திருப்பினான்.

இரண்டே நிமிஷத்தில் மிளகாய் பொடி தயாரானது.

‘‘மாமி! மிளகாய் பொடி ரெடி!’’ அமுதன் சொல்ல, மாமி வாய்பிளந்தாள்.

‘‘நிஜமாவா?’’ பொடியை விரல்களினால் தொட்டுப் பார்த்தாள்.

''ஆமாண்டா அமுதா!'' என்றவள் மகிழ்ச்சியுடன் ''ரொம்ப நன்றிடா!'' என்றாள்.

அமுதனுக்கு பழைய ஞாபகம் வந்தது. ''மாமி! இட்லிக்கு தொட்டுக்க மிளகாய் பொடி போடுங்கோ!''

சின்ன வயதில் தான் மாமியிடம் கேட்க, அவள் கூறிய பதில் இன்னும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

''மிளகாய் பொடி சந்தானத்துக்குதான் வச்சிருக்கேன்! தொட்டுக்க இல்லாம சாப்பிட கத்துக்கோ!'' என்றவள், ''அப்படி வேணுமினா நீயே வறுத்து இடிச்சுக்கோ!... தொட்டுக்க வேணுமாம்... தொட்டுக்க...!'' என்று முணுமுணுத்தாளே.

''அமுதா! எங்கேடா தங்கியிருக்கே?''

''ஹோட்டல் வுட்லேண்ட்ஸ்ல''

''என்னடா! நம்மாத்துல தங்க கூடாதா?''

''இல்லை மாமா! என் ஃப்ரெண்டு ஒருத்தி வந்திருக்கா...'' அமுதன் கூற, மற்றவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர்.

''ஒருத்தியா?'' மாமி சந்தேகத்துடன் பார்த்தாள்.

''மாடில்டானு பெயரு! இந்தியாவை பத்தி டாகுமெண்டரி படம் எடுக்க வந்திருக்கா! அவ என்னோட ஸ்டூடண்ட்... அவ்வளவுதான்!''

வரதன் மாமா நிம்மதி பெருமூச்சு விட்டார். "நான் என்னவோ ஏதோனு பயந்துட்டேன்! இருந்து சாப்பிட்டுட்டு போகலாமோனோ?"

அமுதன் தயங்கினான். "சாப்பிடறதை பத்தி இல்லை! என் ப்ரெண்டும் சாப்பிடணும்... அதுதான்...!"

"அவாளையும் அழைச்சுண்டு வா!" மாமா சொல்ல, தலையசைத்தான் அமுதன்.

மாடில்டாவுடன் சாப்பிட மாமா வீட்டிற்கு வந்தான். அவளுடன் பேசுவதற்கு மாமி மிகவும் சிரமப்பட்டு போனாள்.

"நீங்க ஏன் புடவையை வித்தியாசமா கட்டியிருக்கிங்க...! உங்க டாட்டர் வேற மாதிரி கட்டியிருக்காங்க...?"

"கல்யாணமானவா மடிசார் கட்டிக்கணும்" மாமி சொன்னதை அமுதன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தான். "கல்யாணம் ஆன ஆண்கள் பஞ்சகச்சம் கட்டணும்..."

"வை?" மாடில்டா கேட்டாள்.

"கல்யாணமான உடனே பணத்துக்கும் சந்தோஷத்துக்கும் பஞ்சம் வர்றதாலே, பஞ்ச கச்சம் கட்டறோம்...!" மாமா சொல்ல, அமுதன் சிரித்தான்.

மாமி இலைபோட, சிரமப்பட்டு அதன் முன்பு உட்கார்ந்தாள், மாட்.

ஒவ்வொரு அயிட்டம் பற்றியும் கேட்டு அதை ஏன் சாப்பிடுகிறோம் என்று கேட்டாள்.

சாப்பிட்டு முடிந்ததும், மொட்டைமாடியில் இருந்து கடற்கரை தெரியும் என்று சொல்லி, சந்தானமும் சௌமித்ரியும் மாடில்டாவை அழைத்துக் கொண்டு மொட்டை மாடிக்கு சென்றனர்.

அவர்கள் சென்றதும், மெதுவாக அம்மாவைப்பற்றி பேச்சை எடுத்தான் அமுதன்.

''மாமா! அம்மாவைப்பத்தி ஏதாவது தகவல் தெரிஞ்சுதா?''

''ஒண்ணும் தெரியலேடா! அவ இருக்காளா இல்லை யான்னே... தெரியலை...'' வேதனையுடன் சொன்னார், வரதன் மாமா!

''நிச்சயம் உயிரோட இருப்பா, மாமா! நம்பாடுவான் தாத்தா சொல்லியிருக்கார்! நான் நிச்சயம் அப்பா அம்மாவை கண்டு பிடிப்பேன்னு சொல்லியிருக்கார்.''

பத்மாசினி மாமி அவனை பார்த்தாள்.

''நான் ஒண்ணு சொன்னா... தப்பா நினைச்சுக்க மாட்டியே! காணாம போன உன் அம்மா காணாம போனதாவே இருக்கட்டும்.

''அவளை திரும்பி தேடி கண்டுபிடிக்கிறதால அவளுக்கு என்ன சந்தோஷம், சொல்லு! இல்லை உனக்குத்தான் என்ன ச்ரேயஸ்? அவப்பெயரோட காணாம போனவ, திரும்பி வந்தா கெட்ட பெயரும் திரும்பி ஒட்டிண்டு வந்துடும். அப்போ உனக்கு சின்ன வயசு! பரவாயில்லை. இப்போ நீயே புதுசா வாழ்க்கைய

ஆரம்பிக்க போறே! துட்டை கொடுத்து ஏன் துக்கத்தை வாங்கறே?'' பத்மாசினி கேட்டாள்.

அமுதன் மாமியை ஏறிட்டான் ''மாமி! இனிமே என் அம்மா மேல எந்த அபவாதமும் ஒட்டாது. அவ உத்தமினு ஆதாரப்பூர்வமான உண்மைகள் கிடைச்சிருக்கு! சம்பந்தப்பட்டவாளே என் கிட்டே சொல்லிட்டா...''

மாமா வியப்படைந்தார் ''என்னடா சொல்றே?''

''மாமா! யுவர் சர்வீஸ் ஆர் ரிக்வயர்டு டு தி கவர்னர்? இந்த ஒரு வாக்கியம்தானே என் அம்மா பெயர் கெடறதுக்கு காரணம்?''

மாமா தலையசைத்தார்.

அமுதன் அவரை கேள்வியுடன் பார்த்தான். ''அம்மாவை சிப்பாய்கள் அழைச்சுண்டு போனதா நீங்க சொல்ற அந்த சம்பவம் எந்த தேதியில நடந்தது?''

மாமா யோசித்தார்.

''இன்னும் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு! அன்னைக்கு மார்கழி மூணாம்தேதி வெள்ளிக்கிழமை! வைகுண்ட ஏகாததிசிங்கறதால திருவல்லிக்கேணியே ஜெகஜ்ஜோதியா இருந்தது.''

''அதாவது டிசம்பர் 18, 1942 கரெக்டா?'' அமுதன் கேட்டான்.

''கரெக்ட்!'' மாமா தலையசைத்தார். பெருமாள் வீதிபுறப்பாட்டுக்காக எல்லாரும் வாசலுல

காத்திருந்தா... திடீர்னு ஒரு சாரட் உங்காத்து வாசலுல வந்து நின்னுதாம். அதுல இருந்த வெள்ளைக்கார சிப்பாய்ங்க வந்து ஜ்யோத்ஸனாவை பிடிச்சு இழுத்துண்டு போனாளாம்! அதுல ஒருத்தன் தான். “யுவர் சர்வீஸஸ் ஆர் ரிக்வயர்டு டு தி கவர்னர்னு சொன்னானாம்! ஜ்யோத்ஸனா திமிறியும், அதை லட்சியம் பண்ணாம அவளை அழைச்சுண்டு போயிட்டாளாம்னு சொன்னா!”

மாமாவிற்கு கண்கள் கலங்கின.

“இப்ப எதுக்கு இந்த கண்றாவி கதை?” மாமி முகம் கோணியது.

“மாமி! இனிமேதான் உண்மை கதையே இருக்கு. என் அம்மாவை எதுக்கு அழைச்சுண்டு போனானு, அந்த எய்ட் டீ கேம்ப் ரூபர்ட் சீமரே தன்னோட வாழ்க்கை சரித்திரத்தில எழுதியிருக்கார்! நீங்களே பாருங்கோ!”

அமுதன் தான் கொண்டு வந்திருந்த சீமரின் புத்தகத்தை அவர்கள் முன் விரித்தான்.

“மாமி பாருங்கோ! வெள்ளைக்காராளால பாதிக்கப் பட்டிருந்தா, என் அம்மா இப்படியா சிரிச்சுண்டு போஸ் கொடுப்பாள். அவாளோட இருந்ததால, எங்கம்மாவுக்கு நகையை பரிசா கொடுக்கலை! ரூபர்ட் சீமரை, பாம்பு கடிக்கு மந்திரிச்சு, அவர் உயிரை காப்பாத்திதான் அம்மா சன்மானத்தோட வந்திருக்கா...”

“என்னடா சொல்றே, அமுதா?” மாமாவும் மாமியும் அரண்டு போனார்கள்.

"அட்மைராலடி ஹால் விருந்து முடிஞ்சதும், ரூபர்ட் சீமரை பாம்பு கடிச்சுடுத்து. டாக்டர் யாரும் இல்லாததால சிப்பாய் ஒருத்தன் என் அம்மாவை பத்தி சொல்ல, அவளை அழைச்சுண்டு போயிருக்கா! பாம்பு கடிபட்டவா தூங்க கூடாதுங்கறதால, ராத்திரி பூரா சீமருக்கு சிஷ்ருஷை செஞ்சுட்டு விடியற்காலை ஆத்துக்கு வந்திருக்கா...

தான் உயிர் வாழ்வதே ஜ்யோத்ஸனா என்னும் மாபெரும் பெண்ணால்தான் என்று சீமர் தன் தாயை புகழ்ந்து எழுதியிருப்பதை படித்துக் காட்டினான் அமுதன்.

'ஹோ!' என்று கதறிவிட்டார் வரதன். மாமி தன் புடவை தலைப்பை பந்தாக சுருட்டி வாயில் அடைத்துக் கொண்டு விம்மினாள்.

"கேட்டியாடி! என் தங்கையை பத்தி இந்த ஊரே, வாய்க்கு வந்தபடி பேசினாளே, பார்த்தியா! என் பத்தரை மாத்து தங்கத்துக்கு உண்மையை விளக்கறதுக்கு கூட வாய்ப்பே தர்றலியே இந்த உலகம்?"

மாமா தலையிலடித்துக்கொண்டு அழுதார்.

"பகவான் என்னை மன்னிக்கவே மாட்டார்! நானே எத்தனையோ தடவை அவளோட மனசை ரணமாக்கி யிருக்கேன்" அவ பேசாம இருப்பா... பாவம்...!"

"உங்களை விடுங்கோ மாமி! நானே என் அப்பா வெள்ளைக்காரன்னா என் அம்மா கிட்டே கேட்டிருக் கேன். அப்ப அவ மனசு என்ன பாடுபட்டிருக்கும்?" அமுதன் கண்கலங்கினான்.

"இதோ - இருக்கிற கோவில் கோபுரத்துல ஏறி என் தங்கை உத்தமினு கத்தணும் போல இருக்கு.."

மாமா மூக்கை உறிஞ்சினார்.

"முதலுல அம்மாவை கண்டுபிடிக்கணும் மாமா!" அமுதன் குரல் நெகிழ்ந்திருந்தது.

பத்மாசினி கண்ணீர் விட்டாள். "கண்டு பிடிடா அமுதா! அவளை கண்டுபிடிச்சு என் கையில கொடுத்திடு! காலம் பூரா அவளுக்கு பாத பூஜை பண்ணி என் பாவத்தை கழிக்கிறேன்...!"

"மாமா! என்னோட வந்திருக்கிற மாடில்டா யாரு தெரியுமா?"

"யாரு?"

"ரூபர்ட் சீமரோட பேத்தி! அம்மாவை கண்டுபிடிக்க உதவி செய்யறதுக்காக அவரே என்னோட அனுப்பி யிருக்கிறார்...!"

"நான் உன் அம்மாவுக்கு கூடப்பிறந்தவன் இல்லேடா! அந்த ரூபர்ட்தான் கூட பிறந்தவன்! அவனுக்கு இருக்கிற நன்றி உணர்ச்சியில கால் பங்கு கூட எனக்கு இல்லேனா எப்படி? நானும் என் குடும்பமும் உங்க குடும்பம் ஒண்ணு சேர எங்களால முடிஞ்ச தேசு பாட்டை செய்றோம்டா அமுதா!"

மாமா உணர்ச்சி வசப்பட்டு அவன் கையை பிடிக்க, அதே சமயம், மொட்டைமாடிக்கு சென்றிருந்த மாடில்டாவுடன் சௌமித்ரியும், சந்தானமும் கீழே வர, அவர்களுடைய பேச்சு நின்றது.

அமுதன் அவர்களுடன் பீச்சுக்கு கிளம்பி போக, பத்மாசினி சோகத்துடன் உட்கார்ந்திருந்த வரதனின் முன்பு நின்றாள்.

''இதோ பாருங்கோ! ஜ்யோத்ஸனாவுக்கு நாம நிறைய கெடுதல் பண்ணிட்டோம். அதற்கெல்லாம் பிராயச் சித்தம் செய்ய ஒரு வழி இருக்கு...!''

''என்ன?'' வரதன் வியப்புடன் அவளைப் பார்த்தார்.

''பேசாம அமுதனுக்கே நம்ம செளமித்ரியை கொடுத்துடுவோம்...!''

வரதன் புருவத்தை நெறித்தார். ''என்னடி உளர்றே? அவன் 1940-ல பொறந்தவன். இவ 1950-ல பொறந்தவ! ரெண்டு பேருக்கும் பத்து வயசு வித்தியாசம்''

''வயசுல என்ன இருக்கு! ராஜா மாதிரி இருக்கான். நல்லா படிச்சிருக்கான்! நல்ல உத்யோகம் பாக்கறான்! இது என்னவோ எஸ்.எஸ்.எல்.சி. மேல படிக்க போறது இல்லை! பேசாம உங்க தங்கை பிள்ளையையே மாப்பிள்ளையா ஆக்கிடுங்கோ!''

பத்மாசினியை அருவருப்புடன் பார்த்தார் வரதன்.

''இதுதாண்டி குரங்கு மனசுனு சொல்லுவா! நேத்தி வரைக்கும் ஜ்யோத்ஸனா உத்தமி இல்லை... அதனால அமுதன் உன் கண்ணுக்கு மாப்பிள்ளையா தெரியலை. இன்னைக்கு அவள் நல்லவனு தெரிஞ்ச உடனே, அவன் உன் கண்ணுக்கு நல்ல மாப்பிள்ளையா தெரியறான் இல்லே!'' வரதன் கண்களில் அனல் பறந்தது.

''ஏன்... நீங்க மட்டும் என்ன! உண்மையிலேயே உங்க மனசு நல்லதா இருந்தா... என்ன சொல்லியிருக்கணும்! என் தங்கை தப்பா நடந்திருக்கமாட்டா! அப்படியே எசகு பிசகா ஏதாவது நடந்திருந்தாலும், நான் என் தங்கையை விட்டுக் கொடுக்க மாட்டேன்! என் பொண்ணை அமுதனுக்குதான் கொடுப்பேனு நீங்க ஒரு நாளும் சொன்னதில்லையே! உங்க மனசே உங்க தங்கையை பத்தி தப்பா நினைச்சிருக்கு...!''

பத்மாசினி சொன்னதைக் கேட்டு வாயடைத்துப் போனார் வரதன். இன்றுவரை ஏன் அவர் இந்த கோணத்தில் பார்க்கவில்லை. உண்மையிலேயே அவர் தன் தங்கையை விட்டுகொடுத்துதான் இருந்தார்.

''பத்மாசினி! நீ சொன்னது சரிதான்! அமுதனுக்கு சௌமித்ரியை கல்யாணம் பண்ணி கொடுத்துடலாம். அப்படித்தான் நம்ம பாவத்தை தொலைக்கணும்! ஏற்பாடு பண்றேன்...'' என்றபடி வரதன் எழுந்தார்.

# 33. குளிர வைத்த குளிகை

## 1967 - சிதம்பரம்

**மா**டில்டா பிரமிப்புடன் சிதம்பரம் கோவிலை தன் கேமராவினால் படம்பிடித்துக் கொண்டிருந்தாள்.

''மெக்னி ஃபிஷெண்ட்!'' வாய்க்கு வாய் கோயிலின் கம்பீரத்தை பற்றி அவள் பாராட்டிக் கொண்டிருக்க, அமுதன் அவளுக்கு கோயிலைச் சுற்றி காட்டிக் கொண்டிருந்தான்.

''மாட்! இது என் தாத்தாவோட ஊர்!'' எங்களுக்கு அரண்மனை போல பூர்வீக வீடு ஒண்ணு இங்கே இருந்தது...'' அமுதன் சொன்னான்.

''இப்பவும் இருக்கா?''

''இல்லை! என் பாட்டி அதை வித்துட்டாள்!''

''பட் வை? உங்க இந்தியாவுல ஏன் மூதாதையர் களோட வீட்டை வித்துடறீங்க? அதை பொக்கிஷமா பாதுகாக்க வேண்டாமா?'' மாட் கேட்டாள்.

''இல்லை மாட்! என் பாட்டி அந்த வீட்டை வித்ததுக்கு காரணம் இருந்தது. இந்த ஊருல புருஷா மிருகம்னு ஒரு மிருகத்தால என் அப்பாவுக்கு ஆபத்து வரும்னு யாரோ ஜோசியர் சொன்னதாலதான் வீட்டை

வித்துட்டு சென்னைக்கு போயிட்டா...!'' அமுதன் சொன்னதைக் கேட்டதும், மாடில்டாவின் முகத்தில் ஆவல் பரவியது.

''என்ன மிருகம்?''

''புருஷாமிருகம்! மனித தலையும் சிங்க உடலும் கொண்ட புராண காலத்து மிருகம்...!''

''அந்த மிருகத்தோட கார்விங் இருந்தா எனக்கு காட்டுங்களேன், புரொபஸர்'' மாட் கேட்டாள்.

அவளை புருஷா மிருகம் சிற்பங்கள் இருந்த பகுதிக்கு அழைத்துச் சென்றான் அமுதன்.

ஆச்சரியத்துடன் அந்த சிற்பங்களைப் படம் பிடித்தாள், மாடில்டா. அமுதன் அவளுக்கு புருஷா மிருக கதையை சொல்ல, அவள் ஆர்வமுடன் கேட்டாள்.

''உங்க கோவில்கள் எல்லாம் ரொம்ப இன்ட்ரஸ் டிங்கா இருக்கு! பட்... எனக்கு ஒரு சந்தேகம்! புருஷா மிருகம்ங்கிற புராண காலத்து மிருகம் எப்படி உங்க அப்பாவை குறி வைக்கும்? லாஜிக்கே இல்லையே!'' மாட் சொன்னாள்.

''உனக்கு எப்படி புரிய வைக்கிறது! எங்க நம்பிக்கைபடி ஏழு உலகம் இருக்கு. இதுல தேவர்கள், அசுரர்கள், யட்சர்கள் கின்னரர்கள், நாகர்கள் வித்யாதாரர்கள்னு நிறைய சக்திகள் இருக்கு! கடவுள்தான் சுப்ரீம் சக்தி! அதற்கு அப்புறம்தான் இந்த சக்திகள்! இவையெல்லாம் பரிவார தேவதைகள்! அதாவது கடவுளுக்கு சேவை செய்யறவங்க! யட்சர்கள்

ரொம்ப சக்தி வாய்ஞ்சவங்க! அவங்க தலைவர்தான் குபேரன், லார்ட் ஆஃப் வெல்த்! இவர் தோட்டத்தை காவல் காத்த புருஷா மிருகம், ம்ருக ரஞ்சிகா எல்லாருமே யட்சர்கள்தான்! யட்சர்களும் யட்சிணிகளும் மனுஷ உருவுல நடமாடுவானு ஒரு நம்பிக்கை!''

''அப்ப உன் அப்பாவை ஒரு யட்சிணிதான் தூக்கிட்டு போயிட்டாளா?'' மாடில்டா அதிசயித்தாள்.

''அப்படினுதான் ஜோசியம் சொல்லுது...''

சிறிது நேரம் அமுதனையே யோசனையுடன் பார்த்தாள் மாடில்டா.

''அமுதன்! யூ ஆர் ரைட்! மனுஷத்தனமே இல்லாமே நடந்துக்கற ரொம்ப பேர் எங்க நாட்டுலயும் இருக்காங்க! இப்ப நீங்க சொன்னப்புறம் புரியுது! இந்த மாதிரி மனுஷத்தனத்துக்கு அப்பாற்பட்ட சக்திகள் தான் மனுஷ உருவத்துல நடமாறாங்களோனு தோணுது! நீங்க கவலைப்படாதீங்க! அந்த யட்சிணியை எதிர்த்து நீங்க நடத்தற போராட்டதுல, நான் உங்களுக்கு பக்கபலமா இருப்பேன்...!''

இருவரும் பேசிக் கொண்டே இருக்க, ஒரு பெண் இரண்டு அகல் விளக்குகளை அங்கே வைத்து ஏற்ற, மாடில்டா அதை மறக்காமல் படம்பிடித்தாள். அந்தப் பெண் அவ்வாறு விளக்கு ஏற்றுவதைப் பார்த்துக் கொண்டிருந்த அமுதனின் சிந்தையில் ஏதோ மணியடித்தது.

''அமுதா! அடுத்த முறை சிதம்பரத்துக்கு வரும்போது, இந்த சின்னமஸ்தா கோயிலுக்கு வா! உன் தாத்தா ஸ்ரீவத்ஸாங்கம் கொடுத்த விளக்கோட மேல் பாகத்தை திறந்து எண்ணை குழியை பாரு! உள்ள பூபதி குளிகம் இருந்தா... உன் அப்பாவை நீ சுலபமா காப்பாத்திடலாம்...''

நம்பாடுவான் குரல் அவன் காதில் ஒலிக்க, அமுதன் பரபரப்புடன் எழுந்தான்!

அடடா! நம்பாடுவான் தாத்தா சொன்னதை எப்படி மறந்து போனேன்? தாத்தாவுக்கு ஒரு வேளை குளிகை கிடைத்திருந்தால்? அந்த கல் விளக்கின் எண்ணை குழியில் அந்த பூபதி குளிகையை வைத்திருந்தால்...? போய் பார்த்தால் என்ன?

பத்து வருட காலமாயிற்றே! தாத்தாவும் இறந்து போய் விட்டார். அந்த சின்னமஸ்தா கோவிலில் கல் விளக்கை இன்னும் வைத்திருக்கிறார்களோ இல்லையோ!... போகலாமா... வேண்டாமா?... போய் பார்த்தால் என்ன?

கேமராவை லெதர் பாக்கினுள் வைத்தபடி வந்த மாடில்டா, அமுதன் தீவிர யோசனையில் இருப்பதைப் பார்த்தாள்.

''என்ன... புரொபஸர்,''

''ஒரு கிராம கோவிலுக்கு போகணும்! நீ வர்றியா... இல்லை... ஹோட்டல் ரூமுக்கு போறியா.... உனக்கு பசிக்குமே?''

"வை நாட்? எனக்கு பசி இருக்கிறது உண்மைதான்! ஆனால் என்னைவிட என் கேமராவுக்கு பசி இன்னும் அதிகம்...!"

கண் சிமிட்டியபடி மாட் கூற, அவளையும் அழைத்துக் கொண்டு சின்னமஸ்தா கோவிலுக்கு விரைந்தான். கோவில் அப்படியேதான் இருந்தது. ஆனால் சுற்றி இருந்த வயல்வெளிகளில்தான் கட்டடங்கள் எழுப்பப்பட்டிருந்தன.

மாடில்டாவுடன் கோவிலுக்குள் நுழைந்தவன், சன்னதியின் பின்புறமாக சென்றான்.

ஸ்ரீவத்ஸாங்கம் அந்த கோவிலுக்கு அளித்த அந்த கல்விளக்கு அதே கம்பீரத்துடன் நின்றது. உபயம் ஸ்ரீவத்ஸாங்கம் என்கிற பெயர்பலகையை மட்டும் காணவில்லை.

ஆவலுடன் அந்த விளக்கைப் பார்த்தபடி நின்றான். ஒரு கணம், சகட வாக்கி நம்பாடுவானை நினைத்தான்.

"என் அப்பா அந்த யட்சிணியிடமிருந்து மீண்டு அம்மாவிடம் சேருவாரா?"

விளக்கின் எண்ணைகுழியில் கைவைத்துப் பார். குளிகம் தட்டுப்பட்டால் உன் அப்பா மீளுவார்! இல்லையென்றால் அவர் மீள்வது கடினம்... நம்பாடுவான் அவன் காதில் கிசுகிசுப்பது போல உணர்ந்தான்.

அமுதனுக்கு உடல் வெடவெடத்தது. ஒரு வேளை. அந்தக் குளிகம் விளக்கில் இல்லையென்றால், இவ்வளவு காலம் நம்பிக்கையுடன் காத்திருந்ததற்கு அர்த்தம் இல்லாமல் போய் விடுமோ?

என்ன செய்வது?

மாடில்டா மும்மரமாக கோவிலின் முகப்பில் படம் பிடித்துக் கொண்டிருந்தாள்.

துணிவை வரவழைத்தவன், அந்த கல்விளக்கின் குமிழைத்திருகி அதன் மேல் பாகத்தை கழற்ற முயன்றான். வெகு நேரப் போராட்டத்திற்கு பிறகே அவனால் அதை கழற்ற முடிந்தது. அகலமான எண்ணைக்குழி 'எனக்குள் கைவிடு' என்று வாய் திறந்து காட்டியது.

நடுங்கும் கையை நிதானமாக உள்ளே விட்ட அமுதன், இப்படியும் அப்படியும் துழாவினான்.

கையில் தூசு ஒட்டிக் கொள்ள, இன்னும் ஆழமாக கைவிட்டுத் துழாவ, மெத்தென்று ஒரு பொருள் அவன் விரல்களில் சிக்கியது. அதை வெளியே எடுத்தான்.

காவி நிறத்தில் ஒரு சிறிய சுருக்கு பை அழுக்கேறி இருந்தது. அதை பிரித்து உள்ளே பார்த்தான்.

உள்ளே நம்பாடுவான் வைத்திருந்த அந்த பூபதி குளிகம் இருந்தது. தான் சொன்னபடியே, குளிகையை அந்த விளக்கின் எண்ணை குழியில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார் நம்பாடுவான். மனம் குளிர, உணர்ச்சி வசப்பட்டவனாக, அமுதன் மெய்மறந்து நின்றிருந்தான்.

# 34. ஒரு கணவன், ஒரு துணைவன்

### 1967 - வுட்பெக்கர் எஸ்டேட்

**ம்**ருகாவும், நடராஜ் அங்கிளும் காரில் ஏறி எஸ்டேட்டுக்கு போவதை பால்கனியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தாள் நந்தனா.

அம்மா ஏன் சொந்த அண்ணனை அடிமை போல நடத்துகிறாள். அவள் ஏன் அப்பாவிடம் அன்யோன்ய மாக இல்லை? இந்த வீட்டில் என்னதான் நடக்கிறது?

சிறு வயதிலிருந்தே அவளுள் இந்த கேள்விகள் எதிரொலித்துக் கொண்டுதான் இருந்தன. ஆனால் நான்கு வருடத்திய லண்டன் வாசம், இந்த கேள்விகளை சிந்தனையை விட்டு நீக்கி விட்டன. இப்போது அக்கேள்விகள் மீண்டும் எழ ஆரம்பிக்க, அவற்றிற்கு பதில் எங்கே கிடைக்கும் என யோசித்தாள். மனதில் எழும்பிய கேள்விக்கணைகள், குளிர் காற்றில் கலந்து மெதுவாக தொலைவில் இருந்த மலைச்சாரல்களில் மீது மோதி எதிரொலித்திருக்க வேண்டும்.

காரணம்

திடீரென கார் ஜன்னல் வழியாக அந்த மலைகளை உறுத்துப்பார்த்த ம்ருகா, தொடர்ந்து தன் பங்களா

பால்கனியில் பொம்மைப் போல் தெரிந்த நந்தனாவையும் பார்த்தாள்.

கார் பங்களாவை விட்டு நீங்கி வெளியே மலைப் பாதையில் இறங்கி கண்கள் விட்டு மறைந்ததும், அடுத்த வினாடி தன் அப்பாவின் அறையை நோக்கி விரைந்தாள்.

சால்வையைப் போர்த்தியபடி ஜன்னலோர நாற் காலியில் அமர்ந்து 'பைப்' புகைத்துக்கொண்டிருந்தார், யக்ஞமூர்த்தி.

"டாடி!"

திடுக்கிட்டு திரும்பிய யக்ஞத்தின் முகத்தில் நத்தனாவை கண்டதும் நிம்மதியோடு, வாஞ்சையும் கலந்தது.

"வாம்மா! அம்மா கிளம்பி போயாச்சா?"

"ம்" தலையாட்டினாள் நந்தனா.

"சொல்லும்மா! லண்டன் வாசம் எப்படி இருந்தது?" யக்ஞம் பைப்பை ஜன்னலோரமாக தட்டி, சாம்பலை உதிர்த்தார்.

"அப்பா! நான் வந்து ரெண்டு நாளாச்சு! அம்மா எதிரே என்கிட்டே பேசவே மாட்டேங்கறீங்க? அம்மா கிளம்பின அப்புறமாத்தான் என்கிட்டே பேசறீங்க! சொல்லுங்க! இந்த வீட்டுல என்ன நடக்குது?" நந்தனா அவரை உற்றுப் பார்த்தாள்.

"என்ன நடக்குது?" புரியாதது போல் கேட்டார், யக்ஞம்.

''நீங்க இந்த ரூமை விட்டு வெளியே வர்றதே யில்லை. நடராஜ் அங்கிள்தான் எல்லாத்தையும் கவனிச்சுக்கிறார். ஆனால் அவரைக் கூட அம்மா நாயை விட கேவலமா நடத்தறா! எனக்கு புரியலை! இந்த வீட்டுல இரண்டு ஆம்பிளைங்க இருக்கீங்க! ஆனா... ரெண்டு பேருமே அம்மா கிட்டே அடிமையா இருக்கிங்க ஏன்.... அப்படி?''

மிரண்டு போய் மகளைப் பார்த்தார் யக்ஞும்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா! எனக்கு உடம்பு சரியில்லை! அம்மா என்னை அக்கறையா கவனிச் சுக்கறா! நடராஜ் அங்கிளுக்கு தன் சிஸ்டர்கிட்டே அளவு கடந்த பிரியம்... அதனாலதான் அவ சொல்றதை யெல்லாம் கேட்கறார்!'' யக்ஞும் சமாளித்தார்.

''அளவு கடந்த பிரியம்னா... எப்படி? சவுக்கை எடுத்து அம்மா 27 அடிகள் தர, அதை தாங்கற அளவுக்கா?''

யக்ஞுத்தின் முகம் இருண்டது. ஜன்னல்பக்கமாக மலைத்தொடரைப் பார்ப்பது போல, முகத்தை திருப்பினார்.

''சொல்லுப்பா! அம்மா ஏன் இப்படி நடந்துக்கறா? சொந்த அண்ணனை ஏன் இப்படி மிருகத்தனமா அடிக்கிறா?''

யக்ஞும் மீண்டும் அவளை நோக்கியபோது அந்த கண்களில் பிரதிபலித்தது. பீதியா... சோகமா? நந்தனாவுக்கு புரியவில்லை.

''நந்தனா! நீ நினைக்கிறது மாதிரி நடராஜ் அங்கிள், ம்ருகாவோட சொந்த அண்ணன் கிடையாது...!'' யக்ஞும் சொல்ல, அதிர்ச்சியுடன் தான் உட்கார்ந்து இருந்த பிரம்பு நாற்காலியை தூக்கிக் கொண்டு போய் அப்பாவின் பக்கத்தில் போட்டபடி அதில் அமர்ந்தாள்.

''என்ன சொல்றீங்க அப்பா? நடராஜ் அங்கிள் சொந்த அண்ணன் இல்லையா? அப்ப கஸின் பிரதரா?''

'இல்லை' என்பது போல தலையசைத்தார். யக்ஞும்.

''தென்... ஹீ இஸ் ஹீ?'' நந்தனா திகைத்தாள்.

மிரட்சியுடன் சுற்றுமுற்றும் பார்த்தார், யக்ஞும்.

''நந்தனா! நடராஜ் அங்கிளோட நிஜப் பெயர் புருஷோத்தமன்... தெரியுமா?''

''நடராஜ் அங்கிளுக்கு வேற ஏதோ பெயர்! ஆனா... நடராஜர் ஓவியம் நல்ல வரையறதால அதை அவர் தன் க்ரியேடிவ் நேம்மா வச்சுண்டு இருக்கார்னு அம்மா ஒரு தடவை சொன்னா... பட்! அவர் பெயர் புருஷோத்த மன்னு இப்பதான் தெரியும்!'' நந்தனா சொல்ல, யக்ஞும் தலையாட்டி மறுத்தார்.

''அதுக்காக அவன் பெயர் மாத்தப்படலை, நந்தனா! அவனோட நிஜமான பெயர், வெளி உலகத்துக்கு குறிப்பா அவன் குடும்பத்துக்கு தெரியக் கூடாதுனு தான், அவன் பெயரை நடராஜ்னு ம்ருகா மாத்தி வச்சிருக்கா''

மீண்டும் அதிர்ந்தாள், நந்தனா. ''எதுக்காக அவர் பெயர் வெளியே தெரியக்கூடாது? ஏதாவது போலீஸ் கேசுல மாட்டியிருக்காரா?

யக்ஞும் மௌனம் சாதித்தார். இவளிடம் உண்மையை சொல்லி விடலாமா? ம்ருகாவுக்கு தெரிந்தால் ருத்ர தாண்டவம் ஆடுவாளே!

''நந்தனா! நான் சொல்லப்போறதை அம்மாகிட்டே கேட்க கூடாது! அடுத்த நிமிஷம் என்னை வீட்டை விட்டு விரட்டிடுவா! உனக்கு அப்பா கடைசி வரைக்கும் வேணுமினா, நான் சொல்ற விஷயங்களைப் பத்தி அவகிட்டே விளக்கம் கேட்க கூடாது! காரணம் அவளுக்கு ஆத்திரம் வந்தா என்னை கொலை செய்யக்கூட தயங்கமாட்டா...

நந்தனாவுக்கு மூச்சே நின்று விடும் போல இருந்தது.

''என்னப்பா உளர்றீங்க? அம்மா ஏன் உங்களை கொலை செய்யப்போறா?''

''ஒரு கொலையை செய்தவளுக்கு இன்னொரு கொலை செய்யறதா கஷ்டம்?''

யக்ஞும் வேதனையுடன் சொல்ல, நந்தனாவுக்கு இதயம் வாய் வழியே வெளிவந்து விடும் போல இருந்தது. ''அப்பா!'' நடுங்கும் கையால் யக்ஞுத்தின் கையை பற்றிக்கொண்டாள்.

''உனக்கு எல்லாத்தையும் சொல்லிடப்போறேன்'' என்றபடி நந்தனாவின் பக்கமாக திரும்பி உட்கார்ந்தார், யக்ஞும்

''நடராஜ் அங்கிள் யார் தெரியுமா, நந்தனா?''

''யாரு?''

"ஒரு காலத்துல உங்கம்மாவோட லவ்வர்..."

"வாட்?" கல்லாய் சமைந்தாள், நந்தனா.

"இதுக்கே இவ்வளவு அதிர்ச்சி அடையறியே! உங்கம்மா செஞ்ச மத்த காரியங்களைப் பத்தி தெரிஞ்சுண்டா நீ என்ன சொல்லுவியோ...!"

அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் கண்களில் குழப்பத்துடன் அவரைப் பார்த்தாள்.

"உன் அம்மாவும் புருஷோத்தமனும் ஒரே காலேஜில படிச்சாங்க! புருஷோத்தமன் ம்ருகாவை காதலிக்கலை! ஆனா... ம்ருகாதான் அவனை துரத்தி துரத்தி காதலிச்சா! அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் இதுல கொஞ்சங் கூட விருப்பமில்லை! காரணம், அவங்க லோயர் மிடில் கிளாஸ்! உன் அம்மாவோ பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவ!

"ம்ருகாவோட தொந்திரவு தாங்காம, அந்த பையன் அவளுக்கு தெரியாம தன் அத்தைப் பொண்ணை கலியாணம் பண்ணிண்டுட்டான். அது தெரியவந்ததும் ம்ருகா அடைஞ்ச கோபத்துக்கு அளவேயில்லை! அவளோட அப்பாவும், என் வளர்ப்பு அம்மாவும் சேர்ந்து எனக்கும் ம்ருகாவுக்கும் கல்யாணம் செஞ்சு வச்சா! என்னோட அவ சரியாகவே குடித்தனம் பண்ணலே! மாசத்துல ரெண்டு மூணு நாள் தான் என்னோட பாலகாட்டுல இருப்பா! மீதி நாளுல சென்னைலதான் இருப்பாள்! போதாதகுறைக்கு கவர்னரோட மொழி பெயர்ப்பாளரா வேலைக்கு வேற சேர்ந்துட்டா...

''அவளுக்கு நான் ஒரு சிம்பாலிக் ஹஸ்பெண்ட்! அவ்வளவுதான்! எனக்கு ஒரு வளர்ப்பு அம்மா இருந்தா! பெயர் ஆதிரா அந்தர்ஜனம்! என்னை சின்ன வயசுலேர்ந்து அவதான் வளர்த்தா! தீடீர்னு ஒருநாள் அவ தன்னோட பூர்விக புதையலை தேடிப் போறேன்னு சொல்லிட்டு காணாம போயிட்டா. நான் கோயமுத்தூர் போயிட்டு திரும்பி வந்து பாக்கறச்சே, என் அம்மாவை காணோம்! அவளோட பட்டாம்பி கிராமத்து வீட்ல போய் தேடிப் பார்த்தேன். கிடைக்கலை! ம்ருகா அந்த வீட்டை இடிச்சு இப்ப டிம்பர் ஃபாக்டரி கட்டிட்டா... இப்ப ம்ருகாவோட நடவடிக்கைகளை பார்த்தா எனக்கு அவதான் எங்கம்மாவை எதாவது பண்ணிட்டாளோனு சந்தேகமா இருக்கு...''

சிறிது நேரம் யக்ஞும் இடைவெளி விட, நந்தனா அவர் தோளைத் தொட்டாள்.

''நடராஜ் அங்கிள்.... ஐ... மீன்... புருஷோத்தமன் அங்கிள் குடும்பம் எங்கே?''

''புருஷோத்தமனுக்கு கல்யாணம் ஆகி ஒரு குழந்தையும் பொறந்துடுத்து, நந்தனா. ஆனா... அவாளுக்கு என்ன ஆச்சுன்னு இதுவரைக்கும் தெரியலை... 1942-ல ஒரு நாள் திடீர்னு புருஷோத்த மனை அழைச்சுண்டு வந்தா! வேலை இல்லாம கஷ்டப்படறாரு! நம்ம எஸ்டேட்லயே வேலை போட்டுக் கொடுக்கலாம்னு சொன்னா?'' நானும் சரினு சொன்னேன்.

''1947-ல் சுதந்திரம் கிடைச்சது! அப்ப ஈஸ்ட் இண்டியா கம்பெனி அதிகாரி ஒருத்தர்கிட்டே, குறைஞ்ச விலையில இந்த 'வுட்பெக்கர்' எஸ்டேட்டை வாங்கினா, ம்ருகா. வலுகட்டாயமா நம்ம குடும்பத்தை கோத்தகிரிக்கு மாத்திட்டா! அதுக்கு அப்புறம் என் பாலக்காட்டு வீட்டையும் வித்துட்டா...

''மொத்தத்துல, புருஷோத்தமனை அவன் குடும்பத்துக் கிட்டே இருந்து பிரிச்சு இங்கே அழைச்சுண்டு வந்துட்டா... அதுக்கப்புறம்... எனக்கு உடம்பு சரியில்லாம போச்சு... வசதியாக இருக்கேன்... அவ்வளவுதான்! புருஷங்கிற எந்த அதிகாரமும் இல்லாம!... நான் கணவன்! அங்கிள் துணைவன்!''

யக்ஞும் பார்வையைத் தாழ்த்தினார்.

''அப்படின்னா...'' சந்தேகத்துடன் பார்த்தாள் நந்தனா.

''உடல் ரீதியா மட்டும்தாம்மா நான் ம்ருகாவுக்கு புருஷன். மன ரீதியாக... புருஷ்தான் அவளுக்கு புருஷன்...!''

''புரியலைப்பா!''

''பெட்ரூம்ல என்னை அலௌ பண்ணுவா! ஆனா என்னை 'புருஷ்'னு தான் கூப்பிடுவா. இதைவிட ஒரு அவமானம் ஒரு கணவனுக்கு வேணுமா?''

''அப்பா...!'' உடல் நடுங்க, யக்ஞத்தின் முன் மண்டியிட்டாள்?

''அம்மாவுக்கு அங்கிளுக்கும் இடையில..''

''நானும் ரொம்ப நாளா... அவங்களுக்குள்ள ஏதோ இருக்குனு நினைச்சேன்... அப்புறம் தான் தெரிஞ்சுது! அவளுக்கு புருஷோத்தமன் மேல இருக்கிறதெல்லாம் துவேஷம் குரோதம் அருவருப்புனு. ஒரு நாள் நானே என் காதால கேட்டேன்.

''என்னை உதாசினம் செஞ்ச உனக்கு இனிமே பெண் வாடையே கிடைக்காது! நீ ஆயுள் முழுக்க பிரம்ம சாரியாவே கிட... அப்படினு கத்திண்டு இருந்தா! பாவம்மா அந்த புருஷோத்தமன்! தன் ஆசாபாசங்கள் குடும்பம் எல்லாத்தையும் துறந்து... ஒரு முனிவனை போல வாழ்ந்துண்டு இருக்கான்.''

''ச்சீபோடி! நான் என் குடும்பத்துக்கிட்டே போறேன்னு சொல்லிட்டு மாமா கிளம்பி போக வேண்டியதுதானே! எதுக்கு அம்மாகிட்டே பயந்துண்டு இருக்கணும்! தன் குடும்பத்தை மாமா தேடி கண்டு பிடிக்க வேண்டியதுதானே!''

ம்ருகா மீது இருந்த பயமெல்லாம் அருவருப்பாக மாற, தன் குரலை உயர்த்தினாள் நந்தனா.

ஐயோ! இவளுக்கு நான் எப்படி புரிய வைப்பேன்? யக்ஞத்தின் முகத்தில் வியர்வை அரும்பியது.

ம்ருகாவைப்பற்றி இன்னும் சொன்னால் இவள் தாங்குவாளா?

மகளை எச்சரிக்கையுடன் பார்த்தார் யக்ஞம்.

''நந்தனா! அப்பாவா நான் சொல்றதை கேட்டு நடந்துக்கோ! உன் அம்மா சாதாரண மனுஷி கிடையாது!

இன்னும் சொல்லப்போனா மனுஷியே கிடையாது! மிருகம்னுதான் சொல்லணும்! அவகிட்டே சில மர்மமான சக்திகள் இருக்கு! அவ கருப்பு உலகத்தோட பிரதிநிதி! அவ யட்சிணி உபாஸனம் பண்ணறவ! அதை வச்சுதான் புருஷோத்தமனை தன் வசம் கட்டி வச்சிருக்கா...

"உன்னோட நந்தனா நெஸ்ட் டை இப்ப அம்மா பூட்டி வச்சிருக்கா. அஷ்டமி தினத்துல இராத்திரி வேளைல அந்த வுட் ஹவுசுக்கு போய் பூஜை பண்றானு நினைக்கிறேன்...

"நான் உன்கிட்டே சொல்றதெல்லாம் இதுதான்! நீ கல்யாணம் பண்ணிண்டு, உன் குழந்தை குட்டிகளோட ஃபாரின்ல எங்கேயாவது கண்மறைவா இரு! எந்த காரணம் கொண்டும் இந்த எஸ்டேட்டுக்கு வராதே! நான் செத்தாக்கூட இங்கே வராதே! அம்மா வோட எந்த உறவும் வச்சுக்காதே!" யக்ஞும் கெஞ்சும் குரலில் கூறினார்.

"ஆமா... நந்தனா! அப்படி அப்பா சாகறதை பார்க்கணும்னு ஆசை இருந்தா, அவரை கையோடு ஃபாரின் அழைச்சுண்டு போயிடு..."

திடுக்கிட்டு யக்ஞும் நந்தனாவும் திரும்பி பார்க்க, இகழ்ச்சியாக புன்னகைத்தபடி ம்ருகா நின்றிருந்தாள்.

"பாதி தூரம் போனப்புறம் தான் ஞாபகத்திற்கு வந்தது. உன்னைப் பார்த்தா உங்கப்பாவுக்கு தலைகால் புரியாது. பேசிண்டே இருப்பார்னு தெரியும். அவர் ஒரேடியா

பேசாம இருக்கிறவரைக்கும், நான்தான் அவரை பேசவிடாம செய்யணும்! அதுக்குத்தான் திரும்பி வந்தேன்...''

என்றபடி இரண்டு தூக்கமாத்திரைகளை கொண்டு வந்து யக்ஞத்திடம் கொடுத்தாள்.

''சாப்பிடுங்கோ!''

''தண்ணீர் இல்லையே?'' யக்ஞம் தயங்கினார்.

''அப்படியே விழுங்குங்க! தண்ணீர் கொண்டு வர்றதுக்குள்ளே இன்னும் எதையாவது சொல்லி நந்தனா மனசை குழப்புவீங்க..'' என்று அதட்ட, யக்ஞம் மாத்திரைகளை விழுங்கினார்.

திரும்பி நந்தனாவை ஒரு பார்வை பார்த்தாள், ம்ருகா.

அந்த பார்வை தனக்கு எச்சரிக்கை விடுப்பதை உணர்ந்த ம்ருகாவின் முதுகுதண்டு சில்லிட்டது.

# 35. ரகசியம் பரம ரகசியம்

## 1967 - பிருந்தாவன் (உத்திரபிரதேசம்)

**"ஹரே ராம ஹரே ராம**
**ராம ராம ஹரே ஹரே**
**ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண**
**கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே"**

அந்த பாழடைந்த காற்றோட்டமில்லாத இருளடைந்த சத்திரத்தில் பஜனைப் பாடல்களை இசைத்துக் கொண்டிருந்த பெண்கள் அனைவருமே விதவைக் கோலத்திலேயே இருந்தார்கள். எண்பது வயது கிழவியில் தொடங்கி, எட்டு வயது சிறுமி வரை, அங்கே அமர்ந்திருந்த அத்தனை பெண்களின் கூந்தலும் மழிக்கப்பட்டு தலைகள் சாயம்போன நார்மடி சேலைகளினால் மறைக்கப்பட்டிருந்தன. அப்போதுதான் இளமை பருவத்தில் காலடி எடுத்து வைக்கும் குமரிகள், திருமணம் ஆகி சில மாதங்களிலேயே கணவனை இழந்த இளம் விதவைகள், கிழவர்களுக்கு வாக்கப் பட்டு விரட்டப்பட்ட சிறுமிகள் என்று பலவகை பெண் களும் தங்களை மறந்து பஜனை பாடிக்கொண்டிருந்தனர்.

அவர்களது குரலில் பக்தியை விட சோகம்தான் அதிகம் வெளிப்பட்டது. அந்த சத்திரத்தில் இளம் மற்றும் பருவ அழகுடன் விளங்கிய விதவைகளை குறிவைத்து

விஷமிகள் சிலர் சத்திரத்தின் வாசல் திண்ணையிலேயே முகாமிட்டிருந்தனர். பஜனை பாடல் முடிந்ததும் யாராவது விதவைகள் வெளிவந்தால், குறிவைக்கலாம் என்று இளித்துக்கொண்டு காத்திருந்தனர்.

அவர்களின் நோக்கத்தை புரிந்துக் கொண்டு தன் கடும் பார்வையால் அவர்களை எச்சரித்துக் கொண்டிருந்தாள், அறுபது வயது நூபூர் தீதி.

'என் பொறுப்பில் இருக்கும் பெண்களின் மீது கைவைத்தால் தெரியும் சேதி' என்று பார்வையாலேயே அவர்களை அச்சுறுத்த, வட்டமிட்டுக் கொண்டிருந்த வல்லூறுகள் கொஞ்சம் பின்வாங்கின.

பஜனை தொடர்ந்து நடந்துக்கொண்டிருக்க, அமுதனும், மாடில்டாவும், சத்திரம் இருந்த அந்த குறுகலான சத்திரத்திற்குள் கேமராவுடன் நுழைந்தனர்.

சத்திரத்தை நெருங்கியவர்கள், பஜனைப் பாடல் முடியும் வரை காத்திருந்தனர். பாடல் முடிந்ததும், அமுதன் மெதுவாக உள்ளே நுழைய முற்பட்டான்.

''மாதாஜி!... நான் மதறாஸ்லேர்ந்து வர்றேன்... இவ லண்டன்லேர்ந்து வர்றா! இந்தியாவை பத்தி டாகுமெண்டரி படம் எடுக்கறா! உங்களோட சோக வாழ்க்கையை பத்தி தகவல் திரட்ட வந்திருக்கோம்...!''

அமுதனை கோபத்துடன் பார்த்தாள் நூபூர் தீதி!

''பாஹர் நிகல்! ஹட்டௌ யகா ஸே...!'' இந்தியில் கிழவி கர்ஜிக்க, படியிறங்கி தெருவில் நின்றான் அமுதன்.

''இப்ப சொல்லு! என்ன வேணும் உனக்கு?'' கண்களை உருட்டினாள் நூபூர்.

''நான் மதறாஸ்லேர்ந்து வரேன்! என் பெயர் அமுதன்! இவ பெயரு மாடில்டா! என்னோட மாணவி! உங்க வாழ்க்கையை பத்தி படம் எடுக்க வந்திருக்கா...'' பணிவுடன் அமுதன் சொன்னான்.

''எங்க வாழ்க்கையில படம் பிடிக்க என்ன இருக்கு?'' இருவரையும் நூபூர் சந்தேகத்துடன் பார்த்தாள்.

''மாதாஜி! பெண்களை தெய்வமா மதிக்கிற நாட்டுல, அவங்க எப்படி நடத்தப் படறாங்கனு உலக நாடுகள் தெரிஞ்சுக்க வேணாமா? நம்ம நாட்டுலேயே ரொம்ப பேருக்கு உங்க கஷ்டங்கள் தெரியலையே?'' அமுதன் சொல்ல, கிழவியின் முகத்தில் கடுமை குறைந்தது.

''எங்க கஷ்டங்கள் எங்களோட!'' என்றவள் மாடில்டாவை உறுத்துப் பார்த்தாள். ''படம் புடிக்க உதவினா... நீ எங்களுக்கு என்ன தருவே?'' நூபூர் கேட்டாள்.

இந்தியில் நூபூர் பேசியது புரியாமல் மலங்க மலங்க விழித்தாள், மாடில்டா! அமுதன் பர்சை திறந்து இரு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நூபூரிடம் நீட்ட, அவள் கண்கள் விரிந்தன.

''அந்தர் ஆவோ பேட்டி!'' என்று மாடில்டாவை உள்ளே அழைத்தவள், அமுதனை கனிவுடன் பார்த்தாள்.

''தம்பி! மன்னிச்சுக்கோ! உன்னை உள்ளே வான்னு சொல்ல ஆசைதான்! ஆனா... வெளியில நாக்கை

தொங்கப் போட்டுகிட்டு, காத்திருக்கிற நாய்ங்க எங்களை தப்பா நினைக்கும்! அவனை மட்டும் உள்ளே அனுமதிச்சியே'னு கூசாம கேட்கும்! அதனால நீ ஆத்தங்கரையோரம் காத்துட்டு இரு! உன் சினேகிதி படம் புடிச்சுட்டு அங்கே வருவா...'' நூபூர் சொல்ல, ''அச்சா மாஜி'' என்று அமுதன் அகன்றான்.

தாரகேஸ்வரி என்னும் இளம் விதவை, தனக்கு தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தின் உதவியோடு மாடில்டாவுக்கு நூபூருக்குமிடையே மொழிபெயர்க்க உதவினாள்.

சத்திரத்தின் பாழடைந்த பகுதிகளை, கிழிந்த சேலையுடன் ஜபம் செய்துக்கொண்டிருந்த கிழவிகளை, ஆற்றங்கரையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்த விதவைகளை, என்று தன் கேமராவினால் படம் பிடித்தாள், மாட்!

ஒரு மூதாட்டி சுமக்க முடியாமல் தண்ணீர் பானையை சுமந்து கொண்டு உள்ளே வர, ஒரு பெண் ஓடி வந்து அதை வாங்கிக் கொண்டாள்.

''இவ்வளவு சின்ன பெண்கள் இருக்கச்சே, ஏன் அந்த பாட்டியம்மாவை ஆற்றங்கரைக்கு அனுப்பறீங்க?'' மாடில்டா வியப்புடன் கேட்டாள்.

''பாட்டியம்மாவா இருக்கிறதாலேதான் அவ பத்திரமா திரும்பி வந்தா! சின்னப் பொண்ணு தண்ணியெடுக்க போனா, அவ திரும்பமாட்டா! சத்திரத்தை சேர்ந்த ரெண்டு மூணு சின்னப் பொண்ணுங்க தண்ணீ எடுத்துவர போனவங்க, இன்னும் திரும்பலை...''

நூபூர் தீதி சொல்ல, மாடில்டா திகைத்தாள்.

''உங்களுக்கு பாதுகாப்பே கிடையாதா?''

''பாதுகாப்பா!'' காஞ்சனமாலா என்கிற பெண் சிரித்தாள். ''பாதுகாப்பு தர வேண்டிய எங்கப்பா அண்ணா, தம்பிகளே... எங்களை இங்கே கொண்டு வந்து விட்டுட்டு, திரும்பி பார்க்காம இருக்காங்க! தெருவுல போற நாய்களா எங்க பாதுகாப்பை பத்தி கவலைப்படபோறதுங்க...!''

''இங்கே எல்லாருமே விதவைகளா?''

''எல்லோரும் விதவைகள் கிடையாது! அதோ இலை தைக்கிறாளே! அவ பெயர் கீதாஞ்சலி! அவ புருஷனே அவளை இங்கே கொண்டு வந்து விட்டுட்டான். நிறைய வரதட்சணையோட அவனுக்கு பெரிய இடத்துப் பொண்ணு கிடைச்சுட்டா!

''அதோ... அங்கே ஒரு சின்னப் பொண்ணு பெருக்கிட்டு இருக்காளே! அவளோட பெயர் ரேஷ்மா! எழுபது வயசுக்காரனுக்கு அவளோட அப்பனே பணத்துக்காக கல்யாணம் பண்ணி வச்சான். கல்யாணம் ஆன அடுத்த மாசமே கிழவன் பரலோகம் போயிட்டான். இவ வேற நாதியில்லாம இங்கே வந்துட்டா!

''ஹரே சாந்தினி... ஆவோ இதர்!'' கிழவி கூப்பிட, ஒரு ஒன்பது வயது சிறுமி அங்கே ஓடி வந்தாள்.

''பேட்டி! எங்க எல்லாருடைய கதையவிட இவ கதை பெரிய சோகம்! இவளுக்கு கீழே நாலு பொண்ணுங்க! இவ மூத்த பொண்ணு! இவ வயசுக்கே இன்னும்

வரலை! ஆனா.. இவளைப் போய் விதவைனு சொல்லி இங்கே விட்டுட்டு போயிட்டாங்க... காரணம் வறுமை...''

ஒவ்வொரு பெண்ணை பற்றியும் நூபூர் கதை சொல்ல, ஒன்று விடாமல் தன் கேமராவில் பதிவு செய்துகொண்டாள் மாடில்டா!

தனக்கு வேண்டிய அளவுக்கு அந்த சத்திரத்தில் நிலவிய சோக சூழ்நிலையை படம் பிடித்து முடித்தவள், கேமராவை ஆஃப் செய்துவிட்டு, நூபூரை நோக்கி கைகூப்பினாள்.

''ரொம்ப தேங்க்ஸ் ஆன்ட்டி, நமஸ்தே!'' என்று மாடில்டா புறப்பட ஆயத்தமானாள்.

''கொஞ்சம் இரும்மா! நாங்க தினமும் என்ன சாப்பிடறோம்னு நீ தெரிஞ்சுக்க வேணாமா? அதையும் படம் புடி...'' என்ற நூபூர் உள்புறம் திரும்பி, ''ஜோதி பெகன்'' என்று கூக்குரலிட்டாள்.

தட்டு நிறைய ரொட்டிகளுடன், ஒரு கிண்ணத்தில் சிறிது வெல்லத்துடனும் அங்கே ஒரு பெண் தோன்றினாள்.

''எல்லோருக்கும் ரொட்டி கொடுக்கிறதுக்கு முன்னாடி, நம்ம விருந்தாளிக்கு ரொட்டி கொடு ஜோதி!'' நூபூர் உத்தரவிட, அந்த பெண் ஒரு சிறு இலை விடலையில் இரண்டு ரொட்டிகளை வைத்து அதன் மையத்தில் வெல்லத்தை வைத்தாள்.

தன்னை சினேகத்துடன் பார்த்து சிரித்த அந்த பெண்ணை நோக்கிய மாடில்டாவின் புன்னகை அப்படியே உறைந்து நின்றது.

இந்த... முகம்...! அதே முகம்! தன் தாத்தா ரூபர்ட் சீமரின் சுயசரிதையில் வெட்கத்துடன் சிரித்தபடி நின்ற... அந்த ஜ்யோத்ஸனாவின் முகம்தான்.

தன் உயிரைக் காப்பாற்றிய ஒப்பற்ற பெண்மணி என்று ரூபர்ட் சீமரால் போற்றப்பட்டு, அவர் மனைவி ஜேன் சீமரால் நெக்லஸ் அன்பளிப்பாக அளிக்கப்பட்ட போது ஜொலித்து நின்ற அதே முகம்தான், அதே வசீகர சிரிப்புடன் ரொட்டிகளை நீட்டியபடி நின்று கொண்டிருந்தது. இவள்தான் ஆற்றங்கரையோரம் காத்திருக்கும் புரொபஸர் அமுதனின் அம்மா!

கேட்டு விடலாமா? இல்லை இவள் வேறு யாராவது பெண்ணா?

''நாங்கள் அன்றாடம் அனுபவிக்கும் தண்டனையை எங்களுடன் சேர்ந்து நீங்களும் அனுபவிக்கப் போகிறீர்கள், பாவம்...!'' ஜோதி இந்தியில் சொல்ல, சத்திரமே சிரிப்பொலியில் அதிர்ந்தது.

''நீங்கள்தான் ஜ்யோத்ஸனாவா'' கேட்டு விடுவது என்கிற எண்ணத்துடன் நாக்கை எழுப்ப, அதே சமயம் 'வீல்' என்னும் அலறல் ஒலி எழுந்தது.

''க்யா ஹீவா?'' நூபூர் அதிர்ந்தாள்.

''பார்வதியை தேள் கொட்டிடுச்சு!'' அலறியபடி ஒரு பெண் ஓடி வந்தாள். அடுத்த கணம், ஜோதி பெகன், சமையலறைக்கு ஓடினாள்.

தேள் கடிப்பட்ட அந்த பார்வதியை இருவர் தூக்கி வந்து கூடத்தில் கிடந்த, சமையலறையிலிருந்து வெளி பட்டாள், ஜோதி. அவள் கையில் ஊசியும், ஒரு கிண்ணத்தில் தண்ணீரும் இருந்தன.

மாடில்டா பரபரப்புடன் அவள் அருகே சென்று நின்றாள்.

கீழே கிடந்த பார்வதியின் கால் கட்டை விரலில் தேள் கொட்டியிருந்த இடத்தில் ஊசியை வைத்து மந்திரிக்க தொடங்கினாள்.

**ஓம் அறிவுற்ற சக்தி**
**விஷம் கண்ட கண்ட**
**விஷம் துண்ட துண்ட**
**விஷம் நாச நாச**
**அற்றதே விஷம்; பெற்றதே சுகம்!**

ஜோதி பெகன் மந்திரிக்க, மாடில்டா பிரமிப்புடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தாள். பார்வதியின் வலி குறைந்து, சமாளித்தபடி எழுந்து உட்கார, மந்திரித்த விஷம் இறக்கிய நீரை வாசலில் கொட்டுவதற்காக சென்றாள் ஜோதி பெகன். மாடில்டா அவளை பின்தொடர்ந்தாள்.

''மேடம் ஜ்யோத்ஸனா!''

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள் ஜோதி! இந்த வெளிநாட்டுக்காரியா என்னை ஜ்யோத்ஸனா என்று அழைத்தாள்? விழித்தாள் ஜோதி!

''நீங்கதானே ஜ்யோத்ஸனா! ஆரவாமுதனின் அம்மா?'' மாட் மீண்டும் கேட்க, கலவரத்துடன் அவளைப் பார்த்தாள், ஜோதி.

ஒரு கணம் தான்! 'ஆமாம்' என்று சொல்வதற்காக வாய் குவித்தவள் 'இல்லை' என்று தலையசைத்துவிட்டு உள்ளே போக முயன்றாள்.

''மேடம்! உங்க பையன் உங்களைத் தேடி உலகம் பூரா சுத்திட்டு இருக்கார். இப்போ... இதோ... கூப்பிடு தூரத்திலதான் இருக்கார். தயவு செய்து அவரை வந்து பாருங்க.''

அவள் கையை பற்றி இழுத்தாள் மாடில்டா. அவள் கரத்தை விலக்கினாள் ஜோதி.

''ஜ்யோத்ஸனா செத்துப் போயிட்டா! நான் ஜோதி!''

''உங்க பிள்ளை உங்களை பார்க்க துடிக்கிறார்!'' மாடில்டா சொன்னாள்.

''எனக்கு மகனே இல்லை! என்னை விட்டுடு! எனக்கு நிறைய வேலை இருக்கு! உள்ளே பாரு! எத்தனை பேர் என்னை நம்பி இருக்கா...!''

ஜோதி உள்ள சுட்டிக் காட்டினாள்.

''அம்மாவை பார்க்கணும்னு அங்கே ஒரு பையன் ராத்திரியும் பகலுமா தன்னை உருக்கிட்டு இருக்கார்...''

''நான் ஒரு உத்தமமான தாய் இல்லைனு பெயர் வாங்கினவ...''

"தன் அம்மா ஒரு உத்தமினு உலகத்துக்கு நிருபிச்சிருக்கார், உங்க பையன். அந்த ஒரு காரியத்துக்கு, நன்றி உணர்ச்சியோட நீங்க உங்க பிள்ளையைப்பார்க்க ஓடி வர்ணும்!" மாடில்டா சொன்னாள்.

மாடில்டாவை விசித்திரமாக பார்த்தாள் ஜோதி.

"என்னம்மா சொல்றே?"

"நான் யார் தெரியுமா? நீங்க பாம்பு விஷத்தை இறக்கி உயிரை காப்பாத்தின ரூபர்ட் சிமரோட பேத்தி! என் தாத்தாவோட வாழ்க்கை சரிதத்துல தன் உயிரைக் காப்பாத்தின உங்களை பத்தி பாராட்டி எழுதியிருக்கார். அதை படிச்ச உங்க பிள்ளை, அந்த புத்தகத்தையே ஆதாரமா வச்சு ட்ரிப்ளிகேன்ல இருக்கிற உங்க குடும்பத்துக்கு உண்மையை புரிய வச்சுட்டார்... அமுதன்."

ஜ்யோத்ஸனா உடைந்துப்போனாள். கண்களில் கண்ணீர் வழிய, மாடில்டாவின் கையை இறுகப் பற்றினாள்.

"நிஜமாவா? உன் தாத்தா உண்மையை எழுதி இருக்காரா? அவருக்கு கோடி புண்ணியம்..."

தன் பையிலிருந்த ரூபர்ட் சீமரின் புத்தகத்தை பிரித்து அதில் அவர் தாத்தா எழுதியிருந்த குறிப்புகளை படித்துக் காட்டினாள். ஜ்யோத்ஸனாவின் புகைப்படங்களையும் காட்டினாள்.

கண்ணீர் கண்களை மறைக்க, அவள் நீட்டிய பக்கத்தை தன் கையால் தடவிக் கொண்டிருந்தாள், ஜ்யோத்ஸனா.

அவள் வாழ்க்கை முடிந்துவிட்டது என்று தனக்குத்தானே மங்களம் பாடியிருந்தாள்.

திடீரென்று,

இதோ சூரியோதயமாக வெளிச்சம் தோன்றுகிறது.

மாடில்டாவை உணர்ச்சியுடன் அணைத்துக் கொண்டாள்.

''என் மகன் என்னை தேடறான்னு சொன்னதுக்காக உன்னை நான் கட்டிக்கலை. நான் உத்தமிங்கிறதை என் பிள்ளை தெரிஞ்சுண்டுட்டான்னு சொன்னே பாரு! அதுக்குத்தான் என் நன்றி!'' உணர்ச்சி பெருக்குடன் மாடில்டா நெற்றியில் முத்தமிட்டாள், ஜ்யோத்ஸனா.

''இன்னும் ஏன் இங்கே நிக்கறீங்க? வாங்க என்னோட'' என்றபடி ஜ்யோத்ஸனாவை இழுத்துக் கொண்டு மற்றொரு கையில் தன் கேமரா பையினுடன் ஆற்றங்கரைக்கு விரைந்தாள் மாடில்டா.

அமுதன் மறைந்துக் கொண்டிருந்த சூரியனை பார்த்தபடி நின்றிருந்தான். சில பிராமணர்கள் ஆற்றில் நின்றபடி சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தனர்.

அமுதனும் ஆற்றில் இறங்கி முழங்கால்வரை நீரில் மறைய நின்றுக் கொண்டான். தன் பேண்ட் நனைவதை அவன் பொருட்படுத்தவில்லை.

நூற்றியெட்டு முறை காயத்ரி மந்திரத்தை ஜபித்தவன், சூரியனை நோக்கினான்.

''சூரியனே! ஜ்யோத்ஸனாங்கிற உன் ஒளியைதான் தன் பெயராக வச்சிண்டிருக்கா என் அம்மா. அவ எங்க

இருக்காளோ தெரியாது? எப்படியாவது அவளை என்கிட்டே கொண்டு வந்து சேர்த்துடு! நாளைக்கு நீ உதிக்கச்சே என் மனசுல சந்தோஷம் நிறைஞ்சு இருக்கணும்...!'' பயபக்தியுடன் வேண்டினான்.

மனம் சற்று லேசாக, ஆற்றைவிட்டு கரையேறினான். இரண்டு படிகளை கடந்து அடுத்த படியில் கால் வைத்தவன், தற்செயலாக நிமிர்ந்தான்.

மேல்படியில் மாடில்டா இவனை சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கையை பற்றியபடி நின்றிருந்தாள் ஒரு பெண். அவள் முகத்தைப் பார்த்தான்.

பள்ளியிலிருந்து வந்ததும் அம்மாவைத் தேடி வாசலுக்கும் புழக்கடைக்குமாக குழந்தையாக அல்லாடினானே அமுதன்! அப்போது அவனிடம் கிளம்பிய அதே கேவல் ஒன்று கால் நூற்றாண்டுகள் கழித்து இப்போது துக்க அலையாக அவனிடமிருந்து வெளிப்பட்டது.

அம்மா!

படிகளில் தாவி ஏறினான் அமுதன்.

அவன் பள்ளிக்கு கிளம்பிய போது வழியனுப்பிய அதே முகம் நினைவுக்கு வர, அமுதன் அந்த நாளுக்கு சென்று விட்டான்.

''அம்மா! நான் ஸ்கூலில இருந்து வந்துட்டேன்...!''

தன் காலடியில் விழுந்த அமுதனை வாரி அனைத்தாள், ஜ்யோத்ஸனா.

"தெரியும்டா! உனக்கு ரொட்டி பண்ணி வச்சிருக்கேன்!" தானும் அந்த நாளுக்கே பயணித்தாள், ஜ்யோத்ஸனா.

"இவ்வளவு நாள் எங்கேம்மா போயிருந்தே"

"சுபத்ரா டீச்சர் ஆத்துக்கு போயிருந்தேன் அவாளோட பேசிண்டே இருந்துட்டேன்! இப்பதான் உன் ஞாபகம் வந்தது! நீ ஸ்கூலுல இருந்து பசியோட வருவியேனு பதறி போய் ஓடி வர்றேன்!"

"அமுதா! நீ எவ்வளவு பெரியவனா வளர்ந்துட்டே!" ஜ்யோத்ஸனா அவன் தலையைக் கோதி விட்டாள்.

"அப்பாதான் என்னை விட்டுட்டு போய்ட்டார்னா... நீயும் ஏன்மா என்னை விட்டுட்டு போனே?" ஏக்கத்துடன் அமுதன் கேட்டான்.

"இல்லைடா! நான் கூட இருந்தா உன் எதிர்காலம் பாதிக்கும்னு தோணிடுத்து! அதுதான் கிளம்பிட்டேன்...!"

"சரி! இனிமே உன்னை விட்டுட்டு ஒரு கணம் கூட இருக்க போறதில்லை! கிளம்பு!"

அமுதன் அழைத்தான்.

அவன் சொன்னதும்தான், தன் நிலை புரிந்தது ஜ்யோத்ஸனாவுக்கு, இவளை நம்பி அந்த கோகுல சத்திரத்தில் நிறைய ஜீவன்கள் காத்திருக்கிறதே! அவர்களுக்கு யார் ரொட்டி செய்து தருவார்கள்? அவர்களுக்கு யார் பாம்பு கடி, தேள் கடிக்கு மந்திரித்து வைத்தியம் பார்ப்பார்கள்?

அதே சமயம், இவ்வளவு வருஷங்களாக பிரிந்திருந்த மகன் இதோ இவளை அழைக்கிறான். யாருக்காக இவள் இன்னும் உயிரை கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தாளோ, அவனே இவளைத் தேடிக் கொண்டு வந்து விட்டான். என்ன செய்வது?

தயக்கத்துடன் அமுதனை பார்த்தாள் ''அமுதா இனிமே நான் உன்னோட வந்து என்ன செய்யப் போறேன்? இனிமே நான் உத்தமினு யாருக்கு நிரூபிக்கனும்? போதும்டா? நான் கோகுல் சத்திரத்துலேயே அவாளுக்கு ஒத்தாசை பண்ணிண்டு இருந்துடறேன். நீ யாரையாவது கல்யாணம் பண்ணிண்டு சௌக்கியமா இரு! எப்பவாவது என்னை பார்க்கணும் போல இருந்தா. இங்கே வாயேன்! இனிமே நான் அங்கே எதுக்கு எல்லாருக்கும்... பாரமாய்...?''

ஜ்யோத்ஸனா சொன்னாள்.

''ஏன்... ஆபத்துல இருக்கிற உன் புருஷனை அந்த யட்சிணி கிட்டேயிருந்து காப்பாத்த வேண்டாமா? அது உன் கடமை இல்லையா!''

தீயை மிதித்தவள் போல துடிதுடித்துப் போனாள், ஜ்யோத்ஸனா.

''அப்பாவை பார்த்தியா என்ன?''

''உன்னையே இப்பத்தானே கண்டுபிடிச்சேன்! இனிமேதான் அப்பாவை தேடணும்! அதுக்கு உன் உதவி தேவை! அப்பாவை எப்படியாவது அந்த யட்சிணி கிட்டேயிருந்து காப்பாத்தணும்...''

அமுதன் சொல்ல, அடுத்த நொடியே புருஷோத்த மனை பார்க்க வேண்டும் என்கிற ஆவல் அவளுள் எழுந்தது.

''கொஞ்சம் இருடா அமுதா! சத்திரத்துக்கு போய் அவா கிட்டே போயிட்டு வரேன்னு சொல்லணும்! என் மேல உயிரையே வச்சிருக்கா...'' கண்களில் நீர் பொங்க சத்திரத்தை நோக்கிச்சென்ற அம்மாவை கனிவுடன் பார்த்தான்.

என் அம்மா எனக்கு கிடைத்துவிட்டாள். சற்றுமுன் சூரியனை வேண்டிக் கொண்டதன் பலனா?

திரும்பி வானத்தைப் பார்க்க, செந்நிறப்பந்தின் கடைசி பாகம் ஆற்றின் பின்னே இறங்கிச் செல்வதை கண்டான்.

'உன் அம்மாவை கொண்டு வந்து சேர்த்துவிட்டேன்!' என்கிற மனநிறைவோடு சூரியன் அடிவானில் மறைந்துப்போனான்.

நடந்த காட்சிகளை திக்பிரமை பிடித்தவளாக பார்த்துக் கொண்டிருந்தாள், மாடில்டா! அவளுடைய பெற்றோர்கள் விமான விபத்தில் இறந்த போது கூட, அவளுக்கு அழத் தெரியவில்லை. ஆனால்-

சற்று முன் அவள் கண்ட அம்மா பிள்ளையின் பாசமிகு சந்திப்பை பார்த்ததுமே அவளுக்கு அழ வேண்டும் போல இருந்தது. ஆனால் உணர்ச்சிகளை வெளிக்காட்டக்கூடாத மேலை நாட்டு மேட்டுக்குடியில் பிறந்திருந்ததாலோ என்னவோ, கலங்கிய கண்களுடன் அமைதியாக நின்றுக் கொண்டிருந்தாள்.

அமுதன் நன்றியுடன் அவள் கையை பற்றினான்.

''மாட்! இந்த உதவியை நான் என்னைக்குமே மறக்க மாட்டேன்! யூ ஹாவ் கெப்ட் யுவர் வொர்ட்! என் அம்மாவை நீ கண்டுபிடிச்சு கொடுத்துட்டே...!'' அமுதன் கண்கள் பனிக்க கூறினான்.

சிறிது நேரம் கழித்து மூட்டை முடிச்சுகளுடன் ஜ்யோத்ஸனா வந்தாள். முகம் சந்தோஷத்தால் பூரித்திருந்தது. வலது கையில் ஒரு சிறு மரப் பெட்டியை வைத்திருந்தாள். அதை அமுதனிடம் நீட்டினாள்.

''இதை பத்திரமா வச்சுக்கோ!'' சென்னைக்கு போனதும் இதை பூஜை அறையில வக்கணும்...'' அவள் குரல் பயபக்தியுடன் ஒலித்தது.

''இதுல என்னம்மா இருக்கு?'' அமுதன் அந்த பெட்டியை திறக்க போக, ஜ்யோத்ஸனா அவனை தடுத்தாள்.

''உஷ்! இப்பத் திறக்க கூடாது! அப்பா கிடைச்சதும் அவர் கையால தான் திறக்கணும்! அது வரைக்கும் திறக்க கூடாது...!'' என்றாள்.

''உள்ளே என்ன இருக்கு?'' அமுதன் வியப்புடன் கேட்டான்.

''ரகசியம்... பரம... ரகசியம்!'' ஜ்யோத்ஸனா சொன்னாள்.

# 36. பிராயச்சித்தம்

## 1967 - திருவல்லிக்கேணி

‘‘என்னை மன்னிச்சுடு ஜ்யோத்ஸனா! நடந்தது தெரியாம நான் உன் மனசை ரொம்பவும் புண்படுத்திட்டேன்...’’ கதறிய பத்மாசினியை ஆதூரத்துடன் அணைத்துக் கொண்டாள், ஜ்யோத்சஸனா.

‘‘என்ன மன்னி இது... குழந்தை மாதிரி? எல்லாம்... அந்த பார்த்தசாரதி என்ன நினைக்கிறானோ அதுதான் நடக்கும். நான் பிருந்தாவனத்துக்கு போய் திக்கற்ற விதவைகளுக்கு சேவை செய்யணும்னு அவன். உத்தரவு! நீங்க என்ன பண்ணுவீங்கோ?’’

வரதன் தன் பங்குக்கு தங்கையிடம் மன்னிப்பு கேட்டார்.

‘‘அண்ணனா... லட்சணமா உன்னை தாங்காம நட்டாத்துல விட்டுட்டேண்டி, ஜ்யோத்ஸனா! எனக்கு மன்னிப்பு கிடையாது...’’ குரல் தழுதழுக்க சொன்னார்.

‘‘நீங்கள்ளாம் இப்படி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணீங்கோ, நான் திரும்பி பிருந்தாவனத்துக்கே போயிடறேன்...’’ ஜ்யோத்ஸனா மிரட்டினாள்.

மாடில்டா அமுதனை தன் தாயுடன் விட்டு விட்டு ஹோட்டல் ரூமுக்கு போய்விட, அமுதன்

ஜ்யோத்ஸனாவுடன் மொட்டை மாடியில் பேசிக் கொண்டிருந்தான்.

''ஏம்மா! பிரச்சனையை கண்டு இப்படிதான் ஓடுவாளா? நடந்தது இதுதான்னு புரிய வச்சு, அப்பாவை உன் சேலை தலைப்புல முடிஞ்சுக்க வேண்டாமா?'' எரிச்சலுடன் கேட்டான், அமுதன்.

''பேசறது சுலபம்டா அமுதா! ஆனா உங்கப்பா என்னை கல்யாணம் பண்ணிக்கறச்சேயே அந்த ம்ருகாவோட தாக்கத்துல இருந்தார். அவளுக்கு பயந்து தான் என்னை கல்யாணம் பண்ணிண்டார். ஆனா... கொஞ்சம் கொஞ்சமா அவ வசத்துல போயிண்டு இருந்தார். திடீர்னு ஒரு நாள் பாதி இராத்திரில ம்ருகா கூப்பிடறான்னு எழுந்து ஓட ஆரம்பிச்சார்! நான் அவரை படுக்க வச்சு, கதவை பூட்டிடுவேன்.

''உன் வனஜாப்பாட்டியையும் பயமுறுத்திதான் சாகடிச்சிருக்கா அந்த யட்சிணி. அவளை எதிர்த்து என் ஒருத்தியால என்ன செய்ய முடியும், சொல்லு?'' ஜ்யோத்ஸனா சோகத்துடன் கேட்டாள்.

''அந்த ம்ருகாவை நீ பார்த்திருக்கியா?''

ஜ்யோத்ஸனா முகம் சுருங்கியது.

''அவ என் கண்ணுல பட்ட அன்னைக்கு தாண்டா உன் அப்பா முழுசா என்னை விட்டு பிரிஞ்சு போனார். அட்மைராலடி அரண்மனைல சீமருக்கு வைத்தியம் பார்க்கப்போனேன். அங்கே அவள் மொழிபெயர்ப் பாளரா இருந்தா. அவதான் ம்ருகானு எனக்கு

தெரியாது... ரொம்ப அழகா இருந்தா... நான் மறுநாள் காலை ஆத்துக்கு வந்தப்புறம்தான் தெரிஞ்சுது, உன் அப்பா என்னை தேடிண்டு அரண்மனைக்கு வந்தது! உன் அப்பா சினேகிதன் நாகராஜன்தான் இந்து பேப்பர்ல வந்த அவ ஃபோட்டோவை காட்டினார்... இவதான் ம்ருகானு சொன்னார். அதிர்ந்து போயிட்டேன்! அன்னைக்கு காணாம போனவர்தாண்டா உங்கப்பா...''

''கவலைப்படாதேம்மா! நம்பாடுவான் தாத்தா சொல்லியிருக்கார். நான் அவரை நிச்சயம் கண்டுபிடிச்சு அந்த ம்ருகா கிட்டேயிருந்து காப்பாத்துவேன்னு... சொல்லியிருக்கார்! நாம திரும்பி குடும்பமா வாழப்போறோம்...''

அமுதன் சொல்ல ஆனந்தப்பட்டாள், ஜ்யோத்ஸனா.

''அது போதும்டா எனக்கு! எப்படியாவது அப்பாவை கண்டுபிடிச்சு என்கிட்டே சேர்த்துடு! அவரை இனிமே பத்திரமா பாத்துக்கறேன்'' ஜ்யோத்ஸனா சொன்னாள்.

அவர்கள் பேசிக்கொண்டே இருக்க, திடீரென வரதனும் பத்மாசினியும் மொட்டை மாடிக்கு வந்தனர்.

''என்ன அம்மாவும் பிள்ளையும் பேசியாச்சா... கொஞ்சம் நாங்க வந்து பேசலாமா?'' கேலி செய்தபடி வரதன் வந்தார்.

''விஷயத்துக்கு வாங்கோ!'' பத்மாசினி சமிக்ஞை தர, வரதன் தன் தங்கையைப் பார்த்தார்.

''ஜ்யோத்ஸனா! நீ திரும்பி வந்ததுல எனக்கு பாதி சந்தோஷம் கிடைச்சுடுத்து, இப்போ நான் பேசப்போற விஷயம், எனக்கு மீதி சந்தோஷத்தை தரப் போறது. நானும், பத்மாசினியும் உனக்கு செஞ்ச அபவாதத்துக்கு பரிகாரமா இதை செய்யணும்னு நினைக்கிறோம்! விஷயம் இதுதான்! சௌமித்ரியை அமுதனுக்கு கல்யாணம் பண்ணி தரலாம்னு பத்மாசினி சொல்றா! நீ என்ன நினைக்கிறே''

அமுதன் அதிர்ந்தான்...'' என்ன மாமா... சௌமித்ரி சின்ன பொண்ணு...

''பத்து வயசு வித்தியாசம்னு பார்க்காதே அமுதா... உறவு விட்டுப்போகக்கூடாது. சௌமிக்கும் இஷ்டம் தான்...!'' மாமி சொன்னாள்.

அமுதன் தாயைப் பார்த்தான்.

''உன் இஷ்டம் அமுதா! நான் உங்கப்பாவோட அத்தைப் பொண்ணுதான்! இப்ப நீ உன் மாமா் பொண்ணை பண்ணிக்கிறது தப்பில்லை...!''

''அம்மா! லண்டன்ல... நான் ஒரு பொண்ணை பார்த்தேன். ஐயர் பொண்ணுனு நினைக்கிறேன்! அவள் பெயர் நந்தனா! எனக்கு அவளை பிடிச்சிருக்கு! அவளை கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்படறேன்''

ஒரு நிமிடம்தான்

பெரியவர்கள் அனைவரும் அவனை ஏமாற்றத்துடன் பார்த்தார்கள்.

வரதன்தான் முதலில் சுதாரித்துக் கொண்டார்.

''அமுதா! உன் படிப்பு, உன் தேவைகள் எதையுமே உன் அம்மாவோ நானோ கவனிக்கலை! நீயா எதையோ படிச்சே! பெரிய அளவுல உன் சொந்த முயற்சியில் வந்திருக்கே! இப்போ நாங்க சொல்றபடிதான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்னு கட்டாயப்படுத்தறது நியாயம் கிடையாது. உன் வளர்ச்சியை நீயே பார்த்துண்டா மாதிரி, உன் கல்யாணத்தை பத்தி முடிவு எடுக்கிற முழு உரிமையும் உனக்கு உண்டு.

''அந்த பெண்ணோட அட்ரஸை கொடு! அவாத்து பெரியவா கிட்டே பேசறேன்!'' மாமா சொல்ல அவரை கையமர்த்தினான்.

''தேங்க்ஸ் மாமா! இப்ப வேணாம்! முதலுல என் அப்பாவை கண்டுபிடிச்சு அவரை அம்மாகிட்டே நல்லபடியா சேர்த்தப்பறம்தான் எனக்கு கல்யாணம்'' என்றான் அமுதன்.

# 37. ஊட்டி ரோஸ்

## 1967 - வுட் பெக்கர் எஸ்டேட்

**கோ**வை இரயில் நிலையம்!

நந்தனாவின் அழைப்பை ஏற்று மாடில்டாவும் அமுதனும் ஊட்டிக்கு கிளம்பியிருந்தனர். கோவை இரயில் நிலையத்துக்கே தங்கள் காரை அனுப்பி யிருந்தாள், நந்தனா, டிரைவர் சவுண்டப்பன். இரு வருடைய லக்கேஜ்களையும் வண்டியில் ஏற்றியவன், கதவை இவர்களுக்காக திறந்து வைத்து நிற்க, வண்டியினுள் அவர்கள் ஏறினர்.

'மலைகளின் அரசி உங்களை வரவேற்கிறாள்.' என்கிற பலகை அவர்கள் கவனத்தை கவர, கார் மலைச்சரிவில் ஏறத் தொடங்கியது.

''வாவ்... இட்ஸ் ஆஸம்'' மாட் வாயை பிளந்தாள்.

அவர்கள் கார் வுட்பெக்கர் எஸ்டேட்டில் நுழைந்தது. தொலைவில் தெரிந்த பால்கனியில் நின்றபடி கையை ஆட்டினாள் நந்தனா.

''தேர் இஸ் நந்தனா!'' மாட் சுட்டிக் காட்ட, அமுதன் குனிந்துப் பார்த்தான்.

மாமாவிடமும் அம்மாவிடமும் நந்தனாவின் மீது தனக்கு அபிப்பிராயம் இருப்பதாக சொல்லி, அவர்கள் அவளுடைய விலாசத்தைக் கேட்டதுமே, அவள் தனக்கு உரியவளாகிவிட்டாள் என்கிற எண்ணம் அவனுள் உண்டாகியிருந்தது.

நந்தனா இவனுடைய காதலை ஏற்பாளா?

எவ்வளவு பெரிய எஸ்டேட்டின் அதிபதி! மாமாவிடம் அவசரப்பட்டு சொல்லிவிட்டோமோ!

''வெல்கம் டு வுட்பெக்கர் எஸ்டேட்!'' சந்தோஷத்துடன் ஓடி வந்து மாடில்டாவை கட்டி முத்தமிட்டாள் நந்தனா.

''வாங்க புரொபஸர்! பயணம் வசதியா இருந்துதா?'' அமுதனை ஆர்வத்துடன் பார்த்தாள் நந்தனா.

''மாடின் தொணதொண பேச்சைத் தவிர எல்லாமே வசதியா இருந்தது...'' அமுதன் சொல்ல, மாடில்டா தன் கை விரல்களை துப்பாக்கி போல வைத்து 'டிஷ்யூம்' என்று அவனை சுடுவதைபோல் பாவனை செய்தாள்.

''வெல்கம் எவரிபடி'' கணீரென்று குரலைக்கேட்டு, இருவரும் திரும்பிப்பார்த்தனர்.

ம்ருகா தான் புன்னகையுடன் நின்றிருந்தாள்.

''நான் தான் நந்தனாவோட அம்மா! நீங்க வந்ததுலே எனக்கு ரொம்ப சந்தோஷம்!''

அமுதன் ம்ருகாவைப் பார்த்ததும் மலைத்து விட்டான். நந்தனாவின் தங்கையைப் போல இருந்தாள்

அவள் அம்மா! அவளுடைய வெடவெடவென்ற உடற்கட்டும், குதிரைவால் கொண்டையும், அவள் நாற்பதை கடந்தவள் என்பதை பொய்யாக்கின. பூனைக் கண்களால் தங்களை அவள் நோக்கிய விதம், அமுதனின் மனதில் அச்சான்யமாக பட்டது.

அவள் உதட்டின் கீழே ஒரு மச்சம். ஏனோ சம்பந்தமில்லாமல், நம்பாடுவான் பாட்டாக பாடி கூறியிருந்த அடையாளங்கள் நினைவுக்கு வந்தன.

தன் மனதில் ஒரு நெருடலை உணர்ந்தான், அமுதன்.

''சவுண்டப்பன்! இவங்களோட லக்கேஜை மாடியில நந்தனா ரூம் பக்கத்துல இருக்கிற ரெண்டு ரூம்ல வை. சாருக்கு கடைசி ரூம்! அவங்களுக்கு நந்தனாவோட பக்கத்து ரூம்!'' டிரைவருக்கு கட்டளையிட்டபடி இவர்களை பார்த்து புன்னகைத்தாள்.

''சீக்கிரம் குளிச்சுட்டு டிபன் சாப்பிட வாங்க!'' என்றபடி உள்ளே சென்றாள் ம்ருகா.

''நந்தனா! உன் அம்மா உன்னைவிட அழகா இருக்காங்க!'' மாடில்டா சொன்னாள்.

''அழகான அம்மா ஆபத்தானவள்'' சொல்ல நினைத்ததை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள், நந்தனா.

''எப்படி இருக்கு எங்க வுட்பெக்கர் எஸ்டேட்?''

''புரியுது நந்தனா! எங்க சீமர் எஸ்டேட் உங்க வுட்பெக்கர் எஸ்டேட்டைப் பார்த்தா வெட்கப்பட்டு தலை குனிஞ்சு நிற்கும்!...''

மாட்... சொல்ல, நந்தனா சிரித்தாள்.

''புரொபஸர்! நீங்க உங்க ரூமுக்கு போய் ஓய்வு எடுத்துக்கங்க! டிபன் ரெடியான உடனே நான் கூப்பிடறேன்! என் அப்பாவையும் அங்கிளையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தியே ஆகணும்!'' என்றபடி நந்தனா மாடி ஏற, மற்ற இருவரும் அவளைத் தொடர்ந்தனர்.

மாடிப்படிகளில் ஏறிக்கொண்டிருந்தபோதுதான், மாடில்டாவின் கண்களில் ம்ருகாவின் ஓவியம் பட்டது.

மான்களைப் பற்றியபடி ம்ருகா நிற்கும் அந்த ஓவியம் அவளை பெரிதும் கவர்ந்தது.

''வாவ்! உன் அம்மா இந்த ஓவியத்துல எவ்வளவு அழகா இருக்கா!... இதை பெயிண்ட் செஞ்சது யாரு?...'' மாட் கேட்டாள்.

''என்னோட மாமா! நடராஜ் அங்கிள்னு சொன்னேனே! அவர்தான் இதை வரைஞ்சாரு''

அவர்களை மாடிக்கு அழைத்துச் சென்ற நந்தனா, முதலில் மாடில்டாவுக்கு அவளது அறையைக் காட்டினாள். அவள் கேமராவுடன் தனது அறைக்குள் நுழைந்து, கதவை தாளிட்டாள்.

நந்தனா அமுதனை கடைசியாக இருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள். உள்ளே நுழைந்து, ஜன்னல் திரைகளை விலக்கினாள்.

''புரொபஸர்! அட்டாச்ட் பாத்ரும் இருக்கு! இந்த ஜன்னல் வழியாக மலைக்காட்சி பார்க்க அருமையா இருக்கும்...'' சொல்லியபடி திரும்பி அமுதனைப் பார்த்தவள், திகைத்தாள். அமுதன் கையைக் கட்டிக்கொண்டு அவளையே பார்த்தபடி நின்றான்.

''புரொபஸர்! எதாவது வேணுமா?'' அவன் பார்வை இவளுள் வெட்க அலையை எழுப்ப, சமாளிக்க முயன்றாள்.

''நந்தனா! இலண்டன் யூனிவர்சிடில ஒரு ரோஜாப் பூவை பார்த்தேன்! ரொம்ப அழகா இருந்தது. அந்த மாதிரி ரோஜா இலண்டன்லதான் கிடைக்கும்னு நினைச்சேன்! இப்பதான் தெரிஞ்சுது! அந்த ரோஜா ஊட்டி ரோஸ்தான்னு. இங்கேயிருந்துதான் இலண்டனுக்கு அனுப்பப்பட்டிருக்கு. இப்ப அந்த ரோஜாவை உங்க வுட் பெக்கர் எஸ்ட்டேல பார்த்தேன்! எனக்கு அந்த ரோஜாவை ரொம்ப பிடிச்சிருக்கு. எனக்கு அது கிடைக்குமா?'' அவளை உறுத்துப் பார்த்தான்.

நந்தனா சந்தேகத்துடன் அவனைப் பார்த்தாள். ''ரோஜாவா? எங்கே பார்த்தீங்க?''

''நான் சொல்லுற ரோஜா இதுதான்!'' அவன் தன்னைச் சுட்டிக் காட்டியதும்தான், நந்தனாவுக்கு அவன் சொல்வது புரிந்தது.

அவளை மௌனமாக ஏறிட்டவள், தலை குனிந்தாள்.

''நந்தனா! இந்த டாபிக்கை நான் இப்ப எடுத்த காரணம், எங்காத்துல எனக்கு கல்யாண பேச்சை ஆரம்பிச்சு இருக்கா! அவாகிட்டே எனக்கு உன் மேல எண்ணம் இருக்கிறதா சொல்லிட்டேன்! இப்ப குளிக்க போறதுக்கு முன்னாடி உன் எண்ணத்தை தெரிஞ்சுக் கிட்டேனா, நல்லா இருக்கும்! ஒரு வேளை, உனக்கு இதுல விருப்பம் இல்லைனா, என் ஆசைய நான் தலை முழுகிடுவேன்! அதுக்கப்புறம் அந்த பேச்சே என் வாயில வராது...!''

வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அமுதன் பேசினான்.

பதில் கூறாமல் அறை வாயிலை நோக்கி நடந்த நந்தனா, ஒரு கையால் கதவைத் திறந்தவள், சடாரென்று திரும்பிப் பார்த்தாள்.

''புரொபஸர்! பொதுவா எல்லா ரோஜாக்களுலேயும் தேன் இருக்கும்! இந்த ஊட்டி ரோஜாவுல தேவர்கள் குடிச்ச பானம்தான் இருக்கு...'' என்று கூறிவிட்டு வெளியேறினாள்.

ஒரு கணம்

அவள் கூறிய பதிலின் பொருள் உறைக்காமல், மூடிய கதவையே வெறித்துப் பார்த்தபடி நின்றான் அமுதன்.

தேவர்கள் குடித்த பானம் எது என்று யோசித்த பிறகு தான், அவள் அமுதனாகிய தன் பெயரைக் குறிப்பிட்டாள் என்பது புரிந்தது.

ஊட்டி ரோஜாவினுள் அமுதம் இருக்கிறதாமே-

ஜிவ்வென்று உற்சாகம் பீறிட்டுக்கிளம்ப, 'எஸ்' என்றபடி கைகளை உயரே தூக்கி தலையை இப்படியும் அப்படியுமாக உலுக்கியபோது தான், அவன் கண்களில் அந்த ஓவியம் தென்பட்டது.

மனித தலையும், சிங்க உடலுமாக, புருஷா மிருக ஓவியம், இவனை கடுமையான விழிகளால் முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தது.

புருஷாமிருகம் என்று அந்த ஓவியத்தின் கீழே எழுதப்பட்டிருந்தது.

அமுதன் திகைத்துப்போய் நின்றான்.

★ ★ ★

''ப்ரேக் ஃபாஸ்ட் ரெடி''

வெளியே நந்தனாவின் குரல் கேட்டு, அறையை விட்டு வெளியே வந்தான் அமுதன்.

''மாடில்டா எங்கே?''

''அவ ஏற்கெனவே டைனிங் டேபிள் முன்னாடி உட்கார்ந்திருக்கா!''

நந்தனா முன் செல்ல, மாடியிலிருந்து கீழே இறங்கினான் அமுதன். அவளது பின்னழகு கண்ணை உறுத்த, சிந்தை முழுவதும் தன் அறையில் மாட்டி யிருந்த 'புருஷா மிருகம்' ஓவியத்தைச் சுற்றியே வட்ட மிட்டுக்கொண்டிருந்ததால், அவளை ரசிக்க முடியாத நிலையில் இருந்தான்.

"எவ்வளவு நேரம் குளிப்பீங்க? எனக்கு பசிக்குது!" மாட் சிணுங்கினாள்.

"சாரி... மாடில்டா!" என்றபடி அவள் அருகில் அமர்ந்தான்.

"ஹலோ.. புரொபஸர்! என் சிஸ்டர் ம்ருகா எஸ்டேட் வரைக்கும் போயிருக்கா! லஞ்ச் எல்லோரும் ஒண்ணா சாப்பிடலாம்னு சொன்னா!"

நடராஜ் உள்ளே வர, அவரை நந்தனா அறிமுகப்படுத்தினாள்.

"இவர்தான் நடராஜ் அங்கிள்!" நீங்க பார்த்த என் அம்மாவோட ஓவியத்தை வரைஞ்சவர்..."

"உங்க ஓவியம் ரொம்ப அழகா இருந்தது...!" மாடில்டா கூறினாள்.

"நல்லா சாப்பிடுங்க! டிபன் சாப்பிட்டு உங்களை தொட்டபெட்டாவுக்கு அழைச்சுண்டு போக சொல்லியிருக்கா... என் சிஸ்டர்..."

கார் சாவியை சுட்டுவிரலில் சுழற்றியபடி, டைனிங்டேபிள் சேர் ஒன்றில் வந்து அமர்ந்தார், நடராஜ் அங்கிள்.

அமுதன் அவரைக் கேள்வியுடன் பார்த்தான் "என் ரூம்'ல கூட உங்க ஓவியம் ஒண்ணு இருந்தது. வெர்றி இண்டரஸ்டிங்! புருஷா...மிருகம் ஓவியம்... ரொம்ப அழகா இருந்தது...!"

''தாங்க்யூ!'' புன்னகைத்தார் நடராஜ்! ''என் சொந்த ஊர் சிதம்பரம்! அந்த ஊர் கோவிலை பாதுகாக்கறது... புருஷா மிருகம்! அந்த ஸ்டோரியை நான் அப்புறமா சொல்றேன்...!''

''என் ரூம்ல கூட ஒரு நீர் வீழ்ச்சி ஓவியம் இருக்குனு நினைக்கிறேன்...'' மாட் இட்லியை சாம்பாரில் தோய்த்தபடி சொன்னாள்.

''என் ரூம்ல அங்கிள் வரைஞ்ச என்னோட ஓவியம் இருக்கு தெரியுமா! ஊட்டி ரோஸ்னு அதற்கு தலைப்பு கொடுத்திருக்கார்...''

நந்தனா ஜாடையாக அமுதனைப் பார்த்து சிரித்தாள். அவன் அதை ஆமோதிக்கிறேன் என்பதைப் போல கண்களை மூடித்திறந்தான்.

''கீழே இருக்கிற ஓவியத்துல மானை பிடிச்சுண்டு... என் அம்மா நிக்கிறாளே! அது இவரோட ஐடியாதான்! ம்ருகநயனானிங்கிறது என் அம்மாவோட முழுப்பெயர். அப்படினா மானைப் போல கண்களை உடையவள்னு அர்த்தமாம்! அதனால் மானோட சேர்த்து என் அம்மாவை வரைஞ்சுட்டார்...'' நந்தனா விளக்கினாள்.

அமுதன் மௌனமாக யோசித்தபடி டிபனை சாப்பிட்டான்.

டிபன் ஆனதும், நால்வரும் தொட்டபெட்டாவுக்கு கிளம்பினார்கள். நடராஜ் அங்கிள் மௌனமாகவே காரை செலுத்தினார். நந்தனாவும், மாடில்டாவும் மட்டுமே வளவளவென்று பேசிக் கொண்டு வந்தார்கள்.

அமுதன் ஓரக்கண்ணால் நடராஜ் அங்கிளை கவனித்த படி வந்தான். கம்பீரமாக காட்சியளித்தார். ஆனால் கண்கள் மட்டும் ஒருவித மிரட்சியுடன் இப்படியும் அப்படியுமாக அலைபாய்வதை கவனித்தான்.

''அங்கிள்! உங்க பெயிண்டிங் கீழே புருஷ்னு கையெழுத்து போட்டிருக்கீங்க. உங்க பெயர் நடராஜ் தானே! புருஷ்ங்கிறது உங்க புனைபெயரா?''

நடராஜ் சிரித்தார்.'' என் பெயர் புருஷோத்தமன்! நான் நடராஜ் ஓவியம் நல்லா வரைவேன்! அதனால என் சிஸ்டர் ம்ருகா என்னை நடராஜ்னு கூப்பிடுவா! நந்தனாவும் என்னை நடராஜ் அங்கிள்னு கூப்பிட்ட தாலே, அந்த பெயரே எனக்கு நிலைச்சுப் போச்சு!''

நந்தனா யோசனையுடன் முன் கண்ணாடி வழியாக நடராஜ் முகத்தைப் பார்த்தாள்.

'ஏன் அங்கிள் பொய் சொல்கிறீர்கள்?'

என் அப்பா!

'இதோ இந்த, நடராஜ் அங்கிள்தான் என் அப்பா புருஷோத்தமன்...' அமுதனின் அடி மனதில் எழும்பிய குரல், மெதுவாக அவன் நரம்பு மண்டலத்தை சுண்ட, அதனால் எழுந்த மின்சார அலை ஒன்று அவன் உடலை உலுக்கி விட, தன்னை சமாளித்தபடி காரின் டாஷ் போர்ட்டைப் பற்றிக் கொண்டான், அமுதன்.

மாடில்டாவின் கூரிய கண்கள் அவனது மாற்றத்தை கவனித்து விட்டன.

''எனிதிங் ராங், புரொபஸர்?''

''இல்லை! மலைச்சாலையில வளைஞ்சு வளைஞ்சு போறதால அன்ஈசியா இருக்கு! காலையில டிபன் சாப்பிட்டு இருக்கக் கூடாது!'' அமுதன் சொன்னான்.

''தப்பு புரொபஸர்! டிபன் சாப்பிடலேனா இன்னும் கஷ்டமா இருக்கும்!''

நடராஜ் சொன்னார். ''வேணுமினா நான் காரை ஸ்லோவா டிரைவ் பண்ணறேன்''

''உங்களுக்கு தெரியுமா புரொபஸர்! நடராஜ் அங்கிளுக்கு இந்த இடமெல்லாம் அத்துப்படி! கண்ணை கட்டி விட்டாக்கூட, எந்த இடத்துல ஹேர்பின் வளைவு வரும்னு தெரிஞ்சுண்டு ஜாக்கிரதையா டிரைவ் பண்ணுவார்!'' நந்தனா பாராட்டினாள்.

கண்ணைத் திறந்துக் கொண்டே அதள பாதாளத்தில் விழுந்து விட்டவருக்கு, கண்ணை கட்டிக் கொண்டு கார் ஓட்டுவது பெரிய சாதனையா என்ன?

அமுதன் நினைத்தான்!

இவர் நிச்சயம் என் அப்பாவேதான்! விடக்கூடாது! இவரைப் பேச வைத்து விவரங்களை வாங்கிவிட வேண்டும்''

''அங்கிள்! நான் உங்களை புருஷ் அங்கிள்'னு கூப்பிடறேன்! அந்தப்பெயர் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு...'' அமுதன் அவர் முகத்தை கவனித்தான்.

புருஷோத்தமன் முகம் இருண்டது ''வேண்டாம் புரொபஸர்! என் சிஸ்டருக்கு அது பிடிக்காது! என்னை நீங்க அங்கிள்னு கூப்பிட்டா போதும்!''

நந்தனா திகைப்புடன் அமுதன் முகத்தைப்பார்த்தாள்.

மாடில்டாவிற்கும் ஏதோ உறைத்திருக்க வேண்டும். அமுதனின் முகத்தை கூர்ந்து கவனித்தாள்.

''அங்கிள்! நீங்க ம்ருகா ஆன்ட்டியோட சொந்த அண்ணனா? உங்களுக்கு வேற யாராவது பிரதர்ஸ் இருக்காங்களா?'' அமுதன் கேட்டான்!

''இல்லை! நாங்க ரெண்டு பேருமே கஸின்ஸ் தான்!...'' புருஷோத்தமன் சாலையை கவனித்தபடி சொன்னார். முகத்தில் எந்த சலனமுமில்லை.!

'இதுதான் அண்டப்புளுகு போலும்' நந்தனா நினைத்தாள். ஆனால் ஒன்றும் பேசவில்லை! அமுதன் ஏன் அங்கிளை கேள்வி மேல் கேள்விக்கேட்டு கொண்டிருக்கிறார்?

''அங்கிள்! உங்களுக்கு கல்யாணம் ஆகிடுத்தா? உங்க மனைவி குழந்தை எல்லாம்... எங்கே?''விடாப்பிடியாக அமுதன் கேட்டான்.

நந்தனா தன் காதுகளைத் தீட்டிக் கொண்டாள்! என்ன சொல்லப்போகிறார், அங்கிள்.

''எனக்கு கல்யாணம் ஆச்சு! ஆனா அவளுக்கு என்னைப் பிடிக்கலை! கிளம்பி போயிட்டா...!'' நடராஜ் குரலில் எந்தவித பதற்றமும் இல்லை.

'நல்லாவே பொய் சொல்ல கத்துக் கொடுத்திருக்கா... அந்த ம்ருகநயனானி யட்சிணி...' மனதிற்குள் கறுவி கொண்டான் அமுதன்.

''என்னைப் பத்தியே கேட்கறீங்களே! உங்களைப் பத்தி சொல்லுங்க..'' புருஷோத்தமன் ஸ்டியரிங்கோடு, பேச்சையும் திசை திருப்பினார்.

''என்னைப் பத்தி என்ன சொல்றது?'' அமுதன் சிரித்தான். ''நான் சின்ன வயசுலயே அப்பா அம்மாவை இழந்துட்டேன். வயசான ஒரு தாத்தா தான் என்னை வளர்த்தாரு! அவரு கூட உங்க ஊருதான்! சிதம்பரம்...!''

''ஓ... அப்படியா! பெயரா... ஊரா?'' புருஷோத்தமன் கேட்க, தான் போடப்போகும் அணுகுண்டை அவர் எப்படி தாங்கிக் கொள்ள போகிறாரோ என்று ஒரு கணம் நிதானித்தான்.

''ஊர்தான் சிதம்பரம்! அவர் பெயர் நம்பாடுவான்!''

காரை சடர்ன் ப்ரேக் போட்டு நிறுத்துவார்; ஸ்டீயரிங்கை பற்றிய கைகள் நடுங்கும்; முகம் வெளிறிப்போய் வேர்வை வழியும், என்றெல்லாம் எதிர்பார்த்த அமுதன் ஏமாந்து போனான்.

'ஓ' என்று ஒரு முறை கூறிவிட்டு, அவன் கூறியது எதுவும் தன்னை பாதிக்காதது போல, சாலையின் மீது பார்வையை பதித்தார். புருஷோத்தமன்.

என்ன நெஞ்சழுத்தம்! இவர் ஒரு வித ரியாக்ஷனும் காட்டவில்லையே. அதன் பிறகு தொட்டபெட்டா வரும்

வரை யாருமே பேசவில்லை! தொட்டபெட்டாவை பார்த்ததுமே மாடில்டா உற்சாகம் கொண்டாள். கேமராவை முடுக்கிவிட்டபடி, இங்கேயும் அங்கேயு மாக இயங்கிக்கொண்டிருந்தாள். நந்தனா அவளுக்கு கம்பெனி கொடுக்க, புருஷோத்தமனும் அமுதனும் தனியாக இருக்க வேண்டிய சூழ்நிலை. அவரிடம் தான் யார் என்பதை சொல்லி விடலாமா?

யோசித்தான்!

அவரிடம் தான் அவருடைய மகன்தான் என்பதை சொல்லிவிட வேண்டியதுதான் என்கிற தீர்மானத்துடன் பேச முற்பட்டபோது, மாடில்டா அழைத்தாள்.

''புரொபஸர்! கொஞ்சம் வாங்களேன்!''

எரிச்சலுடன் அவளை நோக்கி நடந்தான். சமயம் பார்த்து இவள் கழுத்தை அறுக்கிறாளே!

மாடில்டா அவனை நோக்கினாள்.

''கொஞ்சம் என் பக்கத்துல நில்லுங்க! நந்தனாவும் நானும் அந்த பாறை மேல் நிக்கப் போறோம்! நீங்கதான் எங்களை ஷூட் பண்றீங்க! நந்தனா! நீ போய் அந்த பாறை மேல நில்லு! நான் வந்து உன்னோடு சேர்ந்து நிக்கறேன்! புரொபஸர் கிட்டே கேமராவை எப்படி ஹாண்டல் பண்றதுனு சொல்லிவிட்டு வரேன்!''

மாடில்டா கூற, நந்தனா அந்த பாறையை நோக்கி நடந்தாள். சட்டென்று அமுதனின் காதில் மாட் கிசுகிசுத்தாள்.

“புரொபஸர்! உங்க அப்பாகிட்டே இப்போ எதையும் பேசாதீங்க! நீங்க பேசினா அடுத்த நிமிஷம் அவரை ம்ருகா தீர்த்து கட்டிடுவா!”

பாம்பை மிதித்தவன் போல அவள் முகத்தை ஏறிட்டான் அமுதன்!

“மாட்! அவர்தான் என் அப்பானு உனக்கு எப்படி தெரியும்?”

“புருஷாமிருகம்” ஸ்டோரியை சிதம்பரம் கோவிலுல எனக்கு சொன்னீங்க இல்லையா? அந்த பெயரை இன்னைக்கு டைனிங் டேபிள்ல சொன்னதும் எனக்கு டவுட் வந்துடுச்சு! ம்ருகாவோட முகம் எனக்கு ரொம்ப பரிச்சயமா தோணிச்சு! அப்புறம்தான் ஞாபகம் வந்தது! என்னோட தாத்தாவோட சுயசரிதையில, உங்க அம்மா ஃபோட்டோ இருந்தா மாதிரி, அதே பார்ட்டில கலந்துகிட்ட ம்ருகா மற்றும் அவ அப்பாவோட ஃபோட்டோவும் நான் பார்த்திருக்கேன்! கவர்னர் ஹோப்போட கைகுலுக்கறா ம்ருகா! இன்னைக்கு நைட் என் ரூமுக்கு வாங்க! ஃபோட்டோவை காட்டறேன்! நிச்சயமா சொல்றேன்! இதுதான் உங்க அப்பா! ம்ருகாதான் அந்த யட்சிணி!”

அமுதன் மனம் துள்ளியது. “பேசாம இப்பவே அவரை அழைச்சுண்டு சென்னைக்கு போயிடலாம் மாட்! நல்ல சந்தர்ப்பம்! இதை நழுவ விடக்கூடாது!”

“ப்ளீஸ் புரொபஸர்! நாட் நௌ! இப்போ நீங்க தான் அவர் மகன்னு சொன்னாலும், அவர் அதை புரிஞ்சுக் கணுமே! எனக்கு என்னவோ, அவர் தன்னை மறந்து

இருக்காருனு தோணுது! ம்ருகாவோட வசியத்துல இருக்கிற அவரால எதை பத்தியும் சிந்திக்க முடியும்னு தோணலை...'' மாட் எச்சரித்தாள்.

''நான் ரெடி!'' பாறை மீது இருந்து நந்தனா கத்தினாள்.

''புரொபஸர் இப்ப ஒண்ணும் கண்டுக்காதீங்க! ம்ருகாவை மெதுவாத்தான் வளைக்க முடியும்! ஒண்ணு மட்டும் சொல்றேன்! நாம ஊட்டியை விட்டு போகறச்சே, உங்க அப்பாவையும் நம்மோட அழைச் சுட்டுதான் போவோம்... ஒ...கே!'' மாட் நம்பிக்கை அளித்தாள்.

எதையோ யோசித்தபடி உட்கார்ந்திருக்கும் புருஷோத்தமனை பார்த்த அமுதன், மாடில்டாவைப் நோக்கி தலையசைத்தான்.

# 38. மர வீட்டின் உள்ளே

## 1967 - வுட்பெக்கர் எஸ்டேட்

"**தொ**ட்டபெட்டாவை என்ஜாய் பண்ணீங்களா?'' உணவு வேளையின் போது அமுதனை கேட்டாள் ம்ருகா?''

'க்ரேட்!' ஒரே வார்த்தையில் மாடில்டா கூற, ம்ருகா அவளைக் கண்டு கொள்ளாமல், அமுதனையே வெறித்துப் பார்த்தாள்.

'அந்த கண்களுக்குள் பார்க்காதே?' உள்ளுணர்வு அமுதனை எச்சரிக்க, "எனக்கு பிடிச்சு இருக்கு'' என்று அவள் கண்களை தவிர்த்தபடி சொன்னான்.

உடனேயே ம்ருகாவிற்கு தூண்டில் போட்டான்.

"ஆன்ட்டி! நீங்களும் வந்திருந்தா புருஷ் அங்கிளுக்கு பொழுது போயிருக்கும்! பாவம், அவருக்கு போரடிச்சுது! நீங்க உங்க ஹஸ்பெண்டுக்கு கம்பெனி கொடுத்ததால வரலை'னு நினைக்கிறேன்...''

ம்ருகாவுக்கு முகம் இருண்டது. சடாரென புருஷோத்தமனின் முகத்தை நோக்கினாள். அவன் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

தனக்குள் ஏற்பட்ட நடுக்கத்தை மறைக்க, தண்ணீர் குடிக்க நினைத்து புருஷோத்தமன், டம்ளரை கையில் எடுத்தான்.

சுரீரென தன் பேச்சால் அவனை தடுத்து நிறுத்தினாள் ம்ருகா.

''நடராஜ்! இப்ப ஏன் தண்ணீர் குடிக்கிறே? டம்ளரை கீழே வை! சாப்பிடச்சே தண்ணீர் குடிக்ககூடாது!''

பேயைக் கண்டவன் போல வெலவெலத்து, டம்ளரை டக்கென்று டைனிங்டேபிள் மீது வைத்தான் புருஷ்.

ம்ருகா மீண்டும் அமுதனைப் பார்த்தபோது, அந்த கண்கள் தனக்கு எச்சரிக்கை விடுப்பதை அவன் உணர்ந்தான்.

'எனக்கும், புருஷ்ஷுக்கும் இடையே தனி உலகம் இருக்கிறது! அதற்குள் நுழைய யாருக்கும் அனுமதி கிடையாது' என்பது போன்ற ஒரு பார்வை.

''புரொபஸர் அமுதன்! உங்க எதிர்கால திட்டங்கள் என்ன? திரும்பி லண்டன் போறீங்களா... இல்லை இங்கேயே இருக்க முடிவு செய்துட்டீங்களா?'' ம்ருகா கேட்டாள்.

''நான் ஒரு திட்டமும் செய்யலை!'' அமுதன் வேண்டாவிருப்பாக பதிலளித்தான்.

''ஆன்ட்டி! உங்களுக்கு தெரியுமா! புரொபஸரை ரிசைன் பண்ண விடமாட்டோம்னு இலண்டன்

யூனிவர்சிடி ஸ்டூடன்ஸ் ஒரே ரகளை! அவருக்கு ஒரு பெரிய ரசிகர் மன்றமே இருக்கு! நான் பேசாம அவரை திரும்ப இலண்டனுக்கே கடத்திட்டு போயிடப் போறேன்!'' மாடில்டா வேடிக்கையாக சொன்னாள்.

ம்ருகா அவளை உஷ்ணத்துடன் பார்த்தாள். ''மாடில்டா! எனக்கு ஒருத்தரைப் பிடிச்சு போச்சுனா நான் அவங்களை விடவே மாட்டேன்! என்னை மீறி உன்னால புரொபஸரை கடத்த முடியாது! ஐ திங்... புரொபசர் அமுதனை எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு! அதனால நான் என்ன செய்ய போறேன் தெரியுமா? அவரை இங்கேயே மடக்கிப் போடலாம்னு இருக்கேன்...'' ம்ருகாவின் முகம் புன்னகைத்தாலும், குரலில் ஒரு வித அச்சுறுத்தல் தொனியை உணர்ந்தார்கள், மாடில்டாவும் அமுதனும்.

அமுதன் அவளுக்கு என்ன பதிலடி கொடுப்பது என்று யோசிக்கலானான். தான் அவளுடைய எதிரி என்பதை இப்போதே உணர்த்தலாமா அல்லது இன்னும் கொஞ்ச காலம், தன் அடையாளத்தை மறைத்து உறவாடி கெடுக்கலாமா...?

'கல்யாணம் ஆனவர்களைதானே நீங்க வளைத்து கட்டுவது வழக்கம்! எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையே! என்னை உங்களால் வளைத்துவிட முடியாது...'

ம்ருகாவை காயப்படுத்த எண்ணி இதை தன் பதிலாக கூறுவதற்காக அமுதன் வாய் எடுக்க, மாடில்டாவின்

பாதம், அவன் முட்டியில் மோதி அவனை பேசாமல் இருக்கும்படி எச்சரிக்க, அவன் அமைதி காத்தான்.

''ஆன்ட்டி! உங்க ஹஸ்பெண்ட் எங்கே? அவர் நம்மோட சாப்பிட வர்றலியா?'' பேச்சை மாற்ற வேண்டி மாடில்டா கேட்டாளோ, இல்லை ம்ருகாவை தடுமாற வைக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் கேட்டாளோ.

ஆனால்

அந்த கேள்வியை ம்ருகா ரசிக்கவில்லை என்பதை அவள் முகமே உணர்த்தியது.

''அவருக்கு உடம்பு சரியில்லை. அதனால வேலைக்காரன் அவருக்கு சாப்பாடு எடுத்துண்டு போயிருக்கான்'' என்றவள், அமைதியாக சாப்பிட்டுக்கொண்டிருந்த புருஷோத்தமனைப் பார்த்தாள்.

''நடராஜ்! நம்ம விருந்தாளி என் கணவரைப் பத்தி கவலைப்படறாங்க, பாரு! அவருக்கு கம்பெனி இல்லைனு ஃபீல் பண்றாங்க! நீ போய் அவருக்கு கம்பெனி கொடு...'' என்று உத்திரவிட்டாள்.

தலையசைத்தபடி, புருஷ் சாப்பிட்டுக் கொண்டு இருந்த தட்டை கையில் ஏந்திக் கொண்டு, யக்ஞத்தின் அறையை நோக்கி நடந்தார்.

அமுதன் அவரை வேதனையுடன் பார்த்தான்.

நந்தனா தயக்கத்துடன் ம்ருகாவைப் பார்த்தாள். ''மம்மி! சாப்பிட்ட அப்புறமா நாங்க மூணு பேரும் நந்தனா நெஸ்ட்டுக்கு போகப் போறோம்...''

ம்ருகா அவளை திரும்பிப் பார்த்து முறைத்தாள்.

“நந்திங் டூயிங், மிருகா! இப்போ நான் அந்த வுட் ஹவுஸை யூஸ் பண்ணறேன்! நீங்க அங்கே போக முடியாது!”

நந்தனா மௌனம் சாதித்தாள்.

ம்ருகா தான் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு எழுந்தாள்.

“சாப்பிடாமல் எழுந்துட்டீங்களே?” மாடில்டா வியப்புடன் அவளைப் பார்த்தாள்.

“என் லஞ்ச் அவ்வளவுதான்! அதனால தான் நான் நந்தனாவோட சிஸ்டர் மாதிரி இருக்கேன்...” என்றபடி வாஷ் பேசினை நோக்கி நடந்தாள்.

அங்கிருந்தபடி ‘நடராஜ்’ என்று கூப்பிட, சாப்பிட்டுக் கொண்டிருந்த நடராஜ் பதைபதைப்புடன் ஓடி வந்தார்.

“வாஷ் பேசின் குழாயை திறந்துவிடு! நான் கையை வாஷ் பண்ணணும்!”

ம்ருகா கொஞ்சலாக கூற, புருஷோத்தமன் குழாயைத் திருகினார்.

நிதானமாக தன் கையைக் கழுவிய ம்ருகா, இடுப்பில் இருந்த கைக்குட்டையால் வாயை நாசூக்காக துடைத்தபடி அகல, புருஷோத்தமன் குழாயை மூடினார்.

‘கிராதகி!’ அமுதனுக்கு இரத்தம் கொதித்தது.

டைனிங் ஹாலை விட்டு வெளியேறுவதற்கு முன்பாக மாடில்டாவையும் அமுதனையும் அலட்சியமாகப் பார்த்தாள் ம்ருகா!

''புரொபஸர்! மாடில்டா! இனிமே என்னை ஆன்ட்டினு கூப்பிடாதீங்க! நந்தனாவுக்கு சிஸ்டர் மாதிரி இருக்கேன்னு நீங்கதானே சொன்னீங்க! அப்ப நந்தனாவை பெயர் சொல்லி கூப்பிடறா மாதிரி, என்னையும் ம்ருகானே கூப்பிடுங்க...''

அன்ன நடையுடன் ம்ருகா வெளியேற, அவள் மிகவும் ஆபத்தானவள் என்பதை டைனிங் டேபிளில் உட்கார்ந்திருந்த அமுதனும், மாடில்டாவும் உணர்ந் தார்கள். நந்தனா எதுவுமே பேசாமல் அமைதியாக சாப்பிட்டுக்கொண்டிருந்தது, அவர்கள் இருவருக்கும் மர்மமாக இருந்தது.

# 39. இரத்த தானம்

## 1967 - வுட்பெக்கர் எஸ்டேட்

**அ**முதன் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். கண்ணாடிகள் இறக்கப்பட்டிருந்தும், அவனால் குளிரை உணரமுடிந்தது. தரையில் விரித்திருந்த கம்பளத்தை மீறி கால்கள் சில்லிட, கட்டிலை விட்டு இறங்காதேயென்று பாதங்கள் கெஞ்சின. படுக்கை அருகில் இருந்த ஷேட் லாம்ப்பை போட்டபடி, அங்கிருந்த பத்திரிகை ஒன்றை கையில் எடுத்தான். மனம் அதில் லயிக்கவில்லை.

'இரவு என் ரூமுக்கு வா' நான் ம்ருகா ஃபோட்டாவை காட்டுகிறேன்' மாட் கூறியது நினைவுக்கு வர, கட்டிலை விட்டு இறங்கி, மெதுவாக தன் அறையை விட்டு வெளியே நடந்தான்.

மாடில்டாவின் அறைக் கதவை தட்ட முயல, கதவு தானாகவே திறந்துக்கொண்டது. உள்ளே மாடில்டா இல்லை. எங்கே போனாள்? ஒரு வேளை நந்தனாவின் அறைக்குள் இருக்கிறாளா?

நந்தனாவின் அறைக் கதவைத் தட்டி பார்த்தான். கதவு உள்புறமாக தாளிடப்பட்டிருந்தது. ஒருவேளை இருவரும் தூங்கிக் கொண்டிருக்கிறார்களா?

யோசனையுடன் திரும்பி தனது அறைக்குச் செல்ல எத்தனித்தான். அவர்களது மூன்று அறைகளும் இருந்த வெராந்தா, பால்கனி ஒன்றில் முடிவதைக் கண்டதும், பால்கனியை நோக்கி நடந்தான்.

பால்கனியில் நின்றபடி இருளில் மறைந்துக்கிடந்த மலை முகடுகளை அடையாளம் காண முயன்றான். குளிர் வாட்டி வதைக்க, இரு கைகளால் உடலை இறுக கட்டியபடி, தன் அறைக்கு திரும்ப முடிவு செய்தான். இரண்டடி எடுத்து வைத்தவன் பால்கனியின் ஓரமாக இன்னொரு அறை இருப்பதைக் கண்டான்.

பால்கனியின் திருப்பத்தில் ஒரு ஜன்னல் கதவு ஒருக்களித்து காணப்பட, அதிலிருந்து வெளிச்சம் வெளிப்பட்டது. உள்ளே பேச்சுக்குரல் கேட்டது!

மாடில்டாவும் நந்தனாவும் அங்கே இருக்கிறார்கள் போலிருக்கிறது.

நடந்து சென்று அந்த ஜன்னல் வழியாக பார்வையை உள்ளே செலுத்தினாள்.

உள்ளே அவன் கண்ட காட்சி அவன் நெஞ்சை பதைபதைக்க வைத்தது.

ம்ருகா ஒய்யாரமாக படுத்திருக்க, அவள் கால்களை அமுக்கியபடி உட்கார்ந்திருந்தார், புருஷோத்தமன்.

''ஒழுங்கா என்னை கல்யாணம் பண்ணிண்டு இருந்தா... உனக்கு நான் காலை பிடிச்சு விட்டிருப்பேன்! என்னை ஏமாத்தினதால, காலம்பூரா உனக்கு இதுதான் தலை யெழுத்து...''

புருஷோத்தமனிடம் ம்ருகா சொல்லிக் கொண்டிருந்தாள். அவர் மௌனமாக அவள் காலைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

இதைவிடக் கொடுமையான காட்சியை அமுதனால் பார்க்க முடியுமா?

உள்ளே சென்று ம்ருகாவின் கூந்தலை பற்றி இழுத்து, கீழே தள்ளி காலால் நாலு உதைவிட வேண்டும் போல தோன்ற, எங்கே தான் நினைத்ததை செய்து விடுவோமோ என்று அஞ்சியவனாய் அங்கிருந்து அகன்றான்.

வேதனை பொங்க தனது அறையை நோக்கி நடந்தான்.

நந்தனா நெஸ்ட்!

மாடில்டாவிடம் இலண்டனில் இருந்த போது, தனது மர வீட்டை பற்றி கதை கதையாக நந்தனா கூறியிருக்கிறாள். அமைதியான அந்த இடத்திற்கு அவசியம் மாடில்டாவை அழைத்துப் போகிறேன் என்று கூறியிருந்தாள். மாடில்டாவிற்கும் அந்த மர வீட்டை காண வேண்டும் என்கிற ஆவல் இருந்தது.

ஆனால்

இன்று அந்த மரவீட்டை தான் உபயோகிப்பதாகவும், அவர்கள் அங்கே போகக்கூடாது என்றும் ம்ருகா தடைப்போட்டது, மாடில்டாவின் ஆர்வத்தை இன்னும் அதிகம் கிளறியது.

போய் அந்த மரவீட்டை யாருக்கும் தெரியாமல் பார்த்தால் என்ன? அங்கே ம்ருகா என்ன செய்கிறாள் என்பது தெரியவருமே!

மாடில்டா ஒரு கருப்பு நிற சால்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு, உடனே அந்த மாளிகையின் பின்புறமாக இருந்த பாதையை நோக்கி கிளம்பி விட்டாள்.

இந்த ஊட்டிமலை குளிர் இவளுக்கு ஒரு பொருட்டே இல்லை! குளிருக்கு பயந்து அவள் சால்வையை போர்த்தியிருக்கவில்லை! தன்னை யாரும் பார்த்துவிடக் கூடாதே என்பதற்காகதான் இருளை ஒத்திருக்கும் கருப்பு நிற சால்வையால் தன்னை மறைத்தபடி, கையில் டார்ச் விளக்குடன் அந்த பாதையில் நடந்தாள். ஒரு ஐந்து நிமிட நடைக்கு பிறகு, பாதையின் குறுக்காக தென்பட்டது அந்த பிரும்மாண்டமான மரம்.

மரத்திற்கு மரியாதை கொடுத்து அந்த பாதை, அதை வலம் வந்து, பின்பு தன் வழியே தொடர, மாடில்டா மெதுவாக அந்த மரத்தைச் சுற்றி வந்தாள்.

அதன் படிகளில் ஏறியவள், அந்த வீட்டின் முன்னே நின்றாள், டார்ச்சின் ஒளியில், அந்த மரவீட்டின் ஜன்னல் வழியாக உள்ளே நோக்கினாள்.

ஒரு சிறிய விக்கிரகம் அங்கே காணப்பட்டது. அதை சிறிது நேரம் பார்த்தவள், டார்ச்சை திசைதிருப்பினாள்.

அது என்னது?

அங்கே மரவீட்டின் கூரையிலிருந்து ஒரு ஆணின் மெழுகு பொம்மை தொங்கிக் கொண்டிருக்க, அது சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது. பேண்ட் சட்டை அணிவிக்கப்பட்டிருந்த அந்த மெழுகு பொம்மையின் நெற்றியிலே ஒரு சிறு கருஞ்சாந்து பொட்டு வைக்கப் பட்டிருந்தது. மாடில்டா வியப்புடன் அதைப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

டார்ச் ஒளியை இப்படியும் அப்படியுமாக திருப்பி, அந்த மரவீட்டின் உள்ளே இருப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த போதுதான், அந்த சலசலப்பை அவள் செவிகள் கேட்டன. அந்த மரவீட்டை நோக்கி யாரோ வந்துக் கொண்டிருந்தார்கள். வந்தவனின் காலடிச்சத்தம் மிக அருகாமையில் கேட்க, உஷாரானாள் மாடில்டா.

மீண்டும் படி வழியாக கீழே இறங்கினால் நிச்சயம் அந்த உருவம் தன்னை பார்த்துவிடும் என்பதை உணர்ந்தாள்.

கடகடவென்று மரவீட்டின் ஜன்னல் அருகே துவங்கிய கிளை ஒன்றைப் பற்றியவள், அதன் மீது ஏறி மரத்தின் மற்றொரு பகுதியை நோக்கி ஊர்ந்தாள்.

யாரோ மரவீட்டின் படிகளில் ஏற ஆரம்பித்திருந்தனர். காலடிச்சத்தம் இன்னும் நெருக்கமாக கேட்டது.

சட்டென்று டார்ச் விளக்கை அணைத்த மாடில்டா, அடர்ந்த இலைப்பகுதியின் பின்னே மறைந்துக் கொண்டபடி, படிகளில் ஏறி வரும் உருவத்தை கவனித்தாள்.

அவள் இதயம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. நல்லவேளை! அந்த உருவமே ஒரு சிறு லாந்தர் விளக்கை பிடித்தபடி ஏறி வந்தது. அதன் ஒளி வந்தவனை அடையாளம் காட்டியது.

டிரைவர் சவுண்டப்பன்தான் அந்த மரவீட்டின் படிகளில் ஏறிக்கொண்டிருந்தான். வழக்கமான அவனது டிரைவர் யூனிஃபார்மில் காணப்படவில்லை! ஏதோ மந்திரவாதிபோல நெற்றியெங்கும் கருஞ்சாந்து பொட்டுடன், கருப்பு வேட்டியில் சட்டை இல்லாமல் காட்சியளித்தான்.

அந்த நிலையில் அவனை காண மாடில்டாவுக்கு பயமாக இருந்தது. மூச்சை அடக்கிக் கொண்டு அவனையே கவனித்தாள்.

சவுண்டப்பன் தன் கையிலிருந்த சாவியால் நந்தனா நெஸ்டை திறந்துக் கொண்டு உள்ளே போனான்.

மாடில்டா அமைதியாக காத்திருந்தாள். சிறிது நேரத்தில் கணகணவென மணியோசை கேட்டது.

மாடில்டா அங்கிருந்து கிளம்பி போவது உசிதம் என்று நினைத்தாள். ஒரு வேளை ம்ருகா வந்து விட்டால் என்ன செய்வது?

மீண்டும் மரவீட்டில் இறங்கி படிகள் வழியாக இறங்கிபோவது பாதுகாப்பு இல்லை என்று உள்மனது எச்சரித்தது.

என்ன செய்யலாம்?

டார்ச் ஒளியை கீழே பாய்ச்சினாள். மரத்தின் அந்தப்பக்கமாக ஒரு மணல்மேடு தென்பட்டது. அதில் குதித்து வந்த வழியாக போய்விட நினைத்தாள்.

மெதுவாக அந்தக் கிளையில் தொடர்ந்து ஊர்ந்து சென்று, அந்த மணல்மேட்டில் குதித்தாள்.

அவள் குதிப்பதற்கும் சவுண்டப்பன் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது மூச்சைப் பிடித்துக் கொண்டு அவள் மண்ணில் குதித்தபோது, மாடில்டாவின் கையிலிருந்து டார்ச் நழுவி, மரவீட்டின் பின்புற சுவரில் மோதி 'பட்' என்ற சத்தத்துடன் விழுந்தது.

மாடில்டா பயத்துடன் ஓடிச் சென்று டார்ச்சை கையில் எடுத்தாள். விளக்கு உடைந்து போயிருந்தது.

''யாரது?'' சவுண்டப்பனின் குரல் உக்கிரமாக கேட்டது.

மாடில்டா மணல்மேட்டின் பின்புறமாக உருண்டவள், அப்படியே கிடந்தாள்.

சவுண்டப்பன் மரவீட்டின் வெளியே வந்து லாந்தர் விளக்கின் ஒளியில் சுற்றிப்பார்த்தான். ஒரு அசைவுமில்லை! மீண்டும் வீட்டிற்குள் நுழைந்தான்.

சற்று நேரங்கழித்து மணியோசை கேட்க தொடங்கியதும், தான் பதுங்கியிருந்த இடத்தை விட்டு விலகி, வீட்டை நோக்கி விரைவாக நடந்தாள்.

தனது அறைக்குள் செல்வதற்கு முன் அமுதனின் அறையை நோட்டம் விட்டாள். அறை திறந்திருந்தது. கட்டிலில் அவன் காணப்படவில்லை.

நேராக சென்று அவன் கட்டிலில் அமர்ந்தவள், அவனுக்காக காத்திருந்தாள்.

பால்கனியிலிருந்து தன் அறைக்கு திரும்பிய அமுதன் மாடில்டா தனக்காகக் காத்திருப்பதை கண்டு வியந்தான்.

''எங்கே போயிருந்தே, மாட்? நான் உன் ரூம்ல பார்த்தேன்! 'நீ' இல்லையே!''

''உஷ்! மெதுவா பேசுங்க! சும்மா ஒரு வாக்கிங் போயிருந்தேன். நந்தனா நெஸ்ட் போயிருந்தேன். அங்கே ஒரு விசித்திரமான காட்சிகயைப் பார்த்தேன்...''

''என்ன காட்சி?''

''நந்தனா நெஸ்ட்லதான் ம்ருகா... ப்ளாக் மாஜிக் பூஜை செய்யறா!''

அமுதன் தலையாட்டினான். ''அதனால்தான் நம்மளை அங்கே போகக்கூடாதுனு தடுத்தாளா?'' நான் வேற ஒரு காட்சியைப் பார்த்தேன். பால்கனி ரூம்ல அவள் காலை என் அப்பா பிடிச்சு விடற அற்புத காட்சியை பார்த்தேன்...!'' கோபத்துடன் ஒலித்தான்.

''நான் சொன்னது கரெக்டா! அவதான் நீங்க சொல்லுற யட்சிணி! என் தாத்தா சுயசரிதைல அவளோட ஃபோட்டோ இருக்கு! நான் எடுத்து வந்து காட்டறேன்...'' மாடில்டா பரபரப்புடன் எழுந்து தன் அறைக்கு சென்றாள்.

சற்று நேரம் கழித்து வந்தாள், மாட்! அவள் முகம் கலவரத்துடன் காணப்பட்டது.

''வாட்ஸ் ராங், மாடில்டா?'' அவளது குழம்பிய முகத்தை கண்டதுமே, ஏதோ நடக்க கூடாதது நடந்து விட்டிருப்பதை யூகித்தான், அமுதன்.

''அந்த புக்'குல ம்ருகா படங்கள் இருந்த பக்கங்கள் கிழிக்கப்பட்டிருக்கு, புரொபஸர்'' மாடில்டா புத்தகத்தை நீட்ட, அமுதன் திடுக்கிட்டு அதை வாங்கிப் பார்த்தான்.

சில பக்கங்கள் கிழிக்கப்பட்டிருந்ததற்கு அடையாள மாக புக் தளர்ந்திருந்தது. இவன் அம்மாவின் புகைப் படம் மீது சிவப்பு மையால் தீட்டப்பட்டிருந்தது.

அமுதனுக்கு முதுகுதண்டு சில்லிட்டது.

''பீ... கேர்ஃபுல் மாடில்டா!...'' மெதுவாக கிசுகிசுக்க, தலையாட்டினாள் மாடில்டா.

''ரூம் கதவை உள்பக்கமா தாளிட்டுக்கோ!'' அமுதன் எச்சரிக்க, மாடில்டா எச்சரிக்கை உணர்வுடன் தன் அறையை நோக்கி நடந்தாள்.

கதவை உட்புறமாக தாளிட்டவள், விளக்கை அணைத்துவிட்டு கட்டிலில் படுத்தாள்.

சிறிது நேரம் தான் அப்படி இருந்தாள். திடுப்பென்று ஒரு சத்தம். யாரோ தாழ்ப்பாளை நீக்கும் ஒலி கேட்டது.

கண்விழித்தவள், இருட்டை ஊடுருவி பார்க்க முயன்றாள். அறை அமைதியாக இருந்தது. ஆனால் இந்த

பக்கமாக யாரோ கதவை திறக்கும் ஓசை கேட்டது. அலற வாயெடுத்தாள்.

அறையின் இருள் பகுதியிலிருந்து திடீரென்று ஒரு உருவம், நைட் லேம்பின் மங்கிய ஒளியில் அவள் முன்பாக வந்து நின்றது.

நந்தனா-

முகம் சலனமற்று கிடந்தது!

''மாடில்டா! கொஞ்ச நேரம் முன்னாடி, உன் ரூம்லேர்ந்து அமுதன் வெளியில வர்றதையும், அப்புறம் நீ அவர் ரூம் உள்ளே போறதையும், அவர் கட்டிலுல நீ உட்காருவதையும் பார்த்தேன்! அது எனக்கு பிடிக்கலை! நான் அவரை கல்யாணம் செய்துக்க போறேன்! அதனால நீ கொஞ்சம் விலகி இரு...!'' நந்தனா கண்களை விரித்து, எங்கேயோ வெறித்தபடி பேசினாள்.

மாடில்டாவுக்கு புரிந்து விட்டது. நந்தனா உறங்கிக்கொண்டிருக்கிறாள். ம்ருகா வசியத்தால் அவளை இயக்கிக் கொண்டிருக்கிறாள்.

நந்தனாவின் நெற்றியில் சிறு வட்டமாக கருஞ்சாந்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள், மாட்!

நந்தனா பேசி முடித்துவிட்டு, திரும்பி இருள் பகுதியை நோக்கி நடந்து மறைந்தாள்.

மீண்டும் தாளிடும் ஓசை கேட்டது. மாடில்டாவுக்கு புரிந்துவிட்டது! இந்த அறைக்கும் நந்தனாவின்

அறைக்கும் இடையே ஒரு வழி இருக்கிறது! அதன் வழியாகத்தான் அவள் உள்ளே வந்திருந்தாள்.

மாடில்டா விளக்கை பொருத்தி அந்த வழியை பார்த்தாள். திரைக்கு பின்னே ஒரு கதவு தாளிடப் பட்டிருந்தது.

இந்த வழியாக வந்துதான் ம்ருகா இவள் தாத்தாவின் சுயசரிதை பக்கங்களை கிழித்திருக்க வேண்டும்.

ஆக

இவர்கள் இல்லாதபோது ம்ருகா அந்த அறைகளை நோட்டம் விடுகின்றாள், என்பது அவளுக்கு புலப்பட்டது.

## 1967 - வுட்பெக்கர் எஸ்டேட்

"ஹவ் இஸ் இட் பாஸிபிள்?"

மாடில்டா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

நந்தனா தன் அறையை விட்டு சென்றதுமே, உறக்கம் பிடிக்காமல் யோசித்தபடி புரண்டு கொண்டிருந்த மாடில்டா, மறுநாள் குட்மார்னிங் என்று சொல்லியபடி இவள் அறைக்குள் நுழைந்த அமுதனிடம் நடந்ததை விவரித்தாள்.

'இந்த மாதிரி வசிய மையை தடவி எப்படி ஒரு மனிதனை நம்ம இஷ்டப்படி பேச வைக்க முடியும்? நடக்க வைக்க முடியும்?"

''இந்த விஷயத்துல எனக்கு அனுபவம் இல்லை! ஆனா ஒரு மனநிலை மருத்துவரோட புத்தகம் ஒன்றை படிச்சேன். நம்ம நெத்தி மையத்துல இருக்கிற திங்கிங் டிஷ்யூவை அலைகளால் பாதிக்க செய்ய முடியுமாம்.

''உதாராணத்துக்கு குளிர்காத்து வீசுதுனு நியூரான் செல்கள் திங்கிங் டிஷ்யூவுக்கு மெசேஜ் அனுப்புது! உடனே ஸ்வெட்டர் போட்டுக்கோனு திங்கிங் டிஷ்யூவும் பதில் மெசேஜ் அனுப்புது! அதனால உடனே ஸ்வெட்டர் போட்டுக்கறோம்!

''இந்த திங்கிங் டிஷ்யூ, நம்ம நியூரான் செல்லுல ஏற்படற மின்சார அதிர்வலை மூலம் மெசேஜ் வாங்கி, தன் உத்தரவை மூளைக்கு செலுத்தறது! அந்த நியூரான் செல்லுல இருந்து திங்கிங் டிஷ்யூவுக்கு மெசேஜ் போகாதபடி, வெளி அலைகள் மூலமா அந்த திங்கிங் டிஷ்யூவை கட்டுப்படுத்த முடியும்! அந்த வெளி சக்தி இருக்கிற உணர்வலைகளைத்தான் நாங்க வசியம்னு சொல்றோம்!

''அந்த வெளிசக்திகள் நம்ம திங்கிங் டிஷ்யூவை பாதிக்கக் கூடாதுங்கிறதுக்காகதான் நாங்க நாமம், திருநீறு, பொட்டுனு வச்சுக்கறோம்.

''இந்த வசிய மையை நெற்றியில வச்சா, வசியம் செய்யறவர்களோட எண்ண அலைகள், மை வச்சுட்டு இருக்கிறவங்களோட எண்ணங்களை தாக்கி, தங்கள் இஷ்டப்படி அவங்களை ஆட்டிப் படைக்க முடியும்...''

''மைகாட்! இருபதாவது நூற்றாண்டுல கூடவா இப்படி?'' மாடில்டா அசந்துப் போனாள்.

அமுதன் சிரித்தான்.

"நீங்கள் பிளாக் மாஜிக்கை சயன்ஸ் கண்ணோட்டத்துல பார்க்கறீங்க! நாங்க சயன்ஸையே பிளாக் மாஜீக்கா மாத்தி காட்டறோம்! அவ்வளவு தான்!'

"புரொபஸர்! நீங்களும் ம்ருகாவோட குடும்பத்துல ஐக்கியம் ஆகப் போறீங்களாமே, நந்தனாவின் கணவனாக. வாழ்த்துக்கள்!"

மாட்டில்டா அவன் கையைப்பற்றி குலுக்கினாள்.

"புருஷோத்தமன், யக்ஞமூர்த்தினு ரெண்டு பொம்மைகளை வச்சுண்டு விளையாடறது போதாதுனு என்னையும் இன்னொரு பொம்மையா வச்சுக்க பார்க்கறா போல இருக்கு! அது நடக்காது!" அமுதனின் குரல் தீவிரத்துடன் ஒலித்தது.

"அப்படின்னா... நீங்க நந்தனாவை லைக் பண்ணலியா?" ஆச்சரியத்துடன் கேட்டாள் மாடில்டா.

"ஐ லவ் ஹர், மாட்! அதுக்கு விலையா என்னையே நான் இழக்கறதுனு ஒரு நிலை வரும்னா எனக்கு அந்த லவ் வேண்டாம்! என்னோட ஒரிஜனாலடி பாதிக்காத வகையிலதான் என் கல்யாணம் நடக்கும்!"

"எனக்கு தோணுது புரொபஸர்! ம்ருகா உங்க மேலயும், கண்ணை வச்சுட்டா... ஜாக்கிரதை!" மாடில்டா கவலையுடன் சொன்னாள்.

அதே சமயம் நந்தனா உள்ளே வந்தாள். குளித்து முடித்து, மஞ்சள் சேலையில் நேராக பொட்டானிக்கல்

கார்டனிலிருந்து நடந்து வந்த ரோஜாவைப்போல தோன்றினாள்.

"என்ன பேசிண்டே இருக்கீங்க? இன்னைக்கு என்ன புரோகிராம்?'' சிரித்தபடி நந்தனா கேட்க, முந்தைய இரவு நடந்திருந்த சம்பவங்கள் அவளுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை என்பதை அறிந்திருந்த மற்ற இருவரும், அதைப்பற்றி பேசுவதை தவிர்த்தனர்.

மாட் புன்னகைத்தாள்.

"நாங்க உன் பொறுப்புலதான் இருக்கோம்! நீதான் எங்களுக்கு புரோகிராம் சொல்லணும்!''

"அம்மாவும் நானும் காலையில ஒரு இரத்த தான முகாமுக்கு போறோம்! அதை முடிச்சுட்டு நான் வர்றேன்! எங்க எஸ்டேட்டை சுத்தி பார்க்க போகலாம்!

"அப்புறம் இன்னைக்கு நைட் என் அம்மா தலைமைல எங்க எஸ்டேட்ல ஒரு மலைஜாதி கல்யாணம் நடக்கப் போறது. எங்க எஸ்டேட்ல வேலைப் பார்க்கறவரோட பெண்ணுக்கு கல்யாணம்! அவுங்க சிஸ்டம் ரொம்ப இன்டரெஸ்டிங்கா இருக்கும்! ஆட்டம், பாட்டுனு அமர்க்களப்படுத்துவாங்க! நீ வர்றியா, மாட்!'' நந்தனா கேட்டாள்.

"ஷ்யூர்!'' மாட் சொன்னாள்.

"அப்போ இன்னைக்கு ராத்திரி தூங்கிடாதே! அவங்க கல்யாணம் நடுராத்திரில தான் நடக்கும். நீங்க வர்றீங்களா புரொபஸர்?''

''வரேன்!'' என்று சொல்ல நினைத்த அமுதனுக்கு திடீரென்று அந்த எண்ணம் உதித்தது. பெண்கள் எல்லோரும் நடுஇரவில் வீட்டை விட்டு போய் விடுவார்கள். வீட்டில் புருஷோத்தமனும் யக்ஞும் மட்டும்தான் இருப்பார்கள். அப்பாவிடம் பேசிப் பார்த்தால் என்ன?

''நான் வரலை! என்னால ராத்திரி நேரத்துல விழிச்சிருக்க முடியாது நீ மாடில்டாவை அழைச்சுண்டு போ!'' ஆர்வம் இல்லாதவனைப் போல் சொன்னான் அமுதன்.

''அப்போ... நாம போறோம்!''- நந்தனா மாடில்டாவின் தோளை தட்டிக் கொடுத்தாள். ''நான் அம்மாவோட போய் ரத்தம் தானம் பண்ணிட்டு வந்துடறேன். அப்புறமா நாம பிரேக் ஃபாஸ்ட் சாப்பிடலாம்...!''

நந்தனா கீழே சென்றாள்.

''ஏன் புரொபஸர் எங்க கூட வர்ற மாட்டேனு சொல்லிட்டீங்க?'' மாட் கேட்டாள்.

''என் அப்பாவோட பேசப்போறேன்!''

''நினைச்சேன்! பீ கேர்ஃபுல்!'' மாட் எச்சரித்தாள்.

''நீ கூட ஜாக்கிரதை! ம்ருகா கூட ராத்திரியை கழிக்கப் போறே!'' என்றான் அமுதன்.

''நந்தனா தான் இருக்காளே!'' மாடில்டா சொன்னாள்.

''நீ நந்தனாவை நம்பி பிரயோஜனமில்லை! அவதானே நேத்து உன்னை மிரட்டிட்டு போனாள்...''

அமுதனின் கூற்றில் நியாயம் இருப்பதை உணர்ந்தாள், மாடில்டா.

அன்றிரவு

ம்ருகாவுடன் நந்தனாவும், மாடில்டாவும் மலை ஜாதியினரின் கல்யாணத்துக்கு புறப்பட்டனர். மாட் கேமராவை எடுத்துக்கொண்ட போது, ம்ருகா தடுத்தாள்.

''மாடில்டா! கேமரா வேண்டாம்! அவங்க தங்களை புகைப்படம் எடுக்கறதை விரும்ப மாட்டாங்க!'' கண்டிப்புடன் ம்ருகா சொல்ல, வேறு வழியின்றி கேமராவை அமுதனிடம் கொடுத்துவிட்டு சென்றாள்.

அவர்கள் கிளம்பியதும், புருஷோத்தமன் அறையை நோக்கி நடந்தான், அமுதன்

புருஷோத்தமன் நாற்காலியில் உட்கார்ந்தபடி, ஏதோ ஃபைலை பார்த்துக் கொண்டிருந்தார். அமுதன் உள்ளே வந்ததை அவர் கவனிக்கவில்லை.

''அங்கிள்''

இயந்திரகதியில் அமுதனை நிமிர்ந்துப் பார்த்தார், புருஷோத்தமன்.

''நான் உங்ககிட்டே பேசணுமே!''

''தூங்கலியா?''

''தூக்கம் வரலை! அதுதான் உங்களை தேடிண்டு வந்தேன்!...'' அமுதன் சொன்னான்.

''பேசுங்களேன்!'' ஃபைலை மூடியபடி அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

''அங்கிள்! உங்க குடும்பத்தைப் பத்தி உங்களுக்கு ஒண்ணுமே ஞாபகத்துக்கு வர்றலியா?''

''இல்லை!'' தலையசைத்தார், புருஷோத்தமன்.

''உங்க கொள்ளுத்தாத்தா ஸ்ரீவத்ஸாங்கம் கிட்டே நம்பாடுவான் உங்களுக்கு ஆபத்து இருக்குனு சொன்னது, நீங்க பிரசிடென்சி காலேஜ்ல படிச்சது, ஜ்யோத்ஸனாவை கல்யாணம் பண்ணிண்டது, உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. எதுவுமே உங்களுக்கு நினைவுல இல்லையா?''

''எனக்கு எதுவுமே தெரியாது!'' கிணற்றுக்குள்ளிருந்து ஒலிப்பது போல அவர் குரல் கேட்டது.

''இப்பவாவது தெரிஞ்சுக்கோங்கோ!'' அமுதன் தன்னை மறந்து பேசினான். ''உங்க மனைவி ஜ்யோத்ஸனா சென்னையில தான் இருக்கா! நான்தான் உங்களுக்கு பிறந்த பிள்ளை, ஆராவமுதன்! வரதன் மாமா ஆத்துலதான் அம்மா இருக்கா!''

''ஜ்யோத்ஸனா வெள்ளைக்காரனோட ஓடிப் போயிட்டா!'' புருஷோத்தமன் குரலில் பதட்டம் நிலவியது.

''அப்படினு சொல்லி உங்களை வசியம் பண்ணி வச்சிருக்கா, ம்ருகா! உண்மையில நீங்க நினைக்கிற மாதிரி எதுவுமே நடக்கலை! ரூபர்ட் சீமர்ங்கிற

வெள்ளைக்காரர் பாம்பு கடிச்சு, உயிருக்கு போராடிண்டு இருந்தார். அவரை காப்பாத்ததான் அம்மாவை சிப்பாய்ங்க அழைச்சுண்டு போனா! உங்களை தன் வசப்படத்தறதுக்காக, ம்ருகா பொய் சொல்லியிருக்கா!''

அவனை வெறித்துப் பார்த்த புருஷோத்தமன், சடாரென்று எழுந்து அறையை விட்டு வெளியேறினார்.

''தப்பு பண்ணிட்டீங்க அமுதன்!'' அருகில் ஒலித்த குரலைக் கேட்டு, திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான் அமுதன்.

யக்ஞமூர்த்தி தன் சால்வையை இழுத்துப் போர்த்திய படி நின்றிருந்தார்.

''புருஷோத்தமன் இப்போ எதையும் புரிஞ்சுக்கிற நிலைமையில இல்லை. இப்ப அவன் முழுக்க ம்ருகாவோட கட்டுப்பாட்டுல தான் இருக்கான். நீங்க பேசினதை எல்லாம் அட்சரம் பிசகாம நேரா ம்ருகா கிட்டே போய் ஒப்பிக்க போறான்! உண்மைய தெரிஞ்சுண்ட அடுத்த நிமிஷம் உங்களுக்கு ஆபத்து காத்துண்டு இருக்கு!'' கவலையுடன் அமுதனைப் பார்த்தார் யக்ஞம்.

''அங்கிள்! என் அப்பாவோட நிலைமையை பார்க்க சகிக்கலை! அதுதான் அவசரப்பட்டுட்டேன்'' வேதனையில் அவன் முகம் சூம்பியது.

''அமுதன்! தயவு செய்து நான் சொல்றதை கேளுங்க! இனியும் நீங்க இந்த வீட்டுல இருக்க வேண்டாம்! உங்களை ம்ருகா கொலை செஞ்சாக் கூட பரவா யில்லைனு சொல்லலாம்! ஆனா நந்தனா உங்களை

ஆசைப்படறதால, உங்களையும் வசப்படுத்தி எங்களை மாதிரி நடைபிணமா ஆக்கிடுவா! அந்த நிலையை விட சாகறதே மேல்!

''ப்ளீஸ்! உடனே இங்கேயிருந்து கிளம்பி போங்க! இல்லேனா அப்பாவும் பிள்ளையும் காலம்பூரா அவளுக்கு அடிமையா கிடப்பீங்க!'' யக்ஞம் எச்சரித்தார்.

''அது நடக்காது, அங்கிள்! உங்க மனைவியோட பாச்சா என்கிட்டே பலிக்காது! என் அப்பா இல்லாம நான் இந்த வீட்டை விட்டு கிளம்ப போறதில்லை!''

''ரொம்ப கஷ்டமான காரியம், அமுதன். புருஷோத்தமன் அவளுக்கு தன்மான பிரச்சனை. அவளை இழக்கிறதைவிட தன் உயிரை கூட அவ இழப்பா...''

''ம்ருகா உயிர் பத்தி எனக்கு கவலை இல்லை! எனக்கு தேவை என் அப்பாதான்!''

''நான் சொல்றதை நீங்க புரிஞ்சுக்கலை அமுதன். நான் உயிர்னு சொல்லச்சே அதுல இரண்டு உயிர் அடங்கி யிருக்கு! புருஷோத்தமனை இழக்கறதைவிட தன் உயிரை விட சித்தமா இருப்பா! ஆனா தன் உயிர் விடறதுக்கு முன்னாடி அவன் கதையை முடிப்பா! நீங்கள் இவ்வளவு காலம் பட்ட சிரமம் எல்லாமே வீணாயிடும்.''

அமுதன் துணுக்குற்றான்.

''என்ன சொல்றீங்க?''

''உங்கப்பாவை கொலை செய்துடுவான்னு சொல்றேன்...''

அமுதன், உறைந்து போனான்.

''இதுவரை அவள் என் அப்பாவை எப்படி கொல்லாம இருக்கா?''

''அதுதான் எனக்கு ஆச்சரியமா இருக்கு! அவன் மேல் அவ கொண்டிருக்கிற துவேஷத்துக்கு, எப்பவோ அவனை தீர்த்து கட்டியிருக்கணும்!

''பாம்பு இரைய சாப்பிடற அழகை பாத்திருக்கிங்களா, அமுதன்! பாம்பு கூண்டுக்குள்ளே எலியை போடுவாங்க. எலி பயந்துகிட்டு சுத்தி சுத்தி ஓடி, களைச்சு போய் டமால்னு விழும். அதுவரைக்கும் நகராம இருக்கிற பாம்பு, அப்புறமாதான் எலியை விழுங்கும்! அது போல ம்ருகா எதுக்காகவோ புருஷோத்தமனை கொல்லாம விட்டு வச்சிருக்கா! ஆனா நிச்சயம் அவனை கொல்லாம விடமாட்டாள்! அவனைக் கொல்லணும்னு ஒரு உத்வேகம் அவகிட்டே இருக்கிறது எனக்கு தெரியும்! ஆனா ஏதோ ஒரு சக்தி இதுவரைக்கும் புருஷோத்தமனை காப்பாத்திண்டு வர்றது''

''எனக்கு அதுதான் புரியலை, அங்கிள். எத்தனையோ தடவை ம்ருகாவுக்கு என் அப்பாவை கொல்ல வாய்ப்பு கிடைச்சிருந்தும் அவள் ஏன் அவரை கொல்லலை?'' யோசித்தபடி கூறினான்.

''இப்ப யோசிக்க நேரமில்லை, அமுதன்! அந்த காரணத்தை கண்டுபிடிச்சா ஒருவேளை உங்களால

புருஷோத்தமனை காப்பாத்த முடியும்னு நினைக்கிறேன். ஆனால் நீங்க உடனே செய்ய வேண்டியது. இங்கே இருந்து கிளம்பி போறதுதான்...'' யக்ஞும் அவசரப் படுத்தினார்.

''எனக்கு பயமில்லை அங்கிள்! ம்ருகா வரட்டும்! நான் நேருக்கு நேர் மோதறேன்!'' அமுதன் கொந்தளித்தான்.

''தப்பு பண்றீங்க! ம்ருகா நம்மை மீறிய சக்தியை வச்சுண்டு விளையாடறா! நம்மால அந்த சக்தியை எதிர்க்க முடியாது! நீங்க மதியால தான் சதியை வெல்லணும்! இங்கே இருந்தா உங்க மதியை அவ ஈசியா மயக்கிடுவா! நான் உங்க உயிரை காப்பாத்தறதுக் காக உங்களை போக சொல்லலை! உங்க மதியை காப்பாத்திக்க தான் போக சொல்றேன்...'' யக்ஞும் கெஞ்சினார். அமுதன் வேறுவழியின்றி எழுந்தான்.

''என் ஸ்டுடண்ட் நந்தனாவோட போயிருக்காளே!''

''நான் மாடில்டாவை பத்திரமா அனுப்பி வைக்கிறேன்! நீங்க முதலுல இங்கேயிருந்து கிளம்புங்க! அவ வந்து உங்களை வசியம் பண்றதுக்குள்ளே, நீங்க எல்லையை தாண்டிடணும்!...''

''மாடில்டாவை ஸ்டேஷனுக்கு வரச் சொல்லுங்க, அங்கிள்! நான் அங்கே காத்துண்டு இருக்கேன்!'' அமுதன் அவசரமாக தனது லக்கேஜ்களை திரட்டினான்.

யக்ஞும் கார் சாவியை நீட்டினார். ''அமுதன்! இது என்னோட ஃபியட்டோட சாவி! அதை ஓட்டிண்டு போங்க! நான் அப்புறமா சவுண்டப்பனை விட்டு எடுத்துக்கறேன்..!''

சாவியைப் பெற்றுக் கொண்டு அமுதன் கிளம்பினான்.

நடு இரவு

அமுதன் மலைச்சாலையில் எச்சரிக்கையுடன் காரை ஓட்டினான்.

‘‘சை! போயும் போயும் ஒரு பெண்ணுக்கு பயந்து கிளம்புகிறோமே! அப்பாவின் நிலைமை அறியாமல் அவரிடம் பேசியிருக்க கூடாதுதான்! இப்போது நான் யார் என்பது ம்ருகாவுக்கு தெரிந்துவிடும்! ஒரு வேளை அப்பாவுடன் வேறே எங்கேயாவது கண் காணாமல் சென்று விட்டால் என்ன செய்வது! அவசரப்பட்டு விட்டோம்! தன்னையே நொந்தபடி காரை ஓட்டினான்.

சற்றுத்தொலைவில்

சாலையின் குறுக்காக ஒரு பெண் நடந்துக் கொண்டிருந்தாள்.

நான்கைந்து முறை, ஹாரனை அழுத்தியும் அவள் தன் வழியே போய்க் கொண்டிருந்தாள். திரும்பிப் பார்க்கவும் இல்லை! இவனுக்கு வழி கொடுக்கவும் இல்லை!

எரிச்சலுடன் அந்த பெண்ணை இடிப்பது போல சென்று காரை நிறுத்தினான். அவளை நோக்கி ஆத்திரத்துடன் கத்த நினைத்தவன், அதிர்ந்தான்.

மாடில்டாதான் பிரமை பிடித்தவளாக அந்த சாலையில் நடந்துக் கொண்டிருந்தாள். அவசரமாக காரை விட்டு இறங்கியவன், அவளை நோக்கி ஓடினான்.

‘‘மாடில்டா! எங்கே போறே?’’

பதில் சொல்லாமல் அவள் போய்க் கொண்டே இருந்தாள்.

"எங்கே போறே?" அவள் தோள்களைப் பிடித்து அமுதன் உலுக்கினான்.

"அதோ... அந்த மலையுச்சிக்கு!"

"எதுக்கு?"

"அங்கேயிருந்து கீழே குதிச்சா, ஆனந்தமா இருக்கும்னு ம்ருகா சொன்னா! அதுதான் ஆனந்தத்தை தேடிப்போறேன்..."

மாடில்டாவின் கண்களை மலையுச்சியின் மீது நிலைகுத்தி நிற்க, அவளால் அமுதனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

'என்ன விபரீதம் இது!' அவள் நெற்றியில் வட்டமாய் கருஞ்சாந்து பொட்டு வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தான் அமுதன்.

"மாட்! உன்னையும் ம்ருகா வசியம் செஞ்சிருக்கா! என்னோட வா!" அவளைப் பிடித்து இழுத்தான்.

"நோ... நோ! நான் அந்த மலை உச்சிக்கு போய் ஆனந்தத்தை தேடப் போறேன்!"

"முடியாது! என்னோட் வா!" அமுதன் அவளை அலாக்காக தூக்க முயன்றான். அவள் மூர்க்கமாக போராடி திமிறிக் கொண்டு ஓட, அமுதன் அவளை விரட்டிக் கொண்டு போனான். அவள் தொடர்ந்து ஓட

முடியாதபடி, தன் நீண்ட காலால் அவள் பாதத்தை நோக்கி ஒரு உதை விட்டான்.

மாட் தலைக்குப்புற விழுந்தாள். அங்கிருந்த பாறை அவள் நெற்றியைப் பதம் பார்க்க, இரத்தம் பீறிட்டது மாட் மயங்கி போனாள்.

"மாட்! மாட்!" கீழே கிடந்தவளை எழுப்ப முயன்றான். அவள் மூர்ச்சித்து போனதை உணர்ந்து, இரு கைகளில் அவளை வாரி எடுத்து சுமந்தபடி காரை நோக்கி நடந்தான்.

வரும் வழியில் ஒரு ஆஸ்பத்திரியை பார்த்தது நினைவுக்கு வந்தது.

காரைத் திருப்பியவன் அந்த ஆஸ்பத்திரியை நோக்கி சென்றான்! கார் ஹார்னை அடிக்க, கூர்க்கா ஒருவன் வந்து கேட்டை திறந்தான்.

ஆஸ்பத்திரியின் போர்ட்டிக்கோவில் காரை நிறுத்தினான். ரிசப்ஷனில் இருந்த இரண்டு நர்ஸ்கள் ஓடோடி வந்தனர்.

"கீழே விழுந்து அடிபட்டுடுத்து! மயக்க நிலையில இருக்காங்க!" அமுதன் மாட்டை மீண்டும் சுமந்தபடி உள்ளே செல்ல, அவளை அங்கிருந்த அறையில் இருந்த கட்டிலில் கிடத்த சொன்னார்கள். இதற்குள் மற்றொரு நர்ஸ் டாக்டரை அழைத்து வந்தாள்.

டாக்டர் இரவு உடையில் இருந்தார். 'ஐ யாம் டாக்டர் அப்ரகாம் த்ரங்குலாஸ்" தலையசைத்தபடி வந்தவர், மாடில்டாவைப் பார்த்து புருவத்தை உயர்த்தினார்.

''ஃபாரின் டூரிஸ்டா?''

''என் ஸ்டூடண்ட் டாக்டர்! ஒரு டாகுமெண்டரி படம் எடுக்க ஊட்டி வந்தோம்! வந்த இடத்துல சின்ன ஆக்சிடெண்ட்!''

''மாடில்டாவின் காயத்தை ஆராய்ந்தார் டாக்டர். ''ஆழமா' வெட்டியிருக்கு! தையல் போடணும்!'' என்றார்.

''சாரி! உங்களுக்கு நடுராத்திரில தொந்திரவு கொடுத்துட்டேன்!'' அமுதன் சொல்ல, சிரித்தார்.

''தொந்திரவு வேணும்னுதான் நான் டாக்டருக்கு படிச்சேன்'' என்றவர் நர்ஸை அழைத்தார்.

''க்ளோரி! காயத்தை கழுவு!'' என்றதும், அந்த நர்ஸ் அமுதனைப் பார்த்தாள்!

''நீங்க அடுத்த ரூம்ல போய் உட்காருங்க! நான் கூப்பிடறேன்!'' என்று சொல்ல, அமுதன் அவள் காட்டிய அறைக்குள் சென்று உட்கார்ந்தான்.

அமுதன் அறையைச் சுற்றி நோட்டம் விட்டான். மேஜை மீது அழகாக பிளாஸ்டிக் ட்யூப்களில் இரத்த சாம்பிள்கள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. மேலே இருந்த குறிப்பைப் படித்தான்.

'டிசம்பர் 12, 1967 அன்று இரத்த தானம் செய்தவர்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பட்டியலில் இருந்த பெயர்களைப் படித்தான்.

டாக்டர் அப்ரஹாம் த்ரங்குலாஸ் என்று முதல் பெயராக டாக்டரின் பெயரே இருந்தது. அடுத்த பெயரை படித்தவனின் கண்கள் நிலைகுத்தி நின்றன.

பட்டியலில் இரண்டாவதாக ஒய். ம்ருகநயனாளி என்கிற பெயர் காணப்பட்டது. அடுத்ததாக ஒய். நந்தனா என்கிற பெயரும் இருந்தது.

உச்சி முதல் உள்ளங்கால்வரை ஒரு இனம்புரியாத உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. காலையில் தானும், ம்ருகாவும் இரத்த தான முகாம் ஒன்றுக்கு போகப் போவதாக நந்தனா கூறியிருந்தது நினைவுக்கு வந்தது.

ஆக

இந்த ட்யூப்களில் ஒன்றில் ம்ருகாவின் இரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளது.

வசியம் வைத்தவர்களின் ஒரு சொட்டு இரத்தத்தை எடுத்து, அதில் பூபதி குளிகையை குழைத்து திலகமாக வசியம் செய்யப்பட்டவர்களின் நெற்றியில் தீட்டினால், இட்சிணி வசியம் முறிந்துவிடும் என்று நம்பாடுவான் சொன்னாரே!

தனக்கு ஒரு வழி பிறந்திருப்பதாக அமுதன் நினைத் தான். எப்படியாவது ம்ருகாவின் இரத்தத்தை கைப்பற்ற வேண்டும். அவள் இரத்தம் உள்ள ட்யூபை எப்படி கண்டுபிடிப்பது?

நர்ஸ் க்ளோரி உள்ளே வந்து, எதோ இன்ஜெக்சன் மருந்தை தேடி எடுத்தாள்.

"சிஸ்டர்! நான் கூட ப்ளட் டொனேட் செய்ய ஆசைப் படறேன். என்னால காலைல வர முடியலை! நான் மிஸஸ் ம்ருகநயனானியோட விருந்தாளிதான்! இப்போ இரத்தம் கொடுக்கலாமா?"

அமுதன் வலை விரித்தான்.

"டாக்டரைதான் கேட்கணும்?" நர்ஸ் சொன்னாள்.

"சிஸ்டர்! டாக்டரே பிளட் கொடுத்து இருக்கார் போல இருக்கே! க்ரேட்!"

"நான் கூட கொடுத்திருக்கேன்!" தானம் செய்தவர்கள் பட்டியலில், நந்தனாவுக்கு அடுத்தபடியாக இருந்த தன் பெயரை சுட்டிக்காட்டினாள் நர்ஸ்.

'க்ளோரி மின்ட்டோ' என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

"ஹவ் க்ரேட்! நர்ஸ் வேலையே பெரிய தியாகம்தான்! ரத்தம் வேற தானம் பண்ணியிருக்கிங்களே..." போலியாக சிரித்தான்.

உச்சி குளிர்ந்து போனது நர்ஸ்சுக்கு

"சிஸ்டர்! உங்க பிளட் இருக்கிற ட்யூபை காட்டுங்க! அதற்கு சல்யூட் செய்யணும்!"

அமுதன் கேட்க வரிசையில் நான்காவதாக இருந்த ட்யூபை எடுத்துக் காட்டினாள், நர்ஸ் கிளோரி.

தனது இருவிரல்களால் அந்த ட்யூபை நோக்கி ஒரு சல்யூட் வைத்தான்.

"டாக்டரோட ட்யூப் எது சிஸ்டர்?"

*நர்ஸ் முதல் ட்யூபை காட்ட, அதற்கும் ஒரு சல்யூட் வைத்தான்.*

*"அப்போ இரண்டாவதா இருக்கிறதுதான் மிஸஸ் ம்ருகநயனானியோட இரத்தம் இல்லையா?"*

*"ஆமாம்?" நர்ஸ் சிரித்தாள்.*

*"அதுக்கும் ஒரு சல்யூட் வச்சுடறேன்!" அமுதன் சல்யூட் செய்ய, அவனை பார்த்து சிரித்தபடி நர்ஸ் அகன்றாள். உடனே செயலில் இறங்கினான் அமுதன்.*

*இரண்டாவதாக இருந்த ம்ருகநயனானியின் இரத்தத்தை சேகரித்து வைத்திருந்த அந்த ட்யூபை தனது பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்தான்.*

*சற்றுத்தள்ளி பெயர் சொல்ல விரும்பாத இரத்த தானம் செய்தவர்களின் (Unknown donors) சாம்பிள்கள் ட்யூப்களில் வரிசைப்படுத்தப்பட்டு இருந்தன.*

*அவற்றில் இருந்து ஒன்றை எடுத்து, ம்ருக நயனானியின் ட்யூப் இருந்த இடத்தில் வைத்தான்.*

# 40. தப்பிபிழைத்தாள்

## 1967 - கோயமுத்தூர் ஹோட்டல் அறை

**மா**டில்டா கண்விழித்தாள்.

தலையை உயர்த்தி சுற்றுமுற்றும் பார்த்தவள், மலங்க மலங்க விழித்தாள்.

''வேர் ஆம் ஐ?'' சற்று தொலைவில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த யாரையோ கேட்டாள். பேப்பரைத் தாழ்த்தி, முகத்தை மட்டும் வெளிநீட்டினான் அமுதன்.

''அப்பாடி! கண் விழிச்சுட்டியா?'' பேப்பரை மடித்து வைத்தபடி எழுந்து அவளை நோக்கி வந்தான்.

''எனக்கு என்ன ஆச்சு?''

''நான் காரை ஓட்டிண்டு வந்துட்டு இருந்தேன்! நீ மலையுச்சிக்கு போய் தற்கொலை செஞ்சுக்க போயிட்டு இருந்தே! உன்னை காப்பாத்தி இங்கே அழைச்சுண்டு வந்தேன்...''

குழப்பத்துடன் தன் தலையில் கை வைத்த மாடில்டா, நெற்றியில் போடப்பட்டிருந்த பாண்டேஜை தொட்டுப் பார்த்தாள்.

''இது என்ன?''

''உனக்கு அடிப்பட்டு தையல் போட்டிருக்கு! உனக்கு எதுவுமே தெரியலை! உன்னை காப்பாத்தறதுக்கு நான் பட்டபாடு! எனக்கு ஆயிரம் ஜாக்கிரதை சொல்லிட்டு, நீ போய் எப்படி ம்ருகா வலையில மாட்டினே...?''

கிண்டலடித்தான் அமுதன்.

மாடில்டா யோசித்தாள்.

''எனக்கே புரியலை புரொபஸர். ஒரு மலைஜாதி பொண்ணு மலர் மாலை கொண்டு வந்து ம்ருகா கிட்டே கொடுத்தா. நந்தனா அவங்களோட டான்ஸ் ஆடிட்டு இருந்தா. என் கழுத்தில ம்ருகா மாலை போட்டா! அவ்வளவுதான் எனக்கு தெரியும்! பட்டுனு என் மைண்ட்ல ஏதோ அறுந்தாப்பல உணர்ச்சி!''

மாடில்டா குழம்பினாள்.

''எப்படியோ நல்லபடியா மீண்டு வந்துட்டே! யூ நோ மாட்! நான் யாருங்கிறது இந்நேரம் ம்ருகாவுக்கு தெரிஞ்சு இருக்கும்..''

திகைப்புடன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள் மாட்.

''புரொபஸர்! இப்ப என்ன செய்யறது?''

''பேசாம... நாம ரெண்டு பேரும் ரயில் ஏறி சென்னைக்கு போவோம்? அங்கே போய் முடிவு எடுக்கலாம்.''

அமுதன் சொன்னான்.

# 41. தனிமையிலே இனிமை

## 1967 - வுட் பெக்கர் எஸ்டேட்

அமுதன் கிளம்பி போனதும், தனது அறைக்குள் முடங்கிக் கொண்டார் யக்ஞும். வரும்போதே எரிமலை, பிரளயம், பூகம்பம் சூறாவளி காற்று என்று இயற்கையின் உக்கிரங்களை தன்னுள் வைத்திருக்கும் ம்ருகா, பொங்கியபடி வருவாள்.

அமுதனை காணாமல் அவளது ஆத்திரம் இன்னும் அதிகமாகும். தனக்கு ஒன்றுமே தெரியாது என்கிற பாவனையில் படுக்கையில் கிடந்தால்தான் அவள் கோபத்தில் இருந்து தான் தப்ப முடியும் என்கிற நினைப்பில் படுக்கையில் கிடந்தார். அவர் செவிகள் மட்டும் பங்களாவிற்கு வெளியே கேட்கும் ஒவ்வொரு ஒலியையும் உன்னிப்பாக கவனித்தது.

அதோ... ம்ருகாவின் கார் வரும் ஒலி. பதற்றத்துடன் யக்ஞும் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டார்.

திடீரென்று

டமால் என்கிற ஒலி! ஹாலில் மாட்டியிருந்த சாண்ட்லர் பொலபொலவென்று உதிர்ந்து விழுந்தது.

அதற்குமேலும் படுக்கையில் கிடந்தால் ம்ருகாவுக்கு சந்தேகம் வரும்! தள்ளாடியபடியே சோர்வுடன் தனது அறைக்கதவை திறந்து வெளியே வந்தார், யக்ஞும். ம்ருகா கோர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தாள். 'அமுதன்' அவள் குரல் அந்த பங்களா முழுவதும் எதிரொலித்தது.

''அவர் அப்பவே கிளம்பிட்டாரே!'' மெதுவாக சொன்னார் யக்ஞும்.

''ஓடிப்போயிட்டானா... கோழை! என்ன தைரியம் இருந்தா என் வீட்டுக்குள்ளே வந்து புருஷ்ஷோட மனசை குழப்ப பார்ப்பான்... அவன் மட்டும் என் கையில கிடைச்சான்...'' ம்ருகா பல்லைக் கடிக்க, அவளது அழகிய முகம் கோரமாக மாறுவதை கண்டு, உள்ளுக்குள் நடுநடுங்கினாள், நந்தனா.

''புருஷ்! உன் பிள்ளை வந்து உன்னை கூப்பிட்டா நீ போயிடுவியா என்ன...?'' ம்ருகா கர்ஜித்தாள்.

பீதியுடன் அவளைப் பார்த்தார், புருஷோத்தமன். ''நான் போகமாட்டேன், ம்ருகா!''

''நிஜமா!''

''நிஜமா... உன்னை விட்டு போகமாட்டேன், ம்ருகா...''

நந்தனாவுக்கு அதற்கு மேல் பொறுக்கவில்லை ''மம்மி! நீ செய்யறது தப்பு! அங்கிள் இன்னொருத்தியோட கணவர்! அவரை அவர் குடும்பத்துல இருந்து பிரிக்கிறது பாவம்!''

அவளை குரோதத்துடன் பார்த்தாள் ம்ருகா!

''ஷட் அப்! என்னோட எதிரி அந்த ஜ்யோத்ஸனாவும், அவ வயத்துல பொறந்த அந்த நாய் அமுதனும். நான் காதலிச்சவனை ஏமாத்தி கல்யாணம் பண்ணின்டா அவ! அவளுக்கு பொறந்தவனை போய் நீ லவ் பண்ணி யிருக்கே! எவ்வளவு பெரிய குற்றம் நீ பண்ணி யிருக்கேனு முதலுல நீ புரிஞ்சுக்கோ!''

புருஷோத்தமன் தலை குனிந்து நிற்க, நந்தனா, பைத்தியம் பிடித்தவளைப் போல் கத்தும் தாயை கண்டு பயத்துடன் பின்வாங்கினாள்.

அவள் மீது ம்ருகா பாய்வதை கண்ட யக்ஞும், அந்த கோபத்தை தன் மீது திருப்பி கொண்டார்.

''ம்ருகா! கொஞ்சம் நான் சொல்றதை கேளு! கோபத்தை விட்டுட்டு யோசிச்சா உனக்கே நியாயம் புரியும்! அமுதன் புருஷோத்தமனோட பையன்! அவன் தன் அப்பா அம்மாவை ஒண்ணு சேர்க்கணும்னு ஆசைப்படறான்! நியாயமான ஆசைதானே!

''நடந்தது எல்லாம் நடந்து போச்சு! இனிமேலாவது நல்லபடியா வாழலாமே, ம்ருகா! நந்தனா ஆசைப்படற மாதிரி அவளை அமுதனுக்கு கல்யாணம் பண்ணி கொடுத்திடு. அவங்க குடும்பத்துக்கு நீ செஞ்ச கெடுதல்களை எல்லாம் மறந்துடுவா! புருஷோத்தமனும் ஜ்யோத்ஸனாவும் நம்ம சம்பந்தியா ஆகிடுவாங்க! நாமெல்லாம் ஒரே குடும்பமா இந்த எஸ்டேட்டுலேயே இருக்கலாம்...! என்ன சொல்றே?''

நயமாக யக்ஞும் கூறிய வார்த்தைகளில் இருந்த நியாயம், நந்தனாவுக்கும் நம்பிக்கையும், தெம்பும் ஊட்ட ம்ருகா அதற்கு என்ன பதில் சொல்கிறாள் என்பதை கவனித்தாள் நந்தனா!

''இடியட்!'' ஒரே வார்த்தையில், அவளது அந்த நம்பிக்கையை பஞ்சர் செய்தாள் ம்ருகா!

''நீயே இந்த வீட்டுல எக்ஸ்ட்ரா லக்கேஜ்! ஜ்யோத்ஸனாவை இங்கே கொண்டு வந்து வச்சுக்கலாம்னு எந்த தைரியத்துல சொல்றே? உனக்கு 'லங்க்ஸ்'லதானே கேன்சர்? இல்லை மூளைக்கும் பரவிடுத்தா...? என்ன ஐடியா கொடுக்கிறே?

''எல்லாரும் கேட்டுக்கோங்கோ! என் உலகமே புருஷோத்தமன் தான்! வேற யாரை பத்தியும் எனக்கு கவலை இல்லை. புருஷோத்தமனுக்கும் எனக்கும் இடையே யாரும் வரக்கூடாது! வரவும் முடியாது!

''நந்தனா! அமுதனை மறந்துடு! நான் சொல்லுற கோவை பையனை கல்யாணம் பண்ணிட்டு, நீ அங்கேயே இருக்கியோ இல்லை ஃபாரின் போறியோ உன் இஷ்டம்! உன் கல்யாணம் முடிஞ்ச கையோட உனக்கு பை பை! நான் புருஷோத்தமனோட என் வழியே போறேன்!

''யக்ஞும்! உன் வளர்ப்பு அம்மா, அந்த மாயக்காரி ஆதிரா என்னை மயக்கி உனக்கு பலவந்தமா கல்யாணம் பண்ணி வச்சுட்டா! வேற வழியில்லாமதான் உன்னை என் புருஷோத்தமனா நினைச்சுண்டு உன் கூட குடித்தனம் பண்ணினேன்! உன்னை நான் ஆரம்பத்தி

லேர்ந்து வெறுக்கிறேன்! ஏதோ நந்தனாவுக்காக தான் உன்னை பொறுத்துண்டு போறேன்... என் வழியில நீ குறுக்கிடாம இருக்கிற வரைக்கும் தான் இந்த வீட்டுல உனக்கும் இடம்...'' ம்ருகா நெருப்பென வார்த்தைகளை உமிழ்ந்தாள்.

''தெரியும்! நீ என்ன செய்வேணு எனக்கு தெரியும் ம்ருகா! என் அம்மா ஆதிரா அந்தர்ஜனத்தை இல்லாம பண்ணின மாதிரி, என்னையும் நீ ஒரு நாளைக்கு இல்லாம பண்ணிடுவே! நான் சாவுக்கு பயப்படலை! உன் புருஷனா உன்கிட்டே இங்கே அசிங்கப்படறதை விட, உன்னால அலைக்கழிப்பட்ட அந்த அமுதன் குடும்பத்துக்கு போய் வேலைக்காரனாக இருக்க லாம்...!'' யக்ஞும் பொறுமை இழந்தார்.

''போயேன்! இப்பவே கிளம்பிப் போ! புருஷோத் தமன் எனக்கு வேலைக்காரன். நீ போய் ஜ்யோத ஸனாவுக்கு வேலைக்காரனா இரு... இந்த நந்தனா... போய் அமுதனுக்கு வேலைக்காரியா இருக்கட்டும்!''

இடிஇடியென சிரிக்க ஆரம்பித்தாள் ம்ருகா! நந்தனா அருவருப்புடன் தன் காதுகளை முடிக்கொண்டாள்.

''நந்தனா என்னோட வந்துடும்மா! இனிமே இந்த சூன்யகாரியோட நீ இருக்க வேண்டாம்! கிளம்பு!'' யக்ஞும் நந்தனாவை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தார்.

ம்ருகா அவர்கள் இருவருக்கும் இடையே குறுக்காக வந்து நின்றவள், அவரை குரோதத்தோடு பார்த்தாள்.

''அவளை எங்கே கூப்பிடறே! போ...! கேன்சர் எப்படியும் உன் உயிரை குடிச்சுண்டு இருக்கு! இன்னும் ஒரு மாசமோ... ரெண்டு மாசமோ! நடுதெருவுல அனாதை பொணமா நீ கிடக்க போறே! அவளை கூப்பிடாதே!'' ம்ருகா உறுமினாள்.

நந்தனா கண்ணீரோடு வெடித்தாள். ''அம்மா! அப்பாவை நீ இப்படி பேசறதை நான் அனுமதிக்க மாட்டேன்! என்ன இருந்தாலும், அவர் என் அப்பா!''

அழுதுவிட்ட நந்தனாவை, இகழ்ச்சியுடன் பார்த்தாள் ம்ருகா.

''என் வாழ்க்கையை சீரழிச்சது இந்த ஆளு! நான் புருஷ்ஷோட வாழணும்னு எவ்வளவு ஆசை ஆசையா இருந்தேன். என் வாழ்க்கையை இவங்க எல்லாரும் சேர்ந்து கெடுத்திட்டா. ஆதிரா அந்தர்ஜனம், என் அப்பா வாகீசன், அம்மா சாரதா, வனஜா, இந்த யக்ஞும் எல்லோரும் இந்த சதியில ஈடுபட்டவங்கதான்! அதனால தான் அவங்களுக்கு தண்டனை கிடைச்சது.'' ம்ருகா உதட்டை கடித்தாள்.

யக்ஞும் குமுறினார்.

''நீ உண்மையிலேயே ஒரு பொண்ணா, அரக்கியா? உன் அப்பா அம்மாவை நீ ஆசையா ஊட்டிக்கு வரவழைச்சப்போதே நான் சந்தேகப்பட்டேன்! அவங்க வந்த கார் மலைச்சரிவுல உருண்டு விழுந்து இரண்டு பேரும் செத்துப்போனதுக்கு யார் காரணம்?

யக்ஞும் கேட்க நந்தனா நெஞ்சம் பிளந்தது. தாத்தா பாட்டி மரணத்தில் அம்மாவுக்கு பங்கு இருக்கிறதா என்ன?

யக்ஞும் தொடர்ந்தார்.

''என் வளர்ப்பு அம்மா திடீர்னு காணாம போனது யாரால? அவளோட சொத்து விவரம் குறித்த பட்டயம் உன்னோட லாக்கர்ல இருக்கே. அதுக்கு என்ன அர்த்தம்?

''கடைசியா எனக்கு கேன்சர் எதனால வந்தது? என் சாப்பாட்டுல நீ எதை கலந்து கொடுத்தே?''

''இந்த கேள்விக்கெல்லாம் நீ பதில் சொல்ல மாட்டேன்னு எனக்கு தெரியும்! நீ மனுஷியா இருந்தா பதில் சொல்லுவே! நீ மிருகம்தானே!'' யக்ஞும் கத்தினார்.

அவரை எரித்து விடுபவளைப் போல பார்த்தாள் ம்ருகா.

''புருஷ்! இந்த உருப்படாதவனை கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளு! இனிமே இவன் இங்கே இருக்க கூடாது!''

ம்ருகா கட்டளையிட, புருஷோத்தமன் யக்ஞுத்தை நோக்கி நடந்தார்.

''அங்கிள்! அப்பாவை வெளியில தள்ளாதீங்க எனக்கு அவர் வேணும்!'' புருஷோத்தமனை தடுக்க முயன்றாள் நந்தனா.

''உனக்கு அவர் வேணுமா... நான் வேணுமா.. முடிவு செய்...'' ம்ருகா அவளைப் பார்த்து கர்ஜித்தாள்.

நந்தனா யக்ஞத்தின் அருகே போய் நின்றாள்.

''அப்போ புருஷ்! ரெண்டு பேரையும் கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளு!'' ம்ருகா உத்தவிட்டாள்.

ஒரு கையால் யக்ஞத்தையும், மறு கையால் நந்தனாவின் புஜத்தையும் பற்றிய புருஷோத்தமன் அவர்களை பலவந்தமாக தள்ளிக் கொண்டு, மாளிகை வெளியே தள்ளினார்.

''புருஷ்! கதவை சாத்திட்டு மேலே வா! இனிமே இந்த சாம்ராஜ்யத்துல நாம ரெண்டு பேரும்தான்!'' புளகாங்கிதத்துடன் சொன்னபடி, மாடி ஏற ஆரம்பித்தாள், ம்ருகா.

கீழே விழுந்த யக்ஞத்தை அழுதபடி தூக்கி நிறுத்த முயற்சி செய்து கொண்டிருந்தாள், நந்தனா!

''ஐ யாம் சாரி, ரெட் ரோஸ்!'' சிறு முணுமுணுப்பாக சொல்லிவிட்டு, புருஷோத்தமன் கதவை மூடிக் கொண்டு உள்ளே செல்ல, மூடிய கதவை மலைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர் இருவரும்.

''தான் செய்யறது தப்புனு புருஷோத்தமனுக்கு தெரியுது போல இருக்கே...?'' யக்ஞம் நந்தனாவிடம் சொன்னார்.

''இப்போ அமுதன் முயற்சி பண்ணினா ஒரு வேளை உன் மாமனாரை அவனால மீட்க முடியும்...'' யக்ஞம் சொல்ல, அவர் தோளில் கண்ணீருடன் சாய்ந்தாள் நந்தனா.

# 42. ஆதரவு கிடைத்தது

## 1967 - கோவை இரயில் நிலையம்

**மா**டில்டாவும் அமுதனும் இரயில் நிலையம் வந்து சேர்ந்தார்கள். ''மாட்! நான் போய் ஏதாவது புத்தகம் வாங்கிண்டு வரேன்! போர் அடிக்குது!'' என்றபடி புத்தக ஸ்டாலை நோக்கி நடந்தான்.

ஒரு இடத்தில் சிலர் கூட்டமாக நின்றிருக்க, நடுவில் ஒரு பெண் கதறி அழுதுக் கொண்டிருந்தது கேட்டது.

அமுதன் உள்ளே எட்டிப்பார்த்தான்

நந்தனாதான் தேம்பி தேம்பி அழுதுக் கொண்டிருந்தாள். அவள் மடியில் தலை வைத்தபடி கிடந்த யக்ஞும் அவ்வப்போது தலையை உயர்த்தி வாந்தி எடுக்க, வாயிலிருந்து இரத்தமாக கொட்டியது.

''நந்தனா!'' அமுதன் பாய்ந்து சென்று யக்ஞத்தை பிடித்துக்கொண்டான்.

அவனை பார்த்த சந்தோஷத்தில் நந்தனாவின் அழுகை அதிகரித்தது.

யக்ஞத்தை இரு கைகளில் ஏந்திக் கொண்டவன் மாடில்டாவை அழைத்தான்.

''மாட்!''

மாடில்டா! ஓடி வந்தாள். நிலைமையை ஒருவாறு யுகித்து, நந்தனாவை ஆறுதலுடன் கட்டிக்கொண்டாள்.

''உடனடியா ஒரு ஆம்புலன்சுக்கு ஏற்பாடு பண்ணி இவரை மெட்ராசுக்கு கூட்டிண்டு போகணும்'' அமுதன் சொல்ல, மாடில்டா ஸ்டேஷன் மாஸ்டர் அறையை நோக்கி ஓடினாள்.

# 43. ஜீவ சமாதி

## 1967 - வுட்பெக்கர் எஸ்டேட்

"புருஷ்!"

"சொல்லு ம்ருகா!"

"இப்ப நம்ம நடுவுல வேற யாருமே இல்லை! எனக்கு நீ! உனக்கு நான், அவ்வளவுதான்!"

"ஆமா... ம்ருகா!"

ம்ருகா கண்களை மூடிக்கொண்டு அவரை நோக்கினாள்.

"இப்ப நீ பண்ணினது தப்புனு உணர்றியா, புருஷ்! என்னைக் கல்யாணம் பண்ணிக்காதது தப்புதானே!"

"தப்புதான் ம்ருகா! நான் வேணுமினு செய்யலை! என் அம்மா சொன்னதை செஞ்சேன்...!"

"புருஷ்! புரிஞ்சுக்கோ! நம்ம ரெண்டு பேருக்கும் நடுவே ஜென்மாந்தரங்களா பந்தம் இருக்கு, தெரியுமா! உன்னைப் பார்த்ததுலேர்ந்து என்னால உன்னை பிரிஞ்சு இருக்க முடியலை! அதனாலதான் நான் உன்னை துரத்திட்டே இருந்தேன்!"

"சரி... ம்ருகா!"

''புருஷ்! நாம கடைசி வரைக்கும் இப்படியே இருக்கணும், என்ன?''

''இருக்கலாம், ம்ருகா!''

''எனக்கு ஒரு ஆசை, புருஷ்!''

''சொல்லு ம்ருகா!''

''நாம ரெண்டு பேரும் சாகறச்சே ஒண்ணா செத்துப்போகணும்!''

''ஒண்ணா செத்துப் போவோம், ம்ருகா!''

''நிஜமா சொல்றியா, புருஷ்?''

''நிஜமாத்தான் சொல்றேன், ம்ருகா!''

''அப்பக்கேளு புருஷ்! நாம ரெண்டுபேரும் செத்துப்போன அப்புறம் இந்த உலகம் நம்மை ரெண்டு பேரையும் இணைச்சு பேசணும்.''

ரோமியோ ஜூலியட், லைலா, மஜ்னு, அம்பிகாபதி அமராவதி மாதிரி நம்ம ரெண்டு பேரையும், புருஷா-ம்ருகானு பேசணும், புருஷ்!''

''பேசுவாங்க ம்ருகா!''

''அது எனக்கு போதாது, புருஷ்! மும்தாஜ் ஷாஜகானை இந்த உலகம் எப்படி சிலாகிச்சு பேசறாங்க பாரு! தாஜ்மகாலை பார்க்கச்சேல்லாம் மும்தாஜ் ஞாபகத்துக்கு வர்றா இல்லை.''

''ஆமாம் ம்ருகா!''

''புருஷ்! நீ எனக்கு அந்த மாதிரி ஒரு அழகான மாளிகை கட்டணும்! நல்ல மார்பல் ஸ்டோனால, இழைக்கணும்! நடுவுல ஒரு நிலவறை நீ கட்டணும்! அது கட்டி முடிச்ச உடனே, நாம ரெண்டு பேரும், அது உள்ளே இறங்கி இந்த உலகத்தோட நம்ம தொடர்பை அறுத்துப்போம். நாம இப்படியே இணை பிரியாம அடுத்த உலகத்துக்கு போயிடணும்! என்ன சொல்றே?''

''போகலாம், ம்ருகா!''

''தாஜ்மகால் மாதிரி அந்த மாளிகையை புருஷா மிருக மாளிகைனு எல்லாரும் கூப்பிடணும்! அந்த மாளிகைய பார்க்கச்சே எல்லாம், வர்ற தலைமுறைகள் நம்மை நினைக்கணும்...''

''நினைப்பாங்க, ம்ருகா!''

''புருஷ்! நீ என்னை வரைஞ்சிருக்கிற ஓவியங்களை அந்த மாளிகை முழுக்க மாட்டணும்''

''மாட்டறேன், ம்ருகா!''

''நம்ம காதல் சின்னத்தை நீ எங்கே கட்டணும் தெரியுமா?''

''எங்கே கட்டணும் ம்ருகா?''

''நம்ம எஸ்டேட்டுக்கு எல்லையில ஒரு ஓடை இருக்கே. அது நடுவுல ஒரு சின்னத் தீவு மாதிரி இருக்கே! ப்ளூபெல் தீவு! அதுலதான் நீ அந்த மாளிகையை கட்டணும், புருஷ்!''

''அந்த இடம் நம்மளோடது இல்லை, ம்ருகா! பக்கத்து எஸ்டேட்டுக்கு சொந்தமானது, நாம எப்படி அங்கே கட்டறது?''

சாந்தமாக உரையாடிக் கொண்டிருந்த ம்ருகாவின் முகத்தில் கோபம் கொப்பளித்தது.

''முட்டாள் புருஷ்! உன் ஆசை ம்ருகாவுக்காக இதைக் கூட செய்ய மாட்டியா? மும்தாஜீக்காக ஷாஜகான் என்னவெல்லாம் செஞ்சான் பார்த்தியா?'' எப்படியாவது அந்த எஸ்டேட்டை விலைக்கு வாங்கு. நான் சொன்னதை கட்டிமுடி!

''நாம சீக்கிரமா ஜீவசமாதி அடைஞ்சுடலாம் என்ன...?''

ம்ருகா உற்சாகத்துடன் நடராஜ் மார்பில் சாய, எவ்வித சலனமுமின்றி ஆணியடித்தது போல நின்றுக் கொண்டிருந்தார், புருஷோத்தமன்.

# 44. இன்னா செய்தாளை

**ய**க்ஞும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க பட்டுவிட்டார். அவரைக் கவனித்துக் கொள்ள நந்தனா உடன் தங்கினாள்.

ஜ்யோத்ஸனா தன் பங்குக்கு யக்ஞுத்துக்கு தேவையான உதவிகளை செய்தாள். தானே சமையல் செய்து, நந்தனாவுக்கும் யக்ஞுத்துக்கும் சாப்பாடு எடுத்து கொண்டு வந்தாள்.

நந்தனா நெகிழ்ந்துப் போனாள். யக்ஞும் கையெடுத்து ஜ்யோத்ஸனாவை கும்பிட்டார்.

''என் மனைவி உங்க புருஷனை நாயைவிட கேவலமா நடத்திண்டு இருக்கா! அதை லட்சியம் செய்யாம, நீங்க அவளோட புருஷனான எனக்கு சாப்பாடு கொண்டு வர்றீங்கோ! உங்களுக்கு பெரிய மனசும்மா! ஒரு பொண்ணு எப்படி இருக்கணுங் கிறதுக்கு நீங்க உதாரணமா இருக்கிங்கோ! எப்படி இருக்கக்கூடாதுங்கிறதுக்கு உதாரணமா ம்ருகா!'' கண்ணீருடன் திக்கி திணறி பேசினார்.

''இதோ... பாருங்கோ! பழசையெல்லாம் நினைச்சு பாக்காதீங்கோ! உங்க உடம்பு தேவலையாகணும். பொண்ணுக்கு கல்யாணம் பண்ணனும்னு நல்லவித

மாகவே நினையுங்க! நல்லது நினைச்சா நிச்சயம் அது நடக்கும்!''

ஜ்யோத்ஸனாவின் பேச்சு அப்பா, மகள் இருவருக்குமே தெம்பூட்டியது.

டாக்டரை பார்த்துவிட்டு வந்தனர், மாடில்டாவும், அமுதனும்.

''இப்போதைக்கு பயப்படறதுக்கு ஒண்ணுமில்லைனு டாக்டர் சொல்லிட்டார். இருந்தாலும்... ஆஸ்பிடல்லதான் இருக்கணும்'' அமுதன் சொன்னான்.

மாடில்டா குறுக்கிட்டாள்.

''புரொபஸர்! நீங்க யக்ஞம் அங்கிளை பாத்துக்கணும். என்னோட ராஜஸ்தான் வர்ற வேணாம்! நான் மட்டும் போறேன்!''

நந்தனா வியந்தாள்.

''ராஜஸ்தான் போறியா என்ன?''

''ஆமா நந்தனா! ரங்கோலி கன்வர்னு ஒரு பொண்ணு உடன்கட்டை ஏறி ஸதி செய்யப் போறாள்னு ந்யூஸ் வந்திருக்கு! ஸதியை பற்றி இல்லாம, என்னோட டாகுமெண்டரி படம் முழுமை பெறாதுனு புரொபஸர் கிட்டே சொன்னேன்! அழைச்சுண்டு போறேன் சொன்னார்! ஆனா... இருக்கிற நிலைமையைப் பார்த்தா... அவர் இங்கே இருக்கறது பெட்டர்...''

ஜ்யோத்ஸனா இடைமறித்தாள் ''அமுதா! நீ மாடில்டாவோட போயிட்டு வாடா! நான் இவாளை பாத்துக்கறேன். ஏதாவது பிரச்சனைனா இருக்கவே இருக்கார்,

வரதன் மாமாவும் சந்தானமும்!... நீ அவளை அழைச்சுண்டு போ!''

அமுதன் தயங்கினான்.

நந்தனா தன் பங்குக்கு சொன்னாள் ''போயிட்டு வாங்க அமுதன்! நாங்க பார்த்துக்கறோம்!''

யக்ஞும் மீண்டும் புலம்ப ஆரம்பித்தார். ''என்ன நாடு இது! ஒரு பக்கம் செத்துப் போன புருஷனுக்காக ஒரு பொண்ணு உடன்கட்டை ஏறப்போறா! இன்னொரு பக்கம் இன்னொருத்தர் புருஷனை தனக்கு அடிமையா வச்சுண்டு இருக்கா ஒரு பொண்ணு...''

மாடில்டாவுக்கு சிரிப்பு வந்தது! ''அங்கிள்! உடன்கட்டை ஏறுவதும், அந்த பொண்ணோட குரூரமான மனசை தான் காட்டறது! நீங்கள்ளாம் எப்படி ஸதியை ஆதரிக்கிறங்கனு தெரியலை! அந்த ரங்கோலி கன்வருக்கு எவ்வளவு சின்ன வயசு! பேப்பர்ல ஃபோட்டோ போட்டிருக்கான் பாருங்க! அவளுக்கு வாழணும்னு ஆசை இருக்காதா? அவ தன்னையே அழிச்சுக்கறதுக்கு எப்படி இந்த தேசம் ஒத்துக்கறது?'' வியப்பை காட்டினாள்.

ஜ்யோத்ஸனா அவளை புன்சிரிப்புடன் பார்த்தாள்.

''மாடில்டா! உடன்கட்டை ஏறுற வழக்கம் எங்க சாஸ்திரத்துல சொல்லப்படலை! எங்க தேசத்து விதிமுறைகள்ல கூட கிடையாது! ஆனா... எங்க நாட்டு பெண்கள் எதற்காக ஸதி செய்துண்டா தெரியுமோ! பாதுகாப்புக்குத்தான்! இந்த புண்ணிய பூமியை

படையெடுத்துண்டு எத்தனை பேர் வந்தா! ஏன்... உங்க நாட்டுக்காராளே எத்தனை பேர் வந்தா! அவா கிட்டேருந்து, தங்க மானத்தை காப்பாத்திக்கதான் உடன் கட்டை ஏறுற பழக்கம் வந்தது!''

அமுதன் தாயை கேள்வியுடன் பார்த்தான்.

''பாதுகாப்பு இல்லைனா உடன்கட்டை தான் ஏறணுமா? இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாமே... ராஜாராம்மோகன்ராய் அதைதானே சொன்னார். அவர் பிரச்சாரம் பண்ணியும் ஜனங்க திருந்தாம ஸதியை ஆதரிக்கிறாளே?''

ஜ்யோத்ஸனா அமுதனை புன்சிரிப்புடன் பார்த்தாள்.

''அமுதா! நான் பிருந்தாவனத்துல தங்கியிருந்த கோகுல சத்திரத்தை பார்த்தே இல்லை! எத்தனை விதவைகள் குடும்பத்தால நிராகரிக்கப்பட்டு சத்திரத்துல அம்போனு கிடக்கிறா தெரியுமா! கெட்ட எண்ண காரங்க, அவாளை சுத்தி சுத்தி வர்றா!

''சத்திரத்தை சேர்ந்த ரெண்டு மூணு விதவைகள் காணாமலே போயிட்டா. அவா தினமும் நரக வேதனை அனுபவிச்சுண்டு இருக்கா... எத்தனை பொண்ணுகள் இந்த மாதிரி கஷ்டப்படறா தெரியுமா?

''அந்த பொண்ணு... அவ பெயர் என்ன... ரங்கோலி!... கோகுல சத்திரத்துல ஒதுக்கப்பட்டு தன் மானத்தை காப்பாத்த தினமும் போராடறதை விட, உடன்கட்டை ஏறுவது எவ்வளவோ பாதுகாப்பானதுனு

நினைச்சிருப்பா! அதனால அவ செய்யறதும் அவளுக்கு நியாயம்தான்!''

''இருந்தாலும் உயிரை போக்கிகறது டூ மச் இல்லையா?'' மாடில்டா கேட்டாள்.

''என்னையே எடுத்துக்கோங்கோ! மாடில்டா தாத்தாவை பாம்பு கடிச்சுடுத்து; வந்து வைத்தியம் பாருங்கோனு சிப்பாயிங்க வந்து சொல்லியிருந்தா என் நிலைமையே வேற மாதிரி இருந்திருக்கும்! பதட்டத்துல சிப்பாய்ங்க என்னை வலுக்கட்டாயமா இழுத்துண்டு போனதால, உலகத்தார் முன்னாடி என் பெயர் கெட்டுப்போச்சு!

''அமுதா! உன்னை எல்லாரும் சின்னவயசுல எப்படி இளக்காரம் பண்ணினா! ஒரு வேளை, நான் அரண்மனையில இருந்து மறுநாள் கார்த்தால ஆத்துக்கு வந்ததும் கெரசின்னை கொட்டிண்டு பத்த வச்சிருந் தேனா, இதோ இந்த ரங்கோலியைப் போல என்னையும் தெய்வமா கொண்டாடி இருப்பா... எனக்கு கேவலமா ஏதாவது நடந்து இருந்தா நான் நிச்சயம் உயிரோட இருந்திருக்க மாட்டேன்!

''கேவலமானவ என்கிற பெயரை வாங்கணும்னு நினைச்சா எப்படி வேணுமினாலும் வாழலாம்! புனித மானவனு பெயர் வாங்க நினைச்சா நெருப்புல எரிஞ்சுதான் ஆகணும்! புடம் போடலேனா தங்கத்துக்கு ஏது மதிப்பு?

''இராஜாராம் மோகன் ராய் சொன்னது நல்ல விஷயம்தான்! ஆனா... தனிப்பட்ட முறையில பெண்கள்

பாதிக்கப்படறப்போ... அவரா வந்து காப்பாத்த முடியும்?

''ஸதிசெய்துக்கறது பெண்ணோட தனிப்பட்ட முடிவு. அதை யார் கேள்வி கேட்கறது? ஸதி பண்ணிக்காதே! விதவையா இந்த சமுதாயத்துல அவமானப்பட்டு கயவர்களால சீரழிஞ்சுப்போனு அவளைப் பாதுகாக்க வக்கில்லாத அரசாங்கம் சொன்னா, அவ அதை கேட்கணும்னு கட்டாயம் இல்லை!''

''ரங்கோலியை பொறுத்தவரைக்கும் அவ செய்யறது சரிதான், மாடில்டா!''

ஜ்யோத்ஸனா தன் மனதில் இருந்த வேதனைகளைக் கொட்ட, அவள் கூறுவதை பிரமித்துப்போய் கேட்டுக் கொண்டிருந்தனர், மற்றவர்கள்.

ருத்ர தாண்டவம் ஆடி, தன்னை வீட்டை விட்டு விரட்டிய ம்ருகாவை நினைத்தது யக்ஞத்தின் மனம்.

பெண் குலத்தின் பொக்கிஷமாக, இந்திய பெண்மையின் சிறப்பு அம்சங்களை பிரதிபலித்தபடி விஸ்பரூபம் எடுத்து நின்றிருக்கும் ஜ்யோத்ஸனாவை மதிப்புடன் பார்த்தார் யக்ஞம்.

மாடில்டாவே உணர்ச்சிவசப்பட்டு விட்டாள்.

''அமுதன்! யூ... ஆர். ஸோ... ஸோ லக்கி! உங்களுக்கு எப்ப்டிப்பட்ட மதர் கிடைச்சிருக்காங்க, பாருங்க!''

அமுதன் பெருமை பொங்க தாயைப் பார்த்தான்.

"அப்போ நான் மாடில்டாவோட ராஜஸ்தான் போகலாமா? உங்களுக்கு ஒரு பிரச்னையும் இல்லையே?"

"ஒரு பிரச்னையும் இல்லை." யக்ஞும் உள்பட மூவரும் சொன்னார்கள்.

அமுதன் கிளம்ப எத்தனிக்க, யக்ஞும் திடீரென அவனை அழைத்தார்.

"நான் அமுதன் கிட்டே ஒரு விஷயம் தனியா பேசணுமே!"

மற்றவர்கள் அவரை வியப்புடன் பார்த்து விட்டு அகன்றார்கள்.

அமுதன் குனிந்து தன் காதை கொடுக்க, யக்ஞும் அவனிடம் எதைப்பற்றியோ சொல்ல, அமுதன் திகைப்புடன் அவரைப்பார்த்தான்.

# 45. அக்னி பரீட்சை

## 1967 - ஸோனாபூர் கிராமம்

"ஜப் தக் சூரஜ் சாந்த் ரஹேகா, ரங்கோலி, தேரா நாம் ரஹேகா!"

(சூரிய சந்திராதிகள் இருக்கும்வரை ரங்கோலி உன் பெயர் நிலைத்து நிற்கும்)

கிராம மக்கள் கோஷம் எழுப்ப, ஜகதீஷ் கன்வர் என்கிற அந்த இளைஞனின் சவ ஊர்வலம் புறப்பட்டது.

முதலில் ஒரு ரதத்தில் கன்வரின் குடும்பம், பல்வேறு நிறங்களில் தலைப்பாகை கட்டிக் கொண்டு, கையில் வீரவாள் பிடித்து தங்கள் குலப் பெருமையை ஊர்மக்களுக்கு உணர்த்தியபடி சென்றனர்.

அடுத்த ஒரு சாரட்டில் குடும்ப பெண்கள் ரங்கோலியை புகழ்ந்து பாடியபடி செல்ல, கடைசியாக வந்த வண்டியில் ஜகதீஷின் சவம் கிடத்தப்பட்டிருந்தது.

அவன் தலையை தன் மடியில் வைத்துக்கொண்டு, ஒரு மெல்லிய புன்சிரிப்புடன் ரங்கோலி அமர்ந்திருந்தாள்.

செந்நிற புடவையில், நெற்றியில் குங்குமம், உச்சி வகிட்டில் செந்தூரமும் ஜொலிக்க, பூமாலையுடன்

மங்கலமாக காட்சியளித்தாள். தெருவில் செல்பவர்கள் அவள் மீது பூக்களை வாரி இறைக்க, ஊர்வலம் ஸோனாபூர் கிராம எல்லையில் இருந்த துர்காதேவி கோவிலை நோக்கி சென்றது.

கோவிலுக்கு பின்னால் அமைக்கப்பட்டிருந்தது. தகனமேடை! அதை நோக்கி அமைக்கப்பட்டிருந்த மேடையில், பத்திரிகையாளர்கள் மத்தியில் தன் கேமராவோடு மாடில்டாவும், பக்கத்தில் அமுதனும் நின்றிருந்தார்கள்.

கூட்டம் கட்டுக்கடங்காமல் இருக்க, மாடில்டா அவர்களை படம் பிடித்தபடி இருந்தாள்.

சங்கொலியும், டமார ஓசையும் இறுதி ஊர்வலம் தகனமேடையை நெருங்கி விட்டதை உணர்த்தியது.

ரங்கோலி இருந்த வண்டி தகனமேடை அருகே நிறுத்தப்பட்டது. மேடையில் சிதை அடுக்கப்பட்டு தயாராக இருந்தது. மத்தியில் ரங்கோலி தன் கணவன் தலைப்பகுதியில் உட்காருவதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது.

புரோகிதர்கள் மந்திரத்தை சொல்ல, ஜகதீஷ் கன்வரின் உடல் சிதை மீது கிடத்தப்பட, ரங்கோலி தானும் ஏறி அவன் தலைப்பக்கமாக அமர்ந்துக் கொண்டாள். அவன் தலையை எடுத்து தன் மடிமீது இருத்திக் கொண்டாள்.

வாத்தியங்கள் பலமாக முழங்கப்பட்டது. குடும்ப உறுப்பினர்கள் ரங்கோலியிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள். கூட்டத்தினரை நோக்கி, ஒரு தரம் கை குவித்தாள், ரங்கோலி.

சிதைக்கு தீ வைக்கப்பட்டது. மாடில்டா பரபரப்புடன் தன் கேமராவில் எல்லாவற்றையும் பதிவு செய்து கொண்டாள்.

தீ கொழுந்து விட்டெரிய, சிறிது நேரத்தில், தீ நாக்குகள் உயரே எழும்பி, ரங்கோலி கன்வரை உலகத்தின் பார்வையிலிருந்து மறைத்தது.

ரங்கோலி மாதா அமர் ரஹே!'' உணர்ச்சிவசப்பட்ட கூட்டம், கோஷம் எழுப்பியது.

''இந்த மாதிரி காட்சியை நான் பார்த்ததேயில்லை!'' அசந்து போயிருந்தாள், மாடில்டா!

''ரங்கோலி ஸதி செய்துண்ட இடத்துல, சீக்கிரமே கோவில் கட்டிடுவாங்க...'' அமுதன் சொன்னான்.

''இஸ் இட்?'' மாடில்டா ஆச்சரியத்துடன் தகனமேடையையே பார்த்தாள்.

''உங்க இந்திய பெண்களுக்கு நெஞ்சுரம் அதிகம்!''

''ஏன் சொல்றே?''

''இந்த மாதிரி புருஷனோட உடன் கட்டை ஏற, எவ்வளவு தைரியம் வேணும்! நிச்சயம் எனக்கு அந்த தைரியம் வர்றாதுப்பா... பட்... அமுதன்! புருஷனோட உயிர் துறக்கணும்'னா, ஏன் கோரமா நெருப்புல எரியணும்! தூக்க மாத்திரை சாப்பிட்டு அமைதியா சாக கூடாதா?''

''அப்படியில்லை மாடில்டா! எங்க நாட்டுல அக்னி அதாவது நெருப்புதான் சுத்தத்துக்கு அடையாளம்!

ஃபையர் இஸ் ப்யூர்! ஒருத்தர் சுத்தமானவானு காட்டணுமினா கிராமத்துல தீ மேல நடந்து தாங்க பரிசுத்துமானவங்கனு நிரூபிப்பாங்க! எங்க சீதாதேவியே 'அக்னி பரீட்சை' செய்துதான், தான் பரிசுத்தமானவனு நிரூபிச்சா!''

''பெண்கள் ஏன் பரிசுத்தமானவனு நிரூபிக்கணும்! ஆணை மாதிரி அவளும் எல்லா உரிமையோட இருக்கலாமே!''

''நோ மாடில்டா! ஃபாதர் இஸ் பிலீஃப்! மதர் இஸ் ட்ரூத்! அப்பா ஒரு நம்பிக்கை! அம்மா ஒரு உண்மை! உண்மைதான் தான் தூய்மையானது நிரூபிக்கணும்! நம்பிக்கை இல்லை!''

''எல்லாத்துக்கும் விளக்கம் வச்சிருக்கு உங்க தேசம்! இருந்தாலும்... உணர்ச்சிக்கு தான் உங்க நாட்டுல மதிப்பு கொடுக்கறாங்க! சிந்திச்சு செயல்பட்டா என்ன? இந்த ரங்கோலியோட அண்ணாவோ தம்பியோ, 'நீ சாகாதே' நான் காப்பாத்தறேன்னு ஏன் சொல்லலை?''

''நான் என் அம்மாவுக்கு பிள்ளை! என்னால அவளை காப்பாத்த முடிஞ்சுதா? ஹீரோயிஸ பேச்சு எல்லாம் வாழ்க்கையில நடக்காது, மாட்!''

மனம் வெதும்பினான் அமுதன். மாடில்டா கொழுந்து விட்டு எரிந்துக் கொண்டிருந்த சிதையையே பார்த்தாள்.

''அந்த ரங்கோலி செஞ்சது சரியா, தவறா, தெரியலை! பட்... அவளுக்கு துணிச்சல் அதிகம்தான்! நீங்க பெண்ணாயிருந்தா இந்த மாதிரி செய்துக்க தைரியம்

வருமா, புரொபஸர்! ஐ... திங்க், ரங்கோலியை வலுக்கட்டாயமா ஸதியை செய்ய தூண்டியிருக்கணும்!

''ஸதி ஒரு அக்னிப்பரீட்சைனு புரியுது. எத்தனை பொண்ணுங்க இந்த பரீட்சையை எழுத சம்மதிப்பாங்கனு தெரியலை... என் டாகுமெண்டரில இந்த கேள்வியை நான் எழுப்பப் போறேன்...!'' மாடில்டா கூறினாள்!

எத்தனைப் பெண்கள் இந்த அக்னி பரீட்சைக்கு உடன்படுவார்கள்! உடன்கட்டை ஏற எத்தனை பெண்களுக்கு துணிவு வரும்?

இந்த கேள்வி நெஞ்சில் எதிரொலிக்க, எரிந்துக் கொண்டிருந்த சிதையையே யோசனையுடன் வெறித்துக் கொண்டிருந்தான் அமுதன்.

# 46. கடவுள் அமைத்து வைத்த மேடை

## 1967 - ஜோத்பூர்

அமுதன் இன்னும் யோசித்துக் கொண்டேதான் இருந்தான்! அவனது சிந்தனை ஓட்டத்தை கலைக்க விரும்பாமல், மாடில்டா, ஜோத்பூர் அரண்மனையின் மூலை முடுக்கையெல்லாம் தேடி படம் எடுத்துக் கொண்டிருந்தாள், அமுதனுக்கு வயிறு பசித்தது. இருப்பினும், அவன் மனம் அப்பாவை எப்படியாவது மீட்டுவிட வேண்டும் என்று அலைபாய்ந்துக் கொண்டிருக்க, வயிற்றின் தேவையை அவன் பொருட் படுத்தவில்லை.

மாடில்டா படம் எடுத்தபடி நகர, அருகில் இருந்த ஒரு பெண் மீது தற்செயலாக மோதிக்கொண்டாள்.

''ஐ யாம் ஸாரி!'' என்று மன்னிப்பு கேட்டபடி திரும்பியவளுக்கு தூக்கி வாரிப் போட்டது. அவள் மீது மோதிய பெண்ணும், இவளைக் கண்டதும் ஆச்சரியப்பட்டு போனாள்.

''ஏய்... ஸோபியா?''

''ஹாய்... மாட்!... நீ எங்கே இந்த இடத்துல...''

மாடில்டாவின் லண்டன் தோழி ஸோபியா வின்ட்சர் கையில் குட்டி கேமராவுடன் நின்றிருந்தாள். இருவருமே ஒருவரையொருவர் எதிர்பார்க்கவில்லை. பின்னால் நின்ற தன் அப்பா ஜார்ஜ் வின்ட்ஸரையும், அம்மா கேதரின் வின்ட்ஸரையும் மாடில்டாவுக்கு அறிமுகப்படுதினாள்.

''நீ எங்கே இந்தப்பக்கம்'' ஜார்ஜ் கேட்டார்!

''மிஸ்டர் வின்ட்ஸர்! நான் இந்தியாவைப் பத்தி டாகுமெண்டரி ஃபிலிம் எடுக்கிறேன். நேத்து ஸோனேபூர் கிராமத்துல நடந்த 'ஸதி'யை கவர் பண்றதுக்காக ராஜஸ்தான் வந்திருந்தோம்! அப்படியே ஜோத்பூர் பாலஸ்ஸை பார்க்க வந்தோம்...''

தொலைவில் உட்கார்ந்திருந்த அமுதனை பார்த்து ஜாடை காட்டினாள். அவர்களை நோக்கி வந்த அமுதனை, வின்ட்சர் குடும்பத்துக்கு அறிமுகம் செய்வித்தாள்.

''மை ஃப்ரெண்ட் ஃபிலாஸபர் கய்ட்!'' என்று அமுதனை அவர்களிடம் அறிமுகப்படுத்தி, ''மீட் புரொபஸர் அமுதன்,'' என்றாள் மாடில்டா!

ஜார்ஜ் சினேகத்துடன் அவன் கரத்தை பற்றினார்.

''என் பெயர் ஜார்ஜ்! பைலட்டா இருக்கேன்! என் மனைவி கேதரின்! இது என் பெண் ஸோபியா! சும்மா இந்தியாவை சுத்தி பார்க்கலாம்னு வந்தோம்! ஊட்டியில ஒரு மாசம் தங்கிட்டு போன சனிக்கிழமைதான் ஜோத்பூர் வந்தோம்...!'' ஜார்ஜ் சொன்னார்.

''நாம எல்லோரும் ஒண்ணா லஞ்ச் சாப்பிடலாமே!'' கேதரின் யோசனை சொல்ல. அனைவரும் அருகே இருந்த அரண்மனை ரெஸ்டாரண்டுக்கு சென்றனர்.

ஜார்ஜ் மாடில்டாவின் டாகுமெண்டரி படத்தைப் பற்றி கேள்விகள் கேட்க, அவள் பதிலளித்துக் கொண்டிருந்தாள். அமுதன் தனக்கு வேண்டிய சைவ உணவை ஆர்டர் கொடுத்துவிட்டு, அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

''இந்தியா மாபெரும் தேசம். இங்கே இல்லாத விஷயங்களே இல்லை!'' மனம் திறந்து பாராட்டி, மௌனமாக இருந்த அமுதனை தங்கள் உரையாடலில் கலந்து கொள்ள வைத்தார் ஜார்ஜ்.

அமுதன் ஒப்புக்கு பதிலளித்தான். ''யெஸ் மிஸ்டர் ஜார்ஜ்! இங்கே நிறைய விஷயங்கள் இருக்கு! ஆனா நிறைய விஷயங்கள் இருக்குனு நாங்க சொன்னா மக்கள் ஒத்துக்க மாட்டாங்க! அந்த விஷயங்களை நீங்க உங்க வாயால சொன்னீங்கனா, அதை அப்படியே ஒத்துப்பாங்க எங்க நாட்டு மக்கள்.''

அமுதன் சொன்னதைக் கேட்டு, 'ஹோ!' என்று வாய்விட்டு சிரித்தார் ஜார்ஜ்.

''யூ நோ! நாங்க ஊட்டியில ஜாலியா ஒரு மாசம் கேம்ப் பண்ணினோம்! இன்னும் கூட இருக்கலாம்னு சொன்னேன். அப்பாதான் கேட்கலை.'' ஸோபியா மாடில்டாவிடம் குறைபட்டுக் கொண்டாள்.

''எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா, மிஸ்டர் அமுதன்! ஊட்டியில எனக்கு எஸ்டேட்டே இருக்கு தெரியுமா! ப்ளூபெல் எஸ்டேட்னு பெயர்! அதுல வாட்டர் ஃபால்ஸ் கூட இருக்கு! எங்க தாத்தா காலத்துல இருந்தே, நான் வருஷா வருஷம் ஊட்டிக்கு போவேன்! என்னவோ, இந்த தடவை ட்ரிப் ப்ளெஸன்டா இல்லை! பக்கத்து எஸ்டேட்காரங்க ரொம்ப தொந்தரவு கொடுத்தாங்க! அதுதான் கிளம்பிட்டோம்!''

''என்ன பிராப்ளம், மிஸ்டர் வின்ட்ஸர்?''

''என் பக்கத்து எஸ்டேட் ஓனர் ம்ருகநயனானினு ஒரு லேடி இருக்கா! அவளுக்கு என் எஸ்டேட் மேல ஒரு கண்! குறிப்பா என் எஸ்டேட்ல இருக்கிற வாட்டர் ஃபால்ஸ், அங்கே ஓடற ஓடை, அந்த ஓடை நடுவுல இருக்கிற குட்டித்தீவு இதையெல்லாம் எப்படியாவது தன்னோட எஸ்டேட்டோட இணைச்சுடணும்னு பார்க்கிறா! புளூ பெல் எஸ்டேட்டை தனக்கு வித்துடும் படி கம்பெல் பண்ணுறா! நான் முடியாதுனு சொல்லிட்டேன்!'' ஜார்ஜ் சொன்னார்.

''நோ ஜார்ஜ்! நாம அதை விக்கவே கூடாது!'' கேதரின் உறுதியாக சொன்னாள்.

மாடில்டாவும் அமுதனும் பார்வையை பரிமாற்றம் செய்தனர். ம்ருகநயனானி மிகவும் சக்தி வாய்ந்தவள் தான். இவர்கள் எங்கே போனாலும், எப்படியாவது அவள் பெயரை யாராவது உச்சரித்து விடுகின்றனரே!

‘‘டாடி! அந்த குட்டிதீவு எனக்கு வேணும்! எந்த காரணம் கொண்டும் நீங்க அதை விற்க கூடாது!’’ ஸோபியா கண்டிப்புடன் சொன்னாள்.

ஜார்ஜ் சிரித்தார் ‘‘அந்த குட்டித்தீவுதான் அவங்களுக்கும் வேணுமாம்! மிஸஸ் ம்ருகநாயனானி யோட பிரதர் மிஸ்டர் நடராஜ்னு ஒருத்தர். என்னை தொந்திரவு பண்ணிகிட்டே இருக்கார்! ஒரு வேளை அதை விக்கறதா இருந்தா தனக்கு ஃபோன் பண்ண சொல்லி கார்டு தந்திருக்காரு! எனக்கு என்ன பைத்தியமா ப்ளூ பெல், எஸ்டேட்டை விற்க?’’ ஜார்ஜ் தன் முன்னால வைக்கப்பட்ட பிரியாணியை வெட்ட ஆரம்பித்தார்.

மாடில்டா அமுதனின் கண்களை நோக்கினாள்.

‘‘என்ன செய்யப்போகிறீர்கள் அமுதன்?’’

அமுதன் யோசித்தான். கடந்த சில நாட்களாக நடைபெறும் நிகழ்வுகள் எல்லாமே அவனுக்கு ஒன்றை உணர்த்தின.

கடவுள் இவனுக்காக மேடை அமைத்து கொடுத்து இருக்கிறார். செயலாற்றுவதும் ஆற்றாததும் இவன் கையில் தான் இருக்கிறது.

பீமன் புருஷாமிருகத்திடமிருந்து தப்பித்து ஓடினாலும், அவனைக் காப்பாற்றியது கிருஷ்ணரின் ஆசியும் தருமனின் நேர்மையும்தான்.

இவன் அப்பா ம்ருகாவிடமிருந்து தப்பிக்க வேண்டு மென்றால், கண்ணனின் ராஜதந்திரமும் தருமனின் நேர்மையும் இவன் கொண்டிருக்க வேண்டும்.

மனதில் ஏதோ தெளிவு பிறப்பது போல் இருந்தது. ரங்கோலி நிகழ்த்திய ஸதி இவனுக்கு வெளிச்சத்தை தந்தது என்றால், ஜார்ஜ் வின்ட்சர் சந்திப்பு இவனுக்கு நம்பிக்கையை அளித்திருந்தது.

''மிஸ்டர் வின்ட்ஸர்! உங்கள் உதவி எனக்கு தேவை!''

அவர் கையைப் பற்றிகொண்டான், அமுதன்.

# 47. மலைச்சரிவில் ஒரு விபத்து

## 1967 - ஊட்டி

ம்ருகா பாத் டப்பில் குளித்துக் கொண்டிருந்தாள். சோப் நுரை பொங்கி, டப்பிலிருந்த வழிய, ஆனந்தமாக குளித்துக் கொண்டிருந்தாள்.

*''ட்ரிங்... ட்ரிங்...''*

வெளியே டெலிபோன் மணியோசை கேட்க, அதை புருஷோத்தமன் எடுத்து பேசுவது கேட்டது.

சற்று நேரத்திற்கெல்லாம் பாத்ரூம் கதவை தன் விரல்களால் தட்டியபடி புருஷோத்தமன் அழைத்தார்.

*''ம்ருகா!''*

*''உள்ளே வா புருஷ்! கதவு திறந்துதான் இருக்கு!''*

புருஷோத்தமன் கதவைத் திறந்துக் கொண்டு உள்ளே வந்தார்.

*''குட் நியூஸ்... ம்ருகா!''*

*''என்ன புருஷ்?''* தன் கையில் திரண்டிருந்த நுரையை தன் முகத்துக்கு நேராக உயர்த்தி புருஷோத்தமனின் முகத்தை நோக்கி ஊதினாள். பறந்து சென்ற சோப் குமிழ்கள் அவன் முகத்திற்கு முன்பாக வெடித்து சிதறின.

''ப்ளூ பெல் எஸ்டேட் மானேஜர் கௌடா ஃபோன் பண்ணினான். எஸ்டேட் ஓனர் ஜார்ஜ் வின்ட்சர் பேசினா ராம்! எஸ்டேட்டை நமக்கு விக்கறதுக்கு சம்மதிச் சுட்டாராம்...'' புருஷ் சொல்ல, உற்சாகத்துடன் பாத் டப்பிலிருந்து சோப் நுரையை எடுத்து அவர் மீது சிதற விட்டாள்.

சிரித்தபடி அவனை கிறக்கத்துடன் பார்த்தாள். ''கிரேட் நியூஸ்... புருஷ்! உடனே டீலை முடி! என் கனவை நினைவாக்கு...''

''உடனே செய்யறேன் ம்ருகா! கௌடா என்னை கோயமுத்தூர் வர சொல்றான்! நானும் அவனும் ஜோத்பூருக்கு போய் டீலை முடிக்கறோம்'' புருஷ் சொன்னார். ''ஜோத்பூர்லதான் ஜார்ஜ் தங்கியிருக் காராம்...''

''அப்ப உடனே புறப்படு புருஷ்! சீக்கிரம் நம்ம கனவு மாளிகையை கட்ட ஆரம்பி! டீலை முடிச்சுட்டு சீக்கிரம் வா! என்னால இங்கே தனியா இருக்க முடியாது. ஒகே...''

''யெஸ்!'' தலையசைத்த புருஷ், உடனே காரை எடுத்துக் கொண்டு கோவைக்கு கிளம்பினார்.

-காரை மலைச்சாலையில் செலுத்திக்கொண்டிருந் தார், புருஷ்! எப்படியாவது ம்ருகா கேட்ட அந்த கனவு மாளிகையை கட்டிதர வேண்டும்! அவளை பல்வேறு ஓவியங்களாக வரைந்து அந்த மாளிகை முழுவதும் மாட்ட வேண்டும்! ம்ருகா மனசை குளிர்விக்க

வேண்டும்! அவள் எப்போதும் என்னோடு சந்தோஷமாக பேச வேண்டும்.

தனக்குள் நினைத்தபடி, காரை கொண்டை ஊசி வளைவுகளின் வழியே இறக்கிக் கொண்டிருந்தார். சரியாக ஒரு திருப்பத்தில் காரை வளைக்கும்போது, எதிர்பட்டது ஒரு லாரி. லாரியை தவிர்ப்பதற்காக காருடன் மலையோரமாக ஒதுங்க நினைக்க, லாரியோ அவர் காரை குறி வைத்தே வேகமாக வந்து அதனுடன் மோதியது.

'ஆ' என்று அலறினார் புருஷ்!

# 48. வாழ்வா... சாவா?

## 1967 - வுட்பெக்கர் எஸ்டேட்

**சா**ப்பிடுவதற்காக டைனிங் டேபிளின் முன் ம்ருகா அமர்ந்தாள்.

'நம் எண்ணம் போல் எல்லாம் நடக்கிறது!' என்கிற திருப்தியில் சந்தோஷத்தின் உச்சத்திற்கே போய் விட்டாள்.

தொண்ணூற்றி ஒன்பது குடம் உடைந்து விட்டது. இன்னும் ஒரே ஒரு குடம்தான் பாக்கி!

சாப்பிடுவதற்காக தட்டில் கை வைத்தபோது, மீண்டும் டெலிபோன் ஒலித்தது.

'கௌடாவாக இருக்கும்! நடராஜ் கிளம்பிவிட்டான் என்று சொல்லணும்?' தனக்குள் முணுமுணுத்தபடி எழுந்து சென்று ஃபோனை எடுத்தாள்.

''யெஸ்!... வுட் பெக்கர் எஸ்டேட்...!''

ம்ருகா எதிர்புறம் பேசிய குரலை கவனித்தாள்.

அவள் முகம் பயங்கரமாகியது. போன் கையைவிட்டு நழுவியது.

''நோ!''

வீறிட்டு அலறினாள், ம்ருகா! அந்த மாதிரி நடக்க வாய்ப்பில்லை ''நோ!'' மீண்டும் மீண்டும் அலறினாள்!

'புருஷ் சென்ற கார் லாரி மீது மோதி புருஷ், ஸ்தலத்திலேயே இறந்து போனான்!

டெலிபோன் தகவல் ம்ருகாவை நிலை தடுமாறச் செய்தது. கூடாது! அவன் சாகக்கூடாது! அவன் செத்திருக்க மாட்டான்! என்னால் அவனை காப்பாற்ற முடியும்...'' கிளம்பு! அவனை எப்படியாவது வுட்பெக்கர் எஸ்டேட்டுக்கு திரும்பி அழைத்து வந்து விடு! அவனை விடக்கூடாது...

மனக்குரல் கட்டாயப்படுத்த, ம்ருகா பங்களாவை விட்டு வெளியே விரைந்தாள்.

''சவுண்டப்பன்! கிளம்பு என்னோட!'' உத்தரவிட்ட படி, கார் கதவைத் திறந்து பின்னால் தொற்றிக் கொண்டாள். கார் மலைச்சாலையில் வேகமாக இறங்கத் தொடங்கியது.

குறிப்பிட்ட இடத்திற்கு கார் வந்ததும், ம்ருகா வேகமாக இறங்கினாள். விபத்து நடந்ததற்கு அடையாள மாக ஒரு லாரி நின்றிருந்தது. அதன் கண்ணாடிகள் நொறுங்கி இருந்தன.

ஒன்றிரண்டு பேர், அந்த லாரிக்கு அருகே நின்றிருந்தனர்.

''ஏம்பா! இங்கே விபத்து நடந்ததே! அந்த ஆளுக்கு என்னாச்சு?''

"ஸ்பாட்லயே நசுங்கி செத்துட்டார்மா... பாவம்!" அந்த வழிப்போக்கன் சொல்ல, ம்ருகா நொறுங்கிப் போனாள். இது எப்படி சாத்தியம்?

"அவனும் நானும் ஒன்றாக தான் சாவோம்"

கண்கலங்க நெஞ்சம் பதைபதைக்க, அந்த வழிப்போக்கனைப் பார்த்தாள் ம்ருகா!

"அவரோட உடல் எங்கே?"

"போலீஸ் அதை அவரோட பிள்ளைக்கிட்டே ஒப்படைச்சுட்டாங்க! பாடியை எடுத்துட்டு அவங்க சென்னைக்கு போயிட்டாங்க...!"

ம்ருகா அதிர்ந்தாள். 'பிள்ளையா! புருஷ்ஷின் உடல் அமுதனிடமா ஒப்படைக்கப்பட்டிருக்கிறது?

கடைசியில் இவளுக்கு தோல்வியில் தான் எல்லாமே முடியபோகிறதா? வெகுண்டு எழுந்தாள், ம்ருகா!

கூடாது! இவள் தோற்கவே கூடாது! புருஷ் உயிருடனோ, பிணமாகவோ, எப்படி இருந்தாலும் அவன் இவளுக்குத்தான் சொந்தம்! அவன் உடல் இவளிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்!

சவுண்டப்பனை திரும்பிப் பார்த்தாள். "சவுண்டப்பன்! உனக்கு தேவையான அளவு பணம் தரேன்! எப்படியாவது என்னை புருஷ் உடல் இருக்கிற இடத்துக்கு அழைச்சுண்டு போ!" என்றபடி உக்கிரத்துடன் காரில் ஏறியவள், கண்களை மூடி சீட்டில் சாய்ந்துக் கொண்டாள்.

"புருஷ்! உன்னை விடவே மாட்டேன். வாழ்வோ, சாவோ ரெண்டிலும் நாம ஒண்ணா இருப்போம்" என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

## 1967 - திருவல்லிக்கேணி

ஜ்யோத்ஸனாவும் பத்மாசினியும் அப்பளம் இட்டுக்கொண்டிருந்தனர். சந்தானம் கலவரத்துடன் ஓடி வந்தான்.

"அத்தை! மோசம் போயிட்டோம்!" குரல் நடுங்க சொன்ன சந்தானம், ஜ்யோத்ஸனாவை பரிதாபத்துடன் பார்த்தபடி நின்றான்.

"என்ன ஆச்சு சந்தானம்?" ஜ்யோத்ஸனா குலை நடுங்கியது "அமுதனுக்கு ஏதாவது ஆயிடுத்தா?"

"சொல்லித் தொலையேண்டா!" பத்மாசினி பரபரத்தாள்.

"அமுதன் அப்பா போன கார் ஊட்டி மலை ரோட்டுல லாரி மேல மோதி அவர் போயிட்டார்! பாடியை நேரா கிருஷ்ணாம்பேட்டை கடுகாட்டுக்கு எடுத்துண்டு வர்றாளாம்! நம்மளை அங்கே வர சொன்னான்... அமுதன்" சந்தானம் அழுதபடி சொல்ல, ஜ்யோத்ஸனா கதறியபடி அவனுடன் கிளம்பினாள். பத்மாசினியும் பின்னாலேயே ஓடிச்சென்றாள்.

# 49. யாருக்கு வெற்றி?

## திருவல்லிக்கேணி கிருஷ்ணாம்பேட்டை

"திருவல்லிக்கேணி கிருஷ்ணாம்பேட்டையில் தான் புருஷோத்தமன் உடல் தகனம் செய்யப்பட இருக்கிறது" டிரைவர் சவுண்டப்பனிடம் வரதனின் பெண் சௌமித்திரி கூறினாள்.

ஜ்யோத்ஸனாவின் அண்ணன் வரதன் வீட்டை விசாரித்துக்கொண்டு, அவன் வீட்டின் முன் காரை நிறுத்தியிருந்த சவுண்டப்பன், சௌமித்திரி சொன்ன விவரத்தை ம்ருகாவிடம் தெரிவித்தான்.

"உடனே கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டுக்கு போ!" ம்ருகா சோகமான குரலில் உத்தரவிட்டாள்.

வழியைக் கேட்டுக் கொண்டு சவுண்டப்பன் அங்கே செல்ல, காரிலிருந்து கீழே குதித்தாள், ம்ருகா.

அதற்குள் சிதை அடுக்கப்பட்டு, அமுதன் ஈர உடையுடன், தோளில் சட்டியுடன் அதை மூன்று முறை வலம் வந்தான்.

"அமுதன்! நிறுத்து! புருஷ்ஷீக்கும் உனக்கும் சம்பந்த மில்லை! மரியாதையா அவர் உடலை என்கிட்டே கொடுத்திடு!" ம்ருகா கர்ஜித்தாள்

அமுதன் அவளை அருவருப்புடன் பார்த்தான்.

''ம்ருகா! உங்களோட ஆட்டம் எல்லாம் முடிஞ்சு போச்சு! இத்தனை நாள் என் அப்பாவை நாயை விட கேவலமா நடத்தி உங்க கொத்தடிமையா வச்சிருந்தீங்க! இப்போ அவர் உங்க கையிலிருந்து நழுவிட்டார்! மரணம் அவரை உங்ககிட்டே இருந்து காப்பாத்திடிச்சு. உங்களால இனிமே ஒண்ணும் செய்ய முடியாது...''

அமுதனை எரித்து விடுபவளைப் போல பார்த்தாள் ம்ருகா!

''ஃபூல்! புருஷ் என்னைதான் லவ் பண்ணினார்! நான்தான் அவர் இதயத்துல கடைசிவரைக்கும் இருந்தேன்! எங்களை உன்னால பிரிக்க முடியாது!''

''அப்படினு நீங்க நினைச்சா அதுக்கு நான் பொறுப் பில்லை! என் அப்பா யாரை காதலிச்சாலும், இப்போ என் அம்மாவோட கணவர்! அவர் செத்துப்போனதால என் அம்மாதான், தாலியை எடுக்கப்போறா! அவ தன் மங்கலங்களை இழந்து, தான்தான் புருஷ்ஷோட மனைவினு உலகத்துக்கே எடுத்துக் காட்டப்போறா...''

அமுதன் சிதையை சுற்றி முடித்து, புரோகிதர் நீட்டிய கொள்ளிக் கட்டையை கையில் எடுத்தான்.

அந்த கட்டையில் எரிந்த நெருப்பின் ஜ்வாலை அவன் முகத்தில் பிரதிபலிக்க, வெற்றி களிப்புடன் தன் அம்மா ஜ்யோத்ஸனாவை அருகே அழைத்தான்.

அவள் தோளில் கைப்போட்டபடி ம்ருகாவை அலட்சியமாக பார்த்தான்.

''ம்ருகா! வழக்கமா ஒருத்தர் இறந்துப் போனா அவரோட மனைவியும் மகனும் கதறுவாங்க. ஆனால் நாங்க இரண்டு பேருமே அழலை! ஏன் தெரியுமா! அவருக்கு உங்க கிட்டே இருந்து விடுதலை கிடைச்சிடுத்துனு ஒரு நிம்மதி! இனிமே உங்களால அவரை பிடிக்க முடியாதுங்கிற சந்தோஷம்... உங்கதிட்டம் தவிடுபொடியாச்சேங்கிற பூரிப்பு...''

பேசியபடி கொள்ளிக் கட்டையை ம்ருகா முகத்துக்கு நேராக உயர்த்தி காட்டியவன், சிதைக்கு தீ வைத்தான்.

நெருப்பு கொழுந்து விட்டு எரிய, தன் கனவு கோட்டை பொடிபொடியாவதை கண்டு ஏமாற்றத்துடன் பார்த்தாள். ம்ருகா! அவள் ஏமாற்றமெல்லாம் வெறியாக மாற, தன்னை மறந்து பேசினாள்.

''அமுதா! உனக்கு வெற்றி கிடைச்சுட்டதா ஆட்டம் போடாதே! நான் புருஷோத்தமனை விடவே மாட்டேன்! வாழ்விலும் சரி! சாவிலும் சரி! அவனை விரட்டிட்டே தான் இருப்பேன்!

''உன் அம்மா ஜ்யோத்ஸனாவுக்கு முதுகெலும்பு கிடையாது! எனக்கு உண்டு! உன் அம்மா செய்யாத காரியத்தை என்னால செய்ய முடியும்! நான் அதை செய்தேனா, புருஷ் என்னைதான் தன் மனைவியா அங்கீகரிப்பான். உன் அம்மாவை இல்லை!''

ஆவேசத்துடன் பேசிய ம்ருகா, அடுத்த கணம் யாருமே எதிர்பார்க்காத ஒரு காரியத்தை செய்தாள்.

எரிந்துக்கொண்டிருந்த சிதையை நோக்கி நடந்தாள்.

"புருஷ்! நானும் உங்களோட வர்றேன்! நாம சேர்ந்தே போவோம்!" என்றபடி, எரிந்துக்கொண்டிருந்த தீயில் குதித்தாள்.

தீயில் விழுவதற்கு முன்பு கடைசியாக அமுதனை ஒரு பார்வை பார்த்தாள்.

"யாருக்கு வெற்றி என்பதை இப்போது புரிந்து கொண்டாயா?" என்கிற சவால் அந்த பார்வையில் தொக்கி நின்றது.

அதன் பிறகு புகைமண்டலத்தில் மறைந்துப் போனாள் ம்ருகா.

ஜ்யோத்ஸனா தலையிலடித்துக் கொண்டு அழுதாள்.

"அமுதா! நான் செய்ய வேண்டிய காரியத்தை அவள் செய்துட்டாளேடா. எனக்கு ஏன் இது தோணலை?

கதறிய அம்மாவை சமாதானப்படுத்தினான், அமுதன்.

"அம்மா! இது ம்ருகா செய்ய வேண்டிய காரியம் தான்மா!"

ஜ்யோத்ஸனா குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

# 50. மீண்டும் வசந்தம்

## 1967 - வுட்லன்ஸ் ஹோட்டல், சென்னை

ஜ்யோத்ஸனாவை கட்டி அணைத்தபடி ரூம், நம்பர் 12ல் நுழைந்தான் அமுதன். உள்ளே சென்றதும், ஜ்யோத்ஸனா சிலையாக நின்றுவிட்டாள்.

தளர்வுடன் கட்டிலில் அமர்ந்திருந்த புருஷோத்தமன் தன் மனைவியை கண்டதும், சந்தோஷம் பொங்க எழுந்து நின்றார்.

ஆம்! ம்ருகாவின் வசியத்தில் இருந்து முழுவதுமாய் மீண்டு விட்டார். பூபதி குளிகத்தில் ம்ருகாவின் ரத்தத்தை குழைத்து அவருக்கு திலகமாக இட்டதுமே, அவர் தெளிவு பெற்றுவிட்டார்.

அமுதன்தான் ஊட்டி ஹாஸ்பிடலில் இருந்து ம்ருகாவின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு வந்திருந்தானே!

தன் கணவனை உயிருடன் கண்டதும் பதைபதைத்து போனாள் ஜ்யோத்ஸனா. அமுதனை குழப்பத்துடன் நோக்கினாள்.

''அமுதா! அப்ப அங்கே நீ யாருக்கு கொள்ளி வச்சே?''

''யக்ஞும் மாமாவுக்கு''

இது ம்ருகா செய்ய வேண்டிய காரியம்தான்'' அமுதன் சொன்னது அவள் காதில் ஒலித்தது. நெகிழ்ந்துப் போனவள், புருஷோத்தமன் காலில் விழுந்து எழுந்தாள்.

''நல்லா இருக்கீங்களா?''

''நீ சௌக்கியமா?''

அவர்களது உணர்ச்சிகள் சங்கமிப்பதை ஆனந்தத் துடன் பார்த்துக் கொண்டிருந்தான், அமுதன்.

மாடில்டாவும் நந்தனாவும் அவன் இருகைகளை வந்து பற்றிக் கொண்டு, அந்த தம்பதிகள் இணைவதை பார்த்து மகிழ்ந்தனர்.

அவர்கள் இருவரையும் கனிவுடன் பார்த்தான், அமுதன்!

''மாடில்டா! உனக்குத்தான் தேங்க்ஸ் சொல்லணும்! உன்னாலதான் எல்லாம் நல்லவிதமா முடிஞ்சுது! நீ டாக்குமெண்டரி எடுக்கணும்னு படம் பிடிக்க போன இடங்கள்தான் என் குடும்பத்தை ஒண்ணு சேர்க்க ஹெல்ப் பண்ணினது!... நான் உனக்கு ரொம்ப கடமைப்பட்டிருக்கேன்!''

''புரொபஸர்! என் தாத்தாவால உங்க குடும்பம் பிரிஞ்சுது! என்னால அது ஒண்ணு சேர்ந்ததுனு நீங்க நினைச்சா, அந்த க்ரெடிட்டை நான் தயங்காம எடுத்துக்கறேன்''

''உடன்கட்டை ஏற ஒரு பெண்ணுக்கு நெஞ்சுரம் வேணும்! எல்லா பெண்களுக்கும் இந்த தைரியம் இருக்கா?''

மாடில்டா ஸோன்பூரில் அமுதனிடம் கேட்டபோது, அவன் மனதினுள் ஒரு குரல்.

'ம்ருகாவுக்கு அந்த நெஞ்சுரம் உண்டு' என்றது.

உடனேயே அமுதனின் மூளை வேகமாக வேலை செய்தது! அப்படி ஒரு வாய்ப்பை அவளுக்கு கொடுத்தால் அவள் உடன்கட்டை ஏறுவாளா? தனக்குள் கேட்டுக் கொண்டான் அமுதன்.

புருஷோத்தமன் என்றால் உடன்கட்டை ஏறுவாள்! யக்ஞும் என்றால் ஏறமாட்டாள். மற்றொரு குரல் அவனிடம் சொன்னது.

அப்போது தான் சந்தர்ப்பம் அமுதனுக்கு கனியத் தொடங்கியது. ஜோத்பூரில் ஜார்ஜ் வினட்ஸர், ம்ருகா, தன் எஸ்டேட்டை விற்கும்படி வற்புறுத்துவதாக கூறினார். சரியாக யக்ஞும் அந்த சமயத்தில் மரணம் அடைந்தார். அதை வைத்தே ஒரு திட்டத்தை அரங்கேற்ற முடிவு செய்தான் அமுதன்.

ஜார்ஜ் வின்ட்ஸரை தன் எஸ்டேட்டை விற்க சம்மதித்துவிட்டதாக ஃபோன் செய்ய வைத்து, புருஷோத்தமனை ம்ருகாவிடமிருந்து பிரித்தான்.

நாகராஜன் உதவியோடு ஊட்டி மலை ரோட்டில் அவர் கார் மீது ஒரு லாரியை மோதச் செய்து, அவரை தன் காரில் சென்னைக்கு அழைத்து வந்து விட்டான்.

வுட்லன்ஸ் ஹோட்டலில் புருஷோத்தமனை தங்க வைத்தவன், மாடில்டா உதவியோடு பூபதி குளிகத்தை ம்ருகாவின் ரத்தத்தில் குழைத்து அவருக்கு திலகமாக

அந்த கலவையை இட்டான். யக்ஞும் தனக்கு அமுதன் தான் கொள்ளிப்போட வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். அவருக்கு தந்த வாக்கை நிறைவேற்ற தானே அவருக்கு அந்திம க்ரியையை செய்தான்.

ஆவேசத்துடன் வந்த ம்ருகா, அமுதன் அந்திம க்ரியை செய்வதைக் கண்டு புருஷோத்தமன் தான் இறந்து விட்டான் என நினைத்து அவன் சிதையில் குதித்து உயிரை விட்டாள். உண்மையில் தன் கணவன் யக்ஞுத்துடன் தான் உடன்கட்டை ஏறி இருந்தாள் ம்ருகா!

விவரங்களை அறிந்த ஜ்யோத்ஸனா ஆதங்கத்துடன் நந்தனாவை அணைத்துக் கொண்டாள்.

''உன் அப்பா போயிட்ட துக்கத்திலும், உன் மாமனாரை காப்பாத்தறதுக்காக கஷ்டப்பட்டிருக்கே, நந்தனா!''

கண்ணீருடன் அவளை உச்சி முகர்ந்தாள்.

''அப்பா! அம்மா! என்னை மன்னிச்சுடுங்கோ! நீங்க இருக்கச்சே உங்க கண் முன்னாடி நான் யக்ஞும் மாமாவுக்கு கொள்ளிப்போட்டது தப்புதான்! அவரோட கடைசி ஆசையை நிறைவேத்தத்தான் நான் அப்படி செய்தேன்! அப்படி செய்ததால்தான் ம்ருகா கிட்டேயிருந்து அப்பாவை மீட்க முடிஞ்சுது!''

பெற்றோர்கள் காலில் விழுந்து எழுந்தான், அமுதன்.

''நீயும் என்னை மன்னிச்சுடு நந்தனா! உன் அம்மா நெருப்புல குதிப்பான்னு நான் சத்தியமா நினைக்கலை! நான் கொள்ளி வைக்கிறதை பார்த்து, என் அப்பா

புருஷோத்தமன் செத்துப் போயிட்டார்னு அவ நம்பணும்னு தான் நாடகம் ஆடினேன். ஆனா அவ நெருப்புல குதிப்பானு நான் கனவுலயும் நினைக் கலை...''

''வருத்தப்படாதீங்க அமுதன்! உங்கப்பாவை நினைச்சுண்டே என் அப்பாவோட வாழ்ந்தா! உங்க அப்பா இறந்துட்டார்னு நினைச்சுண்டு, செத்துப் போன என் அப்பாவோட உடன்கட்டை ஏறிட்டா! அம்மாவுக் காக நான் வருத்தப்படலை. உயிரோட இருக்கச்சே அநியாயம் பண்ணினா! அதற்கு தண்டனையா. போகச்சே என் அப்பா அவளையும் கூட அழைச்சுண்டு போயிட்டார்...''

நந்தனா அவனை சமாதானப்படுத்தினாள்.

''எல்லாத்துக்கும் நான்தான் காரணம்?'' புருஷ் வேதனைப்பட்டார்.

''அவ்வளவு படிச்சு படிச்சு சொல்லியும், எப்படி ம்ருகாவோட வலையில் விழுந்தீங்க?'' அமுதன் கேட்டான்.

''சூழ்நிலைய ம்ருகா தனக்கு சாதகமா பயன்படுத்திட்டா, அமுதா!

''ஜ்யோத்ஸனாவை அரண்மனை சிப்பாய்ங்க வந்து தூக்கிட்டு போயிட்டாங்கனு அக்கப்பக்கத்துல சொன்னதும், பதைபதைச்சு போய் அட்மைராலடி ஹாலுக்கு போனேன். அங்கே ம்ருகா இருந்தாள்...''

புருஷோத்தமன் நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன.

'புருஷ்!'

அட்மைராலடி ஹால் படிகளில் ஏறிய புருஷோத்தமன் திடுக்கிட்டு திரும்பினான்.

எந்த ம்ருகாவின் கண்களில் படக்கூடாது என்று நினைத்திருந்தானோ, அவள்தான் அவனை கிறக்கத்துடன் பார்த்தபடி நின்றிருந்தாள்.

இவள் இங்கே எப்படி வந்தாள்! அதிர்ச்சியுடன் நின்றான், புருஷ்!'

''புருஷ்! ஐ யாம் சாரி! சிப்பாய்ங்க தூக்கி வந்தது உங்க மனைவியா! ரொம்ப அழகா இருந்தாங்க! திஸ் டர்ட்டி மென் ஹாவ் காட்ஹோல்ட் ஆஃப் ஹர்! இப்ப அவங்க ஏய்ட்டீ கேம்ப் ரூபர்ட் சிமர் ரும்லதான் இருக்கா! டு லேட்! இனிமே உங்களால அவளை காப்பாத்த முடியாது. ரூபர்ட் சிமர்ல ஆரம்பிச்சு சிப்பாய்ங்க வரைக்கும் எல்லோரும் முடிச்சுட்டு காலைதான் விடுவாங்க! ஸோ... க்ருயல்!''

''இதெல்லாம் உன் வேலையா ம்ருகா!'' புருஷ் வெகுண்டான்.

''ஐயோ! அப்படியெல்லாம் கற்பனை பண்ணாதீங்க! நான் உங்களை ஆசைபட்டது உண்மைதான்! பட் எனக்கு எப்போ கல்யாணம் முடிஞ்சதோ, அப்பவே நான் உங்களை மறந்துட்டேன்! இந்த இரண்டு வருஷத்துல உங்க வாழ்க்கையில நான் குறுக்கிட்டேனா?''

''ப்ளிஸ் ம்ருகா! எப்படியாவது ஜ்யோத்ஸனாவை காப்பாத்து?'' புருஷோத்தமன் கெஞ்சினான் ''எங்களுக்கு குழந்தை வேற இருக்கு!''

''குழந்தை இருக்கா'' போலி வியப்பைக் காட்டினாள்! ''ஆனா ஜ்யோத்ஸனா உள்ளே ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாம விரும்பி போனா மாதிரிதான் இருந்தது!'' ம்ருகா மெதுவாக புருஷோத்தமன் நெஞ்சில் விஷத்தை விதைத்தாள்.

''வார்த்தைய அடக்கி பேசு!'' புருஷ் பொங்கி எழுந்தான்.

பொண்டாட்டி மேல இவ்வளவு ஆசையா? அவனை கறுவியபடி பார்த்தாள் ம்ருகா!

''நான் சொல்றதை கேளு, புருஷ். நடந்தது நடந்து போச்சு! அவள் காலையில எப்படி வந்தாலும் அவளை அப்படியே ஏத்துக்க! அவ காலையிலே அழுதுண்டே வெளியே வந்தா, அவ நல்லவள்! ஒண்ணுமே நடக்காதது போல வந்தா... நான் சொல்றதை நம்பறியா?''

ம்ருகா கேட்க, புருஷ் குழம்பினான்.

''காலையில வரைக்கும் அந்த அறை வாசலுல என்னை காவல் காக்க சொல்றியா? ச்சீ! நான் இப்பவே போய் அவளை காப்பாத்தறேன்!'' புருஷ் முன்னேற முயன்றான்.

''அப்புறம் உன் இஷ்டம். உன் பிணம்தான் கடைசியில மிஞ்சும்! வெள்ளைக்காரங்களை எதிர்த்து

உன்னால என்ன செய்ய முடியும்! ஒரே இராத்திரியில அப்பா அம்மா ரெண்டு பேரையும் உன் குழந்தை இழந்திடும்!...'' ம்ருகா எச்சரித்தாள்.

கால்கள் மரத்துப்போக புருஷ் தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டான். சிறிது நேரம் அமைதி காத்தவன், ம்ருகாவை கலங்கிய கண்களுடன் பார்த்தான்.

''ப்ளிஸ் ம்ருகா! ஏதாவது செய்யேன்!''

'அப்படி வாடா வழிக்கு!' புளகாங்கிதத்துடன் மனத்திற்குள் கூறியவள், இல்லாத அக்கறையை குரலில் காட்டினாள்.

''நடந்ததை மறந்துட்டு ஜ்யோத்ஸனாவை ஏத்துக்கோ புருஷ்!''

பொழுது விடிந்தது. தனக்கு கிடைத்த அற்புதமான சந்தர்ப்பத்தை நழுவ விடுவாளா ம்ருகா?

ருபர்ட் சீமரின் அறைக்கதவு திறக்கப்படும் நேரத்திற்கு புருஷ்ஷை அருகே கொண்டு போய் நிறுத்தினாள்.

ஜேன் சீமர் கொடுத்த நகையை பிரமிப்புடன் பார்த்தபடி இறங்கிச்செல்லும் ஜ்யோத்ஸனாவை காட்டி அவள் களங்கப்பட்டவள் என்பதை நம்ப வைத்தாள்.

தன்னுடன் புருஷ்ஷை பாலக்காட்டுக்கு அழைத்துச் சென்று, ஆதிரா அந்தர்ஜனம் வசம் அவனை ஒப்புவித்தாள்.

''தப்பு செய்துட்டேன், ஜ்யோத்ஸனா! என்னை மன்னிச்சுடு!''

புருஷ் உடைந்து போனான்:

''எப்படியோ உயிரோடு வந்து சேர்ந்தீங்களே. எனக்கு அதுவே போதும்...'' ஜ்யோத்ஸனா சொன்னாள்.

''எனக்கே ஆச்சரியம்தான்! ம்ருகா எப்படி அப்பாவை கொல்லாம விட்டானு'' அமுதன் சொன்னான்.

''எல்லாம் நான் வச்சிருந்த குபேர யந்திர மகிமை காரணம்! ஞாபகம் இருக்கா அமுதா! பிருந்தாவனத்துல உன்கிட்டே ஒரு பெட்டியை கொடுத்தேனே. நீ கூட திறக்க முயற்சி பண்ணின போது நான் தடுத்தேனே..''

அமுதனுக்கு நினைவு வந்தது.

''பிருந்தாவனத்துல இருக்கச்சே ஒரு அனுமார் உபாசகர் என் கதையை கேட்டு வருத்தப்பட்டார்! எனக்காக குபேர யந்திரத்தை செஞ்சு கொடுத்தார்.

''குபேரன் யட்சிணிகளோட தலைவர்! அவனுக்கு மூணு தடவை பூஜை பண்ணி யந்திரத்தை பெட்டியில வச்சு மூடிடு!

''இனிமே என் கணவரோட சேர்ந்துதான் குபேர பூஜை பண்ணுவேன்! அவர் வந்து என்கிட்டே சேருற வரைக்கும் உனக்கு பூஜை கிடையாதுனு சொல்லி பெட்டியில யந்திரத்தை வச்சுடு! அவர் உன் கணவர் உயிரை பாதுகாத்து பத்திரமா திருப்பி கொண்டு வந்து சேர்த்துடுவாருனு, அந்த உபாசகர் சொன்னார்! அந்த யந்திரத்தைத்தான் நான் அந்த பெட்டியில மூடி வச்சிருக்கேன்!'' ஜ்யோத்ஸனா சொன்னாள்.

''அதனாலதான் ம்ருகாவால அப்பாவை கொல்ல முடியலை போல இருக்கு'' அம்மாவை பெருமையோடு பார்த்தான் அமுதன்.

தன்னை உயிருடன் மீட்பதற்காக தன் குடும்பம் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறது!

புருஷ் அவர்களை உவகையுடன் பார்த்தார்.

சென்னை மீனம்பாக்கம்

மாடில்டா சீமர் இலண்டனுக்கு கிளம்பி விட்டாள்.

அவளுக்கு அனைவரும் பிரியா விடை தந்துக் கொண்டிருந்தனர்.

''நீங்கள் எல்லாரும் ஒரு தடவை என்னோட சீமர் எஸ்டேட்டுக்கு வர்றணும்! உங்க வுட்பெக்கர் எஸ்டேட் மாதிரி இல்லேனாலும், என் எஸ்டேட் நல்லா இருக்கும்...'' மாடில்டா சிரித்தாள்.

''வுட் பெக்கர் எஸ்டேட் மாதிரி இருக்கவே வேண்டாம்!'' அமுதன் சொல்ல, நந்தனா சிரித்தாள்.

''என் ப்ராஜக்டுக்கு ஹெல்ப் பண்ணினதுக்கு ரொம்ப தேங்க்ஸ், புரொபஸர் அமுதன்'' மாடில்டா நெகிழ்ச்சியுடன் சொன்னாள்.

''நீ எனக்கு செய்த உதவிக்கு, என்னால தேங்க்ஸ்னு ஒரே வார்த்தையில் சொல்ல முடியாது, மாடில்டா!'' அமுதன் அவள் கைகளை பற்றி நெகிழ, அவள் அதை தடவிக் கொடுத்தாள்.

''உங்க கல்யாணத்துக்கு நான்தான் டு இன் ஒன்!'' மாடில்டா சிரித்தாள்.

நந்தனா விழித்தாள்.

''டு இன் ஒன்னா?''

''ஆமா! மாப்பிள்ளைக்கும் தோழி! பெண்ணுக்கும் தோழி!''

நந்தனா சிரித்தபடி அவள் கன்னத்தில் முத்தம் ஒன்றை பதித்தாள்.

அனைவருக்கும் 'டாட்டா' காட்டியபடி ப்ளேன் ஏறினாள் மாடில்டா!

விமானம் ரன்வேயில் ஓடி மேலே எழும்பி உயரே பறந்தது. அதை விட உயரத்தில் அனைவரின் நெஞ்சங்களிலும் நிலவினாள், மாடில்டா சீமர்.

நந்தனாவும் அமுதனும் ஊட்டி எஸ்டேட்டை விற்பதற்காக சென்றிருந்தனர்.

வீட்டில் அன்று வனஜாவுக்கு திதி. வெகுநாளைக்கு பிறகு தன் கடமையை செய்தார் புருஷோத்தமன்.

''அம்மா! நான் அந்த யட்சிணி கிட்டேயிருந்து மீண்டுண்டேன்! ஸ்ரீவத்ஸாங்கம் தாத்தா, வகுளம் பாட்டி, நம்பாடுவான் தாத்தா, எல்லோர் கிட்டேயும் சொல்லிடும்மா!'' கண்கலங்க சொன்னார் புருஷோத்தமன்.

தன் மனைவியை அன்புடன் நோக்கினார்.

''நம்பாடுவான் தாத்தா சொன்னார், நான் ஒரு கந்தர்வன்னு! ஆனா நான் கந்தர்வலோகம் போக விரும்பலை ஜ்யோத்ஸனா! இனிமே காலம்பூரா உன் கூடத்தான் இருக்கப்போறேன்!...''

''போதுமே! நந்தனாவுக்கும் அமுதனுக்கும் கல்யாணம் பண்ணற வழியை பாருங்கோ! இனிமே அவாதான் நம்ம எதிர்காலம்!''

அவனை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டாள் ஜ்யோத்ஸனா.

**முற்றும்**



## ஆசிரியரைப் பற்றி...

எழுத்தாளர் குடும்பத்தைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் **டி.ஏ.நரசிம்மன்** தற்போது "தி இந்து" ஆங்கில தினசரியில் தமிழ்நாட்டு பிரிவின் செய்தி ஆசிரியராகவும், சீனியர் அசிஸ்டென்ட் எடிட்டராகவும் பணியாற்றி வருகிறார்.

1991–ல் இந்துவில் சேர்ந்த அவர், அதற்கு முன் இந்தியன் எக்ஸ்பிரசிலும், அதற்கும் முன் ஒரு தமிழ் வார இதழிலும் ஆசிரியராக பணியாற்றினார்.

குமுதம் உள்பட பல பத்திரிகைகளில் சிறுகதைகள், கட்டுரைகளை எழுதியுள்ள இவர் ஆங்கிலத்திலும் பல நகைச் சுவை தொடர்களையும், கட்டுரைகளையும் எழுதி உள்ளார்.

தூர்தர்ஷனிலும், தனியார் தொலைக்காட்சிகளிலும் பல தொடர்களுக்கு கதை, திரைக்கதை, வசனம், எழுதியுள்ளார். "கிருஷ்ணா காட்டேஜ்", "அபிராமி", "அனிதா வனிதா", முக்தா பிலிம்ஸின் "வித்யா", "டிஜிட்டல் டிஸ்கோ" போன்றவை குறிப்பிடத்தக்க தொடர்கள்.

தனியார் தொலைக்காட்சிகளில், அரசியல் கலந்துரை யாடல்களிலும் பங்கேற்கிறார் இவருடைய **"காலச்சக்கரம்"**, **"ரங்கராட்டினம்"**, **"சங்கதாரா"** ஆகிய நாவல்கள் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன.

இவரது தந்தை திரைப்பட இயக்குனர் **"சித்ராலயா" கோபு** என்கிற சடகோபன், தாய் நாவலாசிரியை திருமதி **கமலா சடகோபன்**.

வானதி பதிப்பகம்